உ

சிவமயம்.

பதினெண் சித்தர்கள்

# பெரிய

# ஞானக்கோவை.

## முதற்பாகம்.

இஃது,

வா. சரவணமுத்துப்பிள்ளையால்
ஞானவான்களுக்கு உபயோகமாகும்பொருட்டு
சில ஏட்டுப்பிரதிகளிலிருந்தும்
அச்சுப்பிரதிகளிலிருந்தும் சேர்க்கப்பட்டதோடு
26-சித்தர்கள் புதிதாகச்சேர்த்து.

**கே-வெ-துரைசாமி முதலியார்**

அவர்களால்,

சென்னை,
ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1921.

இதன் விலை ரூபா 1.8

உ

சிவமயம்.

18-சித்தர் ஞானக்கோவையின்

# முகவுரை.

அருள்சுரந்த நாதாக்கள் பதினெண்பேர்கள்
அப்பரமாம் பூரணத்தின் ஒளிகண்டோர்கள்
தெருள்சுரந்த சிவத்தோடே சிவமாய்நின்றோர்
சித்தெல்லாம் வல்லசிவ முத்தராஞேர்
மருள்சுரந்து அமுதமழைப் பொழியுமாபோல்
மண்ணுலகின் ஜீவாத்மகோடிகட்கு
பொருள்சுரந்து ஞானவுரை விளங்கிமேவப்
போதித்த வேதாந்தக் கோவையாமே. 1

வேதாந்தமென்றுபதி னெண்மராலே
விளக்கிவைத்தருட்சுமமாம் ஞானமின்னுள்
போதாந்த பாயொருங்கே கோவையாக்கி
புலப்படுவதில்லாது புலம்புவோர்க்கு
நாதாந்தமாப்பலநூல் நாடித்தேடி
நாள்கழிவதில்லாது நமனையோட்டிச்
சேதாந்தமில்லாது ஜீவத்தோங்க
சேகரித்துக்கோவையெனச் செய்திட்டோமே. 2

திட்டமுளஆரியநில் லாதுநோக்கச்
செய்தசிவவாக்கியந்தான் நூலேயாதி
பட்டினத்தார்பாடலொடு புலம்பல்ஞானம்
பத்திரகிரியருட்புலம்பல் பாம்பாட்டிசர்
வட்டமறை யிடைக்காட ரகப்பைசித்தர்
வடிவுற்ற குதம்பை சடுவெளியாஞ்சித்தர்
தொட்டுரைத்த குருமுனிவ ரழுகண்சித்தர்
துரைபோன்ற நந்தீசர் ராமதேவர். 3

தேரையரோடு கொங்கணவர் ரோமநாதர்
திருமூலர் கருவூரார் பொதிகைசித்தர்
ஆனவரோடு இவருரைத்த ஞானமியாவும்
அவனியுள மனுக்களெலா மறியவென்றே
பாவலரை நாவலரை பண்டிதரை
பற்பலவாம் பெரியோரைப் பணிந்துகேட்டு
மாண்புமாய்ப பிழையின்றி திருத்தஞ்செய்து
வாசரவே யச்சியற்றி மகிழ்ந்தவாறே. 4

மகிழ்வாக யிந்நூலை தெரிசிப்போரை
மன்றாடிக் கேழ்க்குமனு யாதென்றாலோ
புகழ்பெரிய சித்தர்களு லாங்காங்கேதான்
புண்ணியர்கள் கைவசமாய் பொருந்தலுண்டாம்
அகமகிழ்ந்தே யெம்மிடத்தி லருள்செய்தீரேல்
ஆசிட்டே பலபெரியோ ரரிபச்செய்வோம்
ஜெகம்புகழச் சாஸ்திரத்தை வெளியிட்டோர்க்கு
சிவலோகம் கிட்டுமென சித்தர்வாக்கே. 5

---

## இதில் அடங்கியிருக்கும்

### புத்தகங்கள்.

| | |
|---|---|
| சிவவாக்கியர் 518-பாடல். | இடைகாட்டுசித்தர்பாடல் |
| பட்டினத்துப்பிள்ளை பாடல் | அகப்பேய்சித்தர்பாடல் |
| „ சரித்திரச்சுருக்கம் | குதம்பைசித்தர்பாடல் |
| „ புலம்பல் | கடுவெளிசித்தர்பாடல் |
| „ ஞானம் | திருவள்ளுவர்ஞானம் |
| பத்திரகிரியார் புலம்புல் | சட்டமுனிஞானம் |
| „ சரித்திரச்சுருக்கம் | சிவயோகச்சாரம். |
| பாம்பாட்டி சித்தர்பாடல் | |

உ

சிவமயம்.

# சிவவாக்கியர் பாடல்.

இஃது

வா. சரவணமுத்துப்பிள்ளையால்

ஞானவான்களுக்கு

உபயோகமாகும்பொருட்டு,

சில ஏட்டுப்பிரதிகளிலிருந்தும்

அச்சுப்பிரதிகளிலிருந்தும்

சேர்க்கப்பட்டு,


சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1921.

சிவமயம்.

# புத்தக விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பதென்னவெனில், சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை பெருமாள்கோவில் தோட்டத்தெருவு 20-வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் "ஆதிமூலவிலாச அச்சுக்கூடத்தில்,

| | | | |
|---|---|---|---|
| பண்டரி கீர்த்தனை ... ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீராமலீலா அல்லது ஸ்ரீமத் ராமாயண சம்பூரணம் ... ... | 6 | 6 | 0 |
| சரஸபூஷணை சரித்திரம் ... ... | 0 | 4 | 0 |
| நீலி கதை ... ... ... | 0 | 4 | 0 |
| 6-பாஷைகளின் ஒக்கபில்லரி ... | 0 | 4 | 0 |
| ஷை தெலுங்கு ... ... | 0 | 4 | 0 |
| சுந்தரகாண்டம் லங்காதகனம் ... | 0 | 4 | 0 |
| கெர்ப்பசாஸ்திரம்!.. ... ... | 2 | 0 | 0 |

மார்க்கண்டேயர் சரித்திரம் அச்சிட்டுவருகிறது கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

இப்படிக்கு,

**பே-ஆதிமூலமுதலியார்.**

பெருமாள்கோவில தோட்டத்தெருவு நெ. 20-வது
சவுக்கார்பேட்டை போஸ்ட்டு மதராஸ்.

சிவமயம்.

# கிரியை விலக்கல்.

நட்டகல்லை, தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே
சுற்றிவந்துமொணமொணென்று சொல்லுமந்த்ரமே
நட்டகல்லும்பேசுமோநாதனுள்ளிருக்கையில் [தடா
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ.

சுட்டசட்டிசட்டுவங் கறிச்சுவையறியுமோ.-சமைத்தகறியின் உருசியைஅந்தச்சட்டியுஞ், சட்டுவமாகிய இரண்டுபொருளுந் தெரிந்துக்கொள்ளுமோ தெரிந்துக்கொள்ளாது (அதுபோல) நாதன் உள்ளிருக்க பரம்பொருள் மனத்தின் கண்ணேய யிருக்க, அதைவிட்டு, நட்டகல்லை-சிறப்பினால்உருவமைக்கப்பட்டு நாட்டியதாதுப் பொருளை, தெய்வமென்று-சகல நிட்களாதீதமாகிய பரம்பொருளென்று நினைத்து, நாலுபுட்பஞ்சாத்தி-நான்கு வகையாகிய மலர்களைத் தரித்து, சுத்திவந்து மொணமொணென்று சொல்லுமந்திர மேதடா-முறைப்படி பிரதட்சணஞ் செய்து இருதயாதிகண்டாந்தத்துக்குள் தன்னுடைய அறிவுக்குமாத்திரம் அறியப்படும் மந்திமைவாக்கினால் சொல்லும்மந்திரம் எங்குள்ளது (இப்படியிருக்கையால்) நட்டகல்லும்பேசுமோ-நடப்பட்ட சிலாரூபமானது பேசக்கூடியதோ! அன்று என்றபடி.

ஆயினும் இவ்விஷயம் பாரமார்த்திகர்க்கேயன்றி ஏனையோர்க்கன்று. இஃதறியாத சிலர் இவ்வாறு சொல்லுகின்றதேயென்று நடித்துச் சிலாரூபத்தை வணங்குதற்கேதுவாகிய அன்பையிழந்து அலைந்து தத்தமக்கேற்றவண்ணம் பேசித்திருக்கின்றனர். அது நிற்க,

இனி இச்செய்யுளின் கருத்தை வியவதாரத்தின் மையுளர்க்கேளன்று விளக்குதும் எப்படியெனில்;- வேதமுதலிய கலைகளிற் சொல்லப்படுவது துவிதம், அத்துவிதம் என்கிற இரண்டு மார்க்கங்களே, அவற்றில், துவிதமே அத்துவிதத்திற்கு முதற்காரணமாயுள்ளது, அம்மார்க்கத்தில் ஒவ்வொருவரும்பதி பசு பாசங்களை விசாரிக்கவேண்டிய அவசியமுள்ளது. அப்படிவிசாரிக்குங்கால், பதி நிர்மலமுடையவனென்றும், பசுதனக்குள்ள பாசமாகிய சகசமலத்தால் அநிர்மலனென்றும் விளங்கும். அங்ஙனமுள்ள மலத்தைப் போக்கிக்கொள்ளுதற் பொருட்டே பதியானவர் அப்பசுவுக்குத் தநுகரண புவனபோகங்களை நல்கி, கருடோஹம்பாவனை செய்தோனுக்கு, அக்கருடன் இவனுய்நின்று, விஷபங்களைத் தீர்த்தானேயொழிய, இவனதுபாவனையொன்றினாலேயே தீர்த்துக் கொள்ளாமைபோலவும், இரசவாகனஞ் செய்வோன் செம்பிலுள்ள களிம்பைப்போக்கப் பிரயத்தனஞ் செய்தானேயொழிய, இவனதுபிரயத்தனம் களிம்பைப் போக்காமல் மருந்தின்காரமேஅக்களிம்பை உள்ளேயே அடங்கச்செய்தமைபோலவும், தான்கலவாமற்கலந்துநின்று, அச்சகமலத்தின்வலியை அடக்கித்தன்னடிப்படுத்த நியமித்தமார்க்கங்கள்நான்கு, அவைகளாவன;-சரியை,கிரியை,யோகம்,ஞானம். இந்நான்கும்ஒவ்வொன்றில், நந்நான்காகப்பதினாறுகும், அங்ஙனம் கூறியதினால் இச்செய்யுட் கருத்து கிரியையில்ஞானமாகும். எப்படியெனில், சர்வபரிபூரணனென்னுந் திருப்பெயரை விசாரிக்கின், எங்கு நிறைந்தவனென்று புலப்படும். அங்ஙனம் எங்குநிறைந்த கடவுள் மனம் ஒன்றிலேயே இருக்கின்றானென்றும், மற்ற இடங்களிலில்லை யென்றும் சொல்லுதல்கூடாமை. இதைநோக்கியே, (அங்கிங்

கென்றதபடி யெங்கும் பிரகாசமாய்) எனவும், (பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற) எனவும், (கல்லிலும் செம்பிலுமோ விருப்பா னெங்கள் கண்ணுதலே) எனவும், ஆன்றோர் கூறினார். ஆகையால், எங்குமுள்ள கடவுளைக் * கல்லிலில்லையென்று சொன்னால் பூரணத்துவங் குறையும் அது குறைந்த போது ரூபகற்பிதமுண்டாகும். அது உண்டான போது கடவுள்என்பதுபோய், எல்லாம் நாமேயால் ஆகங்காரவாதமுண்டாய்ப் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து கரையேறக்கூடாமல் அலைந்தலைந்து தவிக்கச் சந்தேகமில்லை ஆகையால் கிரியையாகிய சிலாரூபவணக்கமும், பூரணத்தை நோக்குவதாகியஞானமுங் கலந்துநிற்றலால், இச்செய்யுளின்கருத்து; கிரியையில் ஞானமேயாகச், சாதிக்கப்படும்.

இவ்வாறு சொன்னமையால் உண்டான் கருத்தென்னவெனின், இந்நூலாசிரியர் பாரமார்த்திகத்தைப்பற்றிச் சொன்னமையால் குற்றமன்றென்றிம் வியவகாரத்தார் இவ்விஷயத்தையேகொண்டபோது பூரணத்துவத்தைநோக்கி நடக்கவேண்டுமென்றுங், கல்வியறிவில்லாத சிறியேன் சிற்றறிவிற்கெட்டினவரை யெழுதினதற்குப் பயன்யாதெனில் இதைப்பார்த்துக் கற்றோரும் மற்றோரும் நகைத்தல் ஒன்றுமே என்க. என்னும் விரிகின நன்றாய் விளங்கும், ஆயின்பெருகுமென்று விடுத்தாம். இவ்வாறே மற்றுமுள்ள வைக்கும் உரை யெழுதினால் மிகவும் பெருகுமென்று விடப்பட்டது.

இங்ஙனம்,

மா வ,

---

* கல்லிலும் பிருந்தா ரென்பதற்குப் பிரகலாதாழ்வானும் மார்க்கண்டேயருமே சான்றாம்.

சிவமயம்.

# சிவவாக்கியர் பாடல்.

காப்பு.

அரியதோர் நமச்சிவாய மாதியந்த மானதும்
ஆதிரண்டு நூறுதேவ ரன்றுரைத்த மந்திரம் [கியம்
சரியதோரெழுத்தையுன்னி சொல்லுவேன்சிவவாக்
தோஷதோஷ பாவமாய்கை தூரதூர வோடவே. 1

கரியதோர் முகத்தையொத்த கற்பகத்தைக் கைதொழக், கலைகள்நூல்கள் ஞானமுங் கருத்தில்வந் துதிக்கவே, பெரியபேர்கள்சிறியபேர்கள் கற்றுணர்ந்தபேரெலாம், பேயனாகியோதிடும்பிழைபொறுக்க வேண்டுமே. 2

அக்ஷரநிலை.

ஆனவஞ் செழுத்துளே யண்டமு மகண்டமும
ஆனவஞ் செழுத்துளே யாதியான மூவரும்
ஆனவஞ் செழுத்துளே யகாரமும் மகாரமும்
ஆனவஞ் செழுத்துளே யடங்கலாவ லுற்றதே. ௩

சரியை விலக்கல்.

ஓடியோடி யோடியோடி-யுட்கலந்த சோதியை
நாடிநாடி நாடிநாடி நாட்களுங் கழிந்துபோய்
வாடிவாடி வாடிவாடி மாண்டுபோன மாந்தர்கள்
கோடிகோடி கோடிகோடி யெண்ணிறந்த கோடியே

யோகநிலை.

உருத்தரித்த நாடியி லொடுங்குகின்ற வாயுவை
கருத்தினா லிருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்
அருட்டரித்த நாதர்பாத மம்மைபாத முண்மையே.

## வேதநிலை.

வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருவனத் தினல், விடுவனோவவனையின்னம் வெட்டவேணுமெ ன்பனே, நடுவன்வந் தழைத்தபோது நாறுமிந்த நல் லுடல், சுடலைமட்டுங் கொண்டுபோய்த் தோட்டி கைக் கொடுப்பரே. 6

## ஞானநிலை.

என்னிலே யிருந்தவொன்றை யானறிந்ததில்லையே என்னிலேயிருந்தவொன்றை யானறிந்துகொண்டபி ன், என்னிலே யிருந்தவொன்றை யாவர்காணவல்லி ரோ, என்னிலே யிருந்திருந்து யானுணர்ந்துகொண் டனே. 7

நினைப்பதொன்று கண்டிலே னீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாய்கை மாய்கையை
அனைத்துமா யகண்டமா யனாதிமுன் னனாதியாய்
எனக்குள்நீ யுனக்குள்நா னிருக்குமாற தெங்ஙனே

மண்ணும்நீ விண்ணும்நீ மறுகடல்க ளேழும்நீ [ம்நீ
எண்ணும்நீ எழுத்தும்நீ யிசைந்த பண்ணெழுத்து
கண்ணும்நீ மணியும்நீ கண்ணுளாடும் பாவைநீ
நண்ணுநீர்மை நின்றபாதம் நண்ணுமா றருளிடாய்.

அறியுமல்ல வவனுமல்ல வப்புறத்தி லப்புறம் [ம்
கருமைசெம்மைவெண்மையைகடந்து நின்றகாரண
பெரியதல்லசிறியதல்ல பற்றுமின்கள் பற்றுமின்கள்
துரியமுங் கடந்துநின்ற தூரதூர தூரமே. 10

அந்திகால முச்சிமூன்று மாடுகின்ற தீர்த்தமும்
சந்திதர்ப் பணங்களுந் தபங்களுஞ் செபங்களும்
சிந்தைமேவு ஞானமுந் தினஞ்செபிக்கு மந்திரம்
சிந்தைராம ராமராம ராமவென்னு நாமமே. 11

கதாவுபஞ்ச பாதகங்க ளைத்துரந்த மந்திரம்
இதாமிதாமதல்லவென்று வைத்துழலுமேழைகாள்
சதாவிடாம லோதுவார் தமக்குநல்ல மந்திரம்
இதாமிதாம ராமராம ராமவென்னும் நாமமே. 12

நானதேது நீயதேது நடுவினின்ற தேதடா
கோனதேது குருவதேது கூறிடுங் குலாமரே
ஆனதேது வழிவதேது வப்புறத்தி லப்புறம்
ஈனதேது ராமராம ராமவென்ற நாமமே. 13

யோகநிலை.

சாத்திரங்க ளோதுகின்ற சத்தநாத பட்டரே
வேத்திரைப்புவந்தபோதுவேதம்வந்துதவுமோ[ரேல்
மாத்திரைப்போ தும்முளே மறிந்துதொக்க வல்லி
சாத்திரைப்பைநோய்களோது சத்திமுத்திசித்தியே

ஞானநிலை.

தூரதூரந் தூரமென்று சொல்லுவார்கள்சோம்பர்
பாரும்விண்ணுமெங்குமாய் பரந்தவிப்பராபரம[கள்
ஊருநாடு காடுதேடி யுழன்றுதேடு மூமைகாள்
நேரதாக வும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே.

யோகநிலை.

நாலுவேத மோதுவீர் ஞானபாத மறிகிலீர்
பாலுநெய்க லந்தவாறு பாவிகா ளறிகிலீர்
ஆலமுண்ட கண்டனு ரகத்துளே யிருக்கவே
காலனென்று சொல்லுவீர் கனவிலும்ம தில்லையே.()

வித்திலாத சம்ப்ரதாய மேலுமில்லை கீழுமில்லை
தச்சிலாத மாளிகை சமைந்தவாற தெங்ஙனே
பெற்றதாயைவிற்றடிமை கொள்ளுகின்றபேதைகாள்
சித்திலாத போதுசீவ னில்லையில்லை யில்லையே. 17

அஞ்சுமூனு மெட்டதா யநாதியான மந்திரம்
நெஞ்சிலேநினைந்துகொண்டு நூறுருச் செபிப்பிரேல்

வஞ்சமான பாதகங்க ளாறுகோடி செய்யினும்.
பஞ்சுபோல்பறக்குமென்றுநான்மறைகள்பன்னுமே.

அண்டவாச லாயிரமப்ர சண்டவாச லாயிரம்
ஆறிரண்டு நூறுகோடி யானவாச லாயிரம்
இந்தவாச லேழைவாச லேகபோக மானவாசல்
எம்பிரா னிருக்கும்வாச லியாவர்காண வல்லரே.

சாமநாலு வேதமும் சகலசாத் திரங்களும்
சேமமாக வோதிலுஞ் சிவனைநீ ரறிகிலீர்
காமநோயை விட்டுநீர் கருத்துளே யுணர்ந்தபின்
ஊனமற்ற காயமா யிருப்பனெங்க ளீசனே. 20

சங்கிரண்டுதாரையொன்று சன்னபின்னலாகையால்
மங்கிமாளு தேயுலகில் மானிடங்க ளெத்தனை
சங்கிரண்டை யுந்தவிர்ந்து தாரையூத வல்லிரேல்
கொங்கைகொங்கை பங்கரோடு கூடிவாழ லாகுமே.

ஞானநிலை.

தங்கமொன்றுரூபம்வேறு தன்மையானவாறுபோல்
செங்கண்மாலு மீசனுஞ் சிறந்திறந்த தெம்முளே
விங்களங்கள் பேசுவார் விளங்குகின்ற மாந்தரே
எங்குமாகி நின்றநாமம் நாமமீந்த நாமமே. 22

யோகநிலை.

அஞ்செழுத்தி லேபிறந்து அஞ்செழுத்திலேவளர்ந்
து, அஞ்செழுத்தையோதுகின்றபஞ்சபூதபாவிகாள்
அஞ்செழுத்தி லோரெழுத் தறிந்துகூற வல்லிரேல்
அஞ்சலஞ்ச லென்றுநாத னம்பலத்தி லாடுமே.

அஞ்சுமஞ்சு மஞ்சுமே யனாதியான தஞ்சுமே
பிஞ்சுபிஞ்சு தல்லவோ பித்தர்காள் பிதற்றுநீர்
நெஞ்சிலஞ்சு கொண்டுநீர் நின்றுதொக்க வல்லிரேல்
அஞ்சுமில்லை யாறுமில் லனாதியாக தோன்றுமே.

நீளவீடு கட்டுறீர் நெடுங்கதவு சாத்துறீர்
வாழவேணு மென்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே
காலனோலை வந்தபோது கைகலந்து நின்றிடும்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே.

கிரியைநிலை.

வீடெடுத்து வேள்விசெய்து மெய்யரோடு பொய்யுமாய், மாடுமக்கள் பெண்டிர்சுற்ற மென்றிருக்கு மாந்தர்காள், நாடுபெற்ற நடுவர்கையி லோலைவந்தழைத்திடில், ஓடுபெற்ற தவ்விலை பொருதுகாணு முடலமே. 26

யோகநிலை.

ஓடமுள்ள போதெலா மோடியே யுலாவலாம் [லாம்
ஓடமுள்ள போதெலா முறுதிபண்ணிக் கொள்ள
ஓடமு முடைந்தபோது வொப்பிலாத வெளியிலே
ஆடுமில்லை கோனுமில்லை யாருமில்லை யானதே. 27

உற்பத்திநிலை

அண்ணலே யனாதியே யனாதிமுன் னனாதியே
பெண்ணுமாணு மொன்றலோ பிறப்பதற்குமுன்னெ
கன்னிலாணிசுக்கிலங் கருதியோங்குநாளிலே [லாம்
மண்ணுளோரும்விண்ணுளோரும் வந்தவாறதெங்ஙன

ஞானநிலை.

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்க ளெத்தனை
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்க ளெத்தனை
மிண்டராய்த் திரிந்தபோ திறைத்தநீர்க ளெத்தனை
மீளவுஞ் சிவாலயங்கள் சூழவந்த தெத்தனை
அண்டர்கோ னிருப்பிட மறிந்துணர்ந்தஞானிகாள்
கண்டகோயில்தெய்வமென்று கையெடுப்பதில்லையே

### யோகநிலை.

நெருப்பைமூட்டி நெய்யைவிட்டு நித்தநித்த நீரிலே
விருப்பமோடு நீர்குளிக்கும் வேதவாக்யங்கேளுமின்
நெருப்புநீரு மும்முளே நினைந்துகூற வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூட லாகுமே

பாட்டிலாத பரமனைப் பரமலோக நாதனை
நாட்டிலாத நாதனை நாரிபங்கர் பாகனை. [ரம்
கூட்டிமெள்ள வாய்புதைத்து குணுகுணுத்த் மந்தி
வேட்டகாரர் குசுகுசுப்பை கூபபிடர் முகிஞ்சதே.

### தரிசனம்.

செய்யதெங்கி லேயிளநீர் சேர்ந்தகார ணங்கள்
போல், ஐயன்வந்து என்னுளம் புகுந்துகோயில்கொ
ண்டபின், ஐயன்வந்து என்னுளம் புகுந்துகோயில்
கொண்டபின், வையகத்தில் மாந்தர்முன்னம் வாய்
திறப்ப தில்லையே. 32

### சரியைநிலை

மாறுபட்டு மணிதுலக்கி வண்டினெச்சில் கொண்டு
ஊறுபட்டகல்லின்மீதே யூற்றுகின்றமூடரே[போய்
மாறுபட்ட தேவரு மறிந்துநோக்கு மென்னையும்
கூறிட்டுதீர்க்கவோ குருக்கள்பாதம் வைத்ததே.

### யோகநிலை

கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா
கோயிலுங் குளங்களுங் கும்பிடுங் குலாமரே
கோயிலு மனத்துளே குளங்களு மனத்துளே
ஆவது மழிவது மில்லையில்லை யில்லையே. 34

செங்கலுங் கருங்கலுஞ் சிவந்தசாதி லிங்கமும்
செம்பிலே திராவிலுஞ் சிவனிருப்ப னென்கிறீர்

உன்பத மறிந்துநீ ரும்மைநீ ரறிந்தபின்
அம்பலம் நிறைந்தநாத ராடல்பாட லாகுமே. 35

கிரியைநிலை.

பூசைபூசை யென்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுள்ள தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்
ஆதிபூசைகொண்டதோ வனாதிபூசைகொண்டதோ
ஏதுபூசை கொண்டதோ வின்னதென் றியம்புமே.

ஞானநிலை.

இருக்குநாலு வேதமு மெழுத்தையற வோதிலும்
பெருக்கநீறு பூசிலும் பிதற்றிலும் பிரானிரான்
உருக்கிநெஞ்சையுட்கலந்து வுண்மைகூறவல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூடலாகுமே.

யோகநிலை.

கலித்தின் வார்த்து வைத்தநீர் கடுத்ததீமுடுக்கிறால்
கலத்திலே கரந்ததோ கடுத்ததீ குடித்ததோ
நிலத்திலே கரந்ததோ நீள்விசும்பு கொண்டதோ
மனத்தின்மாயை நீக்கிலே மனத்துளே கரந்ததே.

சரியைநிலை.

பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சிதோ லெலும்பினு மிலக்கமிட் டிருக்குதோ
பறைச்சிபோகம்வேறதோ பணத்திபோகம்வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுந்துபாரு மும்முளே.

வாயிலே குடித்தநீரை யெச்சிலென்று சொல்லுறீர்
வாயிலே குதப்புவேதம் மெனப்படக் கடவதோ
வாயிலெச்சில்போகவென்று நீர்தனைக்குடிப்பீர்காள்
வாயிலெச்சில் போனவண்ணம் வந்திருந்துசொல்லு
மே. 40

ஓதுகின்ற வேதமெச்சி லுள்ளமந் திரங்களெச்சில்
மோதகங்க ளானதெச்சில் பூதலங்க ளேழுமெச்சில்
மாதிருந்தவிந்துவெச்சில் மதியுமெச்சிலொலியுமெச்
சில், ஏதிலெச்சி லில்லதில்லை யில்லையில்லை யில்லையே.

## உற்பத்தி

பிறப்பதற்கு முன்னெலா மிருக்குமாற தெங்ஙனே
பிறந்துமண் ணிறந்துபோ யிருக்குமாற தெங்ஙனே
குறித்துநீர் சொலாவிடிற் குறிப்பிலாத மாந்தரே
அறுப்பனேசெவியிரண்டு மஞ்செழுத்து வாளினால்.

## ஞானம்.

அம்பலத்தையம்புகொண் டசங்கென்றாலசங்குமோ
கம்பமற்ற பாற்கடல் கலங்கென்றால் கலங்குமோ
இன்பமற்ற யோகியை யிருளும்வந் தணுகுமோ
செம்பொனம் பலத்துளே தெளிந்தசிவாயமே

## கடவுள்நிலை.

சித்தமேது சிந்தையேது சீவனேது சித்தரே
சத்தியேது சம்புவேது சாதிபேத மற்றது
முத்தியேது மூலமேது மூலமந்தி ரங்களேது
வித்திலாத வித்திலே யின்னதென் றியம்புமே. 44

## ஒடுக்கநிலை

சித்தமற்று சிந்தையற்று சீவனற்று நின்றிடம்
சத்தியற்று சம்புவற்று சாதிபேதமற்றுநன்
முத்தியற்று மூலமற்று மூலமந்தி ரங்களும்
வித்தையித்தையீன்றவித்தில் விளைந்ததேசிவாயமே.

## கிரியை

சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெலாம்
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ

காதில்வாளி காரைகம்பி பாடகம்பொன்ஞென்றலே
சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே

கறந்தபால்முலைப்புகா கடைந்தவெண்ணெமோர்புகா
துடைந்துபோனசங்கிலோசை யுயிர்களுமுடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை யில்லையில்லை யில்லையே.

தரையினிற் கிடந்தபோ தன்றுதூமை யென்றிலீர்
துறையறிந்து நீர்குளித்த தன்றுதூமை யென்றிலீர்
பறையறைந்து நீர்பிறந்த தன்றுதூமை யென்றிலீர்
புறையிலாத வீசரோடு பொருந்துமாற தெங்ஙனே.

தூமைதூமை யென்றுநீர் துவண்டலையுமேழைகாள்
தூமையானபெண்ணிருக்க தூமைபோனதெவ்விட
ஆமைபோல முழுகிவந் தனேகவேத மோதறீர்[ம்
தூமையுந் திரண்டுருண்டு சொற்குருக்க ளானதே.

சொற்குருக்க ளானதுஞ் சோதிமேனி யானதும்
மெய்க்குருக்க ளாயினும் வேணபூசை செய்கினும்
சற்குருக்க ளாயினுஞ் சாத்திரங்கள் சொல்லினும்
மெயக்குருக்க ளாயினுந் திருண்டுருண்ட தூமையே

கைவ்வடங்கள் கொண்டுநீர் கண்சிமிட்டி நிற்கிறீர்
எவ்விடங்கள் கண்டுநீ ரெண்ணியெண்ணிபார்க்கிறீர்
பொய்யுணர்ந்த சிந்தையை பொருந்திநோக்கவல்லி
ரேல், மெய்கடந்த தும்முளே விளைந்துகூறலாகுமே

ஆடுகாட்டி வேங்கையை யகப்படுத்து மாறுபோல்
மாடுகாட்டி யென்னைநீ மதிமயக்க லாகுமோ
கோடுகாட்டி யானையைக் கொன்றுறித்த கொற்றவா
வீடுகாட்டி யென்னைநீ வெளிப்படுத்த வேணுமே

இடதுகண்கள் சந்திரன் வலதுகண்கள் சூரியன்
இடக்கைசங்கு சக்கரம் வலக்கைசூல மான்மழு

எடுத்தபாதம் நீண்முடி யெண்டிசைக்கு மப்புறம்
உடல்கலந்து நின்றமாயம் யாவர்காண வல்லரோ.

நாழியும் நாழியுப்பு நாழியான வாறுபோல்
ஆழியோனு மீசனு மமர்ந்துவாழ்ந் திருந்திடம்
ஏருதிலேறு மீசனு மியங்குசக்ர தரனையும்
வேறுகூறு பேசுவார் வீழ்வார்வீ ணரகிலே. 54

தில்லைநா யகனவன் திருவரங் கனுமவன்
எல்லையான புவனமு மேகமுத்தி யானவன்
பல்லுநாவு முள்ள்பேர் பகுந்துகூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே

எத்திசைக்குமெவ்வுயிர்க்கு மெங்களப்ப னெம்பிரா
முத்தியானவித்துளே முளைத்தெழுந்தவச்சுடர் [ன்
சித்தமுந் தெளிந்துவேத கோயிலுந் திறந்தபின்
அத்தனுடல் கண்டபின் னடங்கலாடல் காணுமே

உற்றநூல்க ளும்முளே யுணர்ந்துணர்ந்து பாடுவீர்
பற்றறுத்து நின்றுநீர் பராபரங்க ளெய்துவீர்
செற்றமாவை யுள்ளரைச் செறுக்கறுத திருத்திடில்
சுற்றமாக வும்முளே சோதியென்றும் வாழுமே

போதடா வெழுந்ததும் புனலதாகி வந்ததும்
தாதடா புகுந்ததும் தானடா விளைந்ததும்
ஓதடா வஞ்சுமூன்று மொன்றதான வக்கரம்
ஓதடா விராமராம ராமமென்னு நாமமே. 58

அகாரமென்ற வக்கரத்து லவ்வுவந் துதித்ததோ
உகாரமென்ற வக்கரத்தி லுவ்வுவந் துதித்ததோ
அகாரமும் உகாரமுஞ் சிகாரமன்றி நின்றதோ
விகாரமற்ற யோகிகாள் விரித்துரைக்க வேணுமே

அறத்திரங்க ளுக்குநீ யகண்டமென் டிசைக்குநீ
திறத்திரங்க ளுக்குநீ தேடுவார்கள் சிந்தைநீ

உறக்கம்நீ யுணர்வுநீ யுட்கலந்த சோதிநீ
மறக்கொணாத நின்கழல் மறப்பினுங் குடிகொளே.

அண்டம்நீ யகண்டம்நீ யாதிமூல மானநீ
கண்டம்நீ கருத்தும்நீ காவியங்க ளானநீ
புண்டரீக மற்றுலே புணருகின்ற புண்ணியர் [யே
கொண்டகோலமானநேர்மைகூர்மையென்னகூர்மை

மையடர்ந்த கண்ணினார் மயக்கிடும் மயக்கிலே
மையிரந்து கொண்டுநீங்க ளல்லலற் றிருப்பீர்காள்
மெய்யடர்ந்தசிந்தையால் விளங்குஞானமெய்தினால்
உய்யடர்ந்து கொண்டுநீங்க ளூழிகாலம் வாழ்விரே.

கருவிருந்து வாசலாற் கலங்குகின்ற வூமைகாள்
குருவிருந்துசொன்னவார்த்தை குறித்துநோக்கவல்
உருவிலங்கு மேனியாகி யும்பராகி நின்றநீர் [விரேல்
திருவிலங்கு மேனியாகச் சென்றுகூட லாகுமே

தீர்த்தமாட வேணுமென்று தேடுகின்ற தீனர்காள்
தீர்த்தமாடலெவ்விடந் தெளிந்துநீ ரியம்புவீர்
தீர்த்தமாக வும்முளே தெளிந்துநீ ரிருந்தபின்
தீர்த்தமாகவுள்ளதுஞ்சிவாயவஞ் செழுத்துமே.

கழுத்தையும் நிமிர்த்திநல்ல கண்ணையும்விழித்துநீர்
பழுத்துவாய் விழுந்துபோன பாவமென்னபாவமே
அழுத்தமான வித்திலே யனாதியா யிருப்பதோர்
எழுத்திலா லெழுத்திலே யிருக்கலா மிருந்துமே

கண்டுநின்ற மாயையுங் கலந்துநின்ற பூதமும்
உண்டுறங்கு மாறுநீ ருணர்ந்திருக்க வல்லிரேல்
பண்டையாறுமொன்றுமாய்ப் பயந்தவேதசுத்தனாய்
அண்டமுத்தி யாகிநின்ற வாதிமூல மூலமே. 66

ஈன்றவாச லுக்கிரங்கி யெண்ணிறந்து போவீர்காள்
கான்றவாழை மொட்டலர்ந்தகாரணமறிகிலீர், நான்

றவாசலைத்திறந்து நாடிநோக்க வல்லிரேல், தோன்
றுமாயை விட்டொழிந்து சோதிவந்து தோன்றுமே

உழலுவாச லுக்கிரங்கி யூசலாடு மூமைகாள்
உழலும்வாசலைத்திறந்து வுண்மைசேர்வெண்ணிலீர்
உழலும்வாசலைத்திறந்து வுண்மைநீ ருணர்ந்தபின்
உழலும்வாச லுள்ளிருந்த வுண்மைதானு மாவிரே.

மூலநாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாடிநாடி யும்முளே நாழிகை யிருந்தபின்
பாலனாகி வாழலாம் பறந்துபோக யாக்கையும்
ஆலமுண்டகண்டராணை யம்மையாணையுண்மையே.

இருக்கவேணு மென்றபோ திருக்கலா யிருக்குமோ
மரிக்கவேணு மென்றலோ மண்ணுளேபடைத்தனர்
சுருக்கமற்றதம்பிரான் சொன்னவஞ்செழுத்தையும்
மரிக்குமுன் வணங்கிடீர் மருந்தெனப் பெருங்கெடீர்

அம்பத்தொன்றி லக்கர மடங்கலோ ரெழுத்துமோ
விண்பரந்த மந்திரம் வேதநான்கு மொன்றலோ
விண்பரந்த மூலவஞ் செழுத்துளே முளைத்ததே
அங்கலிங்க பீடமா யமர்ந்ததே சிவாயமே. 71

சிவாயவென்ற வக்ஷரஞ் சிவனிருக்கு மக்ஷரம்
உபாயமென்று நம்புதற்கு உண்மையான வக்ஷரம்
கபாடமுற்ற வாசலைக் கடந்துபோன வாயுவை
உபாயமிட் டழைத்துமே சிவாயவஞ் செழுத்துமே.

உருவமல்லவெளியுமல்ல வொன்றைமேவிநின்றதல்ல
மருவுவாசல் சொந்தமல்ல மற்றதல்ல வற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசலான தானுமல்ல
உரியதாகி நின்றநேர்மை யாவர்காண வல்லரே. 73

ஆத்துமா வனாதியோ வாத்துமா வனாதியோ
பூத்திருந்த ஐம்பொறி புதன்களு மனாதியோ

தாக்கமிக்க நூல்களுஞ் சதாசிவ மனுதியே
நீக்கவந்த யோகிகாள் விரித்துரைக்க வேணுமே.

அறிவிலே பிறந்திருந் தாகமங்க ளோதுறீர்
நெறியிலே மயங்குகின்ற நேர்மையொன் றறிகிலீர்
உறியிலே தயிரிருக்க வூர்புகுந்து வெண்ணெய்தேடு
அறிவிலாத மாந்தரோ டணுகுமாற தெங்ஙனே [ம்

இருவரங்க மும்பொருந்தி யென்புருகி நோக்கிலீர்
உருவரங்கமாகிநின்ற வுண்மையொன்றையோர்கிலீர்
கருவரங்க மாகிநின்ற கற்பனை கடந்துபின்
திருவரங்க மென்றுநீர் தெளிந்திருக்க வல்லிரே.

கருக்குழியி லாசையாய்க் காதலுற்று நிற்கிறீர்
குருக்கிடுக்கு மேழைகள் குலாவுகின்ற பூவிகாள்
திருத்திருத்திமெய்யினுற் சிவந்தவஞ்செழுத்தையும்
உருக்கழிக்கு மும்மையு முணர்ந்துணர்ந்துகொள்ளு
மே 77

மண்ணிலே பிறக்கவும் வலக்கலா துரைக்கவும்
எண்ணிலாதகோடிதேவ ரென்னதுன்னதென்னவும்
கண்ணிலே மணியிருக்க கண்மறைந்த வாறுபோல்
எண்ணிலகோடி தேவரு மிதன்கணுல் விழிப்பதே

மண்கலங் கவர்ந்தபோது வைத்துவைத் தடுக்குவார்
வெண்கலங்கவர்ந்தபோ துவேணுமென் றுபேணுவா
நண்கலங்கவர்ந்தபோது நாறுமென்றுபோடுவார்
எண்கலந்து நின்றமாய மென்னமாய மீசனே. 79

மிக்கசெல்வ நீபடைத்த விறகுமேவிப் பாவிகாள்
விறகுடன் கொளுத்திமேனி வெந்துபோவதறிகிலீர்
மக்கள்பெண்டிற் சுற்றமென்று மாயைகாணு மிவை
யெலாம், மறலிவந்தழைத்தபோது வந்து கூடலாகு
மோ. 80

ஒக்கவந்து மாதுடன் செறிந்திடத்தி லழகிய
ஒருவராகி யிருவராகி யிளமைபெற்ற வூரிலே
அக்கணிந்து கொன்றைசூடி யம்பலத்தி லாடுவார்
அஞ்செழுத்தை யோதிடி னனேகபாவ மகலுமே

மாடுகன்று செல்வமு மனைவிமைந்தர் மகிழவே
மாடமாளி கைப்புறத்தில் வாழுகின்ற நாளிலே
ஓடிவந்து காலதூதர் சடுதியாக மோதவே
உடல்கிடந்துயிர் கழன்றவுண்மைகண்டுமுண்ர்கிலீர்

பாடுகின்ற தும்பருக்கண் தங்களுக் களுக்கியே
பழுதிலாத கன்மகூட்ட மிட்டவெங்கள் பரமனே
நீதிசெம்பொ னம்பலத்து ளாடுகொண்ட வப்பனே
நீலகண்ட காலகண்ட நித்தியகல்லி யாணனே. 83

கானமற்ற காட்டகத்தில் வெந்தெழுந்த நீறுபோல்
ஞானமுற்ற நெஞ்சகத்தில் வல்லதேது மில்லையே
ஊனமற்ற சோதியோ டுணர்வுசேர்ந் தடக்கிலை
தேனகத்தி னூறல்போல் தெளிந்ததே சிவாயமே

பருகியோடி யும்முளே பறந்துவந்த வெளிதனை
நிரவியே நினைந்துபார்க்கில் நின்மலம தாகுமே
உருகியோடி யெங்குமாய சோதி தன்னுளே
கருதடா வுனக்குநல்ல காரணம தாகுமே 85

சோதியாதி யாகிநின்ற சுத்தமும் பலித்துவந்து
போதியாத போதகத்தை யோதுகின்ற பூரணா
வீதியாக வோடிவந்து விண்ணடியி னாடுபோய்
ஆதிநாத நாதனென் றனந்தகால முள்ளதே 86

இறைவனா லெடுத்தமாடத் தில்லையம் பலத்திலே
அறிவினா லடுத்தகாய மஞ்சினா லமர்ந்ததே
கருவிநாத முண்டுபோய் கழன்றவாச லொன்பதும்
ஒருவரா யொருவர்கோடி யுள்ளுளே யமர்ந்ததே.

நெஞ்சிலே யிருந்திருந்து நெருக்கியோடும் வாயுவை
அன்பினு லிருந்துநீ ரருகிருத்த வல்லிரேல்
அன்பர்கோயில்காணலாமகன்றுமெண்டிசைக்குளே
தும்பியோடி யோடியோ சொல்லடா சுவாமியே.

தில்லையேவணங்கிநின்று தெண்டனிட்டவாயுவை
எல்லையைக் கடந்துநின்று ஏகபோக மாய்கையோ
டெல்லையைக் கடந்துநின்று சொர்கலோகவெளியி
வெள்ளையுஞ்சிவப்புமாகி மெய்கலந்துநின்றதே [லே

உடம்புயி ரெடுத்ததோ வுயிருடம் பெடுத்ததோ
உடம்புயி ரெடுத்தபோ துருவமேது செப்புவீர்
உடம்புயி ரிறந்தபோ துயிரிருப்ப தில்லையே
உடம்புமெய்மறந்துகண் டுணர்ந்துஞானமோதுமே.

அவ்வெனு மெழுத்தினு லகண்டமேழு மாகினுய்
உவ்வெனு மெழுத்தினு லுருத்தரித்து நின்றனை
மவ்வெனு மெழுத்தினுல் மயங்கினுர்கள்வையகம்
அவ்வுமுவ்வு மவ்வுமா யமர்ந்ததே சிவாயமே 91

மந்திரங்க ளுண்டுநீர் மயங்குகின்ற மானிடர்
மந்திரங்க ளாவது மரத்திலூற லன்றுகாண்
மந்திரங்க ளாவது மதத்தெழுந்த வாயுவை
மந்திரத்தை யுண்டவர்க்கு மானமேது மில்லையே

என்னவென்று சொல்லுவே னிலக்கணமிலாததைப்
பன்னுகின்ற செந்தமிழ்ப் பதங்கடந்த பண்பென
மின்னகத்தில்மின்னெடுங்கிமின்னதானவாறுபோல்
என்னகத்து ளீசனும் யானுமல்ல தில்லையே 93

ஆலவித்தி லாலொடுங்கி யாலமான வாறுபோல்
வேறுவித்து மின்றியே விளைந்துபோக மெய்திடீர்

ஆறுவித்தை யோர்கிலீ ரறிவிலாத மாந்தரே
பாருமித்தை யும்முளே பரப்பிரம மானதே. 94

அவ்வுதித்த மந்திரம் மகாரமாய் உகாரமாய்
எவ்வெழுத் தறிந்தவர்க் கெழுபிறப்பு திங்கிலை
சவ்வுதித்த மந்திரத்தை தற்பரத் திருத்தினால்
அவ்வுமுவ்வு மவ்வுமா யமர்ந்ததே சிவாயமே. 95

நவ்விரண்டு காலதாய் நவின்றமவ் வயிரதாய்
சிவ்விரண்டு தோளதாய் சிறந்தவவ்வு வாயதாய்
யவ்விரண்டு கண்ணதா யெழுந்துநின்ற நேர்மையிற்
செவ்வையொத்துநின்றதே சிவாயமஞ்செழுத்துமே

இரண்டுமொன்று மூலமா யியங்குசக் கரத்துளே
சுருண்டுமூன்று வளையமாய் சுணங்குபோற் கிடந்ததீ
முரண்டெழுந்த சங்கிளைசை மூலநாடி யூடுபோய்
அரங்கன்பட் டணத்திலே யமர்ந்ததே சிவாயமே.

கடலிலேதிரியுமாமை கரையிலேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்தபோது ரூபமான வாறுபோல்
மடலுளே யிருக்குமெங்கள் மணியரங்கசோதியை
உடலுளேநினைந்துநல்ல வுண்மையான வுண்மையே.

மூன்றுமண்ட லத்தினு முட்டிநின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயிலும் நவின்றெழுந்த வட்சரம்
ஈன்றதாயு மப்பரு மெடுத்துரைத்த மந்திரம் [யே.
தோன்றுமோ ரெழுத்துளே சொல்லவெங்குதில்லை

மூன்றுமூன்று மூன்றுமே மூவர்தேவர் தேடிடும்
மூன்றுமஞ் செழுத்துமாய் முழங்குமவ் வெழுத்து
ஈன்றதாயு மப்பரு மியங்குகின்ற நாதமும் [ளே
தோன்றுமண்டலத்திலே சொல்லவெங்குதில்லையே.

சோறுகின்ற பூதம்போற் சுணங்குபோற் கிடந்தநீ
நாறுகின்ற கும்பியி னவின்றெழுந்த மூடரே

சீறுகின்ற வைவரைச் சிணுக்கறுக்க வல்லிராய்
ஆறுகோடி வேணியா ராறிலொன்றி லாவரே. 101

வட்டமென்று வும்முளே மயங்கிவிட்ட திவ்வெளி
அட்டரக் கரத்துளே யடககமு மொடுக்கமும்
எட்டுமெட்டு மெட்டுமா யியங்குசக்க ரத்துளே
எட்டலாமு தித்தடெம்பி ராணைநா னறிந்தபின். ()

பேசுவானு மீசனே பிரமஞான மும்முளே
ஆசையான வைவரு மலைந்தலைகள் செய்கிறார்
ஆசையான வைவரை யடக்கியோ ரெழுத்திலே
பேசிடா திருப்பிரேல் நாதம்வந் தொலிக்குமே. 103

நமசிவாய வஞ்செழுத்தும் நிற்குமே நிலைகளும்
நமசிவாய மஞ்சுமஞ்சும் புராணமான மாய்கையை
நமசிவாய மஞ்செழுத்தும் நம்முளே யிருக்கவே
நமசிவாய வுண்மையை நற்குரைசெய் நாதனே. ()

பரமுனக் கெனக்குவேறு பயமிலை பராபரா
கரமெடுத்து நிற்றனுங் குவித்திடக் கடப்படா
சிரமுருகி யமுதளித்த சீருலவு நாதனே
வரமெனக்கு நீயளித்த ஓம்நமசி வாயமே. 105

பச்சைமண் பதுப்பிலே பழுப்பதிந்த வேட்டுவன்
நித்தமும் நினைந்திட நினைததவண்ண மாயிடும்
பச்சைமண் ணிடிநதுபோய் பரந்ததும்பி யாயிடும்
பித்தர்கா ளறிந்துகொள் பிரானிருநத கோலமே.

ஒளியதான காசிமீது வந்துதங்கு வோர்க்கெலாம்
வெளியதான சோதிமேனி விசுவநாத னானவன்
தெளியுமங்கை யுடனிருந்து செப்புகின்ற தாரகம்
வெளியசோரி ராமராம நாமமிந்த நாமமே. 107

விழியிஞோடு புனல்விளைந்த வில்லுவல்லி யோனியும்
வெளியிலே பிதற்றலாம் விளைவுநின்ற தில்லையே.

வெளிபரந்த தேசமும் வெளிக்குள்மூல வித்தையும்
தெளியும்வல்ல ஞானிகள் தெளிந்திருத்தல் திண்
ணமே. 108

ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் யுணர்ந்துபின்
ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் தெளிந்துபின்
ஓம்நமசி வாயமே யுணர்ந்துமெய் யுணர்ந்தபின்
ஓம்நமசி வாயமே யுட்கலந்து நிற்குமே. 109

அல்லல்வாச லொன்பது மறுத்தடைந்த வாசலும்
சொல்லும்வாச லோரைந்து சொம்மிவிம்மி நின்றது
நல்லவாச லைத்திறந்து ஞானவாச லூடுபோய்
எல்லைவாசல் கண்டவ ரினிப்பிறப்ப தில்லையே.. 110

ஆதியான தோன்றுமே யனேகனேக ரூபமாய்
சாதிபேத மாயெழுந்து சர்வசீவ னானபின்
ஆவியோடு ஆடுகின்ற மீண்டுமிந்த ஜென்மமாம்
சோதியான ஞானியர்க்குஞ் சுத்தமா யிருப்பரே. ()

மலர்ந்ததாது மூலமாய் வையக மலர்ந்ததும்
மலர்ந்தபூ மயக்கம்வந் தடுத்ததும் விடுத்ததும்
புலன்களைநதும்பொறிகலங்கி பூமிமேல் விழுந்ததும்
இனங்கலங்கி நின்றமாய மென்னமாய மீசனே. ()

பாரடங்க வுள்ளதும் பரந்தவான முள்ளதும்
ஓரிடமு மன்றியே யொன்றிநின்ற வொண்சுடர்
ஆரிடமு மன்றியே யகத்துளும் புறத்துளும்
சீரிடங்கள் கண்டவர் சிவன்தெரிந்தஞானியே. 113

மண்கிடார மேசுமந்து மலையுளேறி மறுகுறீர்
எண்படாத காரியங்க ளியலுமென்று கூறுநீர்
தம்பிரானை நாள்கடோறுந் தரையிலே தலைபடக்
கும்பிடாத மாநதரோடு கூடிவாழ்வதெங்ஙனே. ()

நாவிதூ லழிந்ததும் நலங்குல மழிந்ததும்
மேவுதே ரழிந்ததும் விசாரமுங் குறைந்ததும்

பாவிகாளி தென்னமாயம் வாமநாடு பூசலாய்
ஆவியா ரடங்கினு லேவரு மடங்குவார். 115

வீடெடுத்துவேள்விசெய் துமெய்யரோடுபொய்யு மாய், மாடுமக்கள் பெண்டிர்சுற்ற மென்றிருக்குமாந் தர்காள், நாடுபெற்ற நண்பர்கையி லோலைவந் தழைத்தபோது, ஆடுபெற்ற தவ்விலை பெருதுகாணு மிவ்வுடல். 116

இல்லைஇல்லையென்றுநீ ரியம்புகின்றவேழைகாள், இல்லையென்று நின்றதொன்றை யில்லையென்ன லாகுமோ, இல்லையல்ல வென்றுமல்ல விரண்டுமொன் றிநின்றதை, எல்லைகண்டு கொண்டபேரினிப்பிறப்ப தில்லையே. 117

காரகார காரகார காவலூழி காவலன்
போரபோர போரபோர போரில்நின்ற புண்ணியன்
மாரமார மாரமார மரங்களேழு மெய்தசீ
ராமராம ராமராம நாமமென்னு நாமமே. 118

நீடுபாரி லேபிறந்து நேயமான மாயந்தான் [மோ
வீடுவெறி தென்றபோது வேண்டியின்பம் வேண்டு
பாடிநாலு வேதமும் பாரிலே படர்ந்ததோ
றேடுராம ராமராம நாமமென்னு நாமமே. 119

உயிருநன்மை யாலுட லெடுத்துவந் திருந்திடும், உயிருடம்பொழிந்தபோது ரூபரூப மாயிடும், உயிர் சிவத்தின் மாய்கையாகி யொன்றையொன்றுகொன் றிடும, உயிருசத்தி மாய்கையாகி ஒன்றையொன்று தின்னுமே. 120

நெட்டெழுத்துவட்டமோ நிறைந்தபல்லியோ னியும்,நெட்டெழுத்தில்வட்டம்ஒன் றுநின்றதொன் றுகண்டிலே, குட்டெழுத்தி லத்தமென்று கொம்பு

ல்கு காறித்திடி, நெட்டெழுத்தில் வட்டமொன்றில் நேர்படானம் மீசனே. 121

விண்ணிலுள்ளதேவர்க ளறியொணுதமெய்ப்பொருள், கண்ணிலானியாகவே கலந்துநின்றதெம்பிரான், மீண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்; அண்ணலாரு மெம்முளே யமர்ந்துவாழ்வ துண்மையே. 122

விண்கடந்து நின்றசோதி மேலைவாசலைத்திறந்து
கண்களித்த வுள்ளுளே கலந்துபுக் கிருந்தபின்
மண்பிறந்த மாயமும் மயக்கமு மறந்துபோய்
எண்கலந்த வீசனே டிசைந்திருப்ப துண்மையே

மூலமான மூச்சதில் மூச்சறிந்து விட்டபின்
நாலுநாளு முன்னிலோரு நாட்டமாகி நாட்டிடில்
பாலனாகி நீடலாம் பரப்பிரமமாகலாம்
ஆலமுண்டகண்டராணை யம்மையாணை யுண்மையே

மின்னெழுந்து மின்பரந்து மின்னொடுங்கும்வாறு போல், என்னுள்நின்ற வென்னுளீச னென்னுளேயடங்குமே, கண்ணுநின்ற கண்ணில்நேர்மை கண்ணறிவிலாமையால், என்னுணின்ற வென்னையானியானறிந்த தில்லையே. 125

இருக்கலா மிருக்கலா மவலிலே யிருக்கலாம்
அரிக்குமால் பிரமனு மகண்டமே முகற்றலாம்
கருக்கொளாத குழியிலே காலிடாத கண்ணிலே
நெருப்பறை திறந்தபின்பு நீயும்நானு மீசனே

ஏகபோக மாகிய விருவரு மொருவராம்
போகமும் புணர்ச்சியும் பொருந்துமாற தெங்ஙனே
ஆகிலு மழகிலு மதங்கணைய தானபின்
சாகிலும் பிறக்கினு மில்லையில்லை யில்லையே 127

வேதனுறு பூதமாய் விரவுமங்கி நீரதாய்
பாதமேயி லிக்கமாய்ப் பரிந்துபூசை பண்ணினால்
காதில்நின்று கடைதிறந்து கட்டறுத்த ஞானிகள்
ஆதியந்த முங்கடந்த தரியவீட தாகுமே. 128

பருத்திநூல் முரிக்கியிட்டு பஞ்சியோது மாந்தரே
துருத்திநூல் முருக்கியிட்டு துன்பநீங்க வல்லிரேல்
கருத்திநூல் கலைப்படுங் காலநூல் கழிந்திடும்,
திறுத்திநூல் காவருங் சிவாயவஞ் செழுத்துமே

சாவதான தத்துவச் சடங்குசெய்யு மூமைகாள்
தேவர்கல்லுமாவரோசிரிப்பதன்றி யென்செய்வேன்
மூவராலுமறியொணாத முக்கணன்முதற்கொழுந்து
காவலாக வும்முளே கலந்திருப்பன் காணுமே

காலைமாலை நீரிலே முழுகுமந்த மூடர்காள்
காலைமாலை நீரிலே கிடந்ததேரை யென்பெறும்,
காலமே யெழுந்திருந்து கண்கள்மூன்றி லொன்றை
யும், மூலமே நினைந்திராகில் முத்திசித்தி யாகுமே

எங்கள்தேவ ருங்கள்தேவ ரென்றிரண்டு தேவரோ
இங்குமங்கு மாகிநின்ற வாதிமூர்த்தி யொன்றலோ
அங்குமிங்கு மாயிரண்டு வாதிமூர்த்தி யொன்றலோ
வங்கவாரநு சொன்னபேர்கள் வாய்புழுத்து மாள்
வரே. 132

இறையறை யிடைக்கிட வன்றுதூமை யென்கி
றீர், முறையறிந்து பிறந்தபோது மன்றுதூமை யெ
ன்கிறீர், துறையறிந்து நீர்குளித்தா லன்றுதூமை
யென்கிறீர், பொறையிலாத நீசரோடும் பொருந்து
மாறதெங்ஙனே. 133

சத்தம்வந்த வெளியிலே சலமிருந்து வந்ததும்
மத்தமாகி நீரிலே துவண்டுமூழ்கு மூடரே

சுத்தமேது கட்டதேது தூய்மைகண்டு நின்றதேது
பித்தர்காய முற்றதேது பேதமேது போதமே 134

மாதமாதந் தூமைதான் மறந்துபோன தூமைதான்
மாதமற்று நின்றலோ வளர்ந்துரூப மானது
நாதமேது வேதமேது நற்குலங்க ளேதடா
வேதமோதும் வேதியா விளைந்தவாறும் பேசடா.

தூமையற்று நின்றலோ சுதீபமற்று நின்றது
ஆண்மையற்று நின்றலோ வழக்கமற்று நின்றது
தாண்மைபற்று ஆண்மையற்று சஞ்சலங்களற்றுநின்
று, தூமைதூமையற்றகாலஞ் சொல்லுமற்ற நின்றதே

ஊறிநின்ற தூமையை யுறைந்துநின்ற சீவனை
வேறுபேசி மூடரே விளைந்தவாற தேதடா
நாறுகின்ற தூமையல்லோ நற்குலங்க ளாவன
சீறுகின்ற மூடரேயத் தூமைநின்ற கோலமே. 137

தூமைகண்டுநின்றபெண்ணின் தூமைதானுமூறியே
சீமையெங்குமாணும்பெண்ணும்சேர்ந்துலகங்கண்ட
தே, தூமைதானும் ஆசையாய் துறந்திருந்த சீவனை
தூமையற்று கொண்டிருந்த தேசமேது தேசமே.

வேணும்வேணு மென்றுநீர் வீணுழன்று தேடுவீர்
வேணுமென்று தேடிநுலு முள்ளதல்ல தில்லையே
வேணுமென்றுதேடுகின்ற வேட்கையைத்திரந்தபின்
வேணுமென்றவப்பொருள் விரைந்துகாணலாகுமே

சிட்டரோது வேதமுஞ் சிறந்தவாக மங்களும்
நட்டகாரணங்களும் நவின்றமெய்மை நூல்களும்
கட்டிவைத்த போதகங் கதைக்குகந்த பித்தெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிராணையா னறிந்தபின்.

நூறுகோடி யாகமங்கள் நூறுகோடி மந்திரம்
நூறுகோடி நாளிருந்து மோதினு லதென்பயன்

ஆறுமாறு மாறுமா யகத்திலோ ரெழுத்துமாய்
ஏறுசீ ரெழுத்தைப்போத வீசன்வந்து பேசுமே

காலைமாலை தம்மிலே கலந்துநின்ற காலனார்
மாலைகாலை யாய்ச்சிவந்த மாயமேது செப்பிடீர்
காலைமாலை யற்றுநீர் கருத்திலே யொடுங்கினால்
காலைமாலை யாகிநின்ற காலனில்லை யில்லையே 142

எட்டுமண்ட லத்துளே யிரண்டுமண்ட லம்வளைத்து
இட்டமண்ட லத்துளே யெண்ணியாறு மண்டலம்
தொட்டமண்ட லத்திலே தோன்றிமூன்று மண்டலம்
நட்ட மண்டபத்துளே நாதனாடி நின்றதே. 143

நாலிரண்டு மண்டலத்துள் நாதனின்ற தெவ்விடம்
காலிரண்டு மூலநாடி கண்டதங் குருத்திரன்
சேரிரண்டு கண்கலந்து திசைகளெட்டு மூடியே
மேலிரண்டு தான்கலந்து வீசியாடி நின்றதே. 144

அம்மையப்ப னப்புநீ யறிந்ததே யறிகிலீர்
அம்மையப்ப னப்புநீ யறியய னரனுமாய்
அம்மையப்ப னப்புநீ ராதியாதி யானபின்
அம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யானதே.

உருத்தரிப்ப தற்குமுன் னுடல்கலந்த தெங்ஙனே,
கருத்தரிப்பதற்குமுன் காரணங்க ளெங்ஙனே,பொ
ருத்திவைத்தபோதமும் பொருந்துமாறதெங்ஙனே,
குருத்திருத்தி வைத்தசொல் குறித்துணர்ந்து கொ
ள்ளுமே. 146

ஆதியுண்டு வந்தமில்லை யன்றுநாலு வேதமில்லை
சோதியுண்டு சொல்லுமில்லைசொல்லிறந்ததேதுமில்
லை,ஆதியான மூவரி லமர்ந்திருந்த வாயுவும்
ஆதியன்று தன்னையும் மாரறிவ ரண்ணலே. 147

புலால்புலால் புலாலதென்று பேதமைகள் பேசுநீர்
புலாலைவிட்டு மெம்பிரான் பிரிந்திருந்த தெங்ஙனே

புலாலுமாய்ப் பிதற்றுமாய் பெருலாவுந் தானுமாய்
புலாலிலே முளைத்தெழுந்த பித்தர்காணு மத்தனே

உதிரமான பால்குலித் தொக்கநீர் வளர்ந்ததும்
இரத்தமா யிருந்ததென்றி ரண்டுபட்ட தென்கலாம்
மதிரமாக விட்டதேது மாங்கிசம் புலாலதென்று
சதிரமாய் வளர்ந்ததேது சைவரான மூடரே 149

உண்டகல்லை யெச்சிலென் றுள்ளெறிந்து போடுநீர்
கண்டவெச்சில் கையல்லோ பரமனுக்கும் வேறுமோ
கண்டவெச்சில் கேளடா கலந்தபாணி யப்பிலே
கொண்டசுத்த மேதடா குறிப்பிலாத மூடரே.

ஓதிவைத்த நூல்களு முணர்ந்து கற்ற கல்வியும்
மாதுமக்கள் சுற்றமு மறக்கவந்த நித்திரை
ஏதுபுக் கொளித்ததோ வெங்குமாதி நின்றதோ
சோதிடக் கொளித்தமாயஞ் சொல்லடா சுவாமியே

ஈரொருமை யின்சமுத்தி விட்டொட்ட ணங்கள்
போல், மூணுநாலுசிலையில் முடிந்தவிழ்க்கு மூடர்காள்
மூணுநாலு லோகமு முடிவிலாத மூர்த்தியை
ஊணியூணிநீர்முடிந்தவுண்மையென்ன வுண்மையே

சாவல்நாலு குஞ்சதஞ்சு தாயதான வாறுபோல்
தாயமான கூட்டிலே கலந்துசண்டை கொள்ளுதே
கூவமான கிழநரிக் கூட்டிலே புகுந்தபின்
சாவல்நாலு குஞ்சதஞ்சுந் தானிறந்து போனதே.

மூலமாங் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே யெழுந்திருந்து நாலுகட் டறுப்பிரேல்
பாலனாகி வாழலாம் பரப்பரக மாகலாம்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே

செம்பினிற் களிம்புவந்த சீதரங்கள் போலவே
அம்பினி லெழுதொணுக வணியரங்க சோதியை

வெம்பிவெம்பி வெம்பியே மெலிந்துமேல் கலங்கிட
செம்பினீர் களிம்புவிட்ட சேதியேது காணுமே.

நாடிநாடி யம்முளே நயத்துகாண வல்லிரேல்
ஓடியோடி மீளுவா ரும்முளே யடங்கிடும்
தேடிவந்த காலனும் திகைத்திருந்து போய்விடும்
* கோடிகால மும்முகந் திருந்தவாற தெங்ஙனே.

பிணங்குகின்ற தேதடா பிறஞ்ஞைகெட்ட மூடரே
பிணங்கிலாத பேரொளிப் பிராணனை யறிகிலீர்
பிணங்கும்வா ரிருவினைப் பிணக்கறுக்க வல்லிரேல்
பிணங்கிலாத பெரியவின்பம் பெற்றிருக்க லாகுமே

மீனிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மீனிருக்கு நீரலவோ மூழ்வதுங் குடிப்பதும
ஆட்டிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
ஆட்டிறைச்சி யல்லவோ யாகநீங்க ளாற்றலே.

மாட்டிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மாட்டிறைச்சி யல்லவோ மரக்கறிகிடுவது
மானிறைச்சி தின்றதில்லை யன்றுமின்றும் வேதியர்
மானுரித்த தோலலோ மார்புநூ லணிவதும்.

அக்கிடா ரனைத்துயிர்க்கு மாயயோகி நிற்பது
குக்கிடா ருவைப்பிடித்து குத்தரித்து விட்டது
மைக்கிடிற் பிறந்திறந்து மாண்டுமாண்டு போவது
மொக்கிடிலுமக்குநா னுணர்த்துவித்த நுண்மையே.

ஐயன்வந்து மெய்யகம் புகுந்தவாற தெங்ஙனே
செய்யதிங்க ளங்குரும்பை நீர்புகுந்த வண்ணமே
ஐயன்வந்துமெய்யகம் புகுந்துகோவில்கொண்டபின்
வையகத்தில் மாந்தரோடு வாய்திறப்ப தில்லையே

---

*கோடிகோடி காலமும் குறைவிலா திருப்பரே எனவும் பாடம்.

நவ்வுமவ்வை யுங்கடந்து நாடொணாத தசியின்மேல்
வவ்வுயவ்வு ளுஞ்சிறந்த வண்மைஞான போதகம்
ஒவ்வுசுத்தி யுண்ணிறைந்த துச்சி யூடுருவியே
இவ்வகை யறிந்தபேர்க ளீசனாணை யீசனே. 162

அக்கரமனாதியோ வாத்துமனாதியோ
புக்கிருந்த பூதமும் புலன்களு மனாதியோ
தக்கமிக்க நூல்களுஞ் சாத்திர மனாதியோ
தற்பரத்தை யூடறுத்த சற்குரு வனாதியோ. 163

பார்த்ததேது பார்த்திடில் பார்வையூ டழிந்திடும்
கூத்ததா யிருப்பிரேல் குறிப்பிலாச் சிவமதாம்
பார்த்தபார்த்த போதெலாம பார்வையு மிகந்துநீர்
பூத்தபூவுங் காயுமாய் பொருந்துவீர் பிறப்பிலே.

நெற்றிராக்தி யுழலுகின்ற நீலமா வழுங்கினைப்
பத்திபொத்தி நின்றுநின்று பற்றறுத்த தென்பலன்
உற்றிருந்து பாரடா வுள்ளொளிக்கு மேளொளி
அத்தனா யமர்ந்திட மறிந்தவன்ன னாதியே. 165

நீரையள்ளி நீரில்விட்டு நீநினைந்த காரியம்
ஆரையுன்னி நீரெலா மவததிலே யிறைக்கிறீர்
வேரையுன்னி வித்தையுன்னி வித்திலே முளைத்தெ
ழுந்த, சீரையுன்ன வல்லிரேல சிவபதங்கள சேரலாம்

நெற்றியிற் றயங்குகின்ற நீலமாம் விளக்கினை
யுய்த்துணர்ந்து பாரடா வுள்ளிருந்த சோதியைப்
பத்தியிற் றொடர்ந்தவர் பரமயம் தானவர்
அத்தலத் திருந்தபேர்க ளவரெனக்கு நாதரே.

கருத்தரிக்கு முள்ளெலாங் காயம்நின்ற தெவ்விடம்
உருத்தரிக்குமுள்ளெலா முயர்ப்புநின்ற தெவ்விடம்
அருட்டரிக்கு முள்ளெலா மாசைநின்ற தெவ்விடம்
திருக்கறுத்துகொண்டலோசிவாயமென்று கூறுவீர்

கருத்தரிக்கு முன்னெலாங் காயம்நின்ற தேயுவில்
உருத்தரிக்கு முன்னெலா முயிர்ப்புநின்ற தப்புவில்
அருட்டரிக்கு முன்னெலா மாசைநின்ற வாயுவில்
திருக்கறுத்துக்கொண்டதே சிவாயமென்றுகூறுமே.

தாதரான தாதருந் தலத்திலுள்ள சைவரும்
கூத்தரைப் பறைச்சிமக்கள் கூடிசெய்த காரியம்
வீதிபோகு ஞானியை விரைந்துகல் லெரித்ததும்
பாதகங்க ளாகவே பலித்ததே சிவாயமே. 170

ஓடியோடி பாவிழைத் துள்ளங்கால் வெளுத்ததும்
பாவியான பூனைவந்து பாலிலே குதித்ததும்
பணிக்கனவந்து பார்த்ததும் பாரமில்லை யென்றதும்
இழையறுந்து போனதும் என்னமாய மீசனே.

சதுரம்நாலு மறையுமிட்டு தானதங்கி மூன்றுமே
எதிரதான் வாயுவாறு எண்ணும்வட்ட மேவியே
உதிரந்தான் வரைகளெட்டு மெண்ணுமென் சிரசின்
மேல், கதிரதான காயகததில்கலந்தெழுந்த நாதமே.

நாலொடாறு பத்துமேல் நாலுமூன்று மிட்டபின்
மேலுபத்து மாறுடன் மேதிரண்ட தொன்றுமே
கோலியஞ் செழுத்துளே குருவிருந்து கூறிடில்
தோலும்மனிநாதமாய்த் தோற்றிநின்ற கோசமே.

கோசமா யெழுந்ததுங் கூடுருவி நின்றதும்
தேசமாய்ப் பிறந்ததுஞ் சிவாயமஞ் செழுத்துமே
ஈசனாரிருந்திடமனேகனேக மந்திரம்
ஆகமம் நிறைந்துநின்ற வைம்பத்தோ ரெழுத்துமே

அங்கலிங்க பீடமா வையிரண் டெழுத்திலும்
பொங்குதா மரையினும் பொருந்துவாய் மரத்திலும்
பங்குகொண்ட சோதியும் மரந்தவஞ் செழுத்துமே
சிங்கநாத வோசையுஞ் சிவாயமல்ல தில்லையே.

உவமையில்லாப் பேரொளிக்கு ளுருவமானதெவ்
விடம், உவமையாகி யண்டத்தி ளுருவிநின்றதெவ்
விடம், தவமதானபரமனார் தரித்துநின்றதெவ்விடம்
தற்பரத்திற்சலம்பிறந்து தாங்கிநின்றதெவ்விடம்.

சுகமதாக வெருதுமூன்று கன்றையீன்றதெவ்விடம்
சொல்லுகிழு லோகமேழும் நின்றவாறதெவ்விடம்
அளவதான மேருவும் அம்மைதானதெவ்விடம்
அவனுமவளு மாடலா லருஞ்சீவன் பிறந்ததே.

உதிக்குகின்றதெவ்விட மொடுங்குகின்றதெவ்வி
டம், கதிக்குநின்றதெவ்விடங் கன்றுறக்க மெவ்வி
டம். மதிக்கநின்றதெவ்விட மதிமயக்க மெவ்விடம்
விதிக்கவல்ல ஞானிகாள விரித்துரைக்க வேணுமே.

திரும்பியாடு வாசலெட்டு திறமுறைத்த வாசலெ
ட்டு, மருங்கிலாத கோலமெட்டு வன்னியாடுவாசலெ
ட்டு, தரும்பிலாத கோலமெட்டு சுத்திவந்த வருளே
ரே, அரும்பிலாதபூவுமுண் டையனாணையுள்ளமையே.

தாளிருந்து மூலவங்கி தணலெழுப்பு வாயுவால்
தேளிருந்து வரைதிறந்து தித்தியொன்று வொத்த
வானிருந்தமதியமூன்று மண்டலம் புகுந்தபின் [வே
ஊனிருந்த தளவுகொண்ட யோகிநல்ல யோகியே.

முக்கருங்கி ளைந்த போது முடிந்தவண்டத்துச்சியே
பத்தொரு மம்மையும் பரிந்துவாட லாடினார் [ஞ்
சித்தரான ஞானிகாள் தில்லையாட லென்பிர்காள்
அத்தனாட லுற்றபோ தடங்கலாட லுற்றதே.

ஒன்றமொன்று மொன்றமே யுலகனைத்துமொன்
றமே, அன்றுமின்று மொன்றமே யனாதியானதொ
ன்றமே, கன்றல்நின்ற செம்பொனைக் களிம்பறுத்து
நாட்டினால், அன்றுதெய்வ மும்முளே யறிந்ததே
சிவாயமே 182

அட்டதா பரங்களும் நவின்றசாத் திரங்களும்
இட்டமான ஓமகுண்ட மிசைந்தநாலு வேதமும்
கட்டிவைத்த புத்தகம் கடும்பிதற்றி தற்கெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிரானையா னறியவே.

வட்டமான கூட்டிலே வளர்ந்தெழுந்த வம்புலி
சட்டமீ படைத்திலே சங்குசக் கரங்களாய்
விட்டதஞ்சு வாசலில் கதவினா லடைத்தபின்
மூட்டையி லெழுந்தசிவன் விட்ட வாற தெங்ஙனே.

கோயில்பள்ளி யேதடா குறித்துநின்ற தேதடா
வாயினால் தொழுதுநின்ற மந்திரங்க ளேதடா
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியிற் காணலா மிறையையே. 185

நல்லவெள்ளி யாறதாய் நயந்தசெம்பு நாலதாய்
சொல்லுநாக மூன்றதாக் குலாவுசெம்பொ னிரண்ட
தாய், வில்லினோசை யொன்றுடன் விளங்கவூத வல்
லிரேல், எல்லையொத்தசோதியானையெட்டுமாற்றதா
குமே. 186

மனத்தகத் தழுக்கறாத மௌனஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினு மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத் திருக்கினும் பிறப்பறுத் திருப்பரே.

உருவுமல்ல வொளியுமல்ல வொன்றதாகி நின்றதே
மருவுமல்ல கந்தமல்ல மந்தநாடி யற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசுமாவி தானுமன்
றறியதாக நின்றநேர்மை யாவர்காண வல்லிரே.

ஓரெழுத் துலகெலா முதித்தவட் சரத்துடே
ஈரெழுத் தியம்புகின்ற வின்பமே தறிகிலீர்
மூவெழுத்து மூவராய் மூண்டெழுந்த மூர்த்தியை
நாலெழுத்து நாவிலே நவின்றதே சிவாயமே. 189

ஆதியந்த மூலவிந்து நாதமைந்து பூதமாய்
ஆதியந்த மூலவிந்து நாதமைந் தெழுத்துமாய்
ஆதியந்த மூலவிந்து நாதமேவி நின்றதும்
ஆதியந்த மூலவிந்து நாதமே சிவாயமே. 190

அன்னமிட்ட பேரெலா மனேககோடி வாழவே
சொன்னமிட்ட பேரெலாந் துரைத்தனங்கள் பண்
வின்னமிட்டபேரெலாம் வீழ்வரெந்நரகிலே .(ணலா
கன்னமிட்ட பேரெலாம் கடந்துநின்ற திண்ணமே.

ஓதொணாமல் நின்றநீ ருறக்கமூணு மற்றநீர்
சாதிபேத மற்றநீர் சங்கையன்றி நின்றநீர்
கோதிலாத வறிவிலே குறிப்புணர்ந்து நின்றநீ
ரேதுமன்றி நின்றநீ ரியங்குமாற தெங்ஙனே 192

பிறந்தபோது கோவணை யிலங்குநூல் குடுமியும
பிறந்துடன் பிறந்ததோ பிறங்குநாற் சடங்கெலா
மறந்தநாலு வேதமும் மனத்துளே யுதித்ததோ
நிலம்பிளந்து வானிடிந்து நின்றதென்ன வல்லீரே.

துருத்தியுண்டுகொல்லனுண்டு சொர்ணமான சோ
தியுண்டு, திருத்தமாய் மனத்திலுன்னித் திகழவூத
வல்லீரேல், பெருத்தநூ ணிலங்கியே தியங்கதாய்வி
ரிந்திடும, நிருத்தமான சோதியு நீயுமல்ல தில்லையே.

வேடமிட்டு மணிதுலக்கி மிக்கதூப தீபமாய்
ஆடறுத்துகூறுபோட்ட வவர்கள்போலும் பண்ணு
நீர், தேடிவைத்தசெம்பலாந் திரள்படப்பரப்பியே
போடுகின்ற புட்பபூசை பூசையென்ன பூசையே.

முட்டுகண்ட தூமையின் முளைத்தெழுந்த சீவனை
கட்டிகொண்டு நின்றிடங் கடந்துநோக்க வல்லீரேல்
முட்டுமற்று கட்டுமற்று முனியினின்ற நாதனை
எட்டுதிக்குங் கையினு ளிருந்தவீட தாகுமே.

அருக்கனோடு சோமனு மதுக்குமப் புறத்திலே
பெருக்கியே றுதாரகை நெருங்கினின்ற நேர்மையை
உருக்கியோரெழுத்துள யொப்பிலாதவெளியிலே
யிருக்கவல்ல பேரலோ யினிப்பிறப்ப தில்லையே

மூலவட்ட மீதிலே முளைத்தவஞ் செழுத்தின்மேல்
கோலவட்ட மூன்றுமாய் குலைத்தலந்து நின்றநீர்
ஞானவட்ட மன்றுளே நவின்றஞான மாகிலோ
ஏலவட்ட மாகியே யிருந்ததே சிவாயமே. 198

சுக்கிலத் திசையுளே சுரோணிதத்தின் வாசலுள்
முச்சதிர மெட்டுளே மூலாதார வறையிலே
அச்சமற்ற சவ்வுளே யரியரனு மயனுமாய்
உச்சரிக்கு மந்திர முண்மையே சிவாயமே. 199

ஆவநீரு மென்மனம் பொருதுகோயி லென்னுளம்
ஆவியோடு லிங்கமா யகண்டமெங்கு மாகிலும்
மேவுகின்ற ஐவரும் விளங்குதீப தீபமாய்
ஆடுகின்ற கூத்தனுக்கோ ரந்திசந்தி யில்லையே.

உருக்கலந்த பின்னலோ வுன்னைநா னறிந்தது
இருக்கிலென்மறக்கிலென் னினைந்திருந்தபோதெலா
உருக்கலந்து நின்றபோது நீயுநானு மொன்றலோ
திருக்கலந்த போதலோ தெளிந்ததே சிவாயமே.

சிவாயமஞ்செழுத்திலே தெளிந்து தேவராகலாம், சிவாயமஞ்செழுத்திலே தெளிந்துவான மாளலாம், சிவாயமஞ்செழுத்திலே தெளிந்துகொண்ட வான்பொருள் சிவாயமஞ்செழுத்துளே தெளிந்துகொண்டு முண்மையே. 202

பொய்க்குடத்தி லைந்தொதுங்கி போகவிசு மாறுபோல், இச்சடமு மிந்தியமும் நீருமே லலைந்ததே, உக்குடஞ்சவத்தைமொன் டமர்ந்திருந்தவாறுபோல் யிச்சடஞ்சிவத்தைமொண் டுகர்ந்தமர்ந்திருப்பதே

பட்டமுங் கயருபோல பறக்கநின்ற சீவனை
பாரவையாலே பார்த்துநீ படுமுடிச்சுப் போட்டா
திட்டவும் படாதடா சீவனை விடாதடா
சட்டடாநீ சிக்கெனக் களவறிந்த கள்வனை. 201

அல்லிருந்து பகலிருந் தகப்பிரம மிறந்துபோய்
அண்டரண்ட முங்கடந் தனேகனேக ரூபமாய்
சொல்லிறந்து மனமிறந்த சுகசொரூப வுண்மையைச்
சொல்லியாறவென்னிலவேறு துணைவரில்லையானதே.

இருபிரண்டு திங்களா யடங்கிநின்ற தூமைதான்
கையிரண்டு காலிரண்டு கண்ணிரண்டு மாகியே
மெய்திரண்டு சத்தயாய் விளங்கிரச கந்தமும்
துய்யகாய மானதுஞ் சொல்லுகின்ற தூமையே.

அங்கலிங்க பீடமு மசைவைமூன் றெழுத்திலுஞ்
சங்குசக் கரத்திலுஞ் சகலவா னசத்திலும்
தங்குகொண்ட யோகிகள் பரமவாச லஞ்சிலும்
சிங்கநாத வோசையுஞ் சிவாயமல்ல தில்லையே.

அஞ்செழுத்து மூன்றெழுத்து மென்றுரைக்கும ன்பர்காள், அஞ்செழுத்து மூன்றெழுத்துமல்லகாணு மப்பொருள், அஞ்செழுதது மெஞ்செழுத்திலவ்வெ ழுத்தறிந்தபின், அஞ்செழுத்து மவ்வின்வண்ண மா னதே சிவாயமே. 208

ஆதரித்தமந்திர மமைந்த வாக மங்களும்
மாதர்மக்கள் சுற்றமு மயக்கவந்த நித்திரை
ஏதுபுக் கொளித்ததோ வெங்குமாகி நின்றதோ
சோதிபுக் கொளுத்திடஞ் சொல்லடா சுவாமியே.

அக்கர மனாதியோ வாத்தும வனாதியோ
புக்கிருந்த பூதமும் புலன்களு மனாதியோ

தக்கமிக்க நூல்களுஞ் சதாசிவ மனுதியோ
மிக்கவந்த யோகிகாள் விரைந்துரைக்க வேணுமே.

ஒன்பதான வாசலு மொழியுநா ளிருக்கையில்
ஒன்பதாம ராமராம நாமமென்னு நாமமே
வன்மமான பேர்கள்வாக்கில்வந்துநோயடைப்பராம்
அன்பரானபேர்கள் வாக்கி லாய்ந்தமைந்திருப்பதே

அள்ளிநீரையிட்டதே தகங்கையிற் குழைத்ததேது
மெள்ளவேமினமினென்று விளம்புகிற்குமூடர்காள்
கள்ளவேடமிட்டதேது கண்ணைமூடி விட்டதேது
மெள்ளவே குருக்களே விளம்பிடீர் விளம்பிடீர்.

அன்னைகர்ப்பத் தூமையி லவதரித்த சுக்கிலம்
முன்னையே தரித்ததும் பனித்துளிபோ லாகுமே
உன்னிதொக்குளழலுந் தூமையுள்ளுளேயடங்கிடும்
பின்னையே பிறப்பதுந் தூமைகாணும் பித்தரே.

அழுக்கறத்தி னங்குறித் தழுக்கறுத மாந்தரே
அழுக்கிருந்த தவ்விட மழுக்கிலாத தெவ்விடம்
அழுக்கிருந்த தவ்விடத் தழுக்கறுக்க வல்லிரேல்
அழுக்கிலாத சோதியோ டணுகிவாழ லாகுமே.

அணுத்திரண்டகண்டமா யனைத்துபல்லியோனியாய்
மனுப்பிறந் தோதிவைத்த நூலிலே மயங்குறீர்
கனிப்பதேது சாவதேது தாபரத்தி னூடுபோய்
நினைப்பதேது நிற்பதேது நீர்நினைந்து பாருமே.

ஆதியாகி யண்டரண்ட மப்புறத்து மப்புரம்
சோதியாகி நின்றிலங்கு சுருதிநாத சோமனை
பேதியாமல் தம்முளே பெற்றுணர்ந்த ஞானிகாள்
சாதிபேத மென்பதொன்று சற்றுமில்லை யில்லையே.

ஆக்கைமுப்ப தில்லையே யாதிகா ரணத்திலே
நாக்கைமூக்கை யுள்மடித்து நாதநாடி யூடுபோய்

எக்கறுத்தி ரெட்டையு மிறுக்கழுத்த வல்லிரேல்
பார்க்கப்பார்க்க திக்கெலாம் பரப்பிரம மாகுமே.

அஞ்சுமஞ்சு மஞ்சுமஞ்சு மல்லல்செய்து நிற்பதும்
அஞ்சுமஞ்சு மஞ்சுமே யமர்ந்துளே யிருப்பதும்
அஞ்சுமஞ்சு மஞ்சுமே யாதரிக்க வல்லிரேல்
அஞ்சுமஞ்சு மும்முளே யமர்ந்ததே சிவாயமே

அஞ்செழுத்தி னாதியா யமர்ந்துநின்ற தேதடா!
நெஞ்செழுத்தி நின்றுகொண்டு நீசெபிப்ப தேதடா
அஞ்செழுத்தின் வாளதா லறுப்பதாவ தேதடா,பி
ஞ்செழுத்தினேர் மைதான்பிரித்துரைக்கவேண்டுமே

உயிரிருந்த தெவ்விட முடம்பெடுத்த தின்முனம்
உயிரதாவ தேதடா வுடம்பதாவ தேதடா
உயிரையு முடம்பையு மொன்றுவிப்ப தேதடா
உயிரினுடம்பெடுத்த வுண்மைஞானி சொல்லடா.

சுழித்தவோ ரெழுத்தையுஞ் சொன்முகத் திருத்தி
யே, துன்பவின்பமுங்கடந்து சொல்லுமூலநாடிகள்
அழுத்தமான வக்கர மங்கியுள் ளெழுப்பியே
ஆறுமங்கை யுட்கலந் தப்புறத் தலத்துளே. 221

உருத்தரிப்ப தற்குமுன் னுயிர்புகுந்து நாதமும்
கருத்தரித்த தற்குமுன் காயமென்ன சோணிதம்
அருட்டரிப்பதற்குமுன் னறிவுமூலா தாரமாம்
குருத்தறிந்துகொள்ளுவீர்குணங்கெடுங்குருக்களே.

எங்குமுள்ள வீசனா ரெம்முடல் புகுந்தபின்
பங்குகூறு பேசுவார் பாடுசென் றணுகிலார்
எங்கள்தெய்வ முங்கள்தெய்வ மென்றிரண்டு பேத
மோ, உங்கள்பேதமன் றியேவுண்மைரண்டுமில்லையே

அரியுமாகி யயனுமாகி யண்டமெங்கு மொன்றதாய்
பெரியதாகி யுலகுதன்னில் நின்றபாதமொன்றலோ

விரிவிதென்று வேறுசெய்து வேடமிட்ட மூடரே
அறிவினோடு பாருமிங்கு மங்குமெங்கு மொன்றதே.

வெந்தநீறு மெய்க்கணிந்து வேடமுந் தரிகிறீர்
சிந்தையுள் நினைந்துமே தினஞ்செபிக்கு மந்திரம்
முந்தமந் திரத்திலோ மூலமந்தி ரத்திலோ
எந்தமந்தி ரத்திலோ வீசன்வந் தியங்குமே. 225

அகாரகா ரணத்திலே யனேகனேக ரூபமாய்
உகாரகா ரணத்திலே யுருத்தரித்து நின்றனன்
மகாரகா ரணத்திலே மயங்குகின்ற வையகம்
சிகாரகா ரணத்திலே தெளிந்ததே சிவாயமே. 226

அவ்வெழுத்தி லுவ்வுவந் தகாரமுஞ்சனித்ததோ,
உவ்வெழுத்து மவ்வெழுத்து மொன்றையொன்று
நின்றதோ, செவ்வையொத்து நின்றலோ சிவபதங்
கள் சேரினும், மிவ்வையொத்த ஞானிகாள் விரித்து
ரைக்க வேணுமே. 227

ஆதியான வஞ்சிலு மனாதியான நாலிலும்
சோதியான மூன்றிலுஞ் சொரூபமற்ற ரெண்டிலும்
நீதியான தொன்றிலே நிறைந்து நின்ற வஸ்துவை
ஆதியான தொன்றுமே யற்றதஞ் செழுத்துமே.

வானிலாத தொன்றுமில்லை வானுமில்லை வானிடில்
ஊனிலாத தொன்றுமில்லை யூனுமில்லை யூனிடில்
நானிலாத தொன்றுமில்லை நானுமில்லை நண்ணிடில்
தானிலாத தொன்றுமே தயங்கியாடு கின்றதே.

சுழித்ததோ ரெழுத்தையுன்னி சொல்முகத்திருத்தி
யே, துன்பவின்பமுங்கடந்துசொல்லும்நாடியூடேபோ
ய்; அழுத்தமான வக்கரத்தி னங்கியை யெழுப்பியே
ஆறுபங்க யங்கடந் தப்புறத்து வெளியிலே. 230

விழித்தகண் குவித்தபோ தடைந்துபோ யெழுத்த
லா, விளைந்துவிட்டவிந்திரசாலவீடதானவெளியிலே

அழுத்திஞு மதிமயங்கி யனுபவிக்கும் வேலையில்
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானவே

நல்லமஞ் சனங்கள்தேடி நாடிநாடி யோடுறீர்
நல்லமஞ் சனங்களுண்டு நாதனுண்டு நம்முளே
எல்லை முஞ்சனங்கள் தேடி யேகபூசை பண்ணிறுல
தில்லைமேவு சிவனுஞ் சிவபதத்து ளாடுமே. 232

உயரகத்தில் நின்றிடு முடம்பெடுத்த தற்குமுன்
உயிரகார மாயிடு முடலுகார மாயிடும்
உயிரையு முடம்பையு மொன்றுவிப்ப தச்சிவம்
உயிரினு முடம்புதா னெடுத்தவா றுரைக்கினே.

அண்டமேழு முழலவே யணிந்தயோனி யுழலவே
பண்டுமா லயனுடன் பரந்துநின் றுழலவே
எண்டிசை கடந்துநின் றிருண்டசத்தி யுழலவே
அண்டரண்ட மொன்றதா யாதிநட்ட மாடுமே.

உருவநீ ருறப்புகொண் டுருத்தரித்து வைத்திடும்
பெரியபாதை பேசுமோ பிசாசையொத்த மூடரே
கரியமாலு மயனுமாக காணொணாத கடவுளை, உரிமை
யாகவும்முளே யுணர்ந்து வுணர்ந்துகொள்ளுமே.

பண்ணிவைத்த கல்லையும் மழம்பொருளதென்று
நீர், எண்ணமுற்று மென்னபே ருரைக்கிறீர்களே
மழைகாள், பண்ணவும் படைக்கவும் படைத்துவைத்
தளிக்கவும், ஒண்ணுமாகி யுலகளித்த வொண்ணைநெ
ஞ்சி லுன்னுமே 236

நாலதான யோனியுள் நவின்றவிந்து மொன்றதாய்
ஆலதான வித்துளே யமர்ந்தொடுங்குமாறுபோல்
சூலதான வுற்பனஞ் சொல்வதான மந்திரம்
மேலதான ஞானிகாள் விரித்துரைக்க வேணுமே.

அருவமா யிருந்தபோ தன்னையங் கறிந்திலை
உருவமா யிருந்தபோ தன்னை நா னறிந்தனன்
குருவினால்தெளிந்துகொண்டு கோதிலாத ஞானமாம்
பருவமான போதலோ பரப்பிரம மானதே.

பிறப்பது மிறப்பதும் பிறந்திடா திருப்பதும்
மறப்பது நினைப்பது மறந்ததைத் தெளிந்ததுந்
துறப்பதுந் தொடுப்பதுஞ் சுகித்துவாரி யுண்பதும்
பிறப்பது மிறப்பதும் பிறந்தவீ டடங்குமே.

கண்ணிலே யிருப்பனே கருங்கடல் கடைந்தமால்
விண்ணிலே யிருப்பனே மேவியங்கு நிற்பனே
தன்னுளே யிருப்பனே தராதலம் படைத்தவன்
என்னுளே யிருப்பனே யெங்குமாகி நிற்பனே.

ஆடுநாடு தேடினு மானைசேனை தேடினுங்
கோடிவாசி தேடினுங் குறுக்கேவந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையு முகந்துசெய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல தர்மம்வந்து நிற்குமே.

எள்ளிரும்புகம்பிளி யிடுப்பருத்து வெண்கலம்
அள்ளியுண்ட நாதனுக்கோ ராடைமாடைவஸ்திரம்
உள்ளுருக்கும் வேதியர்க் குற்றதான மீதிரால்
மெள்ளவந்து நோயணைத்து மீண்டிடுஞ் சிவாயமே.

ஊரிலுள்ள மனிதர்கா ளொருமனதாய்க் கூடியே
தேரிலே வடத்தையிட்டு செம்பைவைத் திழுக்கிறீர்
ஆரினாலு மறியொணாத வாதிசித்த நாதரை
பேதையான மனிதர்பண்ணும்பிரளிபாரும்பாருமே.

மருள்பகுந்த சிந்தையால் மயங்குகின்ற மாந்தரே
குருக்கொடுத்த மந்திரங் கொண்டுநீந்த வல்லீரேல்
குருக்கொடுத்த தொண்டருங் குகனொடிந்த பிள்ளை
யும், பருத்திபட்ட பன்னிரண்டு பாடுதான்படுவரே.

அன்னைகர்ப்ப வறையதற்கு ளங்கியின்பிரகாசமாய்
அந்தறைக்குள் வந்திருந் தரியவிந்து ரூபமாய், தன்
னையொத்துநின்றபோது தடையறுத்துவெளியதாய்
தங்கநற் பெருமைதந்து தலைவனாய் வளர்ந்ததே.

உன்னையற்ப நேரமு மறந்திருக்க லாகுமே
உள்ளமீ துறைந்தெனை மறைப்பிலாத சோதியை
பொன்னைவென்றபேரொளிப்பொருவிலாதவீசனே
பொன்னடிப்பிறப்பிலாமை யென்றுநல்கவேணுமே

பிடித்ததெண்டு மும்மதோ பிரமமான பித்தர்காள்
கடித்தகோலமத்தைவிட்டுசாதிபேதங்கொண்மினோ
வடித்திருந்ததோர்சிவத்தை வாய்மைகூறவல்லிரேல்
இடுக்கமுற்ற வீசனைச் சென்றுகூட லாகுமே.

சத்திநீ தயவுநீ தயங்குசங்கி னோசைநீ
சித்திநீ சிவனுநீ சிவாயமா மெழுத்துநீ
முத்திநீ முதலுநீ மூவரான தேவர்நீ
அத்திபுர மும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே.

சட்டையிட்டு மணிதுலங்குஞ் சாத்திரச் சழக்க
ரே, பொஸ்தகத்தை மெத்தவைத்து போதமோது
ம்பொய்யரே, நிட்டையேது ஞானமேது நீரிருந்தவ
க்ஷரம், பட்டையேது சொல்லிரே பாதகக்கபடரே.

உண்மையான சுக்கில முபாயமா யிருந்ததும்
வெண்மையாகி நீரிலே விரைந்துநீர தானதும்
தண்மையான காயமே தரித்துருவமானதும், தெண்
மையான ஞானிகாள் தெளிந் துரைக்க வேணுமே.

வஞ்சகப் பிறவியை மனத்துளே விரும்பியே
அஞ்செழுத்தி னுண்மையையறிவிலாதமாந்தர்காள்
வஞ்சகப் பிறவியை வதைத்திடவும் வல்லிரேல், அஞ்
செழுத்தி னுண்மையை யறிந்துகொள்ள லாகுமே.

காயிலாத சோலையிற் கனியுகந்த வண்டுகள்
ஈயிலாத தேனையுண் டிராப்பக லுறங்கிறீர்
பாயிலாத கப்பலேறி யக்கரைப் படுமுனே
* வாயினா லுரைப்பதாகு மோமவுன ஞானமே.

பேய்கள்பேய்க ளென்கிறீர் பிதற்றுகின்ற பேயர்காள், பேய்கள்பூசை கொள்ளுமோ பிடாரி பூசை கொள்ளுமோ, ஆதிபூசை கொள்ளுமோவனாதிபூசை கொள்ளுமோ, காயமான பேயலோ கணக்கறிந்து கொண்டதே. 253

மூலமண்ட லத்திலே முச்சதுர மாதியாய்
நாலுவாச லெம்பிரான் நடுவுதித்த மந்திரம்
கோலியெட் டிதழுமாய் குளிர்ந்தலர்ந்த தீட்டமாய்
மேலும்வேறு காண்கிலேன் விளைந்ததே சிவாயமே.

ஆதிகூடு நாடியோடு காலைமாலை நீரிலே
சோதிமூல மானநாடி சொல்லிறந்த தூவெளி
யாதிகூடு நெற்பறித்த காரமாதி யாகமாம்
பேதபேத மாகியே பிறந்துட லிறந்ததே. 255

பாங்கினோடிருந்துகொண்டு பரமனஞ்செழுத்துளே
யோங்கிநாடி மேலிருந்து உச்சரித்த மந்திரம்
மூங்கில்வெட்டிநாருரித்து முச்சிலைமுடிச்சிலே, ஆ
ய்ந்தநூலிற்றோன்றுமோமெயறிந்துணர்ந்துகொள்ளுமே.

புண்டரீக மத்தியி லுதித்தெழுந்த சோதியை
மண்டலங்கள் மூன்றினோடு மன்னுகின்ற மாயனை
அண்டரண்ட மூடறுத்தறிந்துரைக்க வல்லிரேல்,கண்
டகோயில் தெய்வமென்று கையெடுப்ப தில்லையே.

அம்பலங்கள் சாதியி லாடுகின்ற வம்பனே
அன்பனுக்கு ளன்பனாய் நிற்பனாதி வீரனே

---

* வாயிலாயி யென்னுங்கள் வாயிலாத மூடரே எனவும் பாடம்.

அன்பருக்கு ளன்பராய் நின்றவாதி நாயனே
உன்பருக்குவுண்மையாய் நின்றவுண்மையுண்மையே

அண்ணலாவ தேதடா வறிந்துரைத்த மந்திரம்
தண்ணுக வந்தவுன் சகலபுராணங் கற்றவன்
கண்ணுக வந்தவன் காரணைத் துதித்தவன்
ஒண்ணதாவ தேதடா யுண்மையான் மந்திரம்.

எள்ளதோர் புறப்பதோ ருயிரொடுங்கி நின்றிடம்
மெள்ளவந்து கிட்டிநீர் வினவவேணு மென்கிறீர்
உள்ளதும் புறம்பது மொத்தபோது நாதமாம்
கள்ளவாசலைத்திறந்து காணவேணு மப்பனே.

ஆரலைந்து பூதமா யளவிடாத யோனியும்
பாரமான தேவரும் பழுதிலாத பாசமும்
ஓரொணுத வண்டமு முலோகலோக லோகமும்
சேரவந்து போயிருந்த தேகமேது செப்புமே.

என்னகத்து ளென்னைநா னெங்குநாடியோடினேன்
என்னகத்து ளென்னைநா னறிந்திலாத தாகையால்
என்னகத்து ளென்னைநா னறிந்துமே தெரிந்தபின்
என்னகத்துளென்னையன் றியாதுமொன் றுமில்லையே

விண்ணினின் று மின்னெழுந்த மின்னெடுங்கும் வாறுபோல், என்னுள்நின் றமெண்ணுமீச னென்னகத்திருக்கையால், கண்ணினின் று கண்ணில்தோன்றும் கண்ணறிவி லாமையால், எண்ணுனின்றவென்னையுமியானறிந்த தில்லையே. 263

அடக்கினு மடக்கொணுத வம்பலத்தி னூடுபோய்
அடக்கினு மடக்கொணும லன்புருக்கு மென்றுளே
கிடக்கினு மிருக்கினுங் கிலேசம்வந் திருக்கினும்
நடக்கினு மிடைவிடாத நாதசங் கொலிக்குமே.

மட்டுலாவு தண்டுழா யலங்களாய் புனற்கழல் (லும்
விட்டுவீழில் தாகபோக விண்ணில்நண்ணில்வெளியி

எட்டினோ டிரண்டினு மிதத்தினால் மைந்தனைக்
கட்டிவீடி லாதுவைத்த காதலின்ப மாகுமே. 265

ஏகமுற்றி மூன்றுமுற்றி நாலுமுற்றி நன்மைசேர்
போகமுற்றிபுண்ணியத்தில் முற்றியன்றிமுற்றியாய்
நாகமுற்ற சயனமாய் நலங்கடல் கடந்ததீ
யாகமுற்றி யாகிநின்ற தென்கொலாதி தேவனே.

மூன்றுமுப்பத் தாறினோடு மூன்றுமூன்று மாயமாய்
மூன்றுமுக்தி யாகிமூன்று மூன்றுமூன்றுமூன்றுமா
ய்த், தோன்றுசாதி மூன்றதாய் துலக்கமில் விளக்க
தாய், என்றனாவி னுள்புகுந்த தென்கொலோநம்
மீசனே. 267

ஐந்துமைந்து மைந்துமா யல்லவத்து ளாயுமாய்
ஐந்துமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனே
ஐந்துமைந்து மைந்துமா யமைந்தனைத்து நின்றநீ
ஐந்துமைந்து மாயநின்னை யாவர்காண வல்லரே.

ஆறுமாறு மாறுமாயொ ரைந்துமைந்து மைந்துமாய்
ஏறுசீ ரிரண்டுமூன்று மேழுமாறு மெட்டுமாய்
வேறுவேறு ஞானமாகி மெய்யினோடு பொய்யுமாய்
ஊறுமோசை யாயமர்ந்த மாயமாய மாயனே. 269

எட்டுமெட்டு மெட்டுமாயோ ரேழுமேழுமேழுமாய்
எட்டுமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனே
எட்டுமாய பாதமோ டிரைஞ்சிநின்ற வண்ணமே
எட்டெழுத்து மோதுவார்க ளல்லல்நீங்கி நிற்பரே.

பத்தினோடு பத்துமாயோ ரேழினோடு மொன்பதாய்
பத்துநாற் றிசைக்குநின்ற நாடுபெற்ற நன்மையா
யத்துமாய கொத்தமோடு மத்தலமிக் காதிமால்
பத்தர்கட்க லாதுமுத்தி முத்திமுத்தி யாகுமே.

வாசியாகி நேசமொன்று வந்தெதிர்ந்த தென்னுக
நேசமாக நாளுவ நன்மைசேர்ப வங்களில்

வீதிமேல் நிமிர்த்தசோதி யில்லையாக்கி னுய்கழல்
ஆசையால் மறக்கலா தமரராக லாகுமே. 272

ஒளியதான காயமீதி லெம்பிரா னிருப்பிடம்
அளிவுறுத நின்றதே அகாரமும் உகாரமும்
கொளுகையான சோதியுங் குலாவிநின்ற தவ்விடம்
வெளியுதாகு மொன்றிலே விளைந்ததே சிவாயமே.

அஞ்செழுத்து மூன்றெழுத்து மென்றுரைக்கும் மன்பர்கா, அஞ்செழுத்து மூன்றெழுத்துமல்லகா னுமப்பொருள், அஞ்செழுத்தை நஞ்செழுத்தியவ்வெழுத்தறிந்தபின், அஞ்செழுத்து மூண்றெழுத்துமவ்வுமாஞ்சிவாயமே. 274

பொய்யுரைக்க போதமென்று பொய்யருக் கிருக்கையால், மெய்யுரைக்கவேண்டுதில்லை மெய்யர்மெய்க்கிலாமையால், வையகத்தி லுண்மைதன்னை வாய்திறக்கவஞ்சினேன் நையவைத்த தென்கொலோ நமசிவாயநாதனே. 275

ஒன்றையொன்று கொன்றுட னுணவுசெய்திருக்கினும், மன்றினூடு மொய்களவு மாறுவேறு செய்யினும், பன்றிதேடுமீசனைப்பரிந்துகூடவல்லிரேல், அன்றுதேவருங்குளே யறிந்துணர்ந்து கொள்ளுமே.

மச்சகத்து ளேயிவர்ந்து மாயைபேசும் வாயுவை
அச்சகத்துளேயிருந் தறிவுணர்த்திக் கொள்வீரேல்
அச்சகத்து ளேயிருந் தறிவுணர்த்தி கொண்டபின்
இச்சையற்ற வெம்பிரா னெங்குமாகி நிற்பனே.

வயலிலேமுளைத்தசெந்நெல் களையதானவாறுபோல்
உலகினோரும் வண்மைகூறி லவ்வுமாற தங்ஙனே
விரகிலேமுளைத்தெழுந்த மெய்யலாது பொய்யதாய்
நரகிலே பிறந்திருந்து நாடுபட்ட பாடதே. 278

ஆடுகின்ற வெம்பிரானை யங்குமங்கு மென்றுநீர்
தேடுகின்றபாவிகாள்தெளிந்ததொன்றையோர்கிலீர்
காடுநாடு வீடுவீண் கலந்துநின்ற கள்வனை
நாடியோடி யும்முளே நயந்துணர்ந்து பாருமே.

ஆடுகின்ற வண்டர்கூடு மப்புற மதிப்புறம்
தேடுநாலு வேதமுந் தேவரான மூவரும்
நீடுவாழி பூதமும்நின்றதோர் நிலைகளும்
ஆடுவாழி னொழியலா தனைத்துமில்லை யில்லையே.

ஆவதும் பரத்துளே யழிவதும் பரத்துளே
போவதும் பரத்துளே புகுவதும் பரத்துளே
தேவரும் பரத்துளே திசைகளும் பரத்துளே
யாவிரும் பரத்துளே யானும் பரத்துளே. 281

ஏழுபா ரெழுகட லிபங்களெட்டு வெம்புடன்
சூழுவான் கிரிகடந்து சொல்லுமே முலகமும்
ஆழிமால் விசுப்புகொள் பிரமாண்டரண்டவண்டமு
ஊழியானொளிக்குளே யுதித்திடனொடுங்குமே.

கயத்துநீ ரிறைக்கிறீர் கைகள்சோர்ந்து நிற்பதேன்
மனத்துளீர மொன்றிலாத மதியிலாத மாந்தர்காள்
அகத்துளீரங் கொண்டுநீ ரழுக்கறுக்க வல்லிரேல்
நினைத்திருந்த வேதியும் நீயும்நானு மொன்றரே

நீரிலே பிறந்திருந்து நீர்சடங்கு செய்கிறீர்
ஆரையுன்னி நீரெலா மவத்திலை யிறைக்கிறீர்
வேரையுன்னி வித்தையுன்னி வித்திலே முளைத்தெ
ழுஞ், சீரையுன்ன வல்லிரேற் சிவபத மடைவீரே.

பத்தொடத்த வாசலிற் பரந்துமூல வக்கர
முத்திசித்தி தொந்தமென றியங்குகின்ற மூலமே
மத்தசித்த வைம்புலன் மகாரமான கூத்தையே
அத்தியூரர் தம்முளே யமைந்ததே சிவாயமே.

அறிவினோடு மண்டபமா யளவிடாத சோதியை
குணமதாகி யும்முளே குறித்திருக்கில் முத்தியா
முணமுணொன்று உம்முளே விரலையொன்றிமீளவும்
தினந்தின மயக்குவீர் செம்புபூசை பண்ணியே.

மூலமான வக்கர முகப்பதற்கு முன்னெலாம்
மூடமாக மூடுகின்ற மூடமேது மூடரே
காலனான வஞ்சுபூத மஞ்சிலே யொடுங்கினால்
ஆதியோடு கூடுமோ வனாதியோடு கூடுமோ. 287

முச்சதுர மூலமாகி முடிவுமாகி யேகமாம்
அச்சதுர மாகியே யடங்கியோ ரெழுத்துமாய்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்குஞான தீபமாய்
உச்சரிக்கு மந்திரத்தி னுண்மையே சிவாயமே.

வண்டுலங்கள் போலுநீர் மனத்துமா சறுக்கிலீர்
குண்டலங்கள் போலுநீர் குளத்திலே முழுகுகிறீர்
பண்டுமுங்கள்நான்முகன் பறந்துதேடி காண்கிலான்
கண்டிருக்கு மும்முளே கலந்திருப்பர் காணுமே.

நின்றதன் றிருந்ததன்று நேரிதன்று கூறிதன்று
பந்தமன்று வீடுமென்று பரவகங்க ளற்றது
கெந்தமென்றி கேள்வியன்று கேடிலாத வானிலே
அந்தமன்றி நின்றதொன்றைதெங்ஙனேயுரைப்பதே

பொருந்துநீரு மும்முளே புகுந்துநின்ற காரணம்
எருதிரண்டு கன்றையீன்ற வேகமொன்றை யோர்கி
அருகிருந்து சாவுகின்ற யாவையு மறந்திலீர் (லீர்
குருவிருந்து லாவுகின்ற கோலமென்ன கோலமே.

அம்பரத்து ளாடுகின்ற வஞ்செழுத்து நீயலோ
சிம்புளாய் பரந்துநின்ற சிற்பரமு நீயலோ
எம்பிரானு மெவ்வுயிர்க்கு மேகபோக மாதலால்
எம்பிரானு நானுமா யிருந்ததே சிவாயமே. 292

ஈரொளிய திங்களே யியங்கிநின்ற தப்புறம்
பேரொளிய திங்களே யாவரு மறிகிலீர்
காரொளிய படலமுங் கடந்துபோன தற்பரம்
பேரொளிப் பெரும்பத மேகநாத பாதமே. 293

கொள்ளொணாது மெல்லொணாதுகோதறக்குதட்டொணா, தள்ளொணா தணுகொணா தாழலான்மனத்துளே, கொள்ளொணாது தெளியொணாது சிற்பரத்திலுட்பயன், விள்ளொணாது பொருளைநான் விளம்புமாற தெங்ஙனே. 294

வாக்கினல் மனத்தினல் மதித்தகா ரணத்தினல், நோக்கொணாதநோக்கையுன்னிநோக்கையாவர் நோக்குவார், நோக்கொணாத நோக்குவந்து நோக்கநோக்கநோக்கிடில், நோக்கொணாத நோக்குவந்து நேக்கைவெங்க ணேக்குமே. 295

உள்ளினும் புயம்பினுமுலகமெங்க ணும்பரந்,தெள்ளிலெண்ணெய் போலநின் றியங்குகின்ற வெம்பிரான், மெள்ளவந்தே னுட்புகுந்து மெய்த்தவம் புரிந்தபின், வள்ளளென்ன வள்ளலுக்கு வண்ணமென்னவண்ணமே. 296

வேதமொன் றுகண்டிலேன் வெம்பிறப்பிலாமையாய்
போதநின்ற வடிவதாய்ப் புவனமெங்கு மாயினய்
சோதியுள் ளொளியுமாய்த் துரியமோ டதீதமாய்
ஆதிமூல மாதியா யமைந்ததே சிவாயமே. 297

சாணிரு மடங்கினற் சரிந்தகொண்டை தன்னுளே
பேணியப் பதிக்குளே பிறந்திறந் துழலுவீர்
தோணியான வைவரைத் துறந்தறுக்க வல்லிரேல்
காணிகண்டு கோடியாகக் கலந்ததே சிவாயமே.

அஞ்சுகோடி மந்திர மஞ்சுளே யடங்கினல்
நெஞ்சுகூற வும்முளே நினைப்பதே ரெழுத்துளே

அஞ்சுநாலு மூன்றதாகி யும்முளே யடங்கினல்
அஞ்சுமோ ரெழுத்ததா யமைந்ததே சிவாயமே.

அக்கரந்த வக்கரத்தி லுட்கரந்த வக்கரம்
சக்கரத்துசிவ்வையுண்டு கம்புளத்திருந்ததும் [முன்
எட்கரந்த வெண்ணெய்போ லெவ்வெழுத்துமெம்பி
உட்கரந்து நின்றநேர்மை யாவர்காண வல்லரே.

ஆகமத்தி னுட்பொரு ளகண்டமூல மாதலால்
தாகபோக மன்றியே தரித்ததற் பரமுநீ
ஏகமாதம் வைத்தனை யுணர்த்துமஞ் செழுத்துளே
ஏகபோக மாகியே யிருந்ததே சிவாயமே. 301

மூலவாசல் மீதுளே முச்சதுர மாகியே
நாலுவாச லெண்விரல நடுவுதித்தமந்திரம்
கோலமொன்று மஞ்சுமாகு மிங்கலந்து நின்றநீ
வேறுவேறு கண்டிலேன் விளைந்ததே சிவாயமே.

சுக்கிலத் திடியுளே சுழித்ததோ ரெழுத்துளே
அக்கரத் திடியுளே யமர்ந்தவாதி சோதிநீ
உக்கரத் தடியுளே யுணர்ந்தவஞ் செழுத்துளே
அக்கரம தாகியே யமர்ந்ததே சிவாயமே. 303

குண்டலத்து ளேயுளே குறித்தகத்து நாயகன்
கண்டவந்த மண்டலங் கருத்தழித்த கூத்தனை
விண்டலர்ந்த சந்திரன் விளங்குகின்ற மெய்ப்பொரு
ள், கண்டுகொண்டமண்டலஞ் சிவாயமல்லதில்லையே.

சுற்றுமைந்துகூடமென்று சொல்லிறந்ததோர்வெளி
சத்தியுஞ் சிவனுமாக நின்றதன்மை யோர்கிலீர்
சத்தியாவ தும்முடல் தயங்குசீவ னுட்சிவம்
பித்தர்கா ளறிந்திலீர் பிரானிருந்த கோலமே 305

மூலமென்ற மந்திர முளைத்தவஞ் செழுத்துளே
நாலுவேத நாவுளே நவின்றஞான மெய்யுளே

ஆலமுண்ட கண்டனு மரியயனு மாதலால்
ஓமென்ற மந்திரஞ் சிவாயமல்ல தில்லையே. 306

தத்துவங்களென்றுநீர் தமைக்கடிந்து போவிர்காள்
தத்துவஞ் சிவமதாகில் தற்பரமு நீரல்லோ
முத்தசீவ னுதமே மூலபாதம் வைத்தபின்
அத்தனுரு மும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே

மூன்றுமுப்பத் து மூன்றையு மூன்றுசொன்ன மூலனை
தோன்றுசேர ஞானிகாள் துய்யபாத மென்றலை
என்றுவைத்தவைத்தபின் னியம்புமஞ்செழுத்தையு
ம், தோன்றவோதவல்லிரேல் துய்யசோதிகாணுமே.

உம்பர்வான கத்தினு மூலகபார மேழினும்
நம்பர்நாடு தன்னினு நாவலென்ற தீவினும் [ன்
செம்பொன்மாட மல்குதில்லை யம்பலத்து ளாடுவா
எம்பிரான லாதுதெய்வ மில்லையில்லை யில்லையே.

பூவிலாய வைந்துமாய் புனலில்நின்ற நான்குமாய்
தீயிலாய மூன்றுமாய் சிறந்தகா லிரண்டுமாய்
வேயிலாய தொன்றுமாய் வேறுவேறு தன்மையாய்
நீயலாமல் நின்றநேர்மை யாவர்காண வல்லரே.

அந்தரத்தி லொன்றுமா யசைவுகா லிரண்டுமாய்
செந்தழலில் மூன்றுமாய்ச் சிறந்தவப்பு நான்குமாய்
ஐந்துபாரி லைந்துமா யமர்ந்திருந்த நாதனை
சிந்தையிற் றெளிந்தமாயை யாவர்காண வல்லரே.

மனவிகார மற்றுநீர் மதித்திருக்க வல்லிரேல்
நினைவிலாத மணிவிளக்கு நித்தமாகி நின்றிடும்
அனைவரோதும் வேதமு மகம்பிதற்ற வேணுமேற்
கனவுகண்ட துண்மைநீர் தெளிந்ததே சிவாயமே.

இட்டகுண்ட மேதடா விருக்குவேத மேதடா
சுட்டமட் கலத்திலே சுற்றிநூல்க ளேதடா

மூடடிநின்ற தூணிலே முளைத்தெழுந்த சோதியை
பற்றிநின்ற தேதடா பட்டநாத பட்டரே. 313

நீரிலே முளைத்தெழுந்த தாமரையி னோரிலை
நீரினோடு கூடிநின்று நீரிலாத வாறுபோல்
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்
பாரினோடு கூடிநின்ற பண்ப்கண் டிருப்பிரே. 314

உறங்கிலென்விழிக்கிலெ னுணர்வுசென்றொடுங்கி
லேன், சிறந்தவைம்புலன்களுந் திசைத்திசைக்கொ
ன்றிலென், புறம்புமுள்ளு மெங்கனும் பொருந்திரு
ந்ததேகமாய், நிறைந்திருந்தஞானிகாள்! நினைப்பதே
துமில்லையே. 315

ஓதுவார்களோதுகின்ற வோரெழுத்து மொன்றதே
வேதமென்ற தேகமாய் விளம்புகின்ற தன்றிது
நாதமொன்று நான்முகன் மாலுநானு மொன்றதே
ஏதும்ன்றிநின்றதொன்றையா னுணர்ந்தநேர்மையே

பொங்கியே தரித்தவச்சு புண்டரீக வெளியிலே
தங்கியே தரித்தபோது தாதுமா துளையதாம்
அங்கியுட்சரித்தபோது வடிவுகளொளியுமாய்க்
கொம்புமேல் வடிவுகொண்டு குருவிருந்தகோலமே.

மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாரதெ
ங்கெனில, கண்ணினோடு சோதிபோற் கலந்தநாதவி
ந்துவும், அண்ணலோடுசத்தியு மஞ்சுபஞ்ச பூதமும்
பண்ணினோடுகொடுத்தழிப்பாரோடேழுமின்றுமே.

ஒடுக்குகின்றசோதியு முந்திநின்ற வொருவனும்,
நடுத்தலத்திலொருவனும் நடந்துகாலிலேறியே, விடு
த்துநின்ற விருவரோடு மெய்யினோடு பொய்யுமாய்,
அடுத்துநின் றறிமினோ வனாதிநின்ற வாதியே. 319

உதித்தமந் திரத்தினு மொடுங்குமக் கரத்தினும்
வதித்தமண் டலத்தினு மறைந்துநின்ற சோதிநீ
மதித்தமண் டலத்துளே மரித்துநீ யிருந்தபின்
இருத்தமண் டலத்துளே சிறந்ததே சிவாயமே.

திருத்திவைத்தசற்குருவைச் சீர்பெறவணங்கிலீர்
குருக்கொடுக்கும்பித்தரே கொண்டுநீந்த வல்லிரோ
குருக்கொடுக்கும்பித்தருங்குருக்கொள்வந்தசீடனும்
பருத்திபட்டபாடுதான் பன்னிரண்டும்பட்டதே.

விழித்தகண் துதிக்கவும் விந்துநாதவோசையும்
மேருவங்கடந்தவண்ட கோளமுங்கடந்துபோய்
எழுத்தெலாமறிந்துவிட்ட விந்திரஞானவெளியிலே
* யானுநீயுமேகலந்த தென்னிதொன்மையீசனே.

ஓம்நமா வென்றுளே பாவையென் றறிந்தபின்
பானுடற் கருத்துளே பாவையென் றறிந்தபின்
நானுநீயு முண்டடா நலங்குலம் துண்டடா
ஊனுமூனுமொன்றுமே யுணர்ந்திடாயெனக்குளே.

ஐம்புலனை வென்றவர்க் கன்னதான மீவதாய்
நண்புலன்க ளாடிநின்ற நாதருக்க தேறுமோ
ஐம்புலனை வென்றிடா தவத்தமே யுழன்றிடும்
வம்பருக்கு மீவதுங் கொடுப்பது மவத்தமே.

ஆதியான வைம்புலன்க ளவையுமொக்கு மொக்குமோ, யோனியிற் பிறந்திருந்த துன்பமிக்கு மொக்குமோ, வீணர்காள் பிதற்றுவீர் மெய்மையே யுணர்த்திரேல், ஊனுறக்க போகமு முமக்கெனக்குமொக்குமே. 325

* இருளை வெல்பவர்களுக் கெழுபிறப்பு மில்லையே.

ஓடுகின்ற வைம்புல னொடுங்கவஞ் செழுத்துளே
நாடுகின்ற நான்மறை நவிலுகின்ற ஞானிகாள்
கூடுகின்ற கண்டித குணங்கள்மூன் றெழுத்துளே
ஆடுகின்ற பாவையா யமைந்ததே சிவாயமே.

புவனசக் கரத்துளே பூதநாத வெளியிலே
பொருங்குதீபவங்கியுள் பெர்திங்தெழுந்தவாயுவைத்
தவனசோம ரிருவருந் தாமியங்கும் வாசலில்
தண்டுமாறி யேறிநின்ற சரசமான வெளியிலே.

மவுனவஞ் செழுத்திலே வாசியேறி மெள்ளவே
வானளாய் நிறைந்தசோதி மண்டலம் புகுந்தபின்
அவனுநானு மெய்கலந் தனுபவித்த வளவிலே
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானதே.

வாளுறையில்வாளடக்கம்வாயுரையில்வாய்விடக்கம்
ஆளுறையில்ஆளடக்கம்அருமைஎன்னவித்தைதகாண்
தாளுறையில்தாளடக்கம் தன்மையான தன்மையும்
நாளுறையில்நாளடக்கம் நானுநீயுங்கண்டதே.

வழுத்திடானழித்திடான் மாயரூபமாகிடாள்
கழன்றிடான்வெகுண்டிடான் காலகாலகாலமும்
துவண்டிடானசைந்திடான் றாயதூபமாகிடான்
சுவன்றிடானுரைத்திடான் சூக்ஷ்சூக்ஷ்சூக்ஷமே.

ஆகிக்கூவென்றேயுரைத்த வக்ஷரத்தினனந்தம்
யோகியோகியென்பர்கோடி யுற்றறிந்துகண்டிடார்
பூகமாம்மனக்குரங்கு பொங்குமங்குமிங்குமாய்
ஏகமேகமாகவே யிருப்பர்கோடிகோடியே.

கோடிகோடி கோடிகோடி குவலயத்தோராதியை
நாடிநாடிநாடிநாடி நாளகன்றுவீணதாய்
தேடிதேடிதேடிதேடி தேகமுங்கசங்கியே
கூடிகூடிகூடிகூடி நிற்பர்கோடிகோடியே.

கருத்திலான் வெளுத்திலான் பரனிருந்தகாரணம்
இருத்திலானொளித்திலா னென்றுரெண்டுமாகிலான்
ஒருத்திலான்மரித்திலா னெழிந்திடா னழிந்திடான்
கருத்திற்கியுங் கூவுமுற்றோன் கண்டறிந்தவாதியே.

வாதிவாதிவாதிவாதி வண்டலையறிந்திடான்
ஊதியூதியூதியூதி யொளிமழுங்கி யுளறுவான்
வீதிவீதிவீதிவீதி விடையெருப்புரக்குவோன்
சாதிசாதிசாதிசாதி சாகரத்தைக்கண்டிடான்.

ஆண்மையாண்மை யாண்மையாண்மை ஆண்மை கூறுமசடரே, காண்மையான வாதிரூபங் காலகால காலமும், பான்மையாகி மோனமான பாசமாகிநின் றிடும், நாண்மையான நரலைவாயில் நங்குமிங்கு மங்குமே. 335

மிங்குவென்றவட்சரத்தின் மீட்டுவாகிகூவுடன்
தங்கமாகச்சோமனோடு சோமன்மாதிநின்றிடும்
அங்கமாமுனைச்சுழியி லாகுமேகவாகையாய
கங்குலற்றுக்கியானமுற்று காணுவாய்சுடரொளி.

சுடரெழும்புஞ்சூட்சமுஞ் சுளுமுனையின்சூட்சமுஞ்
அடரெழும்பியேகமாக வமர்ந்துநின்றசூட்சமுந்
திடரதானசூட்சமுந் திரியின்வாலை சூட்சமுங், கட லெழும்புசூட்சந்தன்னை கண்டறிந்தோன்ஞானியே.

ஞானிஞானி யென்றுரைத்த நாய்கள்கோடிகோ டியே, வானிலாத மழைநாளென்ற வாதிகோடிகோ டியே, தானிலான சாகரத்தின் தன்மைகாணு மூட ர்காள், மூனிலாமற் கோடிகோடி முன்னறிந்தமெதன் பரே. 337

சூக்ஷமான கொம்பிலே சுளிமுனைச் சுடரிலே
வீச்சமானவீதியிலே விபுலைதங்கும் வாயிலே

கூச்சமான கொம்பிலே குடியிருந்த கோவிலே
தீக்ஷையான தீவிலே சிறந்ததே சிவாயமே 339

பொங்கிநின்றமோனமும் பொதிந்துநின்றமோனமுந்
தங்கிநின்றமோனமுந் தயங்கிநின்றமோனமுங்
கங்கையானமோனமுங் கதித்துநின்றமோனமுந்
திங்களானமோனமுஞ் சிவனிருந்தமோனமே. 340

மோனமானவீதியில் முனைச்சுழியில்வாலையில்
பானமானவீதியில் பசிந்தசெஞ்சுடரிலே
ஞானமான மூலையில் நாலைதங்கும்வாயலில்
ஓனமானசெஞ்சுட ருதித்ததேசிவாயமே. 341

உதித்தெழுந்தவாலையு முயங்கிநின்றவாலையும்
கதித்தெழுந்தவாலையுங் காலையானவாலையும்
மதித்தெழுந்தவாலையு மறைந்துநின்றஞானமுங்
கொதித்தெழுந்துகும்பலாகி ஹாயுங்ஹீயுமானதே.

கூவுங்கியுமோனமாகி கொள்கையானகொள்கையை
மூவிலேயுதித்தெழுந்த முச்சுடர்விரிவிலே
பூவிலேநறைகள்போற் பொருந்திநின்றபூரணம்
ஆவியாவியாவியாவி யன்பருள்ளமுற்றதே. 343

ஆண்மைகூறுமாந்தரே அருக்கனோடும்வீதியைக்
காண்மையாகக்காண்பிரே கசடறுக்கவல்லிரே
தூண்மையானவாதிசூட்சஞ் சோபமாகுமாகுமே
நாண்மையானவாயலில் நடிநந்துநின்றநாதமே. ()

நாதமானவாயலில் நடிந்துநின்றசாயலில்
வேதமானவீதியில் விரிந்தமுச்சுடரிலே
சீதமானஹீயிலே கிளர்ந்துநின்றகூவிலே
பூதமானவாயலைப் புகலறிவனுதியே. 345

ஆவியாவிபாவியாவி ஐந்துகொம்பிஞவியே
மேவிமேவிமேவிமேவி மேதினியின்மானிடர்

வாவிவாவிவாவிவாவி வண்டற்கவறிந்திடார்
பாவிபாவிபாவிபாவி படியிலுற்றமாந்தரே. 346

வித்திலே முளைத்தசோதி வில்வளைவின் மத்தியில்
உத்திலே யொளிவதாகி மோனமான தீபமே
நத்திலோதி ரச்சிபோன்ற நாதனை யறிந்திடார்
வத்திலே கிடந்துழன்ற வாலையான சூட்சமே. ()

வாலையோடு காலையும் வடிந்துபொங்கு மோனமே
மாலையோடு காலையான வாரறிந்த மாந்தரே
மூலையான கோணமின் முளைத்தெழுந்த சுடர்
தாலையோடு பானகன்று தங்கிநின்ற மோனமே. ()

மோனமான வீதியில் முடிகிநின்ற நாதமே
ஈனமின்றி வேகமான வேகமென்ன வேகமே
கானமான மூலையில் கனித்திருந்த வாலையில்
ஞானமான செஞ்சுடர் நடந்ததே சிவாயமே. ()

உச்சிமத்தி வீதியி லொழிந்திருந்த சாதியிற்
பச்சியுற்ற சோமனும் பரந்துநின் றுலவவே
செச்சியான தீபமே தியானமான மோனமே
கச்சியான மோனமே கடந்ததே சிவாயமே. 350

அஞ்சிகொம்பி னின்றநாத மாலைபோ லெழும்பியே
பிஞ்சினோடு பூமலர்ந்து பெற்றியுற்ற சுத்தமே
செஞ்சுட ருதித்தபோது தேசிகன் சுழன்றுடன்
பஞ்சபூத மானதே பறந்துநின்ற மோனமே. 351

சடுதியான கொம்பிலே தத்துவத்தின் ஹ்ரீயிலே
அடுதியான ஆவிலே யாணிருந்த ஹூவிலே
இடுதியென்ற சோலையி லிருந்தமுச் சுடரிலே
நடுதியென்று நாதமோடி நன்குறவ மைந்ததே

அமையுமாள மோனமு மரனிருந்த மோனமும்
சபையும்பூத மோனமுந் தரித்திருந்த மோனமும்

இமையுங்கொண்ட வேகமு மிலங்குமுச்சி மோனமும்,தமையறிந்தமாந்தரே சடத்தையுற்றுநோக்கிலார்

பாச்சலூர் வழியிலே பரனிருந்த சுழியிலே
காய்ச்சகொம்பி னுனியிலே கனியிருந்த மலையிலே
வீச்சமான தேதடா விரிவுதங்கு மிங்குமே
மூச்சினோடு மூச்சைவாங்கு முட்டிநின்ற சோதியே.

சோதிசோதி யென்றுநாடித் தோற்பவர் சிலவரே
ஆதிஆதி யென்றுநாடு மாடவர் சிலவரே
வாதிவாதி யென்றுசொல்லும் வம்பருஞ் சிலவரே
நீதிநீதி நீதிநீதி நின்றிடு முழுசுடர் 355

சுடரதாகி யெழும்பியங்கு தூபமான காலமே
இடரதாய்ப் பவியும்விண்ணு மேகமா யமைக்கமுண்
படரதாக நின்றவாதி பஞ்சபூத மாகியே
அடரதாக அண்டமெங்கு மாண்மையாக நின்றதே.

நின்றிருந்த சோதியை நிலத்திலுற்ற மானிடர்
கண்டறிந்து கண்குளிர்ந்து காதலுற் றுலாவுவோர்
கண்டமுற்ற மேன்முனையின் காட்சிதன்னைக் காணுவார், நன்றியற்று நரலைபொங்கி நாதமுமகிழ்ந்திடும்.

வயங்குமோனச் செஞ்சுடர் வடிந்தசோதி நாதமுங்
கயங்கள்போலக் கதறியே கருவூரற்ற வெளியிலே
பயங்கொடின்றி யின்றியே படர்ந்துநின்றபான்மையே,நயங்கள்கோவென் றேநடுங்கிநங்கையான தீபமே.

தீபவுச்ச முனையிலே திவாகரத்தின் சுழியிலே
கோபமாறு கூவிலே கொதித்துநின்ற தீயிலே
தாபமான மூலையிற் சமைந்துநின்ற சூக்ஷமுஞ்
சாபமான மோட்சமுந் தடித்துநின் றிலங்குமே.

தேசிகன் சுழன்றதே திரிமுனையின் வாலையில்
வேசமோடு வாலையில் வியனிருந்த மூலையில்
நேசசந்தி ரோதைய நிறைந்திருந்த வாரமில்
வீசிவீசி நின்றதே விரிந்துனின்ற மோனமே. 360

உட்கமல மோளமி லுயங்கிநின்ற நந்தியை
விக்கலோடு கீயுமாகி வில்விளாவின் மத்தியில்
முட்பொதிந்த தென்னவே முடிகிநின்ற செஞ்சுடர்
கட்குவைகள் போலவுங் கடிந்துநின்ற காட்சியே.

உந்தியிற் சுழிவழியி லுச்சியுற்ற மத்தியிற்
சந்திர னொளிகிரணந் தாண்டிநின்ற செஞ்சுடர்
பந்தமாக வில்வளாவிற் பஞ்சபூத விஞ்சையாங்
கிந்துபோற் கீயில்நின்று கீச்சுமூச்சு வென்றதே,

செச்சையென்ற மூச்சினோடு சிகாரமும் வகாரமும்
பச்சையாகி நின்றதே பரவெளியின் பான்மையே
இச்சையான ஹூவிலே யிருந்தெழுந்த ஹ்ரீயிலே
உச்சியான கோணத்தி லுதித்ததே சிவாயமே

ஆறுமூலைக் கோணத்தி லமைந்தவொன்ப தாத்திலே
நாறுமென்று நங்கையான சாவியுந் தெரிந்திட
கூறுமென்று ஐவரங்கு கொண்டுநின்ற மோனமே
பாறுகொண்டு நின்றது பறந்ததே சிவாயமே.

பறந்ததே கறந்தபோது பாச்சலூர் வழியிலே
பிறந்ததே பிராணனன்றிப் பெண்ணுமாணு மல்லவே
துறந்ததோ சிறந்ததோ தூயதுங்க மானதோ
இறந்தபோதி லன்றிஈ இலங்கிடுஞ் சிவாயமே.

அருளிருந்த வெளியிலே அருக்கனின்ற விருளிலே
பொருளிருந்த சுழியிலே புரண்டெழுந்த வழியிலே
தெருளிருந்த கலையிலே யங்கிநின்ற வலையிலே
குருவிருந்த வழியினின்று ஹூவுங்ஹ்ரீயு மானதே.

ஆனதோ ரெழுத்திலே யமைந்துநின்ற வாதியே
கானமோடு தாலமீதிற் கண்டறிவ தில்லையே
தானுந்தானு மானதே சமைந்தவாலை காலையில்
வேனலோடு வாறுபோல் விரிந்ததே சிவாயமே.

ஆறுகொண்ட வாரியு மமைந்துநின்ற தெய்வமுந்
தூறுகொண்ட மாரியுந் துலங்கிநின்ற தூபமும்
வீறுகொண்ட மோனமும் விளங்குமுட் கமலமும்
மாறுகொண்ட ஊவிலே மடிந்ததே சிவாயமே.

வாயல்கண்ட கோணமில் வயங்குமவர் வைகியே
சாயல்கண்டு சார்ந்ததுந் தலைமன்று றுறைந்ததுங்
காயவண்டு கண்டதுங் கருவூரங்கு சென்றதும்
பாயுமென்று சென்றதும் பறந்ததே சிவாயமே.

பறந்ததே துறந்தபோது பாச்சலூர் வழியிலே
மறந்ததே கவ்வுமுற்ற வாணர்கையின் மேவியே
பிறந்ததே யிறந்தபோதிற் பீடிடாமற் கீயிலே
சிறந்துநின்ற மோனமே தெளிந்ததே சிவாயமே

வடிவுபற்ப வாசனத் திருத்திமூல வனலையே
மாருதத்தி னலெழுப்பி வாசலைந்து நாலையு
முடிவுமுததி ரைப்படுத்தி மூலவினை தண்டினால்
முளரியக யங்கடந்து மூலநாடி யூடுபோய் 371

அடிதவக்கி முடியளவு மாறுமா நிலங்கடந்
தப்புறத்தில் வெளிகடந்த வாதியெங்கள் சோதியை
யுடுபதிக்க ணமுதருந்தி யுண்மைஞான வவகையுள்
உச்சிபட் டிறங்குகின்ற யோகிநல்ல யோகியே.

மந்திரங்க ளுண்டுநீர் மயங்குகின்ற மானிடர்
மந்திரங்க ளாவது மறத்திலூற லன்றுகாண்
மந்திரங்க ளாவது மதித்தெழுந்த வாயுவை
மந்திரத்தை யுண்டவர்க்கு மாணமேது மில்லையே.

மந்திரங்கள் கற்றுநீர் மயங்குகின்ற மாந்தரே
மந்திரங்கள் கற்றநீர் மரித்தபோது சொல்விரோ
மந்திரங்க ளும்முளே மதித்தநீரு மும்முளே
மந்திரங்களாவது மனத்தினைந் தெழுத்துமே.

உள்ளதோ பிறப்பதோ வுயிரொடுங்கி நின்றிடம்
மெள்ளவெந்து கிட்டிநீர் வினவவேண்டு மென்கிறீர்
உள்ளதும் பிறப்பதும் மொத்தபோது நாதமாங்
கள்ளவாசலைத்திறந்து காணவேண்டு மாந்தரே.

ஓரெழுத்தி லிங்கமா யோதுமட் சரத்துள
ஓரெழுத்தி யங்குகின்ற வுண்மையை யறிகிலீர்
மூவெழுத்து மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாலெழுத்து நாவுடே நவின்றதே சிவாயவே.

முத்திசித்தி தொந்தமா முயங்குகின்ற மூர்த்தியை
மற்றுதித்த வப்புளல்க ளாகுமத்தி மப்புவன்
அத்தர்நித்தர் காளகண்ட ரன்பினு லனுதினம்
உச்சரித் துளத்திலே யறிந்துணர்ந்து கொண்மினே

மூன்றிரண்டுமைந்துமாய் முயன்றெழுந்ததேவராய்
மூன்றிரண்டு மைந்தராய் முயன்றதே யுலகெலாம்
ஈன்றதாயு மப்பனு மியங்குகின்ற நாதமாய் [லையே
தோன்றுமோ ரெழுத்தினோடு சொல்லலொன்று மில்லை

வெளியுருக்கி யஞ்செழுத்து விந்துநாத சத்தமுந்
தளியுருக்கி நெய்கலந்து சகலசத்தி யானதும்
வெளியிலு மவ்வினையிலு மிருவரை யறிந்தபின்
வெளிகலந்த தன்மையால் தெளிந்ததே சிவாயமே

முப்புறத்தி லப்புரம் முக்கணன் வினையிலே
சிற்பரத்து ளுற்பனஞ் சிவாயமஞ் செழுத்துமாந்
தற்பரமுதித்து நின்று காணுவெங்கு மானபி
னிப்புற மொடுங்குமோடி யெங்கும்லிங்க மானதே.

ஆடிநின்ற சீவனோ ரஞ்சுபஞ்ச பூதமோ
கூடிநின்ற சோதியோ குலாவிநின்ற மூலமோ
நாடுகண்டு நின்றதோ நாவுகற்ற கல்வியோ
வீடுகண்டு விண்டிடின் வெட்டவெளியு மானதே.

உருத்தரித்தபோதுசீவ னோக்கநின்றவுண்மையுந்
திருத்தமுள்ளதோன்றிலுஞ் சிவாயபஞ்செழுத்து
மா,மிருத்துநின்றுறுத்தடங்கி யேகபோகமானபின்
கருத்தினின்றுதித்ததே கபாலமேந்துநாதனே.

கருத்தரித் துதித்தபோது கமலபீட மானதுங்
கருத்தரித் துதித்தபோது காரணங்க ளானதுங்;
கருத்தரித் துதித்தபோது காரணமிரண்டு கண்களா
ய்,கருத்தினில்றுதித்ததே கபாலமேந்துநாதனே.

ஆனவன்னிமூன்றுகோண மாறிரண்டெட்டிலே
யானசீவனஞ்செழுத் தகாரமிட்டலர்ந்தது
மானசோதியுண்மையு மனாதியானவுண்மையு
மானதானதானதா யவலமாய்மறைந்திடும். ()

ஈன்றெழுந்தவென்பிரான் றிருவரங்கவெளியிலே
நான்றபாம்பின்வாயினால் நாலுதிக்குமாயினான்
மூன்றுமூன்றுவளையமாய் முப்பரங்கடந்தபின்
னீன்றெழுந்த அவ்வினோசை யெங்குமாகிநின்றதே.

எங்குமெங்கு மொன்றலோ வீரேழ்லோகமொன்
றலோ, அங்குமிங்கு மொன்றலோ வனாதியான தோ
ன்றலோ, தங்குதா பரங்களுந் தரித்துவார தொன்
றலோ,உங்களெங்கள்பங்கினி லுதித்ததேசிவாயமே.

அம்பரத்தி லாடுஞ்சோதி யானவன்னி மூலமா
மப்பரமுந் தம்பரகு மகோரமிட் டலர்ந்தது
மம்பரக் குளியிலே யங்கமிட் டுருக்கிட
வம்பரத்தி லாதியோ டமர்ந்ததே சிவாயமே.

வாடிலாத பூமலர்ந்து வண்டுரிசை நாவிலே
யோடிநின் றுருவெடுத் துகாரமா யலர்ந்தது
மாடியாடி யங்கமு மகப்படக் கடந்தபின்
கூடிநின் றுலாவுமே குருவிருந்த கோலமே

விட்டடிவிரைத்ததோ வேருருக்கிநின்றதோ
எட்டிநின்றசீவனு மீரேழ்லோகங்கண்டதோ
தட்டுருவமாகிநின்ற சதாசிவத்தொளியதோ
விட்டவீடறிந்தபேர்கள் வானதேவராவரே.

வானவர் நிறைந்தசோதி மானிடக் கருவிலே
வானதேவ ரத்தனைக்குள் வந்தடைவர் வானவர்
வானகமு மண்ணகமும் வட்டவீ டறிந்தபின்
வானெலா நிறைந்துமன்னு மாணிக்கங்களானதே.

பன்னிரண்டுகால்நிறுத்திப் பஞ்சவர்ணமுற்றிடின்
மின்னியேவெளிக்குணின்று வேரிடத்தமர்ந்ததுஞ்
சென்னியாந்தலத்திலே சீவனின்றியங்கிடும்
பன்னியுன்னியாயந்தவர் பரப்பிரமமானதே.

உச்சிகண்டுகண்கள்கட்டியுண்மைகண்டதெவ்விடம்
மச்சுமாளிகைக்குளே மானிடங்கலப்பிரேல்
எச்சிலான வாசல்களு மேகபோகமாய்விடும்
பச்சைமாளுமீசனும் பரந்ததேசிவாயமே. 361

வாயிலிட்டு நல்லுரிசை யட்சரத் தெளியிலே
கோயிலிட்டு வாவியுமங் கொம்பிலே யுலர்ந்தது
மாயிலிட்ட காயமு மனுதியிட்ட சீவனும்
வாயுவிட்ட வன்னியும் வளர்ந்ததே சிவாயமே.

அட்சரத்தை யுச்சரித் தனுதியங்கி மூலமா
யட்சரத்தை யுந்திரந்த கோரமிட்டலர்ந்தது
மட்சரத்தி லுட்கர மகப்படக் கடந்தபின்
அட்சரத்தி லாதியோ டமர்ந்ததே சிவாயமே.

கோயிலுங் குளங்களுங் குளியினிற் குருக்களாய்
மாயிலு மடியிலு மனத்திலே மயங்குறீர்
ஆயனை யானையு மறிந்துணர்ந்து கொள்விரேல்
தாயினுந் தகப்பனோடு தானமர்ந் தொக்குமே.

கோயிலெங்கு மொன்றலோ குளங்கணீர்க ளொன்றலோ, தேயுவாயு வொன்றலோசிவனுமங்கேயொன்றலோ, ஆயசீவ னெங்குமா ரமர்ந்துவார தொன்றலோ,காயமீதறிந்தபேர்கள் காட்சியாவர்காணுமே

காதுகண்கள்மூக்குமாய் கலந்துவாரதொன்றலோ
சோதியிட்டடுத்ததுஞ் சகங்களுஞ்சுமொன்றலோ
ஓதிவைத்தசாத்திர முதித்துவாரதொன்றலோ
நாதவீடறிந்தபேர்க ளுதராவர் காணுமே. 366

அவ்வுதித்த வட்சரத்தி னுட்கலந்த வட்சரம்
சவ்வுதித்த மந்திரஞ் சம்புவத் திருந்ததால்
மவ்வுதித்த மாய்கையால் மயங்குகின்ற மாந்தர்காள்
உவ்வுதித்த தவ்வுமா யுருத்தரித்த வுண்மையே.

அகாரமென்னு மக்கரத்தி லக்கர மெழுந்ததோ
அகாரமென்னு மக்கரத்தி லவ்வுவந் துதித்ததோ
உகாரமு மகாரமு மொன்றிநின்று நின்றதோ
வீகாரமற்ற ஞானிகாள்விரித்துரைக்க வேணுமே.

சத்தியாவ துன்னுடல் தயங்குசீவ னுட்சிவம்
பித்தர்கா ளிதற்குமேல் பிதற்றுகின்ற தில்லையே
சுத்தியைந்து கூடமென்று சொல்லிறந்த தோர்வெளி,சத்திசிவமுமாகிநின்றுதண்மையாவதுண்மையே

சுக்கிலத் துளையிலே சுரோணிதக் கருவுளே
முச்சதுர வாசலில் முளைத்தெழுந்த மோட்டினில்
மெய்ச்சதுர மெய்யுளே விளங்குஞான தீபமா
யுச்சரிக்கு மந்திரம் ஓம்நமசி வாயமோ.

அக்கர மனாதியல்ல வாத்தும மனாதியல்ல
புக்கிருந்த பூதமும் புலன்களு மனாதியல்ல
தக்கமிக்க நூல்களுஞ் சாஸ்திர மனாதியல்ல
வொக்கநின்றுடன்கலந்த வுண்மைகாணனாதியே.

மென்மையாகிநின்றதேது விட்டுநின்றதொட்டதே
து,வுண்மையாகநீயுரைக்க வேணுமெங்க ளுத்தமா
பெண்மையாகிநின்றதொன்று விட்டுநின்றதொட்ட
தை, புண்மையாயுரைக்கமுத்தி யுட்சலத்திருந்ததே.

அடக்கினாலடங்குமோ வண்டமஞ்செழுத்துளே
யுடக்கினாலெடுத்தகாய முண்மையென்னுணர்ந்துநீ
சடக்கிலாறுவேதமுந் தரிக்கவோதிலாமையால்
விடக்குநாயுமாயவோதி வேறுவேறுபேசுமோ. 403

உண்மையான சக்கர முபாயமா யிருந்ததுந்
தண்மையான காயமுந் தரித்தரூப மானதும்
வெண்மையாகி நீறியே விளைந்துநின்ற தானது
முண்மையானஞானிகள் விரித்துரைக்கவேண்டுமே.

எள்ளகத்தி லெண்ணெய்போல வெங்குமாகியெம்பி
ரா, னுள்ளகத்தி லேயிருக்க வூசலாடு மூடர்காள்
கொள்ளைபட்ட வாலினைக் குணக்கெடுக்கவல்லிரேல்
வள்ளலாகி நின்றசோதி காணலாகு மெய்ம்மையே.

வேணுமென்றஞானமும் விரும்புகின்ற நூலிலே
தானுவுண்டங்கென்கிறீர் தரிக்கிலீர்மறக்கிலீர்
தானுவொன்றுமூலநாடி தன்னுள்நாடியும்முளே
காணுமன்றிவேறியாவுங் கனாமயக்கமொக்குமோ

வழக்கிலேயுரைக்கிறீர் மனத்துள தவிக்கிறீர்
உழக்கிலாதுநாழியான வாறுபோலுமூமைகாள்

உழக்குநாலு நாழியான வாறுபோலு மும்முளே
வழக்கிலே யுரைக்கிறீர் மனத்துளீசன் மன்னுமே ()

அறத்திறங்களுக்குநீ யண்டமெண் டிசைக்கும்நீ
திறத்திறங்களுக்குநீ தேடுவார்கள் சிந்தைநீ
யுறக்கும்நீ யுணர்வுநீ யுட்கலந்த சோதிநீ
மறக்கொணாத நின்கழல் மறப்பினுங் குடிகொளே.

ஆடுகின்ற வெம்பிரானை யங்குமிங்கு நின்றுநீர்
தேடுகின்றவீணர்காள்தெளிவதொன்றையோர்கிலீர்
நாடிநாடியும்முளே நவின்றுநோக்கவல்லிரேல்
கூடொணாததற்பரங் குவிந்துகூட்டலாகுமே. 409

சுத்தியைந்துகூடமொன்றுசொல்லிறந்ததோர்வெளி
சத்தியுஞ்சிவமுமாகி நின்றதன்மையோர்கிலீர்
சத்தியாவதும்முடல் தயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளறிந்துகொள் பிரானிருந்தகோலமே. ()

அகாரமான தம்பலம் மனாதியான தம்பலம்
உகாரமான தம்பலம் முண்மையான தம்பலம்
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலஞ்
சிகாரமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே. 411

சக்கரம் பறந்ததோடி சக்கரமேல் பலகையாய்
செக்கிலாமெண்ணெய்போல சிங்குவாயு தேயுவு
முக்கிலே யொளிகலந்து யுகங்களுங் கலக்கமாய்
புக்கிலே புகுந்தபோது போனவாற தெங்ஙனே.

வளர்ந்தெழுந்த கொங்கைதன்னை மாயமென்றெண்ணிநீ, ரருள்கொள்சீவராருடம் புடமையாகத் தோர்வீர்கள், விளங்குஞானமேவியேமிக்கோர்சொல்லைக் கேட்பிரேல், களங்கமற்று நெஞ்சுளே கருத்துவந்து புக்குமே. 413

நாலுவேதமோதுகின்ற ஞானமொன்றறிவிரோ
நாலுசாமமாகியே நவின்றஞானபோதமா
யாலமுண்டகண்டனு மயனுமந்தமாலுமாய்ச்
சாலவுன்னிநெஞ்சுளே தரித்ததேசிவாயமே. 414

சுற்றமென்றுசொல்வதுஞ் சுருதிமுடிவில்வைத்திட
ரத்தநித்தமாடியே யமர்ந்திருந்ததெவ்விடம்
பத்திமுற்றியன்பர்கள் பரந்திலொன்றுபாழது
பித்தரேயிதைக்கருதி பேசலாவதெங்ஙனே. 415

எங்ஙனேவி ளக்கதுக் கேற்றவாறு னின்றுதா
னெங்ஙனே யெழுந்தருளி யீசனேச ரென்பரே
சிங்கமண்மி யானைபோலத் திருமலங்க ளற்றதே. ()

அற்றவுள் ளகத்தையும் மலக்கிடு மெழுகிடு
மெத்ததீப மிட்டதிற்பிற வாதபூசை யெத்தியே
நற்றவம் புரிந்துஏக நாதர்பாதம் நாடியே
சுற்றிருப்ப தேசரிதை கண்டுகொள்ளு மும்முளே.

பார்த்தநின்ற தம்பலம் பரமனாடு மம்பலங்
கூத்தநின்ற தம்பலங் கோரமான தம்பலம்
வார்த்தையான தம்பலம் வன்னியான தம்பலஞ்
சீற்றமான தம்பலந் தெளிந்ததே சிவாயமே. 418

சென்றுசென் றிடந்தொறும் சிறந்தசெம்பொனம்ப
அன்றுமின்று நின்றதோ ரனாதியான தம்பலம் [லம்
மொன்றியொன்றிநின்றதுளொழிந்ததே சிவாயமே

தந்தைதாய் தமரும்நீ சகலதே வதையும்நீ
சிந்தைநீ தெளிவுநீ சித்திமுத்தி தானும்நீ
விந்துநீ விளைவுநீ மேலதாய வேதம்நீ
யெந்தைநீ யிறைவனீ யென்னையாண்ட வீசனே.

எப்பிறப்பி லும்பிறந் திருந்தழிந்த வேழைகா
ளிப்பிறப்பி லும்பிறந்து என்னைநீறு பூசுறீ

ரப்புடன் மலமறுத்து ஆசைநீக்க வல்லிரேல்
செப்புராத வொசையிற் றேளிந்துகாண லாகுமே.

மந்திரங்கள் கற்றுநீர் மயங்குகின்ற மாந்தரே
மந்திரங்கள் கற்றநீர் மரித்தபோது சொல்விரோ
மந்திரங்க ளும்முளே மதிக்கநீரு மும்முளே
மந்திரங்க ளாவது மனத்திலெந் தெழுத்துமே. ()

எட்டியோக மானது மியங்குகின்ற நாதமும்
மெட்டுவக்க ரத்துளே உகாரமு மகாரமும்
விட்டலந்த மந்திரம் வீணைதண்டி னூடுபோ
யட்டவக்ஷ ரத்துளே யமர்ந்ததே சிவாயமே. 423

பிரான்பிரா னென்றுநீர் பினத்துகின்ற மூடரே
பிரானைவிட்டு மெம்பிரான் பிறித்தவாற தெங்ஙனே
பிரானுமாய் பிரானுமாய் பேருலகு தானுமாய்
பிரானிலேமுளைத்தெழுந்த பித்தர்காணு மும்முடல்

ஆதியில்லை யந்தமில்லை யானநாலு வேதமில்லை
சோதியில்லை சொல்லுமில்லை சொல்லிறந்த தூவெளி
நீதியில்லை நேசமில்லை நிச்சயப் படாததும்
ஆதிகண்டு கொண்டபின் னஞ்செழுத்து மில்லையே

அம்மையப்ப னப்பநீ ரமர்ந்தபோ தறிகிலீ
ரம்மையப்ப னானநீ ராதியான பாசமே
யம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யானபின்
னம்மையப்ப னின்னையன்றி யாருமில்லை யில்லையே.

நூறுகோடி மந்திரம் நூறுகோடி யாகமம்
நூறுகோடி நாளிருந்தூ டாடினாலு மேன்பயன்
ஆறுமாறு மாறுமா யகத்திலோ ரெழுத்ததாய்
சீறையோத வல்லிரேல் சிவபதங்கள் சேரலாம். ()

மூந்தவோரெழுத்துளே மூளைத்தெழுந்த செஞ்சுட
ரந்தவோ ரெழுத்துளே பிறந்துகாய மானது
மந்தவோ ரெழுத்துளே யேகமாகி நின்றது
மந்தவோரெழுத்தையுமறிந்துணர்ந்துகொள்ளுமே.

கூட்டமிட்டு நீங்களுங் கூடிவேத மோதுறீர்
எட்டகத்து ளீசனு மிருப்பதென் னெழுத்துளே
நாட்டமிட்டு நாடிடு நாலுமூன்று தன்னுளே
யாட்டகத்து யாடிடு மம்மையாணை யுண்மையே.

காக்கைமூக்கை யாமையா ரெடுத்துரைத்தகாரணம்
நாக்கையூன்றி யுள்வளைத்து ஞான்னாடி யூடுபோ
யேக்கைநோக்க வட்சரமிரண்டெழுத்து யேத்திடிற்
பார்த்தபார்த்த திக்கெலாம் பரப்பிரம மானவே.

கொள்ளொணாது குவிக்கொணாது கோதறக்குலை
க்கொணாது, அள்ளொணாது வணுகொணாது வாதி
மூலமானதைத், தெள்ளொணாது தெளியொணாது
சிற்பரத்தினுட்பயன், விள்ளொணாதபொருளையான்
விளம்புமாற தெங்ஙனே. 431

ஓசையுள்ள கல்லைநீ யுடைத்திரண்டாய் செய்துமே
வாசலிற் பதித்தகல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்தகல்லில் பூவும்நீருஞ் சாத்துறீர்
ஈசனுக்குகந்தகல் லெந்தகல்லு சொல்லுமே 432

ஒட்டுவைத்து கட்டிநீ ருபாயமாற மந்திரங்
கட்டுபட்ட போதிலுங் கர்த்தனங்கு வாழுமோ
எட்டுமெட்டு மெட்டுளே லியங்குகின்ற வாயுவை
வட்டமிட்டயவ்விளே வைத்துணர்ந்து பாருமே.

இந்தவூரி லில்லையென்று எங்குநாடி யோடுறீ
ரந்தவூரி லீசனு மமர்ந்துவாழ்வ தெங்ஙனே

யந்தமான பொந்திலாரில் மேவிநின்ற நாதனை
யந்தமான சீயிலவ்வி லறிந்துணர்ந்து கொள்ளுமே.

பூக்கிருந்த தும்முளே பூரியிட்ட தோத்திரம்
தொக்குசட்சு சிங்குவை சாக்கிராணன் சூழ்ந்திடி
லக்கும்ணி கொன்றைசூடி யம்பலத்து ளாடுவார்
மிக்கசோதி யன்புடன் விளம்பிடாது பின்னையே.()

பின்னைமூந்த மாங்கிஷத்தை பேதையர்கண் பற்றி
பின்புமாங்கிஷத்தில் போகமாய்கைபண்ணினால்(யே
துன்புறும்வினைகள்தான் சூழ்ந்திடும்பி னென்றலோ
அன்பரா யிருந்தபேர்க ளாறுநீந்தல் போல்விதே

விட்டிருந் தும்முளே விதனமற் றிருக்கிறீர் (று
கட்டிவைத்தவாசல்மூன் று காட்சியானவாசலொன்
கட்டிவைத்த வாசலுங் கதவுதாள் திறந்துபோய்த்
திட்டமான வீசனைத் தெளிவுமாங் கிஷத்துடே.

ஆகுமாகு மாகுமே யநாதியான வப்பொருள்
ஏகர்பாதம் நாடிநாடி யேத்திநிற்க வல்லிரேல்
பாகுசேர் மொழியுமைக்குப் பாலனாகி வாழலாம்
வாகுடனே வன்னியை மருவியே வருந்திடீர். 438

உண்மையான தொன்றதொன்றை யுற்றுநோக்கி யும்முளே, வுண்மையானவாசியுண்டுவாழ்ந்திடயேத் தவல்லிரேல், தண்மைபெற்றிருக்கலாம் தவமும்வந் துநேரிடும்,கன்மதன்ம மாகுமீசர் காட்சிதானுங் கா ணுமே 439

பாலனாக வேணுமென்று பத்திமுற்று மென்பரே
நாலுபாத முண்டதில் நனைந்திரண் டடுத்ததால்
மூலநாடி தன்னில்வன்னி மூட்டியந்த நீருணா
ஏலவார் குழலியூடே யீசர்பாதமெய்துமே. -440

எய்துநின்னை யன்பினு லிறைஞ்சியேத்த வல்லிரே
லெய்துமுண்மை தன்னிலே யிறப்பிறப் பகற்றிடும்
மையிலங்கு கண்ணிபங்கள் வாசிவானி லேறிமுன்
செய்தவல் வினைகளுஞ் சிதறுமது திண்ணமே. ()

திண்ணமென்று சேதிசொன்ன செவ்வியோர்கள் கேண்மினோ, யண்ணலன் புளன்புருகி யறிந்துநோக்கலாயிடும், மண்ணதிர விண்ணதிரவாசியையநடத்திடில், நண்ணியெங்களீசனும்நமதுடலிருப்பனே.

இருப்பனெட் டெட்டெண்ணிலே பிறந்துவேறதாகுவன், நெருப்புவாயுநீருமண்ணும் நீள் விசும்புமாகுவன், கருப்புகுந்து காலமே கலந்துசோதிநாதனைக், குருப்புனலில் மூழ்கினுர் குறித்துணர்ந்துகொள்வரே. 443

கொள்ளுவார்கள் சிந்தையிற் குறிப்புணர்ந்த ஞானிகள்,விள்ளுவார்கள் பக்குவத்தில் வேண்டிவேண்டியேத்தினுல், உள்ளுமாய் புறம்புமா யுணர்வதற்குணர்வுமாய்த், தெள்ளிதாக நின்றசோதி செம்மையைத் தெளிந்திடே. 444

தெளிந்தநற் சரியைதன்னில் சென்றுசா லோகம்பெறும், தெளிந்தநற் கிரியைபூசை சேரலாஞ் சமீபமே, தெளிந்தநல் யோகந்தன்னில் சேரலாகுஞ் சாரூபம், தெளிந்தஞானம் நான்கிலும் சேரலாஞ்சாயுச்சியமே. 445

சேருவர்கள்ஞானமென்று செப்புவார்தெளிவுளோர்
சேருவார்கள்நாலுபாதச் செம்மையென்றதில்லையே
சேருவார்கள் சிவகதி திருவருளைப் பெற்றபேர்
சேறுமாறு கண்டுநாலுஞ் செய்தொழில்திடப்படே.

திறிமலிக்கு நாலுபாதஞ் செம்மையுந் திறப்படார்
அறிவிலிகள் தேசநாடி யவத்திலே யலைவதே
குழியதனைக் காட்டியுட் குறித்துநோக்க வல்லிரேல்
வெறிகமழ்சடையுடையோன் மெய்ப்பதமடைவரே

அடைவுளோர்கள் முத்தியை யறிந்திடாத மூடரே
படையுடைய தத்துவமும் பாதகங்க ளல்லவோ
மடைதிறக்க வாரியின் மடையிலேறு மாறுபோல்
எடலில்மூல நாடியை யுயரவேத்தி யூன்றிடே.

ஊன்றியேத்தி மண்டல முறமூன்று தாள்திரந்
தான்றுதந்தி யேறிடி லமுர்தம்வந் திறங்கிடும்
தான்றிதென்று தொண்டருக்குநா தனும்வெளிப்படு
மான்றியு முயிர்பரம் பொருந்திவாழ தாகவே. 449

ஆகமூல நாடியி லனலெழுப்பி யன்புடன்
மோகமான மாயையில் முயல்வது மொழிந்திடில்
தாகமேரு நாடியே கனேகமான வாறுபோ
லோகபாத மன்புட னிறைஞ்சினு ரறிவரே. 450

அறிந்துநோக்கி யும்முளே யயன்றியான மும்முளே
யிருந்திராம லேகர்பாதம் பெற்றிருப்ப துண்மையே
யறிந்துமீள வைத்திடா வகையுமாண மேத்தினர்
செறிந்துமேலை வாசலைத் திறந்துபாரு மும்முளே.

சோதியாக வும்முளே தெளிந்துநோக்க வல்லிரேல்
சோதிவந் துதித்திடுந் துரியாதீத முற்றிடு
மாதிசக் கரத்திளி லமர்ந்துதீர்த்த மாடுவன்
பேதியாது கண்டுகொள் பிராணனைத் திருத்தியே.

திருவுமாய் சிவனுமாய் தெளிந்துளோர்கள் சிந்தை
மருவிலே யெழுந்தவீசும் வாசனைய தாகுவன் [யில்
கருவிலே விழுந்தெழுந்த கன்மவாத னையெலாம்
பருதிமுன் னிருளதாய் பறியுமங்கி பாருமே. 453

பாருமெந்தை யீசர்வைத்த பண்பிலே யிருந்துநீர்
சேருமே நடுவறிந்து செம்மையான வப்பொருள்
வேரையும் முடியையும் விரைந்துதேடி மாலயன்
பாரிடந்து விண்ணிலே பறந்துங்கண்ட தில்லையே.

கண்டிலாதயன்மாலொன்று காட்சியாகசொல்கிறீர்
மண்டினு லரனுடன் மேவலா யிருக்குமோ [ல்
தொண்டுபட்டுமன்புடன் தொழுதுநோக்கவல்லிரே
பண்டுமுப் புரமெரித்த பத்திவந்து முத்துமே.

முற்றுமேயவனெழிந்து முன்பினென்று காண்கிலே
பற்றிலாத தொன்றுதன்னை பற்றிநிற்க வல்லமு [ன்
சுற்றதாலே யீசர்பாதங் காணலா யிருக்குமோ
பெற்றபேரை யன்புடன் பிரியமாகக் கேளுமே.

கேட்டுநின்ற வுன்னிலே கிடைத்தகா லத்துளே
வாட்டமுள்ள தத்துவ மயக்கமு மகற்றிடும்
வீட்டிலே வெளியதாகும் விளங்கவந்து நேரிடு
கூட்டிவன்னிமாருதங் குயத்தைவிட் டெழுப்புமே.

எழுப்பிமூல நாடியை யிதப்படுத்த லாகுமே
மழுப்பிலாத சபையைநீ வலித்துவாங்க வல்லிரேல்
சுழுத்தியுங்கடந்துபோய் சொப்பனத்திலப்புற[னே
மழுத்தியோ ரெழுத்துளே யமைப்பதுண்மையைய

அல்லதில்லை யென்றுதா னுவியும் பொருளுடல்
நல்லவீசர் தாளிணைக்கு நாதனுக்கு மீந்திலை
என்றுயென்னுள் நேசமும் வாசியை வருந்தினல்
தொல்லையாம் வினைவிடென்று தூரதூரமானதே

ஆனதே பதியது யரற்ற பசுபாசம்
போனதே மலங்களும் புலன்களும் வினைகளும்
கானகத்தி லிட்டதீயிற் காற்றுவந் தடுத்தலோ
வூன்கத்தில் வாயுவன்னி யொன்றியே யுலாவுமே.

உலாவுமுவ்வு மவ்வுமா யுதித்தடர்ந்து நின்றது
மூலாவியையம் புலன்களு மொருதலத் திருந்திடும்
விலாவுமங்கு நேசமாகி நின்றமூர்த முண்டுதாங்
குலாவுமெங்க ளீசனைக் குறித்துணர்ந்து கும்பிடே.

கும்பிடுங் கருத்துளே குகனையைங் கரனையும்
நம்பியே யிடம்வலம் நமஸ்கரித்து நாடிட
வெம்பிரானு மம்மையு மிருத்தியே நடுவணைத்
தும்பிபோல வாசகந் தொடர்ந்துசோம்பி நீங்குமே.

நீங்குமைம் புலன்களும் நிறைந்தவல் வினைகளும்
ஆங்காரமா மாசையு மருந்தடர்ந்த பாவமும்
ஓங்காரத்தினுள்ளிருந்த வொன்பதொழிந்தொன்றி
லத், தூங்கவீசர் சொற்படி துணிந்திருகக சுத்தமே.

நினைப்ப தொன்று கண்டிலே னீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாய்கைமாய்கையே
யனைத்துமா யகண்டமா யனாதிமுன் னனாதியாய்
நினைக்குள்நானெனக்குள்நீ நினைக்குமாறதெங்ஙனே.

கருக்கலந்த காலமே கண்டுநின்ற காரணம்
உருக்கலந்த போதலோ வுன்னைநா னுணர்ந்தது
விரிக்கிலென் மறைககிலென் வினைக்கிசைந்த போதெ
லா, முருக்கலந்து நின்றபோது நீயும்நானுமென்றலோ

ஞானநூல்கள் தேடியே நவின்றஞான யோகிகாள்
ஞானமான சோதியை நாடியுள் ளறிகிலீர்
ஞானமாகி நின்றதோர் நாதனை யறிந்தபின்
ஞானமல்ல தில்லைவேறு நாமுரைத்த துண்மையே.

கருத்தரிப்ப தற்குமுன் காயம்நின்ற தெவ்விடம்
உருத்தரிப்ப தற்குமுன் னுயிர்ப்புநின்ற தெவ்விடம்
மருட்பொருந்த சிந்தையில்மயக்கம்நின்ற தெவ்விட
ம், விருப்புணர்ந்த ஞானிகள் விரித்துரைக்கவேணுமே.

கருவினிற் கருமதா டெடுத்தவேழு தோற்றமு
மிருவினைப் பயத்தினால் பிறந்திறந் துழன்றிடும்
மறுவினைப் பிறவிமூன்று காலமும் வகுத்தபின்
உறுவினைப்பயனிதென்றுணர்ந்தஞானிசொல்லுமே.

வாயிலெச்சில் போகவே நீர்குடித்து துப்புவீர்
வாயிருக்களச்சில்போன வாறதென்னதெவ்விடம்
வாயிலெச்சிலல்லவோ நீருரைத்தமந்திரம்
நாதனையறிந்தபோது நாடுமெச்சிலேதுசொல். 469

தொடக்கதென்று நீர்விழித் தொடங்குகின்றவூம ர்காள், தொடக்கிருந்த தெவ்விடஞ் சுத்தியானதெ வ்விடம், தொடக்கிருந்த வாறறிந்து சுத்திபண்ணவ ல்லிரேல், தொடக்கிலாத சோதியைத் தொடர்ந்து காணலாகுமே. 470

மேதியோடுமாவுமே விரும்பியேயுணர்ந்திடில்
சாதிபேதமாயுருத் தரிக்கும்வாறுபோலவே
வேதமோதுவானுடன் புலைச்சியென்றுமேவிடில்
பேதமாய்ப்பிறக்கிலாத வாறதென்னபேசுமே. 471

வகைகுலங்கள்பேசியே வழக்குரைக்குமாந்தர்காள்
தொகைக்குலங்களானநேர்மைநாடியேயுணர்ந்தபின்
மிகைத்தசுக்கிலமன்றியே வேறுமொன்றுகண்டிலீர்.

ஓதும்நாலுவேதமு முரைத்தசாஸ்திரங்களும்
பூதலத்துவங்களும் பொருந்துமாகமங்களும்
சாதிபேதவண்மையுந் தயங்குகின்றநூல்களும்
பேதபேதமாகியே பிறந்துழன்றிருந்ததே. 473

உறங்கிலேன்விழிக்கிலே னுணர்வுசென் றொடுங்கி லேன், திரும்பிலேன் றிகைக்கிலேன் சிலதிசைகளெ

ட்டிலேன், புறம்புமுள்ளு மெங்ஙனும் பொதிந்திரு
ந்த தேகமாய், நிறைந்திருந்த ஞானிகள் நினைப்பதே
துழில்லையே. 474

அங்கலிங்கம்பூண்டுநீ• ரகண்டபூசைசெய்கிறீர்
அங்கலிங்கம்பூண்டுநீ யமர்ந்திருந்தமார்பனே
யெங்குமோடியெங்குமெங்கு மீடழிந்துமாய்கிறீர்
செங்கல்செம்பிகல்லெலாஞ் சிறந்துபார்க்குமூடரே

தீட்டந்தீட்டமென்றுநீர் தினமுழுகுமூடரே
நீட்டமாகியல்லவோ திரண்டுகாயமானதும்
பூட்டகாயமும்முளே புகழுகின்றபேயரே
தீட்டவந்துகொண்டலோ தெளிந்ததேசிவாயமே.

மூலநாடி தம்முளே முளைத்தெழுந்த வாயுவை
நாளுநாளு மும்முளே நடுவிருந்த வல்லிரேல்
பாலனாகு மும்முடல் பறந்துபோகலாய்விடும்
ஆலமுண்ட கண்டர்பாத மம்மைபாத முண்மையே.

உந்திமேலே நாலுமூன்று ஓம்நமசி வாயமாஞ்
சந்திசந்தி யென்றுநீர் சாற்றுகின்ற பேயரே
முந்தவந்து நம்முளே மூலநாடி யூடுபோய்
அந்திசந்தி யற்றிட மறிந்துணர்ந்து பாருமே. ()

வன்னிமூன்று தீயினில் வாழுமெங்கள் நாதனுங்
கன்னியான துள்ளிருக்க காதல்கொண்ட தெவ்விட
ஞ்,சென்னிநாலுகையிரண்டு சிந்தையிலிரண்டொன்
று, உன்னியுன்னிநம்முளேயுய்ந்துணர்ந்துபாருமே.

தொண்டுசெய்துநீங்களுஞ் சூலவோடிமாள்கிறீர்
உண்டுமுன்றுநம்முளே யுற்றுணர்ந்துபார்க்கிலீர்
வண்டுலாடுசோலைசூழ் வாழுமெங்கள்நாதனும்
பண்டுபோலநம்முளே பகுத்திருப்பனீசனே. ()

அரியதோர்நமச்சிவாய மாதியந்தமானதும்
ஆறிரண்டுநூறுகோடி யளவிடாதமந்திரம்
தெரியநாலுவேதமாறு சாத்திரபுராணமுந்
தேடுமாலுமாலுஞ்சர்வ தேவதேவதேவனே. 481

பரமுனக்கெனக்குவேறு பயமுமில்லையாரையா
கரமுனக்குவித்தமுங் குவித்திடக்கடமையாஞ்
சிரமுருக்கியமுதளித்த சீருலாவுநாதனே
புரமெனக்குநீயளித்த வுண்மையுண்மையுண்மையே.

மூலவட்டமூதிலே முளைந்தவைந்தெழுத்திலே
கோலவட்டமூன்றுமாய்க் குளிர்ந்தலர்ந்துநின்றதீ
ஞாலவட்டமன்றுளே நவின்றஞானிமேலதா
யேலவட்டமாகியே யிருந்ததேசிவாயமே. 483

என்னகத்தி லென்னைநா னெங்குமோடி நாடினேன்,
என்னகத்தி லென்னையன்றி யேதுமொன்று கண்
டிலேன், மின்னெழும்பி விண்ணகத்தின் மின்னொடு
ங்கும் வாறுபோ, லென்னகத்து ளீசனோடி யானும
ல்லதில்லையே. 484

நாலுவேதமோதுகின்ற ஞானமொன்றறிவிரோ
நாலுசாமமாகிய நவின்றஞானபோதமாய்
ஆல்முண்டகண்டனு மயனுமந்தமாலுமாய்ச்
சாலவுன்னிநெஞ்சிலே தரித்ததேசிவாயமே. 485

முச்சதுரமூலமாகி மூன்றதானபேதமா
யச்சதுரமும்முளே யடங்கிவாசியோகமா
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரித்தமந்திர மோம்நமசிவாயமே. 486

மூன்றுமண்டலத்துளே முச்சதுரமாயமாய்
நாலுவாசலென்விரலி னடுவுதித்தமந்திரங்

கோலியென் றுமைமந்துமாய்க் குளிர்ந்தலந் துநின்றநீ
மேலுமேலுநாடினேன் விளைழந்தமேதசிவாயமே. ()

இடங்கள்பண்ணி சுத்திசெய்தே யிட்டபீடமீதிலே
யடங்கநீறும் பூசல்செய் தருந்தவங்கள் பண்ணுவீர்
ஒடுங்குகின்ற நாதனை ருதிக்குஞான மெய்விட
மடங்குகின்ற தெய்விட மறிந்துபூசை செய்யுமே.

புத்தகங் களைச்சுமந்து பொய்களைப் பிதற்றுவீர்
செத்திடம் பிறந்திடம் தேதுவனவென் றறிகிலீர்
அத்தனைய சித்தனை யறிந்துநோக்க வல்லிரே
லுத்தமத்து ளாயசோதி யுணரும்போக மாகுமே.

அருளிலே பிறந்துதித்து மாயைரூப மாகிய
விருளிலேதயங்குகின்ற வேழைமாந்தர்கேண்மினோ
பொருளிலே தவம்புனைந்து பொருந்திநோக்கவல்லி
ரேல், மருளதேதுவன்னியின்மறைந்ததேசிவாயமே.

கருக்கலந்த காலமே கண்டிருந்த காரணா
வுருக்கலந்த போதலோ வுன்னையா னறிந்தபின்
தருக்கலந்த சோதியைத் தெளிந்துயா னறிந்தபின்
னிருக்கிலே னிறக்கிலே னிரண்டுமற் றிருந்ததே.

தன்மசிந்தை யாமுளவுந் தவமறியாத் தன்மையாய்க்
கன்மசிந்தை வெயிலுழன்று கருத்தழிந்தகசடரே
சென்மசென்மந்தேடியுந் தெளியொணாதசெல்வனை
நன்மையாக வும்முளே நயந்துகாண வேண்டுமே.

கள்ளவுள்ள மேயிருக்க கடந்தஞான மோதுவீர்
கள்ளமுள் ளறுத்தபோது கதியிதன்றிக் காண்கிலீ
ருள்ளமே விளக்கிநித்த மொளியணுக வல்லிரேற்
றெள்ளுஞான மும்முளே சிறந்ததே சிவாயமே. ()

காணவேண்டு மென்றுநீர் கடன்மலைக ளேறுவீர்
ஆணவம தல்லவோ வறிவில்லாத மாந்தரே
வேணுமென்றவ் வீசர்பாத மெய்யுளே, தரிப்பரேற்
றுணுவாக நின்றசீவன் றன்சிவம தாகுமே. 494

அணுவினோ டகண்டமா யளவிடாத சோதியைக்
குணமதாகவும்முளே குறித்துநோக்கின் முத்தியாம்
மிணமினொன்றுவிரலையெண்ணி நீளொணுமடக்கமா
ய், துநிவிலாதபடியினற்றொடர்ந்து பூசைசெய்குவீர்.

எச்சிலெச்சி லென்றுநீ ரிடைந்திருக்கு மேழைகா
டெச்சிலெச்சி லல்லவோ தூயகாய மானதும்
வைத்தவெச்சி றேனலோ வண்டினெச்சில் பூவலோ
கைச்சுதாவில் வைத்துடன் கறந்தபாலு மெச்சிலே.

தீர்த்தலிங்க மூர்த்தியென்று தேடியோடுந் தீதரே
தீர்த்தலிங்க முள்ளிநின்ற சீவனைத் தெளியுமே
தீர்த்தலிங்க மும்முளே தெளிந்துகாண வல்லிரேற்
றீர்த்தலிங்கந் தானதாய்ச் சிறந்ததே சிவாயமே. ()

ஆடுகொண்டு கூடுசெய் தமர்ந்திருக்கும் வாறுபோற்
றேடுகின்ற செம்பினைத் திடப்படப் பரப்பியே
நாடுகின்ற தம்பிரானு நம்முளே யிருக்கவே
போடுதர்ப்ப பூசையென்ன பூசையென்னபூசையே.

என்னையற்ப நேரமு மறக்கலாத நாதனே
ஏகனே யிறைவனே யிராசராச ராசனே
யுன்னையற்ப நேரமு மொழிந்திருக்க லாகுமே
வுனதுநாட்ட மெனதுநாவி லுதவிசெய்வி ரீசனே.

எல்லையற்று நின்றசோதி யேகமா யெரிக்கவே
யெந்தைபூர ணப்பிரகாச யோகபோக மாகியே

நல்லவின்ப மோனசா கரத்திலே யழுத்தியே
நாடொணாத வமிர்தமுண்டு நானழிந்து நின்றநாள்.

ஆனவாற் றாவிடு மகண்டமான சோதியை
யூனைகாட்டி யும்முளே யுகந்துகாண வல்லிரே
லூன்காய மாளலா முலகபார மாளலாம்
வானநாடு மாளலாம் வண்ணநாட ரானையே. 501

நித்தலுமணிதுலக்கி நீடுமூலை புக்கிருந்து
கத்தியே கதறியே கண்கண்மூடி யென்பயன்
எத்தனைபே ரெண்ணினு மெட்டிரண்டு பத்தலோ
வத்தனுக் கிதேற்குமா வறிவிலாத மாந்தரே. 502

எட்டிரண்டுங் கூடியே யிலிங்கமான தேவனை
மட்டதாக வும்முளே மதித்துநோக்க வல்லிரேற்
கட்டமான பிறவியென் கருங்கடல் கடக்கலா
மிட்டமானவெளியிலேயோடி யைந்திருப்பீர் காணுமினே

உண்மையான மந்திர மொளியிலே யிருந்திடுந்
தண்மையான மந்திரஞ் சமைந்தருபமாகிய
வெண்மையான மந்திரம் விளைந்துநீற தானதே
யுண்மையான மந்திரம் தோன்றுமே சிவாயமே.

பன்னிரண்டு நாளிருத்திப் பஞ்சவன்ன மொத்திட
பின்னியுவ் வெளிக்குநின்று வேறெடுத் தமர்ந்தது
சென்னியான தலத்திலே சீவனின் றியங்கிடும்
பன்னியுன்னி யாய்ந்தவர் பரப்பிரம மாவரே. 505

தச்சிவாயி லுச்சிமே லாயிரந் தலங்களாய்
முச்சுடரு மூவிரண்டு மூண்டெழுந்த தீச்சுடர்
வச்சிரமதாகிய வளர்ந்துநின்ற தெவ்விடம்
இச்சுடரு மிந்தியமுமேகமான தெங்ஙனே. 506

முத்திசித்தி தொந்தமாய் முயங்குகின்ற மூர்த்தியை
மற்றுதித்த வைம்புலன்க ளாகுமத்தி மப்புலன்
அத்தனித்த காளகண்ட ரன்பினு லனுதின
முச்சரித்துளத்திலே யறிந்துணர்ந்து கொண்மினே.

அண்ணலா ரநாதியா யநாதிமுன் னநாதியாய் [லங்
பெண்ணுமாணு மொன்றலோ பிறப்பதாகு முன்ன
கண்ணிலாணில் சுகிலங் கருத்தொடங்கி நின்றபின்
மண்ணுளோரு விண்ணுளோருவந்தவா ரதெங்ஙனே

எத்திசைக்கு மெவ்வுயிர்க்கு மெங்களப்ப னெம்பிரான், முத்திஞான வித்துளே முளைத்தெழுந்த செஞ்சுடர், சித்தினிற் றெளிந்தபோது தேவர்கோயிற்சேர்ந்தன, வத்தனுடல் கண்டபோதடங்கியாடலுற்றதே. 509

வல்லவாச லொன்பது மருத்தடைத்த வாசலுஞ்
சொல்லும்வாச லோரைந்துஞ் சொல்லவிம்மி நின்ற
நல்லவாச லைத்திறந்து ஞானவாச லூடுபோ [தும்
மெல்லைவாசல் கண்டபி னினிப்பிறப்ப தில்லையே.

ஆதியான தொன்றுமே யநேகரூப மாயமாய்ப்
பேதாபேத மாயெழுந்து சர்வசீவ னானபின்
ஆதியோடு கூடுமீண் டெழுந்துசன்ம மானபின்
சோதியான ஞானியாருஞ் சுத்தமா யிருப்பரே.

வண்டுபூ மணங்களோடு வந்திருந்த தேனெலாம்
உண்டுளே யடங்குவண்ண மோதுலிங்க மூலமாய்க்
கண்டுகண்டு வேரிலே கருத்தொடுங்க வல்லிரேற்
பண்டுகொண்ட வல்வினை பறந்திடுஞ் சிவாயமே.

ஓரெழுத்து லிங்கமாக வோதுமக் கரத்துளே
யோரெழுத் தியங்குகின்ற வுண்மையை யறிகிலீர்

மூவெழுத்து மூவராய் முளைத்தெழுந்த சோதியை
நாவெழுத்து நாவுளே நவின்றதே சிவாயமே.

தூரதூர தூரமுந் தொடர்ந்தெழுந்த தூரமும்
பாரபார மென்று பரித்திருந்த பாவிகாள்
நேரநேர நேரமு நினைந்திருக்க வல்லிரேல்
தூரதூர தூரமுந் தொடர்ந்துகூட லாகுமே.

குண்டலங்கள் பூண்டுநீர் குளங்கடோறுஞ்சூழ்கிறீர்
மண்டுகங்கள் போலநீர் மனத்தின்மா சறுக்கிலீர்
மண்டையேந்து கையரை மனத்திருந்த வல்லிரேற்
பண்டைமா லயன்றொழப் பணிந்துவாழ லாகுமே.

கூடுகட்டி முட்டையிட்டுக் கொண்டிருந்தவாறுபோ
லாடிரண்டு கன்றையீன்ற வம்பலத்து லாடுதே [ளே
மாடுகொண்டு வெண்ணெயுண்ணு மானிடப் பசுக்க
வீடுகண்டு கொண்டபின்பு வெட்டவெளி காணுமே

உள்ளதோ பிறப்பதோ வுயிர்ப்படங்கி நின்றிடும்
மெள்ளவந்து கிட்டநீ வினவவேண்டு மென்கிறீ
ருள்ளதும் பிறப்பது மொத்தபோது நாதமாங்
கள்ளவாச லைத்திறந்து காணவேண்டு மாந்தரே.

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தி யேசுற்றிவந்து மொணமொணவென்று சொல்லுமந்த்ர மேதடா, நட்டகல்லும் பேசுமோநாதனுள்ளிருக்கையில், சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ. 517

சிவவாக்கியர் பாடல்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப் பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளிய

# திருப்பாடற்றிரட்டு.

உடற்கூற்று வண்ணமும்

பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரச் சுருக்கமும்

அடங்கி யிருக்கின்றன

இஃது

வா. சரவணமுத்துப்பிள்ளையால்

ஞானவான்களுக்கு

உபயோகமாகும்பொருட்டு,

சில ஏட்டுப்பிரதிகளிலிருந்தும்

அச்சுப்பிரதிகளிலிருந்தும்

சேர்க்கப்பட்டு,


சென்னை,

ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1921.

சிவமயம்.

# புத்தக விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பதென்னவெனில், சென்னப்பட்டணம் பெதததுநாய்க்கன்பேட்டை பெருமாள்கோவில் தோட்டத்தெருவு 20-வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் "ஆதிமூலவிலாச அச்சுக்கூடத்தில்,

| | | | |
|---|---|---|---|
| பண்டரி கீர்த்தனை ... ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீராமலீலா அல்லது ஸ்ரீமத் ராமாயண சம்பூரணம் ... ... | 0 | 6 | 0 |
| சரஸபூஷண சரித்திரம் ... ... | 0 | 4 | 0 |
| நீலி கதை ... ... ... | 0 | 1 | 0 |
| 6-பாஷைகளின் ஒக்கபில்லரி ... | 0 | 4 | 0 |
| ஷை தெலுங்கு ... ... | 0 | 4 | 0 |
| சுந்தரகாண்டம் லங்காதகனம் ... | 0 | 4 | 0 |
| கெர்ப்பசாஸ்திரம்... ... ... | 2 | 0 | 0 |

மார்க்கண்டேயர்சரித்திரம் அச்சிட்டுவருகிறது கூடிய சீக்கிரத்தில் வெளிவரும்.

இப்படிக்கு,

## பே-ஆதிமூலமுதலியார்.

பெருமாள்கோவில் தோட்டத்தெருவு நெ. 20-வது
சவிக்கார்பேட்டை போஸ்ட்டு மதராஸ்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பட்டினத்துப்பிள்ளையாருடைய

# சரித்திரச்சுருக்கம்

சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தில் குபேரன் திருவெண்காடரென்னும் பட்டினத்துப் பிள்ளையாக அவதரித்துச் சீமானாயிருந்தனர். பின்பு இவர் விவாக முடித்தும் புத்திரனில்லாமல் வருந்துகையில், பரமசிவன் ஒரு குழந்தை வடிவமாகத் திருவிடை[illegible] வனத்தில்வில்வமரத் தடியின் அருகிருந்தனர். இதைக்கண்டு மிகுதியும் வறியராயிருந்த சிவசருமரும், அவர் மனைவியாரும் குழந்தையை யெடுத்துவந்து புத்திரனில்லாத பட்டினத்துப் பிள்ளைக்குக் கொடுத்து நிரம்பப் பொன் பெற்றுச் சென்றனர். குழந்தையாகிய பரமசிவன் மருதப்பிரான் என்னும் பெயர் தரிக்கப்பெற்றுவளர்ந்து பதினாறு வயதாகையால் பிதாவில்லாதசமயத்தில் தாயாரிடம்வந்து "காதற்ற வூசியும் வாராது கடைவழிக்கே" என்னும் வாக்கிய மெழுதிய ஒரு நறுக்கையும், ஒரு காதற்ற வூசியையும் ஒரு பெட்டியில் வைத்து தாளிட்டு, அதை அந்த அம்மனிடங் கொடுத்து இதை என்பிதா வந்தவுடன் கொடுக்கக் கடவீர் என்றுசொல்லி மறைந்துபோயினர், அந்த அம்மனும் பிதாவாகிய பட்டினத்துப்பிள்ளை வந்தவுடன் கொடுக்க அவர் அப்பெட்டியைத் திறந்து காதற்ற வூசியையும் நறுக்கையும்கண்டு ஞானோதயமாகி இதுவரையிலுந் தமக்குத் திருமகனாக விருந்த

வர் பரமசிவனென்றுணர்ந்து, தமது செல்வப்பொருளைப் பலருக்கும் குறையிடும்படி தமது தலைமைக் காரியக் காரராகிய சேந்தனுருக்குக் கட்டளையிட்டு துறவு பூண்டு, அவ்வூரிற் பிச்சையெடுத் துண்டு வந்தனர், இதைக்கண்டு அவர் சுற்றத்தார் வருந்துகையில், அவரது தமக்கையார் இவர் இறந்தாலும்நல்லதென வெறுத்து விஷங்கலந்த ஒட்டப்பம் ஒன்று சுட்டுத்தரவே அப்போது பட்டினத்தார் "தன்வினை தன்னைச்சுடும் ஒட்டப்பம் வீட்டைச்சுடும்" என்று சொல்லி அவ்வப்பத்தைக் கொடுத்தவர் வீட்டிற் சொருகி அப்பட்டின முழுமையும் உயிர்களிறவாமல் எரித்துப், பின்பு தம்தாயார் இறந்தமையால் அந்த அம்மனைச் சுடுகாட்டில் தமது ஞானக்கினியால் சிவ பாடல்களைப்பாடித் தகித்துத், திருவிடைமருதூரிற் சென்று அப்பால்திருவாரூரடைந்து அங்கு இறந்தவனைப் பிழைப்பித்துக், கொங்குநாட்டின் சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, துளுவு நாடு வந்து, பத்திரகிரி மகாராஜனுக்கு ஞானோபதேசஞ் செய்து, திருவெண்காட்டுக்குச் சென்று அங்குத் தமது தலைமைச்காரியராகிய சேநதனுரைச் சிறையினின்று மீட்டுச் சிதம்பரம், திருக்கா்ஞ்சி, திருக்காளத்தி முதலிய ஸ்தலங்களிற் சென்று சிவபிரானைப் பாடிப் பணிந்து திருவொற்றியூர்வந்து 'சிவலிங்கமாக உருமாறினர்.

சென்னையைச்சார்ந்த திருவொற்றியூர்க் கடற்கரையோரம் (இப்பொழுது அவ்விடத்தில் அவர் பேரால் ஓர் ஆலயஞ் சமைக்கப்பட்டிருக்கின்றது.)

சரித்திரச்சுருக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்.

## பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

# திருப்பாடற்றிரட்டு.

முதலாவது

## கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
* அலகைத்தேரி னலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலை § யோம்பற்க
பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
† அருந்தின மலமாம் || புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன
தின்றனை யனைத்து மனைத்துநினைத் தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன

* அலகைத்தேர்-கானல். § ஒப்பற்க - பாதுகாவாது ஒழி

 † அருந்தின-உண்ட உணவு. || புனைந்தன-உடுத்த ஆடை.

ஓம்பினை யனைத்து மனத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்
* புற்புதக் குரம்பை துச்சி லொதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பூளையும் நீரும் புறப்படு மொரு பொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொரு பொறி
சளியு நீருந் தவழு மொரு பொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொரு பொறி
வளிரி மலமும் வழங்கு மொரு வழி
சலமும் சீயுஞ் சரியு மொரு வழி
உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும்
¶ சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து
? கடிமலர் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
ஏனதற நினைவற விருவினை மலமற
வரவொடு செலவா மருளற விருளற
இரவொடு பகலற விகபற மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென 0 நெக்கு நெக்குருகித்
திருச்சிற்றம்பலத் () தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொ னம்பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே

---

* புற்புதம்-நீர்க்குமிழி. ¶ சட்டகம்-உடல். ? கடிமலர்-பரிமளத்தோடு மலர்கின்ற. 0 நெக்கு நெக்கு நெகிழ்ந்து நெகிழ்ந்து () ஒளிரும்-பிரகாசிக்கின்ற.

## இரண்டாவது
# கோயிற்றிருவகவல்.

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னுடுங்
காதலுங் கருத்துமல் லானின னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கோ டிங்கோ * டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் § பேழை யிருவினைப் × பெட்டகம்
வாதபித் தங் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
† அடலைப் பெரிய சுடலைத் || திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோக்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப் + பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றம் 0 பத்தல்
காற்றிற் பறக்குங் கானப் " பாடடம்
விதிவழித் ¶ தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகப் ? பாணன் றைககுஞ்சட்டை
* ஈமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலி லிடுசில விருந்து
காமக கனலிற் கருகுஞ் சருகு
! பவக்கொழுந் தேருங் கவைக்கொழு கொம்பு

---

* அலமரும்-சுழலுகின்ற. § பேழை பெட்டகம் பெட்டி × அடலை-சாம்பல். † திடர் கேடு. || பஞ்சரம் கூடு. + பத்தல்-ஓர்பாத்திரம். 0 பட்டம் - காற்றாடி. " தருமன்-யமன் ? பாணன் தையற்காரன். * ஈமம்-சுடுகாடு. ! பவம்-பிறவி.

மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமே
ஊரிற் கிடக்கும் வொட்டா வுபாதி
* காலெதிர் குவித்த § பூளை காலைக்
× அந்தரத் தியங்கு † மிந்திரசாபம்
அதிரு மேகத் துருவி னுருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்டகண் காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்
இமைய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக்கழகே.

மூன்றாவது

## கோயிற்றிருவகவல்.

பாற்கடல் கடையப் படுங் || கடுவெண்ணெயைத்
திரு + மிடற் றடங்கிய சிவனே யடைக்கலம்
அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனை
காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விறைவநின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியநின் னடைக்கலம்
மனவழி யலைந்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
÷ விழுப்பொரு ளறிய வழுக்குறு மன்னும்
ஆணவமலத்துநித் ¶ தளைந்ததி 0 லுளைந்திடு

* கால்-காற்று. பூளை-பூளைப்பூ § கதிர்-சூரியன். × அந்தரம்-ஆகாயம். † இந்திரசாபம்-இந்திரதனுசு. || கடு-விஷம். + மிடறு-கண்டம். ÷ விழுப்பொருள்-மேலாகியபொருள் ¶ அளைந்து-கலந்து. 0 உளைந்து வருந்தி.

* நிணவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
† படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு? மழுக்காறு § மிவறும ¶ பொச்சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் + பணிப்பும்
முக்குண மடையு மைம்பொறி - முயக்கமும்
|| இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் 0 குருகுவிட் டோடுங் * குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மெழுக்குவிழுங் குடிலைச்
செம்பெழு வதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவடற் குடத்தைப் புலவடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைப்படைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக குப்பையைக்
கோட்சாக் கொழுகும் பீறற் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும் பஞ்சரத்தைப்
புலராக் கவலை விலைமரப் '' பொதும்மை
ஆசைக் கயற்று லாடும் பம்பரத்தை
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச சரக்கொடு பவக்கடல் புக்கு
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கெடுமலக் கலத்தை

* நிணம்-கொழுப்பு. † படிறு-பொய். ? அழுக்காறு-பொறாமை. § இவறல்-உலோபகுணம். ¶ பொச்சாப்பு-மறதி. + பணிப்பு-நடுக்கம். - முயக்கம-தழுவகை. || இடும்பை-துன்பம். 0 குருகு-பறவை. * குரம்மை-கூடு. '' பொதும்ப பொந்து.

இருவினை வியங்கொடு மியங்கு * புற்கலனை
† நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுனின் ளடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறைவர் தில்லை மன்றுணின் ருடிக்
கருணைமொண் டலையெறி சடலே யடைக்கலம
தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
? பாசிழைக் கொடியோடு பரிந்தருள் புரியும்
எம்பெருமானின் னிணையடிக் கபயம்
அம்பலத்தரசே யடைக்கல முனக்கே.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

## கச்சித்திருவகவல்.

திருமால் § பயந்த ¶திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியு மானிடத துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா ✝ தவமே
மாதரை மகிழ்ந்து காதல கொண்டாடும்
மானுடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விளிவெளிமார்க்க டெளிவுறக் கேண்மின்
முள்ளுக் கல்லு முயன்றும் நடகும்
உள்ளங்காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளும்பாலே மெவிய கணைக்கால்
துள்ளும்வாராலெனச் சொல்லித் துதித்தும்

* புற்கலன்- உயிர். † நடுவன்-யமன். ? பாசு-பசுமை. இழை-ஆபரணம். § பயந்த-ஈன்ற. ¶ திசைமுகன்-பிரமன் ✝,அவம்- வீண்.

தசையுமெலும்புந் தக்கபுன் * குறங்கை
இசையுங் † கதலிற் றண்டென ?வியம்பியும்
நெடுமுடங்கிய நின்றிடு மிடையைத்
§ துடி ¶ பிடி யென்று சொல்லிதுதித்தும்
மலமுஞ்சலமும் + வழும்புந்திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்திபோலக் கிளைத்து மூன்றெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி
- உகிராற்கீற வுலர்ந்துள் ளுருகி
நகுவார்க்கிடமாய் || நான்றுவற்றும்
முலையைப்பார்த்து * முளரிமொட்டென்று
குலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்
நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியங்கியற்றும்
அங்கையைபபார்த்துக் 0 காந்தளென்றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவியகழுத்தைப்
பாரினிலினிய ‘’ கமுகெனப் பகர்ந்தும்
ஒவ்வுமூத்தையு மேவியவாயைக்
+ துப்பிமுருக்கின றாய்மல ரென்றும்
அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னியபல்லை முத்தெனமொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரியமூக்கைக் ÷ குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிராதொழுகும்
கண்ணைப் பார்த்து * கழுநீரென்றும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதை

---

* குறங்கு—தொடை. † கதலி— வாழை. ? இயம்பி-சொல்லி. § துடி-உடுக்கை. ¶ பிடி-கைப்பிடி. + வழும்பு-நிணம் - உகிர்-நகம். || நான்று-தொங்கி. * முளரிமொட்டு-தாமரைமொக்கு. 0 காந்தன்- காந்தப்பூ. ‘’ கமுகு-பாக்குமரம் + துப்பு-பவளம். ÷ குமிழ்-குமிழம்பூ. * கழுநீர்—குவளை

* வள்ளைத் தண்டின்வளமென வாழ்த்தியும்
கையுமெண்ணெயுங் கலவாதொழியில்
வெய்யவதரும் பேனும் விளையத்
தக்கதலையோட் டின்முளைத்தெழுந்த
சிக்கின்மயிரைத் திரண் † முகிலொன்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச்செல்லு நரகவாசல்
தோலுமிறைச்சியுந் ? துதைந்துசீப்பாயும்
காமப்பாழி கருவிளைகழனி
தூமைக்கடைவழி தொளைபெறுவாசல்
எணசாணுடம்பு மிழியும்பெருமழை
மண்பாற் சாமங் கழிக்கு மறைவிடம்
நச்சிகாமுக நாய்தானென்றும்
இசசித்திருக்கு மிடைகழிவாசல்
திங்கட்சடையோன் றிருவருளில்லார்
தங்கித்திரியுஞ் § சவலைபெருவழி
புண்ணிதுவென்று புடவையைமூடி
உண்ணீர்பாயு மோசைக்கொழும்புண்
மால்கொண்டறியா மாந்தர்புகும்வழி
நோய்கொண்டொழியா நுண்ணியர்போம்வழி
தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
செருக்கியகாமுகர் சேறுஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும்பெருவழி
மலஞ்சொரிந்திழியும் வாசற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாசல்
இத்தைநீங்க ளினிதென வேண்டா
பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி
மெச்சிசசிவமத வீடருள்பவனை
முத்திநாதனை மூவாமுதல்வனை

---

* வள்ளை-வள்ளைக்கொடி. † முகில்-மேகம். ? துதைந்து-நெருங்கி. § சவலை-மெலிவு.

அண்டாண்டமு மனைத்துள பவனமுங்
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின்
போகமாத்திரைப் போற்றுத லொழிந்தே

திருச்சிற்றம்பலம்.

## திருவேகம்பமாலை.

* அறந்தானியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற் † சதகோடியுள்ளத் துறவுடையோன்
மறந்தானறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற்
றிறந்தான்பெருமையையென் சொல்லுவேன்கச்சியேகம்பனே

கட்டியணைத்திடும் பெண்டிருமக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போற்சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவார்மயானங் குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோ விறைவாகச்சி யேகம்பனே. 2

கைப்பிடிநாயகன் றூங்கையிலேயவன் கையையெடுத்
தப்புரந்தள்ளி லசையாமன்முன்வைத் தயல் 0 வளவி
லொப்புடன்சென்று துயினீத்துப்பினவந் துறங்குவளை
யெப்படிநாநம்புவே னிறைவாகச்சி யேகம்பனே. 3

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவைநன் னார்தப்பினாற்
றன்னாலுமாடிச் சலித்திடுமோவந்தத் தன்மையைப்போ
லுன்னாலியானுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங்காவதுண்டோ விறைவாகச்சி யேகம்பனே. 4

நல்லாரிணக்கமு நின்பூசைநேசமு ஞானமுமே
யல்லாதுவேறு நிலையுளதோவக மும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமு மைந்தரும்வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம் வெளிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே. 5

---

* அறம்-முப்பத்திரண்டுதருமம். அவை ஆதுலர்க்குச் சாலை முதலியன. † சதகோடி-நூறுகோடி. 0 வளவு-வீடு.

பொல்லாதவனெறி நில்லாதவனையும் புலன்கடமை
வெல்லாதவன்கல்வி கல்லாதவன்மெய் யடியவர்பாற்
சொல்லாதவனுண்மை சொல்லாதவனின் திருவடிக்கன்
பில்லாதவன் மண்ணி லேன் பிறந்தேன்கச்சி யேகம்பனே

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்துமண்மே
லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறக்கும் ¶ குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே

அன்னவிசார மதுவேவிசார மதுவொழிந்தார்
சொன்னவிசாரந் தொலையாவிசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசார மிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம் வைத்தா யிறைவாகச்சி யேகம்பனே. 8

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையு நின்னெஞ்செழுத்தை
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. 9

மாயநட்போரையு மாயாமலமெனு மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன்சென்றுபின் றாதையைக்கூடிப்பின் றாயைமறந்
தேயுமதேநிட்டை யென்றானெழிற்கச்சி யேகம்பனே. 10

வரிக்கோலவேல்விழி யாரனுராக மயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத் தஞ்சுஞ்சொலேன்றமியேனுடல்
நரிக்கோகழுகு பருந்தினுக்கோவெய்ய நாய்தனக்கோ
வெரிக்கோவிரையெதுக்கோ விறைவாகச்சி யேகம்பனே.

காதென்றுமூக்கென்றுகண்ணென்றுகாட்டிஎன்கண்ணெதி
ரே, மாதென்றுசொல்லி வருமாயைதனை மறலிவிட்ட
தூதென்றெண்ணுமற் சுகமென்றுநாடித் துர்ப்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பே னிறைவாகச்சியேகம்பனே. 12

ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுபெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர்சதமல்ல பிள்ளைகளுஞ்

---

¶ குலாமர்-கீழ்மக்கள்.

சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங்கச்சி யேகம்பனே. 13

சீறும்வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியுமாகிக் கொடுமையினால்
பீறுமலமு முதிரமுஞ்சாயும் பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலே னிறைவாகச்சி யேகம்பனே. 14

பொருளுடையோரைச்செயலினும் வீரரைப்போர்க்களத்தும்
¶ தெருளுடையோரைமுகத்தினுந் தேர்ந்துதெளிவதுபோ
லருளுடையோரைத் தவத்திறகுணத்தி லருளிலன்பி
லிருளறுசொல்லினுங் காணத்தகுங்கச்சி யேகம்பனே. 15

பருத்திப்பொதியினைப் போலவயிறு பருக்கத்தக்க
டுருத்திக்கறுசுவை போட்டுத்துருத்து துறந்தோர்தமக்கு
வருத்தியமுதிட மாட்டாரவரை யிம்மாநிலத்தி
லிருத்திக்கொண்டேனிருந்தா யிறைவாகச்சி யேகம்பனே.

பொல்லாவிருளகற் றுங்கதிர்கூகையென் புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடும் மாறொக்குமே யறிவோருளத்தில்
வல்லாரறிவா ரறியார்தமக்கு மயக்கங்கண்டா
யெல்லாம்விழிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே. 17

வாதுக்குச்சண்டைக்குப் போவார்வருவர் வழக்குரைப்பர்
தீதுக்குதவியுஞ் செய்திடுவர் தினந்தேடியென்று
மாதுக்களித்து மயங்கிடுவார் விதிமாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தா ரிறைவாகச்சி யேகம்பனே. 18

ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரைவைவர் ! சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்க
ளாயார்பிறர்க்குப காரஞ்செய்யார்தமை யண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்ன போயென்னகாண்கச்சி யேகம்பனே. ()

|| அப்பென்றும் வெண்மைய தாயினுமாங்கந் நிலத்தியல்பா
ய்த், தப்பின்றியேகுண வேற்றுமைதான்பல சார்தலினாற்

¶ தெருள்-தெளிவு. ! சதி-வஞ்சனை. || அப்பு-நீர்.

செப்பிலபக்குவம் பக்குவமாயுள்ள சீவனிலு
மிப்படியேநிற்ப னெந்தைபிரான்கச்சி யேகம்பனே. 20

நாயாய்ப்பிறந்திடி னல்வேட்டையாடி நயம்புரியுந்
தாயார்வயிற்றி னரராய்ப்பிறந்துபின் * சம்பன்னராய்க்
காயாமரமும வறளாங்குளமுங் கல்லாவுமென்ன
வீயாமனிதரை யேன்படைத்தாய்கச்சி யேகம்பனே: 21

ஆற்றிற்கரைத்த புளியாக்கிடாமலென் னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம் பற்றுமையாபுர மூன்றெரித்துக்
† கூற்றைப்பணிகொளுந்தாளுடையாய்குன் றவில்லுடையா
யேற்றுக்கொடியுடையா யிறைவாகச்சி யேகம்பனே. 22

பெண்ணாகிவந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டி முலையான்மயக்கிக் 0 கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளியென் § போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தே னிறைவாகச்சி யேகம்பனே. 23

நாவாரவேண்டும் விதன்சொல்லுவாருனை நான்பிரிந்தாற்
சாவேனென்றேயிருந் தொக்கவுண்பார்கள் கைதானவறண்
டாற், போய்வாருமென்று நடுத்தலைக்கேகுட்டும்பூவையருக்
கீவார்தலைவிதியோ விறைவாகச்சி யேகம்பனே. 24

கல்லார்சிவகதை நல்லோர்தமக்குக் கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க் கன்னங்கொடார் குருசொன்னபடி
நில்லாரறத்தை நினையார்நின்னாம நினைவிற்சற்று
மில்லாரிருந்தென னிறந்தென்புகல்கச்சி யேகம்பனே. 25

வானமுதத்தின் சுவையறியாதவர் வன்கனியின்
றூனமுதத்தின் சுவையெண்ணல்போலத் தனித்தனியே
தேனமுதத்தின் றெளிதாயஞானஞ் சிறிதுமில்லார்க்
கீனமுதசசுவை நன்றல்லவோகசசி யேகம்பனே. 26

---

* சம்பன்னர்-தனவான்கள். † கூற்று-யமன். 0 கடிதடம்-நிதம்பம் அது இடைக்குக்கீழும் தொடைக்கு மேலு முள்ளபாகம். § போதம்-ஞானம்.

ஊற்றைச்சரீரத்தை *யாபாசக் † கொட்டிலையூன்பொதிந்த
பீற்றற்றுருத்தியை சோறிடுந்தோற்பையைப் பேசரிய
காற்றிற்பொதிந்த நிலையற்றபாண்டத்தைக் காதல்செய்தே
யேற்றுத்திரிந்துவிட்டே னிறைவாகசசி யேகம்பனே. 27

சொல்லால்வருங்குற்றஞ் சிந்தையால்வருந் தோடஞ்செய்த
பொல்லாததீவினை பார்வையிற்பாவங்கள் புண்ணியநூ
லல்லாதகேள்வியைக் கேட்டிடுந்தீங்குக ளாயவுமற்
றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்கச்சி யேகம்பனே.

0 முட்டற்றமஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி
§ மெட்டிட்டுப்பொட்டிட்டுப் பித்தளையோலைவிளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கேசெய்யும் பாவையர்மே
லிட்டத்தை நீதவிர்ப்பா யிறைவாகசசி யேகம்பனே. 29

பிறந்துமண்மீதிற் பிணியேகுடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின் மேன்மயலாகிப்புன் மாதருக்குட்
பறந்துழன்றேதடு மாறிப்பொன்றேடி யப்பாவையர்க்கீந்
திறந்திடவோ பணித்தாயிறைவாகச்சி யேகம்பனே. 30

பூதங்களற்றுப் பொறியற்றுச்சாரைம் புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப் பேராசைதானற்றுப் பின்முனற்றுக்
காதங்கரணங் களுமற்றுவானந்தக் காட்சியிலே
யேதங்களைந்திருப்பே னிறைவாகச்சி யேகம்பனே. 31

நல்லாயெனக்கு மனுவொன்றுதந்தருண் ஞானமிலாப் [ஞ
பொல்லாவெனைக்கொன்றுபோடும் பொழுதியல்பூசைசெப
சொல்லாநற்கோயி லியமம்பலவகைத் தோத்திரமு
மெல்லாமுடிந்தபின்பு கொல்லுகண்டாய்கச்சி யேகம்பனே.

சடக்கட்த்துக்கிரை தேடிப்பலவுயிர் தன்னைக்கொன்று
விடக்கடித்துக்கொண் டிறுமாந்திருந்து மிகமெலிந்து
படக்கடித்தின்னிழல் வார்கடமைகரம் பற்றிநம
னிடக்கடிக்கும்பொழு தேதுசெய்வார்கச்சி யேகம்பனே. ()

---

* ஆபாசம்-அலங்கோலம். † கொட்டில்-ஒதுக்கிடம்.
0 முட்டு-குற்றம் § மெட்டு-காலாழி.

நாறுமுடலு நரிப்பொதிச்சோற்றினை நான்தினமுஞ்
சோறுங்கறியு நிரப்பியபாண்டத்தைத் தோகையர்தங்
கூறுமலமு மிரத்தமுஞ்சேருங் குழியில்விழா
தேறும்படியருள்வா யிறைவாகச்சி யேகம்பனே. 34

சொக்கிட்டரமனைப் புக்குட்டிருடியு துட்டர்வந்து
திக்குற்றமன்னரைக் கேட்பதுபோறசிவ நிந்தைசெய்து
மிக்குக்குருலிங்க சங்கமநிந்தித்து வீடிச்சிக்கு [னே
மெக்குப்பெருத்தவர்க் கென்சொல்லுவேன் கச்சியேகம்ப

விருந்தாகவந்தவர் தங்களுக்கன்ன மிகக்கொடுக்கப்
பொருந்தார்வளம்பெறவாழ்வார் நின்னுமைத்தைபோற்றிநித்த
* மருந்தாமுலைப்பங்க ரென்னைரப்பாதக ரம்புவியி
லிருந்தாவ தேதுகண்டா யிறைவாகச்சி யேகம்பனே. 36

எல்லாமறிந்து படித்தேயிருந்தெமக் குள்ளபடி
வல்லானறிந்துள னென்றுணராது மதிமயங்கிச்
சொல்லான்மலைந்துறு சூழ்விதியின்படி துதிக்கித்துப்பி
னெல்லாஞ்சிவன்செயலே யென்பர்காண்கச்சியேகம்பனே.

பொன்னைநினைந்து வெகுவாகத்தேடுவர் பூவையன்று
டன்னைநினைந்து வெகுவாயுருகுவார் தாரணியி
லுன்னைநினைந்திங் குனைப்பூசியாத வுலுத்தரெல்லா
மென்னை நினைந்துகண்டா யிறைவாகச்சி யேகம்பனே. 38

கடுஞ்சொலின்வம்பரை யீனரைக் † குண்டரைக்காமுகரைக்
கொடும் 0 பவமேசெயு நிர்மூடர்தம்மைக் குவலயத்து
ணெடும்பனைபோல வளர்ந்துநல்லோர்த நெறியறியா
§ விடும்பரையேன்வகுத்தா யிறைவாகச்சி யேகம்பனே. 39

கொன்றேனனேக முயிரையெல்லாம்பின்புகொன்றுகொன்
தின்றேன தன்றியுந் தீங்குசெய்தேனது தீர்க்கவென்றே[று

* சொக்கு-கன்னம், அல்லது, சொக்குப்பொடி. † அரு ந்தாமுலை-உண்ணாமுலை. 0 குண்டா-சோரபுத்திரர். § பவம்-பாவம். ¶ இடும்பர்-செருக்குடையோர்.

நின்றேனின் சனனிதிக் கேயதனுற்குற்ற நீபொறுப்ப
யென்றேயுனைநம்பினே னிறைவாகச்சியேகம்பனே. 40

ஊரிருந்தென்ன நல்லோரிருந்தென் னுபகாரமுள்ள
பேரிருந்தென்பெற்ற தாயிருந்தென்மடப்பெண்கொடியாள்
சீரிருந்தென்னற் சிறப்பிருந்தென்னவித் தேயத்தினி
லேரிருந்தென்வல்லவா யிறைவாகச்சி யேகம்பனே. 41

வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லாலெறியப் பிரம்பாலடிக்கக் களிவண்டுகூர்ந்
தல்லார்பொழிற்றில்லை யம்பலவாணர்க்கோ ரன்னைபிதா
வில்லாததாலல்லவோ விறைவாகச்சி யேகம்பனே. 42

விருத்தம்.

அன்னையெத்தனை யெத்தனை யன்னையோ-வப்பனெத்தனை யெத்தனை யப்பனோ, பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ-பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ, முன்னை யெத்தனை யெத்தனை செனமமோ-மூடனாயடி யேனுமறிந்திலே, னின்னமெத்தனை யெத்தனை செனமமோ-வென்செய்வேன் கச்சியேகம்பநாதனே. 1

திருத்தில்லை.

* காம்பிணங்கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங்காசினிக்குந், தாம்பிணங்கும் பல வாசையும் விட்டுத் தனித்துசசெத்துப், போம்பிணந்தன்னைத்திரளாகக்கூட்டிப் புரண்டினிமேற், சாம்பிணங்கத்துதையோ வென்செய்வேன் றில்லைச்சங்கரனே. 2

சோறிடுநாடு துணிதருங்குப்பை தொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைகளிறங்கிடுந்தீவினை யெப்பொழுது
நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா
லூறிடுங்கண்களுருக்கிடுநெஞ்சமென் னுள்ளமுமே. 3

அழலுக்குள்வெண்ணெயெனவேயுருகிப்பொன்னம்பலத்தா
ரிழலுக்குணின்று தவ † முளுற்றும னீட்டரமின்னுர்

---

* காம்பு-மூங்கில். † உளுற்றுதல்-முயலுதல்.

குழலுக்கிசைந்த வகைமாலைகொண்டு குற்றேவல்செய்து
விழலுக்குமுத்துலை யிட்டிறைத்தேனென் விதிவசமே. 4

ஓடாமறபாழுக் குழையாம * லோரமுரைப்பவர்பாற்
கூடாமனல்லவர் கூட்டம்விடாமல் வெங்கோபநெஞ்சி
ஞடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே. 5

பாராமலேற்பவற் கில்லையென்னு'மற் பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள் வந்தணுகாமன் மனமயர்ந்து
போராமற்சேவை பிரியாமலன்பு பெறுதவரைச்
சேராமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே. 6

கொல்லாமற்கொன்றைத் தின்னுமற் † குத்திரங்கோள்க
கல்லாமற் 0 கைதவரோடிணங்காமற் கனவிலும்பொய் [ளவு
சொல்லாமற்சொற்களைக் கேளாமற்றுகையும் மாயையிலே
செல்லாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே. 7

முடிசார்ந்தமன்னரு மற்றுமுளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்து மண்ணவதுங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வை நினைப்பதல்லாற்பொன்னி னம்பலவ
ரடிசார்ந்துநாமுய்யவேண்டுமென்றே யறிவாரில்லையே. 8

காலையுபாதி மலஞ்சலமாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாகமாமுற சஞ்சிதமா
மாலையுபாதி துயில்காமமிவை மாற்றிவிட்டே
யாலமுகந்தரு ளம்பலவாவென்னை யாண்டருளே. 9

ஆயும்புகழ்த்தில்லை யம்பலவாண ரருகிற்சென்றுற்
பாயுமிடபங் கடிகருமரவம்பின் பற்றிசசென்றுற்
பேயுங்கணமும் பெருந்தலைப்பூதமும் பின்றொடரும்
போயென்செய்வாய்மனமே பிணக்காடவர் போமிடமே. 10

ஓடுமெடுத் § ததளாடையுஞ்சுற்றி யுலாவிமெள்ள
வீடுகடோறும் பலிவாங்கியேவிதி யற்றவர்போ

---

* ஓரம்-பக்ஷபாதம். † குத்திரம்-வஞ்சனை. 0 கைதவர்-வஞ்சகர். § அதள்-தோள்.

லாடுமருட்கொண்டிங் கம்பலத்தே நிற்கு மாண்டிதன்னைத்
தேடுங்கணக் கென்னகாண் சிவகாம சவுந்தரியே. 10

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானுமிங் கொன்றோடொன்
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை [றை
காட்டுவிப்பானு மருவினைப்பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லை யம்பலத்தே. 11

அடியார்க்கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வரம்பெறலாம் வைய மேழளந்த
நெடியோனும் வேதனுங் காணாதநித்த நிமலனருட்
குடிகாணுநாங்க ளவாகாணுமெங்கள் குலதெய்வமே. 12

தெய்வச்சிதம்பர தேவாவுன்சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்த சொப்பன மாமன்னர்வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்தசெல்வமெங்கேமண்டலீகர்தம்மேடையெங்கே
கைவைத்தநாடக சாலையெங்கேயிது கண்மயக்கே 13

உடுப்பானும்பாலன்ன முண்பானுமுய்வித் தொருவர்தம்மைக்
கெடுப்பானுமேதென்றுகேள்விசெய்வானுங்கெதியடங்க [று
கொடுப்பானுந்தேகியென்றேற்பானுமேற்கக்கொடாமனின்
றடுப்பானு நீயல்லையோ தில்லையானந்தத் தாண்டவனே. ()

வித்தாரம்பேசினுஞ் * சோங்கேறினுங்கம்ப மீதிருந்து
தத்தாவென்றோதிப † பவுரிகொண்டாடினுந்? தம்முன்றம்பி
யொத்தாசைபேசினு மாவதுண்டோதில்லை யுண்ணிறைந்த
கத்தாவின்சொற்படி யல்லாதுவேறில்லை கன்மங்களே. 15

பிறவாதிருக்க வரந்தரல்வேண்டும் பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டுகாணிது வெப்படியோ
வறமாப்புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவாதிருமனமே யதுகாணன் மருந்துனக்கே. 16

தவியாதிருநெஞ்சமே தில்லைமேவிய சங்கரனைப்
புவியார்ந்திருக்கின்ற § ஞானாகரனைப் புராந்தகனை

---

* சோங்கு-மரக்கலம். † பவுரி-ஓர்கைக்கூத்து ? தம்முன் தமையன் § ஞானாகரன் ஞானத்துக்குபிறப்பிடமாயுள்ளவன்

யவியாவிளக்கைப்பொன்னம்பலத்தாடியையைந்தெழுத்தா
செவியாமனீசெவித் தாற்பிறவாமுத்தி சித்திக்குமே. 17

நாலின்மறைப்பொரு ளம்பலவாணரை நம்பியவர்
பாலிலொருதரஞ் சேவிக்கொணாதிருப் பார்க்கருங்கல
மேலிலெடுத்தவர் கைவிலங்கைத்தைப்பர் மீண்டுமொரு
காலினிறுத்துவர் கிட்டியுந்தாம்வந்து கட்டுவரே. 18

ஆற்றோடுதும்பை யணிந்தாடுமம்பல வாணர்தமைப்
போற்றாதவர்க்கடையாள முண்டேயிந்தப் பூதலத்திற்
சோற்றாவியற்றுச சுகமற்றுச சுற்றந் துணியுமற்றே
யேற்றாலும்பிசை கிடையாமலேலக்கற் றிருப்பர்களே. 19

அத்தனை முப்பத்து முக்கோடிதேவர்க் கதிபதியை
நித்தனையம்மை சிவகாமிசுந்தரி நேசனையெங்
கத்தனைப்பொன் னம்பலத்தாடுமையனைக் காணக்கண்க
ளெத்தனைகோடி யுகமோதவஞ்செய் திருக்கின்றவே. 20

திருச்செங்காடு.

நெருப்பானமேனியர் செங்காட்டிலாத்தி நிழலருகே
யிருப்பார்திருவுள மெப்படியோ வின்ன மென்னை யன்னைக்
* கருப்பாசயக்குழிக்கே தள்ளுமோ கண்ணன் காணரிய
திருப்பாதமே தருமோ தெரியாது சிவன்செயலே. 1

திருவொற்றியூர்.

† ஐயுந்தொடர்ந்து விழியுஞ்சொருகி யறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோதொன் றுவேண்டுவன்யா
செய்யுந்திருவொற்றி யூருடையீர்திரு நீறுமிட்டுக் [ன்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே.

சுடப்படுவாரறியார் புரமூன்றையுஞ் சுட்டபிரான்
றிடப்படுமாமதிற் றென்னொற்றியூரான் றெருப்பரப்பி
னடப்பவர்பொற்பத நந்தலைமேற்பட நன்குருண்டு
கிடப்பதுகாண்மனமே விதியேட்டைக் கிழிப்பதுவே. 2

* கருப்பாசயம்-கருப்பை. † ஐ-சிலேத்துமம்.

திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்ன காற்றேபுசித்தென்ன கந்தைசுற்றி
யோடேயெடுத்தென்ன வுள்ளன்பிலாதவ ரோங்குவிண்ணோ
நாடேயிடைமரு தீசர்க்குமெய்யன்பர் * நாரியர்பால்
வீடேயிருப்பினு மெஞ்ஞான வீட்டின்ப மேவுவரே. 1

தாயும்பகைகொண்ட பெண்டிர் பெரும்பகை தன்னுடைய
† சேயும்பகையுற வோரும்பகையிச் செகமும்பகை
யாயும்பொழிதி லருஞ்செல்வநீங்கி லிங்காதலினாற்
றேயுநெஞ்சேமரு தீசர்பொற்பாதஞ் சுதந்தரமே. 2

திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோநகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிட
நீடோய்கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே.

திருக்காளத்தி.

பத்தும்புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடி முடிந்தபின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்னகாண் கயிலாபுரிக் காளத்தியே. 1

பொன்னாற்பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டுபொ
ன்படைத்தோன், றன்னாற்பிரயோசனம் பொன்னுக்கங்கே
துண்டந்ததன்மையைப்போ, லுன்னாற்பிரயோசனம்வேண
தெல்லாமுண் டுனைப்பணியு, மென்னாற்பிரயோசன மேது
ண்டு காளத்தி யீச்சுரனே. 2

வாளான் ¶ மகவரிந் தூட்ட வல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாலிளமை § துறக்கவல்லேனல்லன் றொண்டுசெய்து

* நாரியர்-மாதர்கள். † சேய்-பிள்ளை. ¶ மகவு-பிள்ளை.
§ சூள்-ஆணை.

நாளாறிக்கண்ணிடந் தப்பவல்லேனல்ல னானிநிச்சென்
றாளாவதெப்படியோ திருக்காளத்தி யப்பருக்கே. 3

முப்போதுமன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போதிளமுலை யாருடன் சேரவுஞ் சீவன்விடு
மப்போது கண்கலக்கப்பட வும்மமைத்தா யையனே
யெப்போது காணவல்லேன் றிருக்காளத்தி யீச்சுரனே. 4

இரைக்கேயிரவும் பகலுந்திரிந்திங் கிளைத்துமின்னா
ரரைக்கேயவலக் குழியருகே * யசும்பார்ந்தொழுகும்
புரைக்கேயுழலுந் தமியேனையாண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகலலால் நிழற்கீழமர்ந்தருள் காளததியே. 5

நாறுங்குருதிற் சலதாரைதோற்புரை நாடொறுஞ்சீ
யூறுமலக்குழி காமத்துவார மொளித்திடும்புண்
டேறுந்தசைப்பிளப் பந்தரங்கத்துள் சிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய் திருக்காளத்தி யீச்சுரனே. 6

கைலாயம்.

கான்சாயும் வெள்ளி மலைக்கரசேநின் கழனம்பினே
னூன்சாயுஞ்சென்ம மொழித்திடுவாய் கருவூரனுக்காய்
மான்சாயுஞ்செங்கை மழுவலஞ்சாய வளைந்தகொன்றைத்
தேன்சாயநல்ல திருமேனிசாய்ந்த சிவக்கொழுந்தே. 1

இல்லந்துறந்து பசிவந்தபோதங் கிரந்துதின்று
பல்லுங்கரையற்று வெள்வாயு மாயொன்றிப் பற்றுமின்றிச்
சொல்லும்பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென்றோ கயிலாயத்தனே. 2

0 சினந்தனையற்றுப் பிரியமுந்தானற்றுச் செய்கையற்று
நினைந்துமற்று நினையாமையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனியேயிருந் தானந்தநித்திரை தங்குகின்ற
வனந்தனிலென் றிருப் பேனத்தனே கயிலாயத்தனே. 3

கையாரவேற்றுநின் றங்ஙனந்தின்று கரித்துணியைத்
தையாதுடுத்துநின் சன்னிதிக்கேவந்து சந்ததமு

---

* அசும்பு-கசிவு. 0 சினம்-கோபம்.

மெய்யாரநிற்பணிந் துள்ளேயுரோமம் விதிர்விதிர்ப்ப
வையாவெனவோல மிடுவதென்றோ கயிலாயத்தனே. 4

நீறார்த்தமேனியு ரோமஞ்சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேறாய்க்கசிந்து கசிந்தேயுருகி நின் சீரடிக்கே
மாறாத்தியானமுற் றானந்தமேற்கொண்டு மார்பிற்கண்ணீ
ராறாய்ப்பெருகக் கிடப்பதென்றோ கயிலாயத்தனே. 5

செல்வரைப்பின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லிளிக்காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தி
னெல்லையிற்புக்கிட வேகாந்தமாயெனக் காம்படத்தே
யல்லலற்றென்றிருப்பே னத்தனேகயி லாயத்தனே. 6

மந்திக் * குருளையொத் தேனில்லைநாயேன் வழக்கறிந்து (ப்
சிந்திக்குஞ்சிந்தையையா னென்செய்வேனெனைத் தகற்றி
புத்திப்பரிவிற ! குருளையேந்திய பூசையைப்போ
லெந்தைக் கரியவன் காணத்தனே கயிலாயத்தனே. 7

வருந்தேன்பிறந்து மிறந்துமயங்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற் புகுகின்றிலேன்புகழ் வாரிட்டத்தி
லிருந்தேனினியவர் கூட்டம்விடேனிய லஞ்செழுத்தா
மருந்தேனருந்துவ னின்னருளாற் கயிலாயத்தனே. 8

ம து ரை.

விடப்படுமோவிப் பிரபஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோநின் னருளின்றியேதின மேயலையக்
கடப்படுமோவடி யார்வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்க நாதாசவுந்தர பாண்டியனே. 1

பொ து.

¶ உடைகோவணமுண் டுறங்கப்புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகாயிலையுண் டருந்தத்தண்ணீருண் டருந்துணைக்கே
§ விடையேறுமீசர்திருநாமமுண்டிந்தமேதினியில [றைக்கே
வடகோடுயர்ந்தென்ன தென்கோடுசாய்ந்தென்ன வான்பி

---

* குருளை-குட்டி. ! பூசை-பூனை. ¶ உடை-வஸ்திரம்
§ விடை-இடபம்.

வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
வோடுநமக்குண்டு வற்றாதபாத்திர மோங்குசெல்வ
நாடுநமக்குண்டு கேட்டதெல்லாந்தர நன்னெஞ்சமே
யீடுநமக்குச் சொலவேயொருவரு மிங்கில்லையே. 2

நாடிக்கொண்டீசரை நாட்டமுற்றாயிலை நாதரடி
தேடிக்கொண்டாடித் தெளிந்தாயிலை செகமாயைவந்து (ம்
மூடிக்கொண்டோமென் றுங்கரமாரிதங்கண்முநிந்த வென்று
பீடிப்பையோநெஞ்சமே யுனைப்போலிலைப்பித்தர்களே. 3

கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக் கருத்தொன்றெண்
பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப் புலால்கமழு (ணப்
மெய்யொன்றுசாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ்வாறு கொள்வாய்வினைதீர்த்தவனே.

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப்பல் பச்சிலையா
லெண்ணுண்டுசாத்த வெதிர்நிற்கவீச னிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்த மானிடமே. 5

சொல்லினுஞ்சொல்லின் முடிவிலும்வேதச் சுருதியிலு
மல்லினு மாசற்ற வாகாயந்தன்னிலு மாய்ந்துவிட்டோ
ரில்லிலுமன்ப ரிடத்திலுமீச னிருக்குமிடங்
கல்லிலுஞ்செம்பிலுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே.

வினைப்போகமேயொருதேகங்கண்டாய வினைதானொழிந்தா
றினைப்போதளவுநில் லாதுகண்டாய் சிவன் பாதநினை (ற்
நினைப்போரைமேவு நினையாரைநீங்கிந் நெறியினின்றா
லுனைப்போலொருவருண் டோமனமேயெனக் கூற்றவரே.

பட்டைக்கிழித்துப் பருவூசிதன்னைப் பரிந்தெடுத்து (துக்
முட்டச்சுருட்டியென் மொய்குழலாள்கையில் முன்கொடுத்
கட்டியிருந்த கனமாயக்காரிதன் காமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோ விங்ஙனேசிவன் மீண்டதுவே. 8

சூதுற்றகொங்கையு மானார்கல்வியுஞ் சூழ்பொருளும்
போதுற்றபூசலுக் கென்செலாஞ்செய்த புண்ணியத்தாற்

றீதற்றமன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்றவூசியைத் தந்துவிட்டானென்றன் கைதனிலே. 9

வாதுற்றதிண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும் புகலும் நெஞ்சேயிந்தப் பூதலத்திற்
றீதுற்றசெல்வமென் றேடிப்புதைத்த திரவியமென்
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே. 10

வேதத்தினுட்பொருண் மண்ணாசைமங்கையைவிட்டுவிடப்
போதித்தவன்மொழி கேட்டிலையோசெய்த புண்ணியத்தா
லாதித்தன்சந்திரன் போலேவெளிச்சம தாம்பொழுது
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே. 11

மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாசன்மட்டே
யினமானசுற்ற மயானமட்டேவழிக் கேதுதுணை
தினையாளவெள் ளளவாகினுமுன்பு செய்ததவந்
தனையாளவென்றும் பரலோகஞ்சித்திக்குஞ் சத்தியமே. 12

* அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழி † யம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டேவிம்மி விம்மியிரு
கைத்தலமேல்வைத் தழுமைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே. 13

சீயுங்குருதிச் செழுநீர் வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும்புடவையொன் றில்லாதபோது பகலிரவா
யீயுமெறும்பும் புகுகின்றயோனிக் கிரவுபகன்
மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே. 14

சீதப்பனிக்குண்டு சிக்கெனக்கந்தை தினமிரந்து
நீ 0 துய்க்கச்சோறு மனைதோறுமுண்டு நினைவெழுந்தால்
வீதிக்குணல்ல விலைமாதருண்டிந்த § மேதினியி
லேதுக்குநீசலித்தாய் மனமேயென்றும் புண்படவே. 15

ஆருண்டுதோப்புண் டணிவீதியம்பலந் தானுமுண்டு
நீருண்டுகந்தை நெடுங்கோவணமுண்டு நித்தநித்த

---

* அத்தம்-பொருள். † அம்பு-நீர். 0 துய்த்தல் - உண்ணல். § மேதினி-உலகம்.

மாறுண்டலாவி மயங்குநெஞ்சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மாவிருக்கச் சுகமுமுண்டே. ()

உடுக்கக் * கவிக்கக் குளிர்காற்று வெய்யிலொடுங்கிவந்தாற்
றடுக்கப்பழையவொரு வேட்டியுண்டு சகமுழுதும்
படுக்கப்புறந்திண்ணை யெங்கெங்குமுண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டு நெஞ்சேநமக்குக் குறைவில்லையே. ()

மாடுண்டுகன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோமினிக் கேணமன்மே
யோடுண்டு கந்தையுண்டுள்ளே யெழுத்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார் நமக்குத் துணையுமுண்டே. 18

மாததானவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு [டு
நீர்த்தார்தமக்கொரு நிட்டையுண்டோ நித்த னன்புகொண்
வேர்த்தார்குளித்துப் பசித்தார்புசித்து விழிப்பற்று
பார்த்தாலுலகத் தவர்போலிருப்பர் பற்றற்றவரே. 19

ஒன்றென்றிருதெய்வ முண்டென்றிருவுயர் செல்வமெல்லா
மன்றென்றிரு பசித்தோர்முகம்பார் நல்லறமுநட்பு
நன்றென்றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென்றிருமனமே யுனக்கே வுபதேசமிதே. 20

நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தை நம்புபொம்ம
லாட்டமென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிரு நெஞ்சேயுனக்குப தேசமிதே. 21

என்செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
யுன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்த யூனெடுத்த
பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்து மூண்டதுவே. 22

திருவேடமாகித் தெருவிற்பயன்றெனைத் தேடிவந்து
பரிவாகப்பிச்சை பகருமென்றூனைப் பதம்பணிந்தேன்

* கவித்தல்—மூடுதல்.

கருவாகுமேதக் கடற்கரைமேவக் கருதுமென்னை
யுருவாகிக்கொள்ளவல்லோ விங்ஙனேசிவனுற்றதுவே. ()

விட்டேனுலகம் விரும்பேனிருவினை வீனருடன்
கிட்டேனவருரை கேட்டுமிரேன்மெய் கெடாதநிலை (க்கு
தொட்டேன்சுகதுக்க மற்றுவிட்டேன் றொல்லைநான்மறை
மெட்டேனெனும்பா மென்னிடத்தேவந்திங் கெய்தியதே.

அட்டாங்கயோகமு மாதாரமாறு மவத்தையைந்தும்
விட்டேறிப்போனவெளிதனிலே வியப்பொன்றுகண்டேன்
வட்டாகிச்செம்மதிப்பாலூறலுண்டு மகிழ்ந்திருக்க
வெட்டாதபேரின்ப மென்னைவிழுங்கி யிருக்கின்றதே. ()

*எரிஎனக்கென்னும்புழுவோவெனக் கென்னுமிந்தமண்ணு
சரிஎனக்கென்னும்பருந்தோ வெனக்கெனுந்தான்புசிக்க(ஞ்
நரியெனக்கென்னும் புன்னாயெனக்கென்னு மிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தே னிதனாலென்ன பேறெனக்கே. ()

அண்ணறன்வீதி யாசிருப்பாகு மணிபடையோர்
நண்ணொருநாளொன்ப தாமவரேவலு நண்ணுமிவவூர்
துண்ணெனன்பசிக்கு மடைப்பள்ளியான சுகமுமெல்லா
மெண்ணிலிகால † மவமேவிடுத்தன மெண்ணரிதே. 27

என்பெற்றதாயாருமென்னைப் பிணமென்றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும்போவென்றுசொல்லிபுலம்பிவிட்டார்
கொன்பெற்றமைந்தரும் பின்வலம்வந்து குடமுடைத்தா
ருன்பற்றொழிய வொருபற்றுமில்லை யுடையவனே. 28

கறையற்றபல்லுங் கரித்துணியாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்றநெஞ்சமும்பொல்லாதவூணும்புறந்திண்ணையுந்
தறையிற்கிடப்பு மிறந்துண்ணுமோடுஞ் சகமறியக்
குறைவற்றசெல்வமென்றே கோலமா ‡ மறை கூப்பிடுமே.

எட்டுதிசையும் பதினாறுகோணமு மெங்குமொன்றாய்
முட்டித்ததும்பி முளைத்தோங்குசோதியை மூடரெல்லாங்

* எரி-நெருப்பு. † அவம்-வீண். ‡ மறை-வேதம்.

கட்டிச்சுருட்டிததங் கக்கத்தில்வைப்பர் கருத்தில்வையார்
பட்டப்பகலை யிரவென்றுகூறிடும் பாதகரே. 30

வாய்நாறுமூழன் மயிர்சிக்குநாறிடு மையிடுங்கண்
பீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெருங்குழிவாய்
சீநாறும்யோனி யழுநாறுமிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க் கோவிருநனே மனம்பற்றியதே. 31

உரைக்கைக்குநல்ல திருவெழுத்தைந்துண் டுரைப்படியே
செருக்கித்தரிக்கத் திருநீருமுண்டு தெருக்குப்பையிற்
றரிக்கக்கரித்துணி யாடையுமுண்டெந்தச் சாதியினு (யே
மிரக்கத்துணிந்துகொண் டேன்குறைவேது மெனக்கில்லை.

ஏதப்பட்டாயினி மேற்படும்பாட்டையி தென்றறிந்து
போதப்பட்டாயில்லை நல்லோரிடஞ்சென்று புல்லறிவால்
வாதப்பட்டாய்மட மாணர்கலவி மயக்கத்திலே
பேதைப்பட்டாய்நெஞ்சமே யுனைப்போலில்லை பித்தருமே

சுரப்பற்றுவல்வினை சுற்றமுற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர் கையிணக்கற்றுக் கவலையற்று
வரப்பற்றுநாதனை வாயாரவாழ்த்தி மனமடங்கப்
பரப்பற்றிருப்பதன்றோ பரமாபர மானந்தமே. 34

பேய்போற்றிரிந்துபிணம்போற்கிடந்திட்ட பிச்சையெல்லா
நாய்போலருந்தி நரிபோலுழன்றுநன் மங்கையரைத் (ம்
தாய்போற் கருதித்தமர்போலனைவர்க்குந்தாழ்மை சொல்லிச்
*சேய்போலிருப்பர்கண்டீ ருண்மைஞானந் தெளிந்தவரே.

† விடக்கேபருந்தின் விருந்தேகமண்டல வீணனிட்ட
முடக்கேபுழுவந் துறைபிடமேநல முற்றுமிலாச்
சடக்கேகருவி தளர்ந்துவிட்டாற்பெற்ற தாயுந்தொடத்
தொடக்கேயுனைச்சுமந்தே னின்னினேது சுகமெனக்கே. ()

அழுதாற்பயனென்ன நொந்தாற்பயனென்ன வாவதில்லை
தொழுதாற்பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த

* சேய்-குழந்தை. † விடக்கு மாமிசம்.

பழுதாற்பயனென்ன னன்மையுந்தீமையும் * பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோ சலியாதிரென்னேழைநெஞ்சே. ()

ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக் கழுவேற்றுநீற்றைப் புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச் சுற்றத்தைநீங்கிச் சகநகைக்க
வேரீருமக்கவர் தாமேதருவ ரிணையடியே. 38

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை மாமன்றநூ
லேற்றிக்கிடக்கு மெழுகோடிமந்திர மென்னகண்டா
யாற்றிற்கிடந்து துறையறியாம லலைகின்றையே. 39

ஓங்காரமாய்நின்ற வத்துவிலேயொரு வித்துவந்து
பாங்காய்முளைத்த பயனறிந்தாற்பதி னாலுலகு
நீங்காமனீங்கி நிறையாநிறைந்து நிறையுருவா
யாங்காரமானவர்க் கெட்டாக்கனிவந் தமர்ந்திடுமே. 40

விதியார்படைப்பு மரியா () ரளிப்பும் வியன்கயிலைப்
பதியார் ! தொடைப்புநம் பாலணுகாது பரானந்தமே
கதியாகக்கொண்டு மற்றெல்லாந் துயிலிற் கனவெனநீ
மதியாதிருமனமே யிதுகாரணன் மருந்துனக்கே. 41

நாய்க்குண்டுதொண்டு நமக்குண்டுபிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திர பஞ்சாட்சரமதி யாமல்வரும்
பேய்க்குண்டுநீறு திகைப்புண்டுநின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டுதேசிகன் றன்னருணோக்கங்கணோக்குதற்கே.

நேமங்கணிட்டைகள் வேதங்களாகம நீதிநெறி
யோமங்கடர்ப்பணஞ் சந்திசெபமந்த்ர யோகநிலை
நாமங்கள்சந்தனம் வெண்ணீறுபூசி நலமுடனே
சாமங்கடோறு மிவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே. 43

நானெத்தனைபுத்தி சொன்னாலுங்கேட்டிலைநன்னெஞ்சமே
யேனிப்படிக்கெட் டுழலுகின்றாயினி யேதுமிலா

* பங்கயத்தோன் - பிரமன். () அளிப்பு-ரக்ஷிப்பு.
! தொடைப்பு-சங்காரம்.

வானத்தின்மீனுக்கு வன்றூண்டிலிட்ட வகையதுபோற்
போனத்தைமீள நினைக்கின்றனையென்ன புத்தியிதே. 44

* அஞ்சக்கரமெனுங் கோடாலிகொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டை வேரறவெட்டி வளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச் சதாசிவமென்கிற வித்தையிட்டுப்
புன்செய்க்களைபறித்தே வளர்த்தேன் சிவபோகத்தையே. ()

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழ்ந்திடுநா
ணீயாரு நானாரெனப் பகர்வாரந்த நேரத்திலே
நோயாரும்வந்து குடிகொள்வரேற்கொண்ட நோயுமொரு
பாயாருநீயுமல்லாற் பின்னையேது நட்பாமுடலே. 46

ஆயும்பொழுது மயிர்க்கால்கடோறு மருங்கிருமி
தோயுமலக்குட்டை யாகியகாயத்தைச் சுட்டுவிட்டாற்
பேயுநடனமிடுங் கடமாமென்று பேசுவதை
நீயுமறிந்திலையோ பொருடேட்ட நினைந்தனையே. 47

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குத்தானல்ல பூமிதனைக்
காணும்படிக்கல்ல மங்கையற்கல்ல நற்காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணுவளர்க்க வடியேன் படுந்துயரம் சற்றல்லவே. 48

வெட்டாதசக்கரம் பேசாதயந்திரம் வேறொருவர்க்
கெட்டாதபுட்ப மிறையாததீர்த்த மினிமுடிந்து
கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோ குருநாதன்மொழிந்ததுவே. 49

எருமுட்டைபுட்கி லுதிர்ந்திடுஞ் செல்லுக் கெவரழுவார்
கருமுட்டைபுக்குக் கழலகன்றாய்கன துக்கமதாய்ப்
பெருமுட்டுப்பட்டவர் போலழும்பேதையிர் பேத்துகிறீ
ரொருமுட்டும்வீட்டு மாறுமென்றைக்கு மோதுமினே. 50

மையாடுகண்ணியு மைந்தரும்வாழ்வு மனையுஞ்செந்தீ
யையாநின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத்துளே

* அஞ்சக்கரம்-பஞ்சாட்சரம்.

மெய்யாயிருந்தது நாட்செலநாட்செல வெட்டவெறும்
பொய்யாய் பழங்கதையாய்க்கனவாய் மெல்லப்போனதுவே

ஆயாய்ப் பலகலை யாய்ந்திடுந் தூய வருந்தவர்பாற்
போயாகிலுமுண்மை வைத்திருந்தாயில்லை பூதலத்தில்
! வேயார்ந்ததோளியர் காமவிகாரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழிக்கின் றனைமனமேயென்ன பித்துனக்கே. ()

அடியாருறவு மரன்பூசைநேசமு மன்புமன்றிப்
படிமீதில்வேறு பயனுளதோபங் கயன்வகுத்த
குடியானசுற்றமுந் தாரமும்வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்குமென்றினஞ் சார்ந்திலரே. ()

ஆங்காரப்பொக்கிஷங் கோபக்களஞ்சிய மாணவந்தா
னீங்காரவாரணமனை பொய்வைத்த கூடம் விண்ணீடிவளர்
தேங்கார்பெருமதிற் காமவிலாசமித் தேகங்கந்தல்
பாங்காயுனைப்பணிந் தெப்படிஞானம் பலிப்பதுவே. 54

ஒழியாப்பிறவி யெடுத்தேங்கியேங்கி யுழன்றநெஞ்சே
யழியாப்பதவிக் 0 கவுடதங்கேட்டி யனுதியனை
மழுமான்கரத்தனை மால்விடையானை மனத்திலுன்னி
விழியாற்புனல்சிந்தி விம்மியழுநன்மை வேண்டுமென்றே.

நாய்க்கொருசூலு மதற்கோர்மருத்துவ நாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம் பிடிபடுமோபெருங் காஞ்சிரங்கா
யாக்குவகூர தருந்துவராரது போலுடம்பு
தீக்கிரையாவதல்லா லேதுக்காமிதைச் செப்புமினே. 56

¶கச்சிற்கிடக்குங் கனதனத்திற்கடைக் கண்கள்பட்டே
யிச்சித்திருக்கின்ற வேழைநெஞ்சே ? யிடவான் * பயந்த
பசைப்பசுங்கொடி யுண்ணுமுலைப்பங்கர் பாதத்திலே
தைச்சுக்கிடமனமே யொருகாலுந் தவறில்லையே. 57

---

! வேய்-மூங்கில் 0 அவுடம்-மருந்து. ¶ கச்சு-முலைக்கட்டு. (அதாவது ரவிக்கை) ? இடவான் - மலையரையன். * பயந்த-பெற்ற.

! மாணர்விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவுங்
கோனகியென்னைக்குடியேற்றிக்கொண்டனன்குற்றமில்லை
போனலும் 0 பேறிருந் தாலுநற்பேறிது பொய்யன்றுகான்
ஆனலுமிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே. 58

சற்றுகிலுந்தன்னைத் தானறியாய்தனை யாய்ந்தவரை
யுற்றுகிலுமுரைக் கப்பொருந்தாயுனக் கானதில்லை
பற்றய்குருவைப் பணியாய் பரத்தையர் பாலிற்சென்றென்
பெற்றய்மடநெஞ்சமே யுனைப்போலில்லை பித்தனுமே. ()

உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூத்தையற்றைப், புளியிட்ட செம்பையும் போற்றுகிலேனுயர் பொன்னெனவே, யொளியிட்டதாளிரண் டுள்ளேயிருத்துவதுண்மை யென்று, வெளியிட்டதாளிரண் டுள்ளேபிருத்துவதுண்மை யென்று, வெளியிட்டடைத்து வைத்தேனினிமேலொன்றும் வேண்டிலனே. 60

கல்லாவெறியுண்டுங் காலாலுதையுண்டுங் காளைகையில்
வில்லாலடியுண்டு முன்னாள்விடமுண்டு மேலளித்துப்
பல்லாற்புரமெரி யேகம்பவாணர் பதாம்புயத்தின்
சொல்லாற்செவியினிற் கேளாதிருந்ததென்றொல்வினையே.

ஒருநான்குசாதிக்கு மூவகைத்தேவர்க்கு மும்பருக்குந்
திருநாளுந்தீர்த்தமும் வேறுளதோவத் திசைமுகனல்
வருநாளில்வந்திடு மந்தக்கண்ணாளன் வகுப்பொழியக்
குருநாதனுணைகண்டீர் பின்னையேதிக் ? குவலயத்தே. 62

விருத்தம்.

பாரோநீரோ தீரோ * வளியோ படர்வானே
ஆரோநானென் றுய்வுறுகின்றே னறிவில்லேன்
பாரோநீரோ தீயோவளியோ படர்வானே
ஆரோநானென் றுய்வுறுகின்ற வதுநீயே. 63

---

! மாணர்-மாதர். 0 பேறு-பிரயோசனம். ? குவலயம்-உலகம். * வளி-காற்று.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நன்னிதியந்தேடி - நலமொன்றுமறியாத நாரியரைக் கூடிப், * பூப்பிளக்கவருமேழைப்புற்றீசல்போலப்-புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர், காப்பதற்கும் வகையறியீர்-கைவிடவு மாட்டீர் - கவட்டுத்தோல்மரத்துளையிற் காலுழைத்துக்கொண்டீர் ! ஆப்பதனையசைத்துவிட்ட குரங்கதனைப்போல வகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே. 64

மத்தளை தயிருண்டானு மலர்மிசையவனுந்தேடிப்
பித்தளைகொண்டபோதும் வெளிப்படாப்பிரானேயிங்குச்
செய்த்தளைகூறவந்த சேந்தனைவேந்தனிட்ட
கைத் ? தளைநீக்கியென்முற் காட்டுவென்காட்டுளானே. ()

தாயாருக்குத்

தகனகிரியை செய்கையிற்பாடிய

வெண்பா.

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
¶ பையலென்றபோதே பரிந்தெடுத்துச்-செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி. 1

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
யந்திபகலாச் சிவனை யாதரித்துத்-தொந்தி
சரியச்சுமந்து பெற்ற தாயார்தமக்கோ
வெரியத் தழன்மூட்டு வேன் 2

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து-முட்டச்
சிறகிலிட்டுக காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன். 3

---

* பூ-பூமி. ! ஆப்பு-முளை. ? தளை-விலங்கு ¶ பையல்-ஆண்குழந்தை.

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்துவளர்த் தெடுத்துத் தாழாமே-யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
? மெய்யிலே தீமூட்டு வேன். 4

அரிசியோநானிடுவே னாத்தா டனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாம-லுருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானேயெனவழைத்த வாய்க்கு. 5

அள்ளியிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமன்-மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு. 6

விருத்தம்.

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே. 7

வெண்பா.

வெகுதே தீயதனில் வெந்துபொடி சாம்ப
லாகுதே பாவியே னையகோ * மாகக்
குருவி பறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை. 8

வெந்தாளோ சோணகிரி வித்தகா நினபதத்தில்
வந்தாளோ வென்னை மறந்தாளோ-சந்ததமு
மெனையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய். 9

வீற்றிருந்தா ளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள்-பாற்றெளிக்க

? மெய்-உடம்பு. * மாகம்-ஆகாசம்.

வெல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காம
லெல்லாஞ் சிவமயமே யாம். 10

### வெளிப்பட்டபின் பாடியது.

மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேட
லென்று விடியுமெனக் கென்கோவே-நன்றி
* கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து. 11

சிற்றம் பலமுஞ் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே-நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சங்
கறந்திடத்தை நாடுதே கண். 12

தோடவிழும் பூங்கோதைத் தோகையுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேரிரு-நாடிநீ
யென்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேனு
னுன்னை நினைத்தா லுதை. 13

வாசற்படிகடந்து வாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லை யண்ணலே யாசைதனைப்
பட்டிறந்த காலமெலாம் போது பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல். 14

கண்டங்கரியதாங் கண்மூன் றுடையதா
மண்டலத்தைப்போல வழங்கியதாங்-தொண்ட
ருடலுருகத் தித்திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு. 15

! ஓடுவிழுந்து சீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தை யானறிந்து கொண்டேன் 0 கடுவருந்து
தேவாதிதேவன் றிருவொற்றி யூர்த்தெருவிற்
போவாரடியிற் பொடி. 1

* கருதார்-பகைவர். !ஓடு-ஓர்வகைக்கட்டி. 0 கடு-விஷம்

வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்களெல்லாங் கணநாதர்-பூவுலகி
லீதுசிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ
ரோதுந் திருவொற்றி யூர். 17

* நச்சரவம் பூண்டானை நன்றாய்த்தொழுவதுவு
மிச்சையிலேதானங் கிருப்பதுவும்-பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும் வந்துதிருவாயிலிலே
தூங்குவதுந் தானேசுகம். 18

இருக்கவிடந்தேடி யென்பசிக்கேயன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்-பெருக்க
வழைத்தாலும் போகே னரனே யென்றேக
மிளைத்தாலும் போகே னினி. 19

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே யுடலைச்
சுட்டுவிடப்போகின்றார் சுற்றத்தார்-பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனை யேற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னே னதுவே சுகம். 20

ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே-மேவியசீர்
வித்தாரமுங்கடம்பும் வேண்டாமடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி. 21

ஆரூர ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றூரூர்கடோறு முழலுவீர்-நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்காணீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர் 22

எத்தனையு ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்க
ளெத்தனைபே ரிட்டழைக்க வேனென்றே-னித்த
மெனக்குக் களையாற்றா யேகம்பா கம்பா
வுனக்குத் திருவிளையாட் டோ.

* நச்சுவிஷம்.

மண்ணுந் தணலாற வானும்புகையார
வெண்ணரிய தாயு மிளைப்பாறப்-பண்ணுமயன்
கையாறவு மடியேன் கலாறவுங் கண்பா
ரையா திருவை யாறு. 24

இப்பிறப்பை நம்பி யிருப்பையோ நெஞ்சமே
வைப்பிருக்கவாயின் மனையிருக்கச்-சொப்பனம்போல்
விக்கிப்புற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு. 25

மேலுமிருக்க விரும்பினையோ வெள்விடையோன்
சீலமறிந்திலையே சித்தியே-கால்கைக்குக்
கொட்டையிட்டுமெத்தையிட்டு குத்திமொத்தப்பட்டவுடல்
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு. 26

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே-வன்கழுக்க
டத்தித்தத் திச்சட்டை தட்டிக்கட்டிப்புட்டுக்
கத்திக்குத் தித்தின்னக் கண்டு. 27

இன்னம்பிறக்க விசைவையே நெஞ்சமே
மன்னரிவ ரென்றிருந்து வாழ்ந்தவரை-முன்ன
மெரிந்தகட்டை மீதி லினைக்கோ வணத்தை
யுரிந்துருட்டிப் போட்டதுகண்டு. 28

முதற்சங் கமுதூட்டு மொய்குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங்-கடைச்சங்க
மாம்போததூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம். 29

பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
யையரேயென்று யறஞ்செய்யாய்-வெய்ய
சினமேயொழியாய் திருவெழுத்தைந்தாய்
மனமே யுனக்கென்ன மாண்பு. 30

* எருவாய்க்கிருவிரண்டுமே லேறுண் டிருக்குங்
? வருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்-திருவாரூர்த்
தேரோடும்வீதியிலே செத்துக் கிடைக்கின்றாய
நீரோடும் ! தாரைக்கா நீ. 31

மாதாவுடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
0 வேதாவுங் கைசலித்து விட்டானே-நாதா
() விருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கா. 32

† அத்திமுக வெறும்பீ றானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந் தளிக்குந் தேசிகா-மெத்தப்
பசிக்குதையா பாவியென் பாழ்வயிற்றைப் பற்றி
விசிக்குதையா காரோண ரே. 33

எத்தனைநாள் கூடியெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டின்ப தல்லவோ-வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் || கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப் போமே. 34

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறியீ-ரெச்சிறனை
யுய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படும்பின்
சித்த நிராமய மாமே. 35

§ காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுன் கடைவாய் படுமுன்னே-மேல்விழுந்தே
யுற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு 36

---

* எருவாய்-குதம் ? கருவாய்-குய்யம், ! தாரை-வழி
0 வேதா-பிரமன். () இழுப்பையூர்-ஓர்திருப்பதி. † அத்தி-
யானை. || கங்குல்-இரவு. § காலன்-யமன்.

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொட்டமுலை
யெத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்-நித்தநித்தம்
பொய்யடாபேசும் புவியின் மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய். 37

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணிநெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே-பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்க்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான். 38

எத்தொழிலைச் செய்தாலு மேதவஸ்தைப் பட்டாலு
முத்தர்மனமிருக்கு மோனத்தே-வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதி* மன நீர்க்குடத்தே தான். 39

மாலைப் பொழுதில் 0 நறுமஞ்சளரைத்தேகுளித்து
வேலை மினுக்கிட்டு விழித்திருந்து-சூலாகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானாலென்செய்வாள் பின். 40

வான்றேடுமறையேயோ மறைதேடும் பொருளேயோ
வூன்றேடுமுயிரேயோ வுயிர்தேடு-முணர்வேயோ
தான்றேடநான்றேடச் சகமெலாந்தனைத்தேட
நான்றேடி நான்காண நானாரோநானாரோ. 41

பட்டணத்தார் வெண்பா

முற்றுப் பெற்றது.

---

* தாதி-வேலைக்காரி. 0 நறுமஞ்சள் பரிமளமுள்ளமஞ்சள்

# உடற்கூற்றுவண்ணம்.

தனதனதான தனதனதான
　　தந்ததனந்தன தானதனந்த
தனதனதனந்த தனனதனந்த
　　தானனதானன தானனதந்த—
　　தந்ததனதான தனதானனு.

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
　　ஊறுசுரோணித மீதுகலந்து—

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து
புகுந்துதிரண்டு பதுமவரும்பு கபடமிதென்று
　　பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—

உருவமுமாகி யுயிர்வளமாத மொன்பதுமொன்று
நிறைந்துமடந்தை யுதரமகன்று புவியில்வழுந்து
　　யோகமும்வாரமு நாளுமறிந்து—

மகளிர்கள்சேனை தாவணையாடை மண்படவுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
　　யோரறிவீரறி வாகிவளர்ந்து—

ஒளிநகையூற விதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
　　வாவிரு போவென நாமம்விளம்ப—

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
　　தேடியபாலரொ டோடிநடந்து—

அஞ்சுவயதாகி விளையாடியே (1/4)

உயர்தருஞான குருவுபதேச முந்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
　　வாழ்பதினாறு பிராயமும்வந்து—

மயிர்முடிகோதி யறுபதுநீல வண்டமிர் தண்டொடை
கொண்டைபுனைந்து மணிபோனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—

மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டு
மருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

மனதுபொருமலவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து

செங்கையினிலோர் தடியுமாகியே. (½)

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—

துயில்வருநேரமிருமல்பொருது தொண்டையினெஞ்சு
முலர்ந்துவறண்டு துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு—

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து—

தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லைந்துமருண்டு திடமுமலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதரவேதனைநொந்து—

மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகணடமு
மென்றுதெளிந்து இனியெனகண்டமினியெனதொந்த
மேதிவாழ்நி லாதினி நின்ற—

கடன்முறைபேசி மெனவுரைநாவு றங்கிவிழுந்துகை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலு சுவாசமுநின்று—

நெஞ்சுதடுமாறி வருநேரமே. (¾)

வளர்பிறைபோல வெயிறுமுரோம முஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும்விஞ்சு மனதுமிரணட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து—

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும்வந்து
குனிந்தழுநொந்து மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து—

பழையவர்காணு மெனுமயலார்கள பஞ்சுபறந்தி—
நின்றவர்பந்த ரிடுமென வந்து பறையிடமுந—
வேபிணம்வேக விசாரியுமென்று—

பலரையுமேவி முடியவந்தாமி ருந்தரவங்கழு
வுஞ்சிலரென்று பணிதுகிலெ ரங்கல் காரமணிந்து
பாவகமேசெயது நாறுமுடம்பை—

வரிசைகெடாம லெடுமெனவோடி வந்தனமைந்த-
குனிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மாணிடவாழ்வென வாழ்வெனநொந்து—

விறகிடைமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்து
முறிந்துநிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை—

நம்புமடியேனை யினியாளுமே. (1)



உ

சிவமயம்.

# திருவள்ளுவர் ஞானம்.

காபபு-விருத்தம்.

அண்டபிண்டம்நிறைந்துநின்ற வயன்மால்போற்றி
யகண்டபரிபூரணத்தி னருளைப்போற்றி
மண்டலஞ்சூழிரவிமதி சுடரைப்போற்றி
மதுரதமிழோதுமகத் தியனைப்போறறி
எண்டிசையும்புகழுமெந்தன் குருவைப்போற்றி
யிடைகலையின்சுழிமுனையின கமலம்போற்றி
குண்டலிக்குளமர்ந்துநின்ற குகனைப்போற்றி
குருமுனியின்தாளிணை யெப்போதும்போற்றி

அன்னையெனுங் கெர்ப்பமதில் வந்தமதிலேயிருந்
து, நன்னயமாய்ப் பத்துதிங்கள் நாளகத்திலேயிரு
ந்தேன், என்னென்ன அதிசயங்கா ணிவ்வுலகிலே
யமைத்து, உன்னிதமெல்லா மமைத்தே நுண்ணமை
யிதுகாண்கிலரே. 1

அம்புவியிலேயுதித்து ஆய்ந்துமரிபாஷைதன்னை
வம்புலகத்தார்வசிய மாயகைபிடித்தேபிரிந்து
கும்பிதனிலேயுமூன்று குண்டலிதனை பொறகமலம்
கம்பியிருந்தேசிலநாள ரகசியத்தைக் காண்கிலனே.

அண்டரண்டவான்பவியு மாகமத்தினுட்பொருளும்
கண்டிதமாயான்விளங்குங் காயபதிலேயறியும்
வண்டரெனையீசனென்று வாறுதனையேயொழித்தே
ன், விண்டரகசியந்தனை விளக்கமதுகாண்கிலரே.

வையமதிலேயுதிக்கு மாண்டர்களேயுங்களுயிர்
மெய்யன்றிருந்தசைவு வெளிப்படுவதென்னவிதம்
அய்யமில்லாவாழ்ந்துலகி லாண்மையசபூண்டமதி
பொய்யலுமிவ்வாழ்கையது போகுஞ்சுடுகாடுளதே.

வீடானமூலச் சுழிநாதவீட்டில் விளங்கும்விந்து
நீடாழிலோகந் தழைத்துப்பெருகி நினறிலகுங் [ன
தேடாதழித்த பொருளானபொகிஷந் தேடியென்
காடானநாடு சுடுகாடுஞ்சேர்வதுங் கண்டிலரே. 5

எழுவகைத்தோற்றமும் நால்வகையோனியிலேயெ
தியுனும், பொழியச்சுரோணிதம் நாதவிந்துட் பொ
ருள்போதகத்தால், கழியக்கழியகடலுயிர் தேய்பி
றைகண்டுமிருந், தழியப்பெருந்தறை யெனுளிருந்
து மனித்தியமே. 6

என்னுளிருந்தென்ன முன்னுளனுப்படி யிந்தவுடல்
தன்னுலழிவதுந் தானறியாதென தந்தைவிதி
உன்னுலழிவது முடலுயிர்காய மொழிவதுங்காண்
டன்னுளனுப்படி கண்டுமிருந்தறி யாதவரே. 7

யோனிக்குளாசை யொழியாதனித்திய முங்களுயிர், தேனிக்குளின்பஞ் சுகாதீதமோவருஞ் சிற்றின்பத்தில, ஊனாற்றுகாய முடலற்றுப்போம் பொழுதொன்றறியா, ஈனர்க்குசசொற்கஞ் சுடுகாடொழிய இனியில்லையே. 8

இந்தவுடல்காய மிறந்துவிடுமிவ்வுலகில்
வந்தவழிதானறியா வாழ்க்கையோ-இந்தவுடல்
அற்பக்குழியதனி லரவமிருப்பதெனும்
கற்பகத்தையாண்டிடுமோ காட்சி. 9

ஞானமறிந்தோர்க்கு நமனில்லைநாள்தோறும்
பானமதையுண்டு பசியாறல்-ஞானமது
கண்டாலுடலுயிருங் காயம்வலுவாகும்
உண்டாலமிர்தரச முண். 10

சுழியறியார்க்கென்ன சுகமறியார்க்கென்னகுரு[யா
வழியறியார்க்கென்னவெய்தும் வாறுகாண்-சுழியறி
மூலமறிந்தவ்வழியில் முத்தியடையார்க்குநமன்
கானவர்க்கேமரணங் காண். 11

வேதமறைஞான மெய்யுணர்வதாகில்
நாதனருளால்பதவி நாடுமோ-வேதமறை
நாலுபொருளுண்ணைது நற்பொருளின்வாரறிய
பாலுமதுநெய்யெனவும் பார். 12

முதலிருந்தவூழ்வினையை முப்பாழைச்சுட்டுமனம்
பதராமலுமதியாமல் பாடுபட்டேன்-முதலிருந்த
நல்வினையுந்தீவினையு நாடாமலும்பறந்து
வல்வினையைப்போக்கிவிட்டேன் வாறு. 13

காயசித்தியாலெனது கர்மவினைபோக்கியபின
மாயசித்திமூலசுழி வாய்க்குமே-காயசித்தி
மூலப்புளியதனுல் முதல்தீட்சையாச்சுதினி
காலமென்னரெண்டாண்டில் காண். 14

நல்லும்பின்வாறு கறித்தறியா துண்டுமனு
வல்வினைக்குள்ளாகி மரணமானார்-கல்லுப்பு
வெள்ளைக்கல்லுப்பு வெகுவிதமாய்வந்தாலும்
உள்ளமதிலுண்டென்று உண். 15

என்றுமிந்துப்பு எண்சாணுடலிருக்க
கண்டுமறியாதென்ன காரணமோ-என்றுமதி
வாரியமுரியதை வன்னிவிட்டுக்காச்சியபின்
வீரியமாயா னுணரு மெய். 16

உப்பின்கசடுதான் ஊறலதுமாறினதால்
சூப்புசுன்னமாவதற்கு முன்பேர்-உப்பதனால்
கற்பாந்தங்கோடி காயமிதுவழுத்து
செற்பாயும்வாசியினால் தேகம். 17

அஞ்சுபஞ்சபூத மறிந்தாலனித்தியம்போம்
அஞ்சுவசப்படுவ தாண்டதனில்-அஞ்சும்
கண்டறிவோர்ஞானக் காட்சிமதினினைவு
மீண்டறியலாமே விதி. 18

எண்சாணுதேக மெடுத்தாலென்னுண்டையே
பெண்சாரல்நீக்கிப் பேரின்பம்-ஏன்காண்
தேகமொழியாமல் சித்திபெருஞானம்
யோகசித்திபூசைவிதி யுண்மை. 19

திருவள்ளுவர்ஞானம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருவெண்காடரென்கிற

பட்டினத்துப் பிள்ளையார்

# முதல்வன் முறையீடு.

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

மூலமறியேன் முடியுமுடிவறியேன்
ஞாலத்துட்பட்டதுயர் நாடகடக்குதடா. ௧

அறியாமையாமலத்தா லறிவுமுநற்கெட்டனடா
பிரியாவினைப்பயனாற் பித்துபிடித்தனடா. ௨

தனுவாதியநான்குந் தானாய்மயங்கினண்டா
மனுவாதிசகதி வலையிலகப்பட்டனடா. ௩

மாமாயையென்னும் வனத்திலலைகிறண்டா
தாமாயுலகனைத்துந் தாதுகலங்கிறண்டா. ௪

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

மண்ணாசைபட்டேனே மண்ணுண்டுபோட்டதடா
பொன்னாசைபெண்ணாசை போகேனேயென்குதே

மக்கள்சுற்றத்தாசை மறக்கேனேயென்குதே
திக்கரசாமாசையது தீரேனேயென்குதே. ௫

வித்தைகற்குமாசையது விட்டொழியேனென்குதே
சித்துகற்குமாசை சிதையேனென்குதே.

மந்திரத்திலாசை மறக்கேனேயென்குதே
சுந்திரத்திலாசை துறக்கேனேயென்குதே. 8

கட்டுவர்க்கத்தாசை கழலேனேயென்குதே
கெட்டுதனிலாசை சிதையேனேயென்குதே. 9

மாற்றுஞ்சலவை மறக்கேனேயென்குதே
சோற்றுக்குழியுமின்னுந் தூரனேயென்குதே 10

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

ஐம்புலனு மடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந் தேறேனேயென்குதே. 11

காமக்குரோதங் கடக்கேனேயென்குதே
நாமேயாசென்று நாடோறுமெண்ணுதே. 12

அச்சுமாங்கார மடங்கேனேயென்குதே
கைச்சுமின்னுமானங் கழலேனேயென்குதே. 13

நீர்க்குமிழியாமுடலை நித்தியமாயெண்ணுதே
ஆர்க்குமுயராசை யழியேனேயென்குதே. 14

கண்ணுக்குக்கண்ணெதிரே கட்டையில்வேகக்கண்டு
மண்ணுந்திரமா யிருப்போமென்றெண்ணுதே. 15

அநித்தியத்தைநித்தியமென் றுதரவாயெண்ணுதே
தனித்திருக்கேனென்குதே தனைமறக்கேனென்குதே.

நரகக்குழியுமின்னுநான்புகிப்பேனென்குதே
உரகப்படத்தல்கு லுனைக்கெடுப்பேனென்குதே. 17

குரும்பைமுலையுங் குடிகுடிப்பேனென்குதே
அரும்புவிழியுமெந்த னுவியுன்பேன்னென்குதே. ()

யூதருருக்கொண்டு மறலிவஞ்சமெண்ணுதே
ஆதரவுமற்றிங் கரக்காயுருகிறண்டா. 19

கந்தனையீன்றருளும் கன்னிவனநாதா
எந்தவிதத்தினு னேறிப்படருவண்டா. 20

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

புல்லாகிப்பூண்டாய்ப் புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க் கழிந்தநாள்போதாதோ. 21

கிரியாய்க்கீடமாய்க் கெட்டநாள்போதாதோ
நீரியாயூர்வனவாய் நின்றநாள்போதாதோ. 22

பூதமொடுதேவருமாய்ப் போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய் வீழ்ந்தநாள்போதாதோ.

அன்னைவயிற்றி லழிந்தநாள்போதாதோ
மன்னவனாய்வாழ்ந்து மரித்தநாள்போதாதோ. 24

தாயாகித்தாரமாய்த் தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப்புருடனுமாய்ச் சென்றநாள்போதாதோ.

நோயுண்ணவேமெலிந்து நொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப் பிறந்தநாள்போதாதோ. ()

ஊனவுடல்கூன்குருடா யுற்றநாள்போதாதோ
ஈனப்பொசிப்பி லிளைத்தநாள்போதாதோ. 27

பட்டகளையும் பரதவிப்பும்போதாதோ
கெட்டநாள்கெட்டனென்றுகேளாதும்போதாதோ

நில்லாமைக்கேயழுது நின்றநாள்போதாதோ
எல்லாருமென்பார மெடுத்தநாள்போதாதோ. 29

காமன்கணையாற் கடைபட்டல்போதாதோ
ஏமன்கரத்தா லடியுண்டல்போதாதோ. 30

நான்முகன்பட்டோலை நறுக்குண்டல்போதாதோ
தேன்றுளபத்தானேமி தேக்குண்டல்போதாதோ.

உருத்திரனார்சங்காரத் துற்றநாள்போதாதோ
வருத்தமறிந்தையிலை வாவெனறழைத்தையிலை. 32

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

பிறப்பைத்தவிர்த்தையிலை பின்னைக் கொண்டையிலை, இறப்பைத்தவிர்த்தையிலை யென்னென்றுகேட்டயிலை. 33

பாசமெரித்தையிலை பரதவிப்பைத்தீர்த்தையிலை
பூசியநீற்றைப் புனையென்றளித்தையிலை. 34

அடிமையென்றுசொன்னயிலை [illegible]க்குமணிதந்தையிலை
விடுமுலகம்போக்கியுனறன் வேடமளித்தையிலை. 35

உன்னிலழைத்தையிலை யொன்றாகிக்கொண்டையிலை
நின்னடியார்கூட்டத்தி னீயழைத்துவைத்தயிலை. ()

ஓங்குபரத்து ளொளித்தவடியார்க்கடியான்
ஈங்கோரடியா னெமக்கென் றுரைத்தையிலை. 37

நாமந்தரித்தையிலை நாவொழியநின்றையிலை
சேமவருளிலெனைச் சிந்தித்தழைத்தையிலை. 38

முத்தியளித்தையிலை மோனங்கொடுத்தையிலை
யித்தியளித்தையிலை சீராட்டிக்கொண்டையிலை. ()

தவிப்பைத்தவிர்த்தையிலை தானாக்கிக்கொண்டையிலை, அவிப்பரியத்தீயாமென் னாசைத்தவிர்த்தையிலை.

நின்றநிலையி னிறுத்தியெனைவைத்தையிலை
துன்றுங்கரணமொடு தொக்கழியப்பார்த்தையிலை.

கட்டவுலகக்காட்சிக் கட்டொழியப்பார்த்தையிலை
கிட்டையிலேநில்லென்றுநீ நிறுத்திக்கொண்டையிலை

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கடைக்கனருள்தாடா கன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக் கிட்டிவரப்பாரேடா. 43

காதல்தணியேனே கண்டுமகிழேனே
காதல்தவிரேனே சங்கடந்தான்தீரேனே. 44

உன்னைத்துதியேனே வூர்நாடிவாரேனே
பொன்னடியைப்பாரேனே பூத்துநில்லேனே 45

ஓங்காரபொற்சிலம்பி னுல்லாசம்பாரேனே
பாங்கான தண்டை பலபணியும்பாரேனே 46

வீரகண்டாமணியூன் வெற்றிதனைப்பாரேனே
சூரர்கண்டுபோற்றுமந்தச் சுந்தரத்தைப்பாரேனே

இடையில்புலித்தோ லிருந்தகலம்பாரேனே
விடையில்லெழுந்தருளும் வெற்றிதனைப்பாரேனே.

ஆனையுரிபோர்த்த வழகுதனைப்பாரேனே
மானைப்பிடித்தேந்து மலர்க்கரத்தைப்பாரேனே ()

மாண்டார்தலைபூண்ட மாரழகைப் பாரேனே
ஆண்டார்நமக்கென் றறைந்துதிரியேனே. 50

கண்டங்கருத்துநின்ற காரணத்தைப் பாரேனே
தொண்டர்குழுவினின்ற தோற்றமதைப்பாரேனே()

அருள் பழுத்தமாமதியா மாநநத்தைப் பாரேனே
திருநயனச்சடையொளிருஞ் செழுங் கொழுமைப்
பாரேனே. 52

செங்குமினின்றுண்டம்வளர் சிங்காரம்பாரேனே
அங்களியை வென்ற வதரத்தைப்பாரேனே 53

முல்லைநிலவெறிக்கு மூரலொளிபாரேனே
அல்லார்புருவத் தழகுதனைப்பாரேனே. 54

மகரங்கிடந்தொளிரும் வண்மைதனைப்பாரேனோ
சிகரமுடியழகுஞ் செஞ்சடையும்பாரேனோ. 55

கங்கையொடு திங்கணின்ற காட்சிதனைப்பாரேனோ
பொங்கரவைத்தான்சடையில் பூண்டவிதபாரேனோ

சரக்கொன்றைபூத்த சடைக்காட்டைப்பாரேனோ
எருக்கறுகூமத்தையணி யேகாந்தம்பாரேனோ. 57

கொக்கிறகுசூடிநின்ற கொண்டாட்டம்பாரேனோ
அக்கினியை யேந்திநின்ற வாநந்தம்பாரேனோ 58

தூக்கியகாலுந் துடியடியும்பாரேனோ
தாக்குமுயலகன்மேற் றாண்டவத்தைப்பாரேனோ.()

வீசுகரமும் விகசிதமும்பாரேனோ
ஆசையளிக்கு மபயகரம்பாரேனோ. 60

அரிபிரமர் போற்ற வமரர்சயசயெனப்
பெரியம்மைபாகம்வளர் பேரழகைப்பாரேனோ 61

சுந்தரநீற்றின் சொகுசுதனைப்பாரேனோ
சுந்திரசேகரனைத் தயவுசெய்தால்பாரேனோ 62

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கெட்டநாள்கெட்டாலுங் கிருபையினியாராடே
பட்டநாள்பட்டாலும் பதமெனக்கிட்டாதோ. 63

நற்பருவமாக்குமந்த நாளெனக்குக்கிட்டாதோ
சூப்பருவமுங்கழன்ற வேதாந்தங்கிட்டாதோ. 64

வாக்கிறந்துநின்ற மவுனமதுகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத் தற்சுத்தி கிட்டாதோ. 65

வெந்துயரைதீர்க்குமந்த வெட்டவெளி கிட்டாதோ
சிந்தையுந்தீர்க்குமந்தத் தேறலதுகிட்டாதோ. 66

ஆனவடியார்க் கடிமைகொள்ளகிட்டாதோ
ஊனமறவென்னை யுணர்த்துவித்தல்கிட்டாதோ. ()

என்னென்று சொலலுவண்டா வென்குருவேயே
ளடா, பின்னையெங்கு நீயல்லாற்பிறிதிலலையே. ()

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

அன்னவிகாரமது வற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிகாரந் தொலைந்தவிடங்கிட்டாதோ. ()

உலகவிகார மொழிந்தவிடங்கிட்டாதோ
மலக்குழுவின்மின்னார் வசியாதுங்கிட்டாதோ. ()

ஒப்புவமைபற்றோ டொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமொட்டாத்தெளிந்தவிடங்கிட்டாதோ

வாக்குமனாதீத வகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவேநின் றுளிணைக்கேயான்போற்றி

பட்டினத்தார் முதல்வன் முறையீடு
முற்றிற்று.

---

பட்டினத்துப்பிள்ளையார்

# அருட்புலம்பல்.

ஐங்கரனைத் தெண்டனிட்டே
னருளடைய வேண்டுமென்று
தங்காமல் வந்தொருவன்
றற்சொரூபங் காட்டியெனைக்

கொள்ளைப்பிறப்பறுக்கக்கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்க காரணமாய்வந்தாண்டி.

ஆகாரமோராறு மைம்பத்தோரக்ஷரமும்
சூதானகோட்டையெல்லாஞ் சுட்டானறிசறவே.

மெத்தவிகாரம் விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந் தலைகெட்டுவந்ததடி.

என்னோடுடன்பிறந்தா லெல்லாரும்பட்டார்கள்
தன்னந்தனியே தனித்திருக்கமாட்டேண்டி.

எல்லாரும்பட்டகளை மென்றுதொலையுமடி
சொல்லியழுதாற் றுயரமெனக்காறுமடி.

மண்முதலாமைம்பூத மாண்டுவிழக்கண்டேண்டி, வி
ண்முதலாமைம்பொறிகள்வெந்துவிழக்கண்டேண்டி

நீர்க்காப்புலன்களைந்து நீறுகவெந்ததடி
வாக்காதியைவரையு மாண்டுவிழக்கண்டேண்டி.

மனக்கரணமத்தனையும் வகைவகையேமட்டழிய!
இனக்கரணத்தோடே யெரிந்துவிழக்கண்டேண்டி

ஆத்துமதத்துவங்கள் அடுக்கழியவெந்ததடி
போற்றும்வகையெப்படியோ போதமிழந்தாளே.

வித்தியாதத்துவங்கள் வெந்துவிழக்கண்டேண்டி
சுத்தவித்தைதயைந்தினையுஞ் சுட்டான்றுரிசறவே

மூன்றுவகைக்கிளையு முப்பத்தறுவரையும்
கான்றுவிழச்சுட்டுக் கருவேரறுத்தாண்டி.

குருவாகிவந்தானே குலமறுக்கவந்தானே
உருவாகிவந்தானே வுருவழிக்கவந்தானே.

கேடுவருமென்றறியேன் கெடுமதிகண்டோற்றுமல்
பாடுவருமெனறறியேன் பதியாண்டிருந்தேண்டி.

எல்லாரும்பட்டகளை மின்னவிடமென்றறியேன்
பொலலாங்குதீர்க்கும் பொறியிலியைக்கண்டேண்டி

உட்கோட்டைக்குள்ளிருந்தா ரொக்கமடிந்தார்கள், அக்கோட்டைகுள்ளிருந்தா ரறுபதுபேர் பட்டார்கள்.

ஓக்கமடிந்ததடி யூடுருவவெந்ததடி
கற்கோட்டையெல்லாம் கரிக்கோட்டையாச்சுதடி

தொண்ணூற்றறுவரையுஞ் சுட்டான்றரிசறவே
கண்ணீறுபட்டதடி கருவேரறுத்தாண்டி.

ஓங்காரங்கெட்டதடி வுள்ளதெல்லாம்போச்சுதடி
ஆங்காரங்கெட்டதடி யடியோடறுத்தாண்டி.

தாரையாங்குடிலைமுதல் தட்டுருவவந்ததடி
இரையுமனத்திடும்பை யெல்லாமறுத்தாண்டி.

முன்னைவினையெல்லாம் முழுதாமறுத்தாண்டி
தன்னையறியவே தாளொருத்தியானேண்டி.

என்னைநானறியவே யிருவினையுமீடழித்து
தன்னையறியத தலமெனக்குச்சொன்னாண்டி.

தன்னையறிந்தேண்டி தனிக்குமரியானேண்டி
தன்னந்தனியே தானிருக்கும்பக்குவமோ.

வீட்டிலொருவரில்லை வெட்டவெளியானேனண்டி
காட்டுக்கெரித்தநிலா கனவாச்சேகண்ட தெல்லாம்

நகையாரோகண்டவர்கள் நாட்டுக்குப்பட்டல்லவோ
பகையாரோகண்டவர்கள் பார்த்தாருக்கேச்சலவோ

இன்நிலமைகண்டாண்டி யெங்குமிருந்தாண்டி
கன்னியழித்தான்டி கற்பகைக்குலைத்தாண்டி.

கற்புகுலைத்தமையும் கருவேரறுத்தமையும்
பொற்புகுலைத்தமையும் பேதமிழந்தமையும்

என்னவினைவருமோ வின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொல்லெல்லால் பலித்ததடிசோர்வறவே.

கங்குல்பகலற்றிடத்தே காட்டக்கொடுத்தாண்டி
பங்கமழித்தாண்டி பார்த்தானைப்பார்த்திருந்தேன்

சாதியிற்கூட்டுவரோ சாத்திரத்திற்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லா முள்ளபடியாச்சுதடி.

என்னகுற்றஞ்செய்தேனோ எல்லாருங்காணாமல்
அன்னைசுற்றமெல்லா மறியாரோவம்புவியில்.

கொன்றுரைதின்றேனோ தின்றுரைகொன்றேனோ
எண்ணுறதெல்லாமெண்ணு மிச்சைமறந்தேனோ.

சாதியிற்கூட்டுவரோ சமயத்தோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிடமாச்சுதடி.

கண்டார்க்குப்பெண்ணலவோ காணார்க்குகாமமடி
உண்டார்களுண்டதெலா மூணல்லாதுண்பர்களோ.

கொண்டார்கள்கொண்டதெல்லாங் கொள்ளாதா
ர்கொள்ளுவரோ; விண்டவர்கள்கண்டவரோ கண்ட
வர்கள் விண்டவரோ.

பண்டாயநான்மறைகள் பாடும்பரிசலவோ [தோ.
தொண்டாயதொண்டருளந் தோற்றியெடுங்கும

ஓதவரிதோ வொருவருணர்வரிதோ
பேதமறவெங்கும் விளங்கும்பெருமையன்காண்.

வாக்குமனமுங் கடந்தமனோலயங்காண்
நோக்கவரியவன்கா ணுண்ணிய நுண்ணியன்காண்.

சொல்லிக்கடங்காவாகாசன் சொல்லிறந்துநின்றவன்
கல்லுளிருந்ததனைவெளிபோனின்றவன்காண [காண்

சூட்டிறந்தபாழதனிற்சுகித்திருக்கச்சொன்னவனகா
ஏட்டிலெழுத்தோ எழுதிவனை கைபிழையோ.[ண்

சும்மாவிருக்கவைத்தான் சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதனை வடையவிழுங்கினண்டி

பார்த்தவிடமெல்லாம் பரமாகக்கண்டேண்டி
கோத்தநிலைகுலைத்த கொள்கையறியேண்டி.

மஞ்சனமாட்டி மலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறுப்பாழேனே னின்றநிலைகாணேண்டி

பாடிப்படித்திருந்தும் பன்மலர்கள் சாத்தாமல்
ஓடித்திரியாம லுருக்கெட்டுவிட்டேனடி.

மாணிக்கத்துள்ளொளிபோல் மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார் பேசாப்பெருமையின்காண்

அன்றுமுதலின் றளவு மறிபாப்பருவமதில்
என்றுபெரருவா யிருந்ததிராமய்யன் காண்.

சித்தவிகாரத்தாலே சின்மயனைக்காணுமல்
புத்திகலங்கிப் புகுந்தேன்பொறிவழியே.

பத்தியறியாமற் பாழிற்கவிழ்ந்தேனடி
ஓத்தவிடநித்திரையென் றொத்துமிருந்தேனடி.

செத்தாரையொத்தேனடி சிந்தைதெளிந்தேனடி
மற்றொருமில்லையடி மறுமாற்றங்காணேனடி.

கல்வியல்லகேள்வியல்ல கையாட்டுங்காரணங்காண்
எல்லையளவற்றதடி யெங்குநிறைந்ததடி.

வாசாமகோசரத்தை மருவியிடங்கொண்டாண்டி
ஆசாசமில்லாண்டி யறிவுக்கறிவாண்டி.

பத்துதிசைக்கு மடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்கு மிடைவிடாதேகமடி.

திக்திக்கவூறுமடி சித்தமுடையர்ர்க்குப்
பத்திக்கடலுட் பதித்தபரஞ்சோதியடி

உள்ளுணர்வாம்நின்றவர்த முணர்வுக்குணர்வாண்டி
எள்ளளவுமுள்ளத்திலே யேறிக்குறையாண்டி.

தூருந்தலையுமிலான் றோற்றமொடுக்கமிலான்
ஆருமறியாம லகண்டமாய்நின்றாண்டி.

எத்தனையோவண்டத் திருந்தவர்களெத்தனைபேர்
அத்தனை பேருண்டாலும் அணுவுங்குறையாண்டி.

வாக்குமனமும் வடிவுமிலாவான் பொருள்காண்
போக்கும்வரவுமிலான் பொருவரியபூரணன்காண்.

காட்சிக்கெளியான்காண் கண்டாலுங்காணுன்கா ண்,மாட்சிமனம்வைத்தாற்கு மாணிக்கத்துள்ளொளி காண்.

வாழ்த்தியவனை வழிபாட்டால்மன்னுயிர்கள்
தோற்றவரியான்காண்சொல்லிறந்தசோதியன்காண்

ஐயமறுத்தவனை யாராய்வாருண்டானல்
வையகத்தேவந்து மலர்பாதம்வைத்திடுவான்.

அணுவுக்குமேருவுக்கு மகம்புறமாய்நின்றான்காண்
கணுமுற்றுஞானக் கரும்பின்றெளிவான்காண்

எந்நாளுமிந்நாளு மிப்படியாயப்படியாய், சொன் னுலுங் கேளான்காண் சோத்திரத்திற் கொள்ளான் காண்.

ஆத்தாளுக்காத்தாளா மப்பனுக்குமப்பனுமாம் [ண்
கோத்தாற்குத்கோத்த நிலைகொண்ட குணக்கடல்கா

இப்போபுதிதோடி யெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போ தருளறிவுந்தந்தாண்டி.

பற்றற்றார்பற்ருகப் பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டி கூடியிருந்தாண்டி.

வெட்டவெளியிலெனை மேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடி பார்த்திருந்தாரெல்லோரும்.

வாள்வானவாழ்வெனக்கு வந்ததடிவாழாமல்
தாழாமற்ருழ்ந்தேண்டி சற்றுங்குறையாமல்.

பொய்யானவாழ்வெனக்குப்போதுமெனக்காணே ண்டி, மெய்யானவாழ்வெனக்குவெறும்பாழாய்விட் டதடி.

கன்னியழைத்ததனைக் கண்ணாரக்கண்டேண்டி
என்னியல்புநானறியே னீதென்னமாயமடி.

சொல்லாலேசொல்லுதற்குச் சொல்லவாயில்லையடி
எல்லாருங்கண்டிருந்து மிப்போதறியார்கள்.

கண்மாயமிட்டாண்டி கருத்துமிழந்தேனடி
யுண்மாயமிட்டவனை யுருவழியக்கண்டேனடி

என்னசொல்லப்போரேனோ னிந்தவதிசயத்தை
கன்னியிலங்குமுகு காய்த்ததடிகண்ணரை.

ஆர்ந்தவிடமத்தனையு மருளாயிருக்குமடி
சார்ந்தவிடமெல்லாஞ் சவ்வாதுமணக்குதடி.

இந்தமுனமெங்கு மியற்கைமணமென்றறிந்து
அந்தச்சுகாதீதத் தருட் கடலில்மூழ்கினனண்டி.

இரும்பிதுறைநீர்போலவெனை விழுங்கிக்கொண்டாண்டி, அரும்பினுறைவாசனைபோ லன்றேயிருந்தாண்டி.

அக்கினிகற்பூரத்தைய றவிழுங்கிச்கொண்டாப்போல்
மக்கினம்பட்டுள்ளே மருவியிருந்தாண்டி.

கடல்நீருமாறும்போற் கலந்துகரைகாணேனண்டி
உடலுமுயிரும்போ லுட்கலந்துநின்றாண்டி.

பொன்னுமுரைமாற்றமபோற் பொருவரிய பூரணன்காண், மன்னுமனுபூதியடிமாணிக்கத்துள்ளொளிபோல்.

கங்குகரையில்லாண்டி கரைகாணக்கப்பலடி
எங்குமளவில்லாண்டி யேகமாய்நின்றாண்டி

தீவகம்போலென்னைச்சேர்ந்தபரசின்மயன்காண் (ண்
பாவமொன்றில்லாண்டி பார்த்திடமெல்லாம்பரங்க

உள்ளார்க்குமுள்ளாண்டி யூருமில்லாப்பேருமில்லா
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி. (ன்

அப்பிறப்புக்கெல்லாம் அருளாயமர்ந்தாண்டி
இப்பிறப்பில்வந்தானிவ னுகுமெய்ப்பொருள்காண்

நீரொளிபோலெங்கு நிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும் பரந்தபராபரன்காண்.

நூலா லுணர்வரிய நுண்மையினி நுண்மையன்காண்
பாலாறுசர்க்கரைபோற் பரந்தபரிபூரணன் காண்.

உளக்கண்ணுக்கல்லா தூன்கண்ணுலோருமதோ
விளக்குச்சுடரொளிபோல் மேவியிருந்தாண்டி.

கல்லுளிருந்த கனலொளிபோற்காரணமாய்
புல்லியிருந்தும் பொருவரிய பூரணன்காண்.

பொற்பூவும்வாசனைபோற் போதம்பிறந்தார்க்குக்
கற்பூவும் வாசனைபோற் காணுக்க வருக்கு.

மைக்குழம்புமுத்தும்போல் மருவிமறவாதவர்க்குத்
கைக்குட்கனியாகுங் கருவறுத்தகாரணர்க்கும்.

பளிங்கிற்பவளபடி பற்றற்றபாவலர்க்குக் (ரோ
கிளிஞ்சிலைவெள்ளியென்பார் கிட்டாதார்கிட்டுவ

ஏட்டுக்கடங்காண்டி யெழுத்திற்பிறவாண்டி
நாட்டிநரிகளெல்லா நற்புரவிசெய்தாண்டி.

பஞ்சப்பிரளயத்து மிஞ்சியிருப்பாண்டி
நஞ்சிபொதிமிடற்று னயனத்தழல்விழியான்.

அகங்காக்கும்புறங்காக்கும் அளவிலாவண்டமுதல்
செகங்காக்குங்காணுத் திசைபத்துகாக்குமடி.

பேசாப்பிரமமடி பேச்சிறந்தபேரொளிகாண்
ஆசாபாசங்கள் அணுகாதபேரொளிகாண்.

தேசமிறந்தவன்காண் திசையிறந்ததெளிகடல்காண்
ஊசிமுனையூன்ற வில்லா வுறுபொருள்காண்

சிப்பியில்முத்தொளிகாண் சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிளொளிபோ லமர்ந்தவரும் பொருள் காண்

ஆலாவிருட்சமடி யளவிலாச்சாகையடி
மேலாம்பதங்கள்விசும்பூடுருவுமெய்ப்பொருள்காண்

வங்கிஷமெல்லாங்கடந்து வருவாமலர்ப்பதங்காண்
அங்கிஷமாயெங்கும் ஆய்ந்தவரும்பொருள்காண்

நாமநட்டமானதடி நவிலவிட மில்லையடி [ண்
காமனைக்கண்ணுலெரிக்கக் கநல்விழித்தகாரணங்கா

கொட்டாதசெம்பொன்னடி குளியாத்தரளமடி
ஈட்டாதகொம்பிலடி யீப்புகாததேனமுதம்.

காணிப்பொன்னுணியுடன் கல்லுரைமாத்தின்ன
தென்றே, ஆணியுடன்கூட்டி யடங்கலிட்டுக்கொண்
டாண்டி.

அளவிறந்தவண்டத்தா ரத்தனைபேருண்டாலும்
பிளவளவுந்தான்சற்றும் பேசாப்பிரமமடி.

சன்னெஞ்சினுள்ளே கழுநீலப்பூத்தாப்போல்
என்னெஞ்சினுள்ளே யிணையடிகள்வைத்தாண்டி.

வேதப்புரளியடி விரைந்தோடியும்மறியார்
காதற்றஞானமடி காண்பார்கருத்துடையோர்.

பாசவினையைப் படப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைக்காட்டியடி நில்லென்றுசொன்னாண்டி.

ஔரயொடுங்குமிட மோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும பிரமமிதுமென்றாண்டி.

சின்மயநன்னோங்காற் சிற்சுரூபங்காட்டியெனை
தன்மயமாயாக்கியே தானவனாய்நின்றாண்டி.

தானென்னைப்பார்த்தாண்டி தன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவண்டி நவிலவிடமில்லையடி.

இன்றிருந்துநாளைக் கிறக்கிறபேரெல்லோரும்
என்றுபரிபூரணத்தி லினிதிருக்கச்சொன்னாண்டி.

பார்க்கிலெளிதலவோ பற்றற்றபற்றலவோ
ஆர்க்குமிடங்காட்ட வெளிதனில்வந்தாண்டி.

இத்தனைகாலமடி யிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடி யிரும்பிலுறைநீரானேன்.

எக்காலம்பட்டதடி யிறந்துபிறந்ததெல்லாம்
அக்காலமெல்லாம் அழுந்தினேனுனரகில்.

காலங்கழித்ததடி கர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவு நாமநட்டமாச்சுதடி.

மூப்பாழுக்கப்பால் முதற்பாழ்முழுமுதலாய்
இப்போதுவநதான்காண் எனைவிழுஙகிகொண்டான்

பாலின்கணெய்யிருந்தாற் போலப்பரஞ்சோதி
ஆலிங்கனஞ்செய் தறவிழுங்கிக்கொண்டாண்டி.

தெத்தபடமானேனடி தீயி நம்பினீரானேன்
ஒத்தட்டசித்திரையென் றேதுமுணர்வறிந்தேன்.

ஒப்புவமையுமற் றேதவரிதாயபொருள்
இப்பூவினிற்குருவே யென்னவந்தோன்றுள்வாழி

ஓப்பாரிசொல்லிடினு முவமைபிழைத்திடினும்[வே
மூப்பாழுங்கற்றுணர்நம்தோர்முன்னோர்பொறுத்தரு

அருட்புலம்பல்

முற்றிற்று.

---

## பட்டினத்துப்பிள்ளையார்

# இறந்தகாலத்திரங்கல்.

வார்த்தைத்திறமில்லா மனிதருக்குப்புன்சொல்லாஞ்
சாத்திரங்கள்சொல்லிச் சதிரிழந்துகெட்டேனே.

மெத்தமெத்தச்சொல்வாக்கில் வேறுமருளடுத்துத்
தத்தித்தலைகீழாய்த் தானடந்தும்கெட்டேனே.

வழக்கந்தலங்களினு மண்பெண்பொன்னாசையினும்
பழக்கந்தவிராமற் பதியிழந்துகெட்டேனே.

ஆணிபொருந்தா மரும்பூமியத்தனையுங்
காணிநமதென்று கனம்பேசிக்கெட்டேனே.

ஆசாரமில்லா; வாசருடன்கூடிப்
பாசாங்குபேசிப் பதியிழந்துகெட்டேனே.

குருமார்க்கமில்லாக் குருடருடன்கூடிக்
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்துகெட்டேனே.

ஆலமருந்து மரன்பெருமையெண்ணமல் [னே.
பாலர்பெண்டீர்மெய்யென்று பதியிழந்துகெட்டே

பிணவாசமுற்ற பெருங்காயமெய்யென்று
பணவாசையாலே பதியிழந்துகெட்டேனே

கண்டபுலவர் கனக்கவேதான்புகழ
உண்டஉடம்பெல்லா முப்பரித்துக்கெட்டேனே.

எண்ணிறந்தசென்ம மெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழையாமற் பதியிழந்துகெட்டேனே.

சிற்றெறும்புசற்றுந் தீண்டப்பொறாவுடம்பை
உற்றருக்கவுஞ்சுடவு மொப்பித்துமாண்டேனே.

தன்னுடம்புதானே தனக்குப்பகையாமென்
றெண்ணுமுணர்வில்லாமலின்பமென்றுமாண்டேனே

தோலெலும்புமாங்கிஷமுந் தொல்லன்னத்தால்வரு
மேலெலும்புசுற்றமென்று விருப்பாய்மாண்டேனே.

போக்குவரத்தும் பொருள்வரத்துங்காணமல்
வாக்கழிவுசொல்லி மனமறுக்கிக்கெட்டேனே.

இறந்தகாலத்திரங்கல்.

முற்றிற்று.

சிவமயம்.

பட்டினத்துப்பிள்ளையார்.

# நெஞ்சொடு புலம்பல்.

மண்காட்டிப்பொன்காட்டி மாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்ற தேசிகனைப்போற்றாமல்
கண்காட்டும்வேசியர்தங் கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போ லலைந்தனையேநெஞ்சமே. 1

புட்பாசனவணையிற் பொற்பட்டுமெத்தையின்மேல்
ஒப்பாவணிந்தபணி யோடாணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தி யியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்ற முயங்கிலையேநெஞ்சமே. 2

முப்பாழும்பாழாய் முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பாணின் றாடுமதைப்போற்றாமல்
இப்பாழாம்வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன்றீயாம
ல், துப்பாழாய்வந்தவினை சூழ்ந்தனையேநெஞ்சமே.

அன்னம்பகிர்ந்திங் கலைந்தோர்க்குதவிசெயுஞ்
சென்மமெடுத்துஞ் சிவனருளைப்போற்றாமல்
பொன்னுமனையுமெழிற் பூவையரும்வாழ்வுமிவை
இன்னுஞ்சதமாக வெண்ணினையேநெஞ்சமே. 4

முற்றொடர்பிற்செய்த முறையால்வந்தசெல்வம்
இற்றைநாட்பெற்றோமென் றெண்ணுதேபாழ்மனமே
அற்றவர்க்குமீயாம லரன்பூசையோராமல்
கற்றவர்க்குமீயாமற் கண்மறந்துவிட்டனையே. 5

மாணிக்கமுத்து வயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்கா தனத்திலிருந்தாலும்
காணித்துடலைநமன் கட்டியேகைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே. 6

கற்கட்டுமோதிரநற் கடுக்கனரைஞாண்பூண்டு
திக்கெட்டும்போற்ற திசைக்கொருத்தரானாலும்
பற்கிட்டவேமனுயிர் பந்தாடும்வேளையிலே
கைச்சட்டங்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே. 7

முன்னநீசெய்ததவ முப்பாலுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகளும் பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச் சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற் காட்சியற்றாய்நெஞ்சமே.

பையரவம்பூண்ட பரமர்திருடுபொற்றாளைத்
துய்யமலர்பரித்துத் தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங் காலிலிடும்பாடகமும்
மெய்யென்றிறுமாந்து விட்டனையேநெஞ்சமே. 9

மாதுக்கொருபாகம் வைத்தவரன்பொற்றாளைப்
போதுக்கொருபோதும் போற்றிவருந்தாமல்
வாதுக்குத்தேடியிந்த மண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீ யெண்ணினையேநெஞ்சமே. 10

அஞ்சருலைப்போற்றி பைந்துபுலனைத்துறக்க
நெஞ்சேயுனக்கு நினைவுநான்சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கி மறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தானைச் சிந்தைசெய்வாய்நெஞ்சமே. 11

அந்புதமாயிந்தவுட லாவியடங்குமுன்னே
சற்குருவைப்போற்றித் தவம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன் உடைமைபெருவாழ்வைநம்பிச்
சற்பத்தின்வாயிற் றவளைபோலானேனே. 12

உற்றாரார்பெற்றாரா ருடன்பிறப்பார்பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென் மாளும்போதுதவுவரோ
கற்றாவிழந்தவிளங் கன்றதுபோலேயுருகிச்
சிற்றாகிச்சிற்றின்பஞ் சேர்ந்தனையேநெஞ்சமே. 13

வீடிருக்கத்தாயிருக்க வேண்டுமனையாளிருக்கப்
பீடிருக்கவூணிருக்கப் பிள்ளைகளுந்தாமிருக்க
மாடிருக்கக்கன்றிருக்க வைத்தபொருளிருக்க
கூடிருக்கநீபோன கோலமென்னகோலமே. 14

சந்தனமுங்குங்குமமுஞ் சாந்தும்பரிமளமும்
விந்தைகளாய்ப்பூசிமிகு வேடிக்கையொய்யாரக்
கந்தமலர்சூடுகின்ற கன்னியருந்தாமிருக்க
எந்தவகைபோனாயென் றெண்ணிலையேநெஞ்சமே.

காற்றுத்துருத்தி கடியவினைக்குள்ளான
ஊற்றைச்சடலத்தை யுண்டென்றிறுமாந்து
பாத்திரங்கியன்னம் பசித்தோருக்கியாமல்
ஆற்றுவெள்ளம்போல் வளர்வினையேநெஞ்சமே. 16

நீர்க்குமிழிவாழ்வைநம்பிநிச்சயமென்றேயெண்ணிப்
பாக்களவாமன்னம் பசித்தோர்க்களியாமல்
போக்குளெமதூதன் பிடித்திழுக்கும்போது
ஆர்ப்படுவரென்று யறந்திலையேநெஞ்சமே. 17

சின்னஞ்சிறுநுதலாள் செய்தபலவினையாள்
முன்னந்தமார்பில் முளைத்தசிலந்திவிம்மி
வன்னர்தளதளப்ப மயங்கிவலைக்குள்ளாகி
அன்னம்பகிர்ந்துண்ண வறிந்திலையேநெஞ்சமே. 18

ஓட்டைத்துருத்தியை யுடையும்புழுக்கூட்டை
ஆட்டுஞ்சிவசித்த ரருளைமிகப்போற்றியே
வீட்டைத்திறந்து வெளியையொளியாலமைத்துக்
காட்டும்பொருளிதென்று கருதிலையேநெஞ்சமே. ()

ஊன்பொதிந்தகாய முளைந்தபுழுக்கூட்டைத்
தான்சுமந்ததல்லாய்நீ சற்குருவைப்போற்றாமல்
கான்பரந்தவெள்ளங் கரைபுரளக்கண்டேகி
மீன்பறந்தாற்போலே விகாரமுற்றாய்நெஞ்சமே. 20

உடக்கையொருத்தி யுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்று சார்ந்தங்கிறுமாந்தே
உடக்கைதகர்த்தே யுயிரையமன் கொள்ளையிலே
யடக்கமாய்வைத்தபொரு ளங்குவரமாட்டார்தே. ()

தித்திக்குந்தேனைத் தெவிட்டாததெள்ளமுதே
முத்திக்குவித்தான முப்பாழைப்போற்றாமல்
பற்றிப்பிடித்தயமன் பாசத்தாற்கட்டும்வண்ணம்
சுற்றியிருக்கும்வினை சூழந்தனையே நெஞ்சமே. 22

அஞ்செழுத்தாவெட்டெழுத்தாயைம்பத்தோரட்ச
ரமாய்,பிஞ்செழுத்தாய்நின்ற பெருமானைப் போற்ற
மல், வஞ்சகமாயுற்றமுலை மாதர்வலைக்குள்ளாகி
பஞ்சரித்துத்தேடிப் பாழுக்கிறைத்தோமே. 23

அக்கருகுகொன்றைதும்பை யம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத் தொழுதுவணங்காமல்[பாய்
மக்கள்பெண்டீர்சுற்றமுடன் வாழ்வைமிகநம்பியன்
எக்காலமுழுண்டேன் றெண்ணினையேநெஞ்சமே ()

ஆண்டகுருவி னருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாய வீட்டுவழிபாராமல்
பூண்டகுழன் மாதுநல்லார் பொய்மாய்கைக்குள்ளா
கி, தூண்டிலகப்பட்டுத் துடிகெண்டையானேனே

ஏணிப்பழுவா மிருளையருத்தாளமுற்றும்
பேணித்தொழுங்கயிலை பேறுபெறமாட்டாமல்
காணவரும்பொருளாய்க் கண்கலக்கப்பட்டடியேன்
ஆணியற்றமாமரம்போ லாகினனேனெஞ்சமே. 26

கோத்துப்பிரகாசங் கொண்டுருகியண்டமெல்லாம்
காத்தபடியே கயிலாயஞ்சேராமல்

வேற்றுருவப்பட்டடியேன் வெள்ளம்போ லுள்ளுரு
கி, ஏற்றுங்கழுவி லிருந்தபிணமானேனே. 27

நிலைவிட்டுடலையுயிர் நீங்கியகலுமுன்னே
சிலைதொட்டவேடனெச்சிற் றின்றானைச்சேராமல்
வலைபட்டுழலுகின்ற மான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற் றட்டழிந்தாய் நெஞ்சமே.

முடிக்குமயிர்ப்பொல்லா முழிக்குரம்பையின்னோரின்
இடைக்குநடைக்குமிதங் கொண்டவார்த்தைசொல்
லி, அடிக்கொண்டைதில்லை வனத்தயனேநாயனே
யேன், விடைக்கையிழந்த மிருகமதுவானேனே. ()

பூவாணர்போற்றும் புகழ்மதுரைச்சொக்கரது
சீர்பாதம்போற்றிச் சிவலோகஞ்சேராமல்
தாவாரந்தோறுந் தலைபுகுந்தநாய்போல
ஆகாதநெஞ்சமே யலைந்துதிரிந்தாயே. 30

பத்தெட்டாயீரைந்தாய்ப் பதின்மூன்றிரண்டொன்
றாய், ஒத்திட்டுநின்றதோரோவியத்தைப்போற்றாமல்
தெத்திட்டுநின்ற திரிகண்ணிக்குள்ளாகி
வித்திட்டாய்நெஞ்சே விடவுமறியாயே. 31

அஞ்சுமுருவாகி யையமூன்றுமெட்டுமொன்றாய்
மிஞ்சியிருந்த விளக்கொளியைப்போற்றாமல்
பஞ்சிலிடுவன்னியைப்போற் பற்றிப்பிடியாமல்[னே
நஞ்சுண்டகெண்டையைப்போல்நானலைந்துகெட்டே

ஊனமுடனே யுடையும்புழுக்கூட்டை
மானமுடனேசுமந்து மண்ணுலகில்மாளாமல்
ஆனதொருபஞ்சவர்க ளாண்டிருந்ததேசம்விட்டுப்
போனதுபோலேநாம் போய்பிழைத்தோ மில்லையே

ஊறையிறைக்கின்ற வுப்பிருந்தபாண்டத்தை
நாறாமல்நாறிநழுவும் புழுக்கூட்டை

வீறும்புரத்தை விரும்புகின்றதெப்படியென்
றூறுதநாட்டி லகன்றிருந்தேனில்லையே. 84

அரியுவரிதேடி யறியாமொருமுதலை
பரிவுடனேபோற்றும் பரஞ்சுடரைப்போற்றமல்
கரியபெருவாழ்வைநம்பிக் காமத்தழுந்திய
அரிவாயிற்பட்ட கரியதுபோலானேனே. 35

தந்திரத்தையுன்னீர் தவத்தைமிகநிறுத்தி
மந்திரத்தையுன்னி மயங்கித்தடுமாறி
விந்துருகிநாதமா மேலொளியைக்காணமல்
அந்தரத்தேகோலெறிந்த அந்தகன்போலானேனே.

விலையாகிப்பர்ணனுக்கு வீறடிமைபட்டதுபின்
சிலையார்கைவேடனெச்சிற் றின்றானைப்போற்றமல்
அலைவாய்த்துரும்பதுபோ லாணுவத்தினாலழுங்கி
யுலைவாய்மெழுகதுபோ லுருகினையேநெஞ்சமே. ()

நெஞ்சொடுபுலம்பல்

முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

# பூரணமாலை.

மூலத்துதித் தெழுந்த முக்கோணச்சக்கரத்துள
வாலதனைப்போற்றமல் மதிமறந்தேன் பூரணமே. 1
உந்திகமலத் துதித்துநின்றபிர்மாவைச்
சந்தித்துக்காணமற் றட்டழிந்தேன் பூரணமே. 2

நாவிக்கமல நடுநெடுமால்காணாமல்
ஆவிகெட்டுயானு மறிவழிந்தேன்பூரணமே. 3

உருத்திரனை யிருதயத்தி லுண்மையுடன்பாராமல்
கருத்தழிந்துநாளுங் கலங்கினேன் பூரணமே. 4

விசுத்திமயேசுரனை விழிதிறந்துபாராமல்
பசித்துருகிநெஞ்சும் பதறினேன் பூரணமே. 5

நெற்றிவிழியுடைய நிர்மலசதாசிவத்தைப்
புத்தியுடன்பாராமற் பொறியழிந்தேன் பூரணமே ()

நாதவிந்து தன்னை நயமுடனே பாராமல்
போதமயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே. 7

உச்சிவெளியை யுறுதியுடன் பாராமல்
அச்சமுடனானு மறிவழிந்தேன் பூரணமே. 8

மூக்குமுனையை முழித்திருந்துபாராமல்
ஆக்கைகெட்டுநானு மறிவழிந்தேன் பூரணமே. 9

இடைபிங்கலையி னியல்பறியமாட்டாமல்
தடையுடனேயானுந் தயங்கினேன் பூரணமே. 10

ஊனுக்குணின் றுலாவினதைக்காணாமல்
நானென்றிருந்து நலமழிந்தேன் பூரணமே. 11

மெய்வாழ்வைநம்பி விரும்பிமிகவாழாமல்
பொய்வாழ்வைநம்பிப் புலம்பினேன் பூரணமே. 12

பெண்டுபிள்ளை தந்தைதாய் பிறவியுடன்சுற்றமிவை
யுண்டென் றுநம்பி யுடலழிந்தேன் பூரணமே. 13

தண்டிகைப்பல்லாக்குடனே சகலசம்பத்துகளும்
உண்டென் றுநம்பி யுணர்வழிந்தேன் பூரணமே. 14

இந்தவுடலுயிரை யெப்போதுந்தான்சதமாய்ப்
பந்தமுற்றுநானும் பதமழிந்தேன்பூரணமே. 15

மாதர்பிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்து
போதமயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே. 16

சரிதை கிரியாயோகந் தான் ஞானம்பாராமல்
பிரிதிகண்டடதியதுபோற் பயனழிந்தேன் பூரணமே

மண்பெண்பொன்னாசை மயக்கத்திலேவிழுந்து
கண்கெட்டமாடதுபோற் கலங்கினேன் பூரணமே.

தனிமுதலைப்பார்த்துத் தனித்திருந்துவாழாமல்
அநியாயமாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன் பூரணமே

ஈராறுதன் குலைக்கு ளிருந்து கூத்தாடினதை
ஆராய்ந்துபாராம லறிவழிந்தேன் பூரணமே. 20

வாசிதனைப்பார்த்து மகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்து கால்லுத்தேன் பூரணமே.

கருவிகடொண்ணூற்றாறிற் கலந்துவிளையாடினதை
இருவிழியாற்பாராம லீட்டழிந்தேன் பூரணமே. 22

உடலுக்குள் நீநின் றுலாவினதைக்காணாமல்
கடமலைதோறுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

எத்தேசகாலமுநா மிறவாதிருப்பமென்று
உற்றுனைத்தான பாராம லுருவழிந்தேன் பூரணமே

எத்தனை தாய் தந்தை யிவர்களிடத்தேயிருந்து
பித்தனையானும் பிறந்திருந்தேன் பூரணமே. 25

பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன் யானுமுன்
றன், பெற்றுனைத்தாள் தந்து புகலருள்வாய்பூரண

உற்றாரழுதலுத்தாருறன் முறையார்கட்டலுத்தார்
பெற்றலுத்தாள் தாயார் பிறந்தலுத்தேன் பூரணமே

பிரமன் படைத்தலுற்றான் பிறந்திறந்துநானலுத்தே
ன், உரமுடையவக்கினிதா னுண்டலுத்தான் பூரண

என்பத்துநான்குநூறாயிரஞ் செனனமுஞ்செனித்து
புண்பட்டுநானும் புலம்பினேன் பூரணமே. 29

என்னையறியாம லெனக்குள்ளேநீயிருக்க
உன்னையறியாம லுடலிழந்தேன் பூரணமே. 30

கருவாயுருவாய்க் கலந்துலகெலாநீயாய்
அருவாகிநின்ற தறிகிலேன்பூரணமே. 31

செம்பொற்கமலத் திருவடியைப்போற்றுமல்
பம்பைகொட்டவாடும் பசாசானேன்பூரணமே. 32

எனக்குள்ளேநீயிருக்க வுனக்குள்ளேநானிருக்க
மனக்கவலைதீர வரமருள்வாய்பூரணமே 33

எழுவகைத் தோற்றத் திருந்துவிளையாடினதைப்
பழுதறவேபாராமற் பயனழிந்தேன்பூரணமே. 34

சாதிபேதங்கள் தனையறியமாட்டால்
வாதனை யால்நின்று மயங்கினேன் பூரணமே. 35

குலமொன்றாய்நீபடைத்த குறியையறியாமல்யான்
மலபாண்டத்துள்ளிருந்து மயங்கினேன்பூரணமே.

அண்டபிண்டமெல்லா மணுவுக்கணுவாகநீ
கொண்டவடிவின் குறிப்பறியேன்பூரணமே. 37

சகஸ்திரத்தின் மேலிருக்குஞ் சற்குருவை போற்றும
லகத்தினுடவாணுவத்தா லறிவழிந்தேன்பூரணமே.

ஐந்து பொறியை யடக்கியுனைப் போற்றுமல்
நைந்துருகிநெஞ்சே நடுங்கினேன்பூரணமே. 39

என்னைத்திருக்கூத்தா லிப்படிநீயாட்டுவித்தாய்
உன்னையறியா துடலழிந்தேன் பூரணமே. 40

நரம்புதசைதோலெலும்பு நாற்றத்துக்குள்ளிருந்த
வரம்பறியமாட்டாமல் மயங்கினேன்பூரணமே. 41

சிலந்தியுடைநூல்போற் சிவசெந்துக் குள்ளிருந்த
நலந்தனைத்தான் பாராமல நலமழிந்தேன் பூரணமே.

குருவாய்ப்பரமாகிக் குடிலைசத்திநாதவிந்தாய்
அருவாயுருவான தறிகிலேன் பூரணமே 43

ஒளியாய்க்கதிர்மதியா யுள்ளிருளாயக்கினியாய்
வெளியாகிநின்ற வியனறியேன் பூரணமே. 44

இடையாகியபிங்கலையா யெழுந்த சுழிமுனையாய்
உடலுயிராய்நீயிருந்த வுளவறியேன்பூரணமே.

மூலவித்தாய் நின்று முளைத்துடல்தோறும்மிருந்து
காலனைவழிக்குங் கணக்கறியேன்பூரணமே.

உள்ளும்புறம்புமா யுடலுக்குள் நீயிருந்த
தெள்ளளவுநானறியா திருக்கேதனே பூரணமே.

தாயாகித் தந்தையாய் தமர்கிளைஞர்சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலையறியேன் பூரணமே. 48

விலங்கு புள்ளூர் வனவாசம் விண்ணவர் நீர்ச்சாதிமனுக், குலங்களெழு வகையில்நின்ற குறிப்பறியேன் பூரணமே. 49

ஆணாகிப்பெண்ணா யலியாகி வேற்றுருவாய்
மாணாகிநின்ற வகையறியேன் பூரணமே. 50

வாலையாய்ப் பக்குவமாய் வளர்ந்து கிழந்தாளுகும்
பாலையாய்நின்ற பயனறியேன் பூரணமே. 51

பொய்யாய்ப்புவியாய்ப் புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்ற வியனறியேன் பூரணமே. 52

பூவாய்மணமாகிப் பொன்னாகிமத்தாகி
நாவாய்ச் சொல்லான நயமறியேன் பூரணமே 53

முதலாய்நடுவாகி முப்பொருளாய்மூன்றுலகா
யிதமாகிநின்ற வியலறியேன் பூரணமே. 54

ஊனுயுடலுயிரா யுண்ணிறைந்த கண்ணொளியாத்
தேனுய்ருசியான திறமறியேன் பூரணமே. 55

வித்தால்மரமாய் விளைந்தகனியாய்ப் பூவாய்ச்
சித்தாகிநின்ற திறமறியேன் பூரணமே. 56

ஐவகையும் பெற்றுலக வண்டபகிரண்ட மெல்லாந்
தெய்வமென நின்ற திறமறியேன் பூரணமே. 57

மனமாய்க்கனவாகி மாய்கையாயுள்ளிருந்து
நினைவாகிநின்ற நிலையறியேன் பூரணமே. 58

சத்திசிவமிரண்டாய்த் தான்முடிவி லொன்றாகிச்
சித்திரமாய்நின்ற திறமறியேன பூரணமே. 59

பொறியாய்ப்புலனாகிப் பூதபேதப்பிரிவாய்
அறிவாகிநின்ற வளவறியேன் பூரணமே. 60

வானிற் கதிர் மதியாய் வளர்ந்துபின்னொன் றானது
போல், ஊனுடலுக்குள்ளிருந்த வுயிர்ப்பறியேன்
பூரணமே. 61

பொய்யும்புலையுமிகப் பொருந்துவீண்பேசலன்றி
ஐயோவுனை உரைக்க வறிகிலேன் பூரணமே. 62

நிரந்தரமாயெங்கு நின்று விளையாடினதைப்
பரமதுவேயென்னைப் பதமறியேன் பூரணமே 63

கொல்வாய்பிறப்பிப்பாய் கூடவிருந்தேசுகிப்பாய்
செல்வாய் பிறர்க்குட் செயலறியேன் பூரணமே. 64

வாரிதியாய்வையமெல்லா மன்னுமண்டபிண்ட
மெல்லாஞ், சாரதியாய்நின்ற தலமறியேன்பூரணமே.

வித்தாய்மரமாய் வெளியாயொளியாய்நீ
சத்தாயிருந்த தரமறியேன்பூரணமே. 66

தத்துவத்தைப்பார்த்துமிகத் தன்னை யறிந்தறிவால்
உய்த்துனைத்தான்பாராம லுய்வாரோ பூரணமே.

ஒன்றாயுயிரா யுடல்தோறு நீயிருந்தும்
என்று மறியார்களேழைகள் தாம் பூரணமே. 68

நேற்றென்றுநாளையென்றுநினைப்புமறப்பாய்ப்படை
த்து, மாற்றமாய்நின்ற வளமறியேன்பூரணமே. 69

மனம்புத்திசித்தி மகிழறிவாங்காரமதாய்
நினைவழர் தலமான நிலையறியேன் பூரணமே 70

உருப்பேதமின்றி யுயர்ந்தசத்தபேதமதாய்
குருப்பேதமாய்வந்த குணமறியேன்பூரணமே. 71

சட்சமயபேதங்கள் தான்வரத் தப்பின்னுமொரு
உட்சமயமுண்டென் றறைந்தனையேபூரணமே.

முப்பத்திரண்டுருப்பாய் முனைந்துபடைத் துள்ளிரு
ந்த, செப்படிவித்தை திறமறியேன்பூரணமே. 73

என்னதான்கற்றாலென் னெப்பொருளும் பெற்றாலென், உன்னையறியாத ருய்வரோபூரணமே. 74

கற்றறிவோமென்பார் காணார்களுன்பதத்தைப்,பெ
ற்றறியார்தங்களுக்குப் பிறப்பறுமோ பூரணமே. 75

வானென்பாரண்டமென்பார் வாய்ஞ்ஞானமேபேசித்
தானென்பார்வீணர் தனையறியார்பூரணமே. 76

ஆதியென்பாரந்தமென்பா ரதற்குண்டுவாயிருந்த
சோதியென்பார்நாதத் தொழிலறியார்பூரணமே.

மூச்சென்பாருள்ளமென்பார் மோகமெனுமோட்
சமென்பார், பேச்சென்பாருன்னுடைய பேரறியார்
பூரணமே. 78

பாமென்பார்பானுவென்பார் பாழ்வெளியாய்நின்ற
வரமென்பாருன்றன் வழியறியாபூரணமே. 79

எத்தனைபேரோ வெடுத்தெடுத்துத்தானுரைத்தார்
அத்தனைபேர்க்கொன்றான தறிகிலேன்பூரணமே.

நகாரமகாரமென்பார் நடுவேசிகாரமென்பார்
வகாரயகாரமென்பர் வகையறியார்பூரணமே. 81

மகத்துலமாய்க்காம மயக்கத்துக்குள்ளிருந்து
பகுத்தறியமாட்டாமற் பயனழிந்தேன்பூரணமே.

உண்மைப்பொருளை யுகத்திருந்துபாராமற்
பெண்மயக்கத்தாலே பிறந்திருந்தேன்பூரணமே.

வாபாரவாழ்த்தி மகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காயமெடுத்து கலங்கினேன்பூரணமே. 84

சந்திரனைமேகமது தான்மறைத்தவாரதுபோற்
பந்தமுறயானுமுனைப் பார்க்கிலேன்பூரணமே. 85

செந்தாமரைத்தாளைத் தினந்தினமும்போற்றாமல்
அந்தரமாய்நின்றங் கலைந்தேநான்பூரணமே. 86

நீர்மேற்குமிழிபோல் நிலையற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணிநான் றட்டழிந்தேன்பூரணமே

நெஞ்சமுருகி நினைத்துனைத்தான்போற்றிநெடு
வஞ்சகத்தைப்போக்க வகையறியேன்பூரணமே.

எள்ளுக்குளெண்ணெய்போ லெங்குநிறைந்திருந்த
துள்ளமறியா துருகினேன்பூரணமே. 89

மாயாபிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்தே
யோயாட்ச்சனன மொழித்திலேன்பூரணமே 90

பூசையுடன்புவன போகமெனுபோக்கியத்தால்
ஆசையுற்றேனு மறிவழிந்தேன்பூரணமே. 91

படைத்துமழித்திடுவாய் பார்க்கிற்பிரமாவெழுப் பைத், தொடைத்துச் சிரஞ்சீவியாய்த் துலங்குவித் பாய்பூரணமே. 92

மந்திரமாய்ச்சாத்திரமாய் மறைநான்காய்நீயிருந்த
தந்திரத்தைநானறியத் தகுமோதான்பூரணமே.

அல்லாய்ப்பகலா யனவரதகாலமெனுஞ்
சொல்லாப்பகுத்த தொடற்பறியேன்பூரணமே

நரகஞ்சுவர்க்கமென நண்ணுமிரண்டுண்டாயும்
அரகராவென்ப தறிகிலேன்பூரணமே. 95

பாவபுண்ணியமென்னும்பகுப்பாய் படைத்தழித் தில், வாவலையுண்டாக்கிவைத்த வருளறியேன் பூர ணமே. 96

சாந்தமென்றுங் கோபமென்றுஞ் சாதிபேதங்க ளென்றும், பாந்தமென்றும் புத்தியென்றும் படைத்தனையே பூரணமே. 97

பாசமுடலாய்ப் பசுவதுவுந் தானுயிராய்
நேசமுடனீபொருளாய் நின்றனையே பூரணமே ()

ஏதிலடியா ரிரங்கியிகத்தில்வந்துன்
பாதத்தில்தாழப் பரிந்தருள்வாய் பூரணமே 99

நானேநீ நீயேநா னுமிரண்டு மொன்றானால்
தேனின் றுசியதுபோற் றெவிட்டாய்நீ பூரணமே

முடிவிலொருசூனியத்தை முடித்துநின்றுபாராமல்
அடியிலொருசூனியத்தி லலைந்தேனே பூரணமே ()

பூரணமாலைதனைப் புத்தியுடனோதினர்க்குத்
தாரணியில்ஞானந் தழைப்பிப்பாய்பூரணமே 102

பூரணமாலை முற்றிற்று.





சிவமயம்.

# சட்டமுனி ஞானம்—4.

## பூசைசெய்யுமுறை.

காணப்பாபூசைசெய்ய முறையைக்கேளு
கைமுறையாய்ச்சசுவடிவைதது பூசைசெய்வார்
பூணப்பாசிலபேர் தான் தீபம்வைத்து
புகழாகபூசைசெய்வார் பெண்ணைவைத்தும்
நாளப்பாசக்கரத்தை பூசைசெய்வார்
நம்முடையபூசையென்ன மேருபோலே
ஓதப்பாநாற்பத்து முக்கோணம்வைத்து
உத்தமனேபூசைசெய்வார் சித்தர்தானே.

தானென்றமேருவைத்தான் பூசைசெய்வார்
சாபமிட்டாலண்டரண்டம் தீயாவேகுந்

தேனென்றமேருவுக்குத் தசதீட்சைவேணுஞ்
சிறுபிள்ளையாமொருவர் தீண்டப்போகா
வானென்றமேருவைத்தான் பூசைசெய்தோர்
வாய்திரந்துஉபதேசஞ் சொன்னூறிற்
கோனென்றவாதசித்தி கெவுனசித்தி
கொள்ளையிட்டானவன்சீஷன் கூறினேனே. 2

கூடியதோர்வாலையுட மூன்றெழுத்தைக்கேளு
குறியறிந்துபூசைசெய்து பின்புகேளு
மாரியதோர்திரிபுரையி னெட்டெழுத்தைக்கேளு
மைந்தனேயிவளை நீ பூசைபண்ணு
தேறியதோர்புவனையுட வெழுத்தைக்கேளு
திறமாகபுவனையைநீ பூசைபண்ணு
ஆறியதோர்யாமளையி னூரெழுத்தைக்கேளு
யவளுடையபதம்போற்றி பூசைபண்ணே. 3

பண்ணியபின்யாமளையி னைந்தெழுத்தைக்கேளு
பண்பாகதீக்ஷையைந்து முடிந்தபின்பு
வண்ணியதோர்வாசியென்ற யோகத்துக்கு
மைந்தனேவைத்துப் பிராணயாமந்தீரும்
கண்ணியதோரித்தனையு மறிந்திருந்தாற்
காயசித்திவிக்கினங்க ளில்லையில்லை
உண்ணியதோருலகமென்ன சித்தரென்ன
வுத்தமனேவிட்டகுறை யெடுக்குங்காணே. 4

சட்டமுனி ஞானம்-4.

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

# பட்டினத்துச் சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# ஞானம் - க00.

வெண்பா.

காப்பு.

ஒண்பானநெஞ்சுக்கே ஞானத்தால்நல்லபுத்தி
வெண்பாவாய்நூறும விளம்பவே—பண்பாக
ககனமறுபதமுறுவக ககனமுகடதிர்வறுக
ககனகதிர்வேல்முருகன் காப்பு.

நெஞ்சுடனே தான்புலம்ப னீலனிறத்தாளீன்ற
குஞ்சரத்தையா தரித்துக்கும்பிட்டால்-கஞ்சமுடன்
காமமுதல்மும்மலத்தின் கட்டறுத்துஞானமுடன்
பூமிதனில்வாழ்வாரெப போதும். 1

எப்போதிறைவன் யெழுத்தைவிட்டுத்தப்புவோம்
எப்போயெழுத்தைரெண்டை யேத்துவோம்-யெப்
போதான், காமன்வலையறுப்போம் கதிரொளியைக்
கண்டுநெஞ்சே, ஏமன்வலையறுப்ப தென்று. 2

என்றும்பயமறவே யீரெழுத்தும்ஓரெழுத்தாய்
நின்றசிவ்லிங்கத்தை நெஞ்சேகேள்-உண்டுறங்கி [ண்
தேசமெல்லாம்நின்றசைந்த தியெழுத்தே லிங்கங்கா
ஆசைவிந்தேநாவெழுத்தே ஆவுடையார். 3

ஆவுடையாளோடிருந்தேன் அருளானந்தம்பிறவே
கோவுடையாள்நின்ற திணங்கூடியே-பூவுடையாள்
கட்டழகியைத்தள்ளி கடந்துபெருவெளியில்
இஷ்டமுடன் நெஞ்சே யிரு. 4

இருவினைக்குள்ளாகாதேயென்னுடைமையெண்ணாதே
பெருகினங்கொண்டு பினத்தாதே-மருவுமலக்
கள்ளமெல்லாம்விட்டு கரைந்துகரைந்துருகி
உள்ளுணர்ந்துநெஞ்சேபா றுன்றை. 5

ஒன்றுமறியாதே ஓடியலையாதே
கருவியிற்சென்றுமயங்கித் திரியாதே-நின்றலை
பிரியாதேநேடிய னெஞ்சேகொடிய
புலைவினையும்மாத்தும் பொருள். 6

பொருளுடைமைநம்பாதே பொய்வாழ்வைநத்தாதே
யிருளுறவைநம்பி யிருக்காதே-பொருளுறவு
கொண்டறிவினாலே குறித்துவெளியதனைக்
கண்டுபிடித்தேருநெஞ்சே காத்தை. 7

காத்துடலைசேர்ந்து கணவுருவைக்கண்டுவெழி
மாத்தியினிப்பிறக்க வாறுதே-யேத்தபடி

ஓடியலையாதே ஓங்காரத்துள்ளொளியை
நாடிருப்போம்மனமே நாம். 8

நானெனதென்னென்றுவினை யூடியலையாதே
தானவனேயென்று தரிக்காய்நீ-ஏன்மனமே
வீணுவல்கொள்ளாதே மேலாம்பழம்பொருளை
காணுவல்கொள்வாய் கருத்து. 9

கருத்துவேறாகாதே கண்டிடத்திலோடாதே
விரித்துப்பலவேடம் மேவாதே-பெருத்ததொரு
சஞ்சலத்தைவிட்டு சலமரிந்துகாண்மனமே
அஞ்செழுத்தாலொன்ப தடை. 10

ஒன்பதுவாய்கூட்டை யுருதியென்றுநம்பாதே
ஐம்புலனேயென் றணுகாதே-இன்பமுடன்
சிற்பரத்தினுள்ளே தெளிந்தபரமானந்தத்
துற்பொருளே மெய்யென் றுணர். 11

மெய்யுணர்ந்துபாராமல் விரிந்தகன்றுபோகாதே,
அய்யன்திருவிளையாட் டென்றறிநெஞ்சே - செய்ய
தொரு, ஆணெழுத்தும் பெண்ணெழுத்து மணுவா
கினின்றனடு, காணும்பொருளுரைக்குங் கால். 12

கல்லானநெஞ்சே கவலைக்கருத்தாகி
பொல்லாப்பவக்கடலில் போகாதே-யெல்லாம்
ஜெலக்குமிழி யென்றுநினை செம்பொன்னிம்பலத்
தை, கலக்கபரபார்த்தே கரை. 13

கரைதெரியாயின்பக் காமக்கடலில்மூழ்காதே
வரையடைந்தவாழ்வை நத்திபோகாதே-உரைபிறந்
த, ஓசைவிந்துவேமனமே உற்சபையாலரிந்து
நேசமுள்ளபாக்கியத்தி னில். 14

பாக்கியத்தைக்கண்டு பரிந்துமகிழா
தாக்குமிடிவந்தால் சலியாதே--நோக்குமே
ஒருவன்றிருவிளையாட் டென்றுணருநெஞ்சே
கருத்தாலேநின்று கருது. 15

கருதாதேமங்கையர்கள் காமவலைக்கேங்கி
உருகாதேநெஞ்சே ஒருவன்--இருகாலை
கரத்தயுந்துசேர்த்துக் கனலைக்கண்காட்டித்தினகண்
போற்றிப்பார் ஒத்தனல்ல பொன். 16

பொன்னாசைமண்ணாசை பூங்குழலாராசையென
சொன்னாசையென்றறிந்து சோர்து--யென்னாளும்
யீசனமைந்தபடி யிருந்துங்காணிம்மூன்றும்
பாசமதுநெஞ்சே பரிந்து. 17

பரிந்துதிரியாதே பார்வினைக்கு அஞ்சாதே
அருந்துருசிசிந்தித் தலையாதே--வருந்தி
நடந்துசித்திரனடியிலே ஞதமரிநெஞ்சே
உடைந்திடுமுன்னேயிருந்த உடல். 18

உடம்பழிந்துபின் மனமே ஒன்றுங்கிடையாதே
உடம்பழியுமுன்கண் டுணராத--உடம்பிற்
கருநிறத்தைசேர்ந்து கருமலைச்சிற்றற்றும்
பருகுசித்திரக்கலைமதியும் பால். 19

பாலிருக்கும்தேர்ல்தனத்தைபா ராதேமங்கையர்கள்
காலிடுக்கைநத்திக் கறையாதே--கோல்யெடுத்து
வீரமரலி வருமுன்வினைபருக்கு
பார்வழியினருளைப் பார். 20

பார்த்தவிடமெல்லாம் பரமென்றிறுமனமே
காற்றனல்மண்ணீர்வெழியாம் கண்டதெல்லாம்-மாத்
திரண்ட, ஐம்புலனிநில்லாது ஆசைகளும்நில்லாது
யென்புடனு நில்லா தினி. 21

இனியசுகஐம்புலனென் றெண்ணாதே நெஞ்சே
இனியசுக மறவாதே-- யினியசுகம்
கண்டதெல்லாமெவ்வுலகு காணாது இவ்வுலகில்
நின்றதோ நில்லாததோ. 22

நில்லாமல் ஓடுகின்ற நெஞ்சேநிலையில்லா
மெல்லாபாகையா யிருக்குங்காண்--பொல்லாக்
கருக்குழியிலேபிறந்த கன்மவினையால்
திருக்கருக்கவேணும் தினம் 23

தினந்தினைப்போதாகிலுந்தான் தீதறநில்லாமல்
வினம்பிரிந்தமான்போல் யிருந்தா--தினாதினமும்
ஓங்காரத்துள்ளொளியை யுற்றுணர்ந்துநீமனமே
ஆங்கார அச்சமற. 24

அச்சத்தால்ஐம்புலனும் ஆங்காரத்தால்மெய்ந்த
கச்சத்தானிச்சயமாய் கொள்ளாதே--மெச்சத்தான்
அண்டமெல்லாம்ஊடுருவ ஆகாசமுங்கடந்து
நின்றநிலைதான நிலை 25

நிலையறிநதுநில்லாமல் நீயாவிநெஞ்சே
அலைமதிபோலேதினமு மாளுய்--கலையறிநது
மாரனையுங்கூத்தனையும் மார்புரத்தையும்புதைத்த
வீரனையுந்தேடி விரும்பு. 26

விரும்பித்தனிதனியே மெய்யுணராதேமாய்கை
யிரும்புண்டநீர்போலே வேகும்--கரும்பதனை
தின்றாலல்லோதெரியும் நெஞ்சேதின் ஐம்புலனை
வென்றாலல்லோ வெளிச்சமாம் 27

வெளிச்சமில்லாவீடேவிளக்கேத்தினவீடே [சமற
கழிச்சிறந்தநின்றதைத்தான் கார்நெஞ்சே--வெளிச்
தொண்ணூற்றாத்தார்தத்துவமும் ஒவ்வொன்றாய்த்தோ
ன்றுங்காண், யெண்ணிவிவை காணதிரட்டு. 28

இருட்டனையமாய்கையால் யெவ்வுலகுந்தாயை
பொருட்டனையேமூடும் ஐம்புலனுள்--திருட்டுமன்
வண்டருடன்கூடாதே வாள்மனமேநாமிருவோர்
கண்டுகொள் வோம்காணு தனை. 29

காணுதனைக்கண்டால் கண்டதெல்லாங்காணுது
வீணுவல்கொண்டு அகமெலியாதே--ஞணுதே
இந்திரியத்தோடு யிணங்காதேபாவிநெஞ்சே
செஞ்சொல்மறை அக்கறத்தை தேடு. 30

தேடினலிந்து திருக்கரத்தைச்சென்றுவெழி
ஞடிஞல்நெஞ்சே நலம்பெறலாம்--வாடியே
பொல்லாப்புவிகாண் போகமதைநம்பாதே
யெல்லாம்வெயிலில் மஞ்சளே. 31

மஞ்சனையகூந்தல் மடவாரைகண்டுருகும்
பஞ்சமலநெஞ்சே பகரக்கேள்--மஞ்சள்
மயங்காணும்இந்தவுடல் மாயவாழ்வெல்லாம்
அயன்காணறித்த சூஸ்திரம். 32

சூஸ்திரத்தாலாடும் சுழிமுனையைத்தான்திறந்து
பார்த்திருந்தால்வாராது பாவமெல்லாம்--சூஸ்திரத்
தை, பாருமலேயிருந்து பாவிமனமேபிறக்க
வாருமலேயிருக்க வா. 33

வாசிதனைப்பிடித்து வன்கனலோடேசேர்த்து
சீசீயெனவே திரியாமல்--மாசி
இருளானதைச்சேர்ந்து இருந்தாயேநெஞ்சே
பொருளானதைமறந்து போடு. 34

போட்டுவிக்கும் பொல்லா புழுச்சொரியு நாய்விடக்
கே, கூட்டங்குலைந்து குலைந்திடுமுன்--காட்டித்

தாழ்வுவாறுநெஞ்சே தறுதரமாய்யெங்கும்
முறவானதை முயிர்போம் முன் 35

முன்னையனெழுத்தும் மூன்றுவினைகண்டுமூன்று
பின்னுந்தெரியிலேயோ பேய்மனமே--தன்னை
அரியாமலேயிருந்தால் அவனறிவானோமனமே
குரியானபுத்தியென்றே கொள். 36

கொள்ளைக்ககப்பட்டுக் குடிகேடேறுடிருந்து
கள்ளக்கருத்தால் கருதாதே--மெள்ளமெள்ள
ஆய்ந்தாய்ந்துபார்த்துநீ ஆறுருக்கப்பாலே
தேர்ந்தாய்ந்துபார்த்து தெளி 37

தெளிந்தநீர்பட்டமுர்தம் சேர்ந்தால்தெளியாதா
தெளிந்தநீர்காட்டா தவைபோல்--தெளிந்தால்
சகலபொருள்தோற்றம் தாழ்வுவறுணுமென்றும்
பகலிரவிலலாத பதி. 38

பதிபசுபாசங்களேயும் பற்றதிலேஊடுருவப்
பதிதனிலேதங்கிப் பவமருந்து--கதிபெறவே
வீணுமோநெஞ்சேகேள் வேதாந்தத்துட்பொருளை
காணுமலாமோ கணக்கு. 38

கணக்கரியாமாயக் கருவிகறணுதிப்
பிணக்கரியாமற்பேதை நெஞ்சே--பிணக்கம்
மரிந்தினங்கவேணும் மருளவெளியினுள்ளே
செரிந்தவிந்துதத்தைச் சேரு. 40

சேராதேமாய்கைதனை சேர்ந்துகருக்குழியை
பாறுதேநெஞ்சே பதையாதே--சீறுன
சுத்திரத்தைப்பார்த்து தினமனமேசித்திரத்தில்
சத்திரத்தைக்கொள்ளா யுகந்து. 41

உகந்துகந்துநெஞ்சமே ஒரெழுத்தினுல்
அகந்தனைபேசுத்திபண்ணி யாய்ந்து--முகந்து
குடியாமலாமோ குலவுமலமான
மிடியானதுதீர வேண்டி. 42

வேண்டுந்திரவியமும் மேலுயர்ந்து பள்ளியெல்லாம்
ஆண்டதிரைநாடு மம்பலமும்--மாண்டுபெருங்
காடுயர்ந்தாரேமனமே கண்டாயோமாயநயன்
தேடரியயீசன் செயல். 43

செயமாசரநெஞ்சே திருட்டுமலக்கோட்டை
பயமறவேவெட்டிப் பரப்பி--நயமான
வாசியினுல்சுட்டொடிக்கிமதிமயங்கக்கண்டிருப்போம், பேசியனும் பேசாமலே. 44

பேசாதஞானப் பெருமைக்கிடப்பதுதான்
ஆசாபாசங்களில்லா தார்க்கல்லேர்--கூசாமல்
தேசமெல்லாம்மூடித் திரியுருமேயமனமே
ஆசாபாசங்களும் நீயாய். 45

பாசங்களைந்து பதியிலிருந்துகொண்டு
பேசரியகாலைப் பிடித்திருக்க--நேசமுடன்
ஞமிருவருங்கூடி ஞதாந்தஞானத்தை
தாமொருவனுயிருக்கத் தங்கு. 46

தங்குநெடுவெளியில் சகலங்களுங்கடந்து
யெங்குஞன் ருஞ யிருக்காமல்--மங்கு
கருவனுயநெஞ்சே கரிக்கால தூதன்
வருவானேயென்ன வகை. 47

என்னவகைசெய்தோம் யெமதூதர்வந்தாக்கால்
பின்னையென்ன ஒட்டனேபேய்நெஞ்சே--சொன்ன
படியேகேள் தூதர்களும் பரிந்துவருமுன்னே
யடிதேடிக்கொண்டே யமர். 48

அமறும்மனம்புத்தி யாங்காரமோடுசித்தம்
அமறும்பொழுதுவேருேனர்--அமரும்
கோவென்றுரைத்தநமன் கொண்டுபோம்போதறிவு
வாவென்ருல் நெஞ்சே வராது. 49

வாராதுநெஞ்சே மயக்கம் வருமுன்னே
வேருனைதப்பிடித்து மேலேரி-பாராமல்
பொய்யிலேயில்லாதே புத்திகெடாதேயிருந்தால்
மெய்யிலேநின்றறிவோ மெய். 50

மெய்யாறுவீடுகளாய் மேலாம்பலைடவீடாய்
ஐயாறுமாறும் பருபத்தாய்--மெய்யாக
கண்டதெல்லாம்நான்காண் காணுதனைத்தேடி
கண்டுருகிநெஞ்சே கனி. 51

கனியருந்தமாட்டாமல் காயருந்துறுய்மனமே
கனிருசிபோலாகுமோ காய்தான்--யினியதுகேள்
நானும்நீயும்கனிகாண் நடுவிருந்ததேருசிகாண்
தேனும்பாலும்போல சிவன். 52

சிவதவங்களைத்தேடி சியெழுத்தையூடறுத்து
சிவதவங்களைத்தேடி சேருமல்--அபதபங்கள்
பண்ணுதேநெஞ்சேகேள் பாரவினை வந்தாக்கால்
யெண்ணுதே அஞ்சாதே யேங்கு 53

யேங்காதேநெஞ்சேகேள் யெவ்வினைகள் வந்தாலும்
யேங்காதேசத்தும் விளையாதே--தங்காமல்
கொண்டவனும்செத்தவனும் கூட்டத்தானும்வந்தால், னின்றுகுறித்துண்மையிதென் றெண் 54

யெண்ணரியநெஞ்சே யினியபால் தன்னை
அன்னந்தண்ணீர் நீக்கி யுண்ணும்--தன்னை போல்
துன் பங்களைத்து தூயவெழியூடுருவா
யின்பங்களைச்சேர்ந் திரு. 55

சேர்ந்திருவோரும்பாலும்தேனும்போலேகலந்து
வாய்ந்ததிலேயுள்ளூரிசையாகாமல் போங்காமல்
தத்திமரக்காலன் வருவானே வந்தாக்கால்
யேத்தப்படுவாநெஞ்சே யெவன். 56

எவனிருந்துநெஞ்சே யெதுப்பாறுமுண்டோ
கவனமறகின்று கருதுநல்லால்--புவனமெல்லாம்
வித்துயிரெல்லாங்கழண்டு விண்ணுடைந்து தேமன
மே, மற்றுடலையுண்குதே மண். 57

மண்ணெழுந்தும் நீர்யெழுந்தும் வாய்வெழுந்துந்
தீயெழுந்தும், விண்ணெழுந்துங்கூடி ஒருவீடாகி--தி
ண்ணரிய, மாயமெல்லா முண்டாக்கி வைத்தாண் கா
ண்நெஞ்சே, யிக்காயமெல்லாம்ஞானல் கருது 58

கருவழித்தால் வித்தையில்லாக் காரணம்போல்
நெஞ்சே, கருவழிந்து தெல்லாம்கண்டதெல்லாம்.
கருதி திரியர்தேநெஞ்சே சிவன்செபலேயல்லால்
மதியாரியில்லாக்கால் வந்து. 59

வந்துதவும் நாதாந்த வாகனைக்கண்டேவணங்கித்
தந்திரமாயச்சென்று தரியாமல்--அந்தரத்தில்
விட்டபட்டம்போலலைந்து வெவ்வினையினல்மனமே
தட்டுகெட்டுப்போகாதே காண். 60

தானந்தவமுயர்ச்சி தாடாண்மையோடுநெஞ்சே
வானம பிறநது வழிகூடி--ஞனுமதில்
நீயுமொருநிழலில் நின்றங்கிளைப்பாரி
தோயுமதிதானே துடங்கு. 61

துடங்குவினை யிருந்து சுத்தமெல்லாங்கழித்து
அடங்குமிடத்தில் அடங்காமல்--கிடந்து
பறந்தெடுத்தகுஞ்சதுபோல் பதைக்கிறுயேமனமே
அறுஞ்சுரப்புமாயின் தன்னடியில். 62

மதனசறத்தால்மனமே வையகமெல்லாமயங்கி
விதனத்துறக்கமரங்குலவலலால் வேரில்லை--மதனு
லே சத்துச் சுகதனைத்தி தானலைய வேண்டாங்
காண் மெத்தசுகத்தே வெருத்து. 63

வெருத்துவெருத்துகொண்டதுபோல் வீணிலே நெஞ்சே, பொரித்தமக்கிஞய்போல் போகாதே-குரி ததடுத்து,தேடியேவாசிதனைசேர்ந்துகலந்தபொருள் கூடினலாமோ குணம். 64

குணங்கள் பலவிதமாய் கொள்ளாதேநெஞ்சே
வணங்குங் குணமாக வந்து- இணங்கிய
மண்டலமெலாங்கடந்து மகாவீட்டைத்திறந்து
கண்டெடுத்துக்கொள்ளவோ கனம். 65

கனதனத்துமாதர் கைக்காதல்கொண்டாப்போல்
வினையருப்பாநகைக்குருகவேண்டாமோதினமனமே
சோதித்தானல்லாமல் சுபகாரியமாக
போதித்தால்கொள்விளேயோ புத்தி. 66

புத்திதரும்வித்தைதரும் பொல்லாப்பிலலாமல்நெஞ்சே, சித்திமுத்திபேரின்பம்சேர்ந்திடலாம்--நித்த நித்தம், தானந்தமானதொரு சற்குரு வோடேபழகி ஆனந்தமுண்டிருக்க லாம் 67

கால்வழி சென்று கருப்பசுக்குழிக்கிக்கீழ்
மூலமுற்றநல்வழியே மூழ்கினறி--மாலே
இருட்டருத்து போடாடமல் யென் பாவிநெஞ்சே
திருட்டு வித்தைசெய்கிருப் சென்று. 68

சென்றுசிவனடியில் சேர்ந்தபெரும்பாப்பு
ஒன்றுமிசுவாசியைத்தான் ஒட்டாமல்--நன்ருய்
நிலேயாகநில்லாமல் நீயலேகிருய்மனமே
அலேவாயில்நில்துரும்பு மால். 69

தாய்தந்தைபெண்டுபிள்ளை தானென்றிரங்கிநித்தம்
காய்பறிக்கிருயே கனியிருக்க-தாய்தந்தை
யெத்தனேபேர் பெத்தாரோயேன்மனமேநாமுந்
தான் யெத்தனேபேரை பெத்தோம் யிங்கு. 70

இங்குஅங்குமாய்மனமே யீடழியவேண்டாங்காண்
அங்கம்பொருளாய் அறிந்துகொண்டு-எங்குமெங்கு
நாமேசிவமாக நாடிஞல்ஞானமொழி
தாமேஅருளைத் தரும். 71

அருளில்லாதார்க்கு அருளறிவுதங்குமோ
அருளறிவுதானல்லோ ஆனந்தம்--அருளறிவு
தேடுவதுங்கூடுவதும் சிந்தையானந்தமுடன்
ஆடுவதும்தானறிவிஞல். 72

நாலெழுத்துஆறு நடுவெழுத்துயீரைந்து
ஓடிஞல்மூன்றி ஞெடுபதிஞலாகுமே--ஓதாய்நீ
ஓரெழுத்தைதகண்டுறங்கி உன்ஞேடுறங்கிநெஞ்சே
ஓரெழுத்திலேசென் றுறை. 73

உறைகள்த்திஞப்போல உள்ளமலங்களெல்லாம்
அரைத்திடைந்து நெஞ்சே யருதியிலே-- நித்தி
புளியம்பழத்தோடு போலிருக்கவேணும்
உடலழியும்காலங்க ளுக்கே. 74

கால்ங்கழிந்திடுமுன் கடைவாயில்பாலூறுமுன்
வேலங்கனைய விழிமடவார்--பேல
குழியில்வைத்து மாறடித்து கூப்பிடுமுன்மாய்கை
களையெடுத்துப்போடுமுன் கண்ஞல். 75

கண்ஞலேஞானம் கருதாமல் நெஞ்சேநீ எண்ணுத
மாய்கையெல்லாம்யெண்ணுகிறுய்--நன்ஞய்கேள்
பார்க்கவேணுந்தனையும் பத்திரைமாத்துத்தங்கம்
ஆக்காமல்போகாதோ உன்ஞல். 76

ஒண்ஞலேநெஞ்சமே ஊழ்வினைவந்தாலும்
எண்ணுலும்நீபாம்பின்வாய் தேரைப்போல்-முன்ஞ
அகப்பட்டுப்போகாதே ஆனந்தமெய்விளக்கு [லே
நம்பித்துனைக்குமுற்றும் நம்பு. 77

நம்பிஞன்றன்னை நடுவனையிலேயிருந்து
கும்பிடாதார்க்குங் குரையுண்டோ-நம்பி

பளிங்கொளி போல்நெஞ்சே பரந்திடலாமோயெங்
கும், மெழுகணலோடே சேருமே. 78

எமன்வருமுன்நெஞ்சே யிருவினையு மேரென்றும்
சாமநடுவதனில் சார்ந்திலெ தங்க-மனமுடனே
காலனையும்வென்றுசில காமனையும்வென்றுபின்பு
பாலிருக்கலாமதுநாம் பார். 79

பாரயனும்பாலும் பரமமருருத்திரனும்
காரணையவாரணத்தை தாண்கண்டு--சீரானமனமே
நக்கத்திடைநடுவே நற்கனகபொற்பதியில்
சொற்கனகத்தற்பதியில் தோன்றுமே. 80

தோன்றுமேயெல்லாச் சுகமுற்றதில்மனமே
தோன்றுமேஆனந்தச் சுந்தரிபின்--தோன்றுமே
அக்ஷரச்சுருக்கிரேடு அக்கரப்பெருக்கமுடன்
உச்சரித்துரைக்கிதென்ற உண்மை. 81

உண்மையிதுகாண்மனவே ஒளியிருந்த வீடதுகாண்
உண்மைசிவனிருக்கும் ஊறுகாண்-உண்மை [ள்
கருமைதங்கிஒளியெழுந்து கனத்ததந்தியுள்பதங்க
மருவுதங்கியினியுகந்த வாறு. 82

வருந்தும்பொழுதுகாண் மாயையாய்நெஞ்சே
வருந்தும்குண மாகவந்து-வருந்தும்
யிருவினை துடக்கறுத்து யெழுவகை பிறப்பறுக்கும்
கருமலத்திறுக்கறுங் காண். 83

காண்மனமேசத்திசிவம் ஒன்றுககாரணத்த்த
காண்மனமேமாலையனுங் காணாதை,-காண்மனமே
செம்பொன்னம்பலத் துள்ளோர்செழுஞ்சொலென்
மன்றுலொன்றும் அம்பலத்தில் ஆடும்நடனம். [று

நடனமதுபார்மனமே நயனத்திடைநடுவே
நடனமதுநாலாம் பதங்காணும்--நடனம்
பதிமதிவித்தாய்மனமே பலகெதிவித்தாயெனவே
அதிவிதசித்தாந்த மாடும். 85

ஆடும்பதிமனமே அம்பலத்தைசுட்டுநடனம்
ஆடும்பரமகுரு ஆனந்தம்-ஆடுகின்ற
கூற்றதனை கூற்றிற்று சுத்தபித்தனைத்தசுத்தா
சித்தநித்த நைச்சித்தத்தினுதித்து நில். 86

நில்லுநிலவறமாய் நேசமுடனே பதியில்..
நில்லுபிறவியற நீநெஞ்சே-நில்லு
கனல்மதியும்தருமிடரும் கதிரெழுந்துங் கலைமதியும்
துனலொடுசெஞ்சடைமுடியும் போற்றி. 87

போற்றித்தினமனமே பொல்லாக்குலங்கள்விட்டுக்
காத்துங்கனலுங் கருத்துஒன்றாப்-பார்த்தறிவால்
சுத்தமலபித்தையகத்து சுற்றஒழிசுற்றிலுத்து
சற்றறறித்துத்தத்திலே தங்கு. 88

தங்குநீசென்று சதாசிவத்திலேமனமே
மங்குக் கறுக்குழிகள்-வாதங்குல்
கருவும்புனலும் கதியும்கெதியும்
விதியும் திறுத்தான் வெளி. 89

வெளியில்வெளியாகி விண்ணவன்றாய்மனமே
வெளியிலொளி யாயிருக்க-வெளியிரவு
கரியுரித்துப்போற்றவனை கதிர்மதியைச்சென்றனை
கருவறுத்துப்பார்த்தாலே காண். 90

காணுமனமே கரிகாலனைவதைத்துக்
காணுமுலகமெல்லாம் காணுருவாய்-தானுவாய்
மனவிரகமான புலி மன்றுளன்றுநடனமிடும்
கனகரத்தின் செயலுற்ற பாதம். 91

பாதத்தானஞ்செழுத்தான் பரமபதத்தான் சிங்க
நாதத்தானென்றுநெஞ்சே நன்றாக-போதத்தான
ஆரணந்தானைடைந்து யண்டமெல்லாம் சுட்டதிரு
நீரணிந்துகொண்டிருப்போம் நித்தம். 92

நித்தனாய்நிர்மலனாய் நின்றுலகம்மூன்றுக்கும்
கர்த்தனாய் அஞ்செழுத்தின் காரணமாய்-பெற்ற
குருவினிருபதமுனது குளிருமனமுருகிநினை
தருமனதுபற்றமனமே தான். 93

தானவனே ஆகாட்டால் சண்டாளன் இழுத்தடிப்பான், தானவனுமங்கே தரிக்கொட்டான்-மான்மனையார், கலங்கும்கல்வியிலே கருத்தித்தான் கொடுப்பான், முதல்நினைக்கும்படிதேரு நெஞ்சே. 94

நெஞ்சேயுனக்கு நிலவரமாய் சொன்னதெல்லாம்
நெஞ்சேபென்சொல்லென்றும் நிகழாதே-நெஞ்சே
கருத்திச்சைபிச்சை தள்ளி கருத்தொன்றுசெப்பித்
தாய், கருத்தக்கோசலத்தள்ளி கருத்துள். 95

உள்ளிருந்து நெஞ்சே உலாவஞ்சிவகுருவை
வெள்ளெருக்கன் பூச்சூடும் மேனியனே-உள்ளே
மனமுருகப்பார்த்தான் மலைசிலையாய்ச்சென்றுனை
உனதறிவால் பார்த்து ஓது. 96

ஓதுநீநெஞ்சேகேள் ஓரெழுத்துமந்திரத்தால்
ஆதியாய்எங்கும் அமர்ந்தானை-ஓதினள்
கடியகொடுமிடியுகளும்; கடியகொடுமணியகலும்
கடியவிண்டணுகாமல் காற்கும். 97

காற்குந்தினமனமே கடியப்பிறப்பறுத்து
கார்க்கும்பலபிணிநோய் காட்டாமற்-நோக்கும்
யன்றமிதைபகல்வெளிபில் வளருதமதனை
யுந்தியுணைரதி வாழ். 98

வாழுநீநெஞ்சே மயங்கித்திரியாதே
யேமெழுத்தாக்கம்பா லிருப்பானை-யேழை
வருத்தநதிர்த்தனன் பன்மனசந்தில் தங்கி
பரித்தரத்தினக்கரணத்தே பணி. 99

பணிந்துதுதிமனமே பல்லுயிர்கட் கெல்லாம்
அணுவிலணுவாக யிருந்தானை-துணிவாய்
பிறவாதிருக்கவும் பேரின்பவாழ்முதலை
திறமாகநம்புநெஞ்சே செலுத்து. 100

பட்டினத்தார் ஞானம்-100

முற்றிற்று.

உ

சிவமயம்.

## பட்டினத்தடிகள் சீடராகிய

# பத்திரகிரியார் சரித்திர நுட்பம்.

இல்லரத்தவர்கள் சொல்லுதற்கரிய வல்லவராகிய துல்லிய மனதுடைய பட்டினத்து சுவாமிகள் தன் வீடுநாடு முதலியவற்றை யகன்று சகலதேசமுந்திரிந்து ஐயமேற்ப தில்லையென் றுறுதிக்கொண்டு பத்திரகிரி மகாராஜன் ஊர்ப்புரத்திலுள்ள கணபதியாலயமடைந்து ஞானநிஷ்டைகூடியிருக்குஞ்சமையம் கள்வர் சிலர் கூட்டமிட்டு பத்திரகிரி யரசன் மனையிற்புகுந்து வெகு பொருள்களைக்கவர்ந்து போகுங்கால் வழியிலுள்ள கணபதிக்கொன்றுபரிசளிக்க நினைத்து ஓர் இரத்தின ஆரத்தை வீசாட்டி ஏகுங்கால் அவ்வாபரணம் பட்டினத்தடிகள் கண்டத்திலமைய உதையத்தில் அரண்மனைக் காவலர்கண்டு இவருங் கள்வரை சேர்ந்தவரென்று வற்புறுத்தி அரசன் முன்னிலைவிடுக்க அவர் வினாக்கட்கெல்லாம் சிவசிவவென் றிறைஞ்சிய அடிகளைக் கண்ணுற்றவரசன் சற்றுமயங்கி அமைச்சன்மனம்படி ஆக்கினை தருகவென்றிசைக்க கழுவேற்ற நியமித்தனர், பட்டினத்தடிகள் காவலரால் கழுமரத்தையடைந்து சற்றும் சலிப்புறாது புன்னகைக்கொண்டு (என்செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்வமே) என்னுஞ் செய்யுளைப்பாட கழுமரம்கொழுந்து விட்டெரியக்கண்ட. காவலர் அரசனுக் கறிவிக்க திடுக்கிட்டு பாதசாரியா யோடிவந்து பட்டினத்தடிகள் பாதத்தில்விழ மன்னன்மன பக்குவமறிந்து கண்ணோக்க

பத்திரகிரியரசன், இராஜகோலநீக்கி உடன்தொடர நீ திருவிடைமருதூருக்குச்செல் லெனவாக்களித்து மீண்டும் சிவஸ்தலங்கள், திரிந்து திருவிடைமருதூரையடைந்து கீழ்கோபுரவாயலில் வீற்றிருக்க பத்திரகிரியரசனும் பலஸ்தலங்களுந்திரிந்து திருவிடைமருதூரை யடைந்து குருவைக்கண்டுவணங்கி, அவர் சொற்படி மேலைக்கோபுர வாயலிலிருந்து பிச்சையேற்றுவந்து குருநிவேதனஞ்செய்து மீதி சேடத்தையுண்டு யோகமெய்தியிருந்தனர். இவ்வாறிருக்க பத்திரகிரியாரிடம் ஒருபெட்டை நாய்க்குட்டிவந்து வாலை குழைத்து தன்பசிநோயைக் குறிப்பித்துநிற்க அதனை யறிந்து தமது சேடப் பிரசாதமளிக்க பசியாறி அவருடன் கூடவேயிருக்க இதைச் சிவபெருமானறிந்து பட்டினத்தாரிடஞ்சென்று அதிக பசியுள்ளவர்போல் அபிநயிக்க பட்டினத்தடிகள் யான் கோவணந்தாங்குவதே பாரமாகவுடையேன் மேற்கு கோபுரவாயலி லிருக்கின்றான்சமுசாரி அவனண்டையேகினால் பசியாற்றுவானென இதைச் செவியுற்றஈசன் மேற்கு கோபுரவாயிலி லிருக்கின்ற பத்திரகிரியாரையடுத்து கீழ்திசை வாயிலிலிருக்கும்பட்டினத்தடிகள் புகன்றதை யுரைக்க பத்திரகிரியார் இவ்வோடும் நாய்க்குட்டியுமோ என்னைச் சமுசாரி யாக்கின என்றும் பாத்திரத்தை எடுத்தெறிய அப்பாத்திரம் நாய்சிரசின்பேரிற்பட்டு மரித்தது உடனேசிவபெருமான் மறைந்தருள பின்பு பத்திரகிரியார் திருப்புலம்பல்முதலிய பலதமிழ்க் கண்ணிகளு மியற்றியும் சிவயோகமெய்தியுமிருக்க மரித்தநாய் காசிராஜன் மகளாய்ப்பிறந்து வளர்ந்துபக்குவமடைந்ததை அரசனறிந்து புரோகிதரையழைத்து என்புத்திரிக்

குத்தக்க புருடனை நியமிக்கவேண்டுமென அதைக் கேள்வியுற்ற பெண், திடுக்கிட்டு பிதாவைநோக்கி யானொருவனுக் குரியவளல்ல திருவிடை மருதூரில் மேலைக்கோபுரவாயலில் வீற்றிருக்கும் என்னது குருநாதரிடம் ஒப்புவிப்பீரென அரசன் அதிசயித்து உண்மையை விசாரித்தறிந்து புத்திரியை பத்திரகிரியார் முன் கொண்டுவந்துவிட அவர் நிஷ்டையிலிருந்து விழித்து நோக்க அப்பெண் அடி நாய்மீண்டுந் திருவடியை நாடிவந்தது யென யாவுமறிந்த ஞானியரெழுந்து அப்பெண்ணின் கரத்தைப்பற்றிச் சென்று குருவாகிய பட்டினத்தடிகளிடம்விட்டு நம்பிச் சிட்ட முன்ட நாய்க்கு மிப்பிறவிநோய் வரலாமோ வென பட்டினத்தடிகள் அயன்செயலன்றி (யாவதொன்றில்லை) யென திருவருளைநாடினர். அப்போது ஒரு பெருஞ்சோதிதோன்றி அதில் அப்பெண்ணுடன் பத்திரகிரியார் மறைய சோதியும் மறைந்தது.

பத்திரகிரியார் சரித்திர நாடகம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

பத்திரகிரியார் அருளிச்செய்த

# மெய்ஞ்ஞானப் புலம்பல்.

முத்திதரும்வேத மொழிந்தபுலம்பல்சொல்ல
அத்திமுகவன்றன் அருள்பெறுவதெக்காலிம் 1

ஆங்காரமும்மடக்கி ஐம்புலனைச்சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம். 2

நீங்காச்சிவயோக நித்திரைகொண்டேயிருந்து
தேங்காக்கருணைவெள்ளந் தேக்குவதுமெக்காலம்.

தேங்காக்கருணைவெள்ளந் தேக்கியிருந்துண்பதற்கு
வாங்காமல்விட்டகுறை வந்தடுப்பதெக்காலம் 4

ஓயாக்கவலையினு னுள்ளமுடைந்துவாடாமல்
மாயாப்பிறவி மயக்கறுப்பதெக்காலம் 5

மாயாப்பிறவி மயக்கத்தையூடறுத்துக்
காயாபுரிக்கோட்டை கைக்கொள்வதெக்காலம் 6

காயாபுரிக்கோட்டை கைவசமாய்கொள்வதற்கு
மாயாவனுபூதி வந்தடுப்பதெக்காலம் 7

சேயாய்கமைந்து செவிடூமைபோற்றிரிந்து
பேய்போலிருந்துன் பிரமைகொள்வதெக்காலம் 8

பேய்போற்றிருந்துன்பிணம்போற்கிடந்துபெண்ணை
தாய்போனினைத்துத் தவமுடிப்பதெக்காலம் 9

கால்காட்டிக்கைகாட்டிக் கண்கள்முகங்காட்டி
மால்காட்டுமங்கையரை மறந்திருப்பதெக்காலம் 10

பெண்ணிநல்லாராசைப் பிரமைதனைவிட்டொழிந்து
கண்ணிரண்டுமூடிக் கலந்திருப்பதெக்காலம் 11

வெட்டுண்டபுண்போய் விரிந்தவல்குப்பைதனிலே
தட்டுண்டுநிற்கை தவிர்வதுவுமெக்காலம் 12

ஆறாதபுண்ணி லழுந்திக்கிடவாமல்
தேறாதசிந்தைதனைத் தேத்துவதுமெக்காலம் 13

தந்தைதாய்மக்கள் சகோதரரும்பொய்யெனவே
சிந்தைதனிற்கண்டு திறுக்கறுப்பதெக்காலம். 14
மன்னுயிரைக்கொன்று வதைத்துண்டுழலாமல்
தன்னுயிர்போலெண்ணித் தவமுடிப்பதெக்காலம்
பாவியென்றேபேர்படைத்துப் பாழ்நரகில்வீழாமல்
ஆவிநின்றகூத்திரத்தை யறிவதினியெக்காலம். 16
உளியிட்டகலலு முருப்பிடித்தசெஞ்சாந்தும்
புளியிட்டசெம்புபோற் பொருளாவதெக்காலம். 17
வேடிக்கையஞ்சொருசு மெய்பகட்டும்பொய்ப்பகட்
டும், வாடிக்கையெல்லா மறந்திருப்பதெக்காலம். 18
பட்டுடையுமொப்பனையும் பாவனையுந்தீவினையும்
விட்டுவிட்டுன்புரதம் விரும்புவதுமெக்காலம். 19
ஆமைவருமாட்கண் டைந்தடக்கஞ்செய்தாற்போல்
ஊமையருக்கொண் டொடுக்குவதுமெக்காலம். 20
தண்டிகையுஞ்சாவடியுஞ் சாளிகையுமாளிகையுங்
கண்டுகளிங்குங் கருத்தொழிவதெக்காலம். 21
அத்தனிருப்பிடத்தை ஆராய்ந்துபார்த்துநிதஞ்
செத்தசவம்போற் றிரிவதினியெக்காலம். 22

ஒழிந்ததருமைத்தினைவைத் துள்ளொளும்புவெள்
ளொளும்பாய், கழிந்தபிணம்போலிருந்து காண்பதி
னியெக்காலம். 23
அற்பசுகமறந்தே யறுவையறிவாலறிந்து [லம்
கெர்ப்பத்தில்வீழ்ந்துகொண்டு கோளறுப்பதெக்கா

கெற்பம் யானைப்படுகுழி.

கருப்படுத்திஎன்னையான் கைப்பிடித்துக்கொள்ளா
முன், உருப்படுத்தியாள உடன்படுவதெக்காலம் ()
தூண்டுவிளக்கணைய தொடர்ந்திருள்முன்சூழ்ந்தாற்
போல்,மாண்டுபிழைத்துவந்தவகைதெரிவதெக்கால
தூரியினின்மீன்போற் சுழன்று மனம்வாடாமல்
ஆரியனைத்தேடி யடிபணிவதெக்காலம். 27

எண்ணூறுகமிருந்து எய்தாதவீடுபெற
வெண்ணீறுபூசி விளங்குவதுமெக்காலம். 28

அவ்வேடம்பூண்டிங் கலைந்துதிரியாமற்
சிவவேடம்பூண்டு சிறந்திருப்பதெக்காலம். 29

அண்டருக்காநஞ்சருந்தி அம்பலத்திலாடுசிவன்
தொண்டருக்குத்தொண்டனெனத்தொண்டுசெய்வதெ
க்காலம். 30

பன்றிவடிவெடுத்துப் பாரிடந்துமால்காணுக்
குன்றில்விளக்கொளியை கூறுவதுமெக்காலம். 31

தித்திக்குந்தெள்ளமிர்தைச்சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்குவித்தை முதனினைப்பதெக்காலம். 32

வேதாந்தவேதமெல்லாம் விட்டொழிந்தேநிஷ்டை
யிலே, ஏகாந்தமாக யிருப்பதினியெக்காலம். 33

மற்றிடத்தைத்தேடியென்றன் வாழ்நாளைப்போக்கா
மல், உற்றிடத்தைத்தேடி யுறங்குவதுமெக்காலம்.

இன்றுளோர்நாளை யிருப்பதுவும்பொய்யெனவே
மன்றுளோர்சொல்லும் வகையறிவதெக்காலம். 35

கஞ்சாவபினியுடன் கள்ளுண்டுவாடாமற்
பஞ்சாவமிர்தம் பருகுவதுமெக்காலம். 36

செஞ்சலத்தினூற்றிரண்ட செனனமோக்ஷம்பெறவே
கஞ்சலத்தைவிட்டுன் சரணடைவதெக்காலம். 37

கும்பிக்கிரைதேடிக் கொடுப்பாரிடந்தோறும்
நம்பித்திரிகை தடுப்பதினியெக்காலம். 38

ஆடுகின்றசூத்திரந்தா னறுவளவேதிரிந்து
போடுகின்றநாள்வருமுன் போற்றுவதுமெக்காலம்

நவசூத்திரம்போட்டு நானவேநீயென்றிருந்த
சிவசூத்திரத்தைத் தெரிந்தறிவதெக்காலம். 40

மறந்துமலசலங்கள் மாயுமபுழுக்கூட்டைவிட்டுக்
கரந்துனடியினைக் கலந்துநிற்பதெக்காலம். 41

இம்மைதனிற்பாதகனா யிருவினைக்கீடாயெடுத்த
பொய்மைதனிற்போட்டுன்னைப் போற்றிநிற்பதெக்
காலம். 42

உட்பிட்டபாண்டமுடைந்துகருக்கொள்ளுமுன்னே
அப்பிட்டவேணியனுக் காள்படுவதெக்காலம். 43
சேவைபுரிந்து சிவரூபகாட்சிகண்டு
பாவைதனைக்கழித்து பரமடைவதெக்காலம். 44
காண்டத்தைவாங்கிக் கருமேகமீண்டது போல்
பாண்டத்தை நீக்கிப் பரமடைவதெக்காலம். 45
சோற்றுத்துருத்திதனைச் சுமந்தலுத்து வாடாமல்
ஊத்தைசடம்போட்டுனை யடைவதெக்காலம். 46

### வல்லின வெதுகை.

தொடக்கைச்சதமெனவே சுமந்தலைந்துவாடாமல்
உடக்கைசுழற்றி உனையறிவதெக்காலம். 47
ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயால்
ஓசைமணிதீபத்தி லொன்றி நிற்பதெக்காலம். 48
கூரறியநால்வேதங் கூப்பிட்டுங்காணாத
பாராரகசியத்தைப் பார்த்திருப்பதெக்காலம். 49
பல்லாய் விலங்காய்ப் புழுவாய்நரவடிவா
யெல்லாப்பிறப்பி னிருளகல்வதெக்காலம். 50
தக்கும்வகைக்கோர் பொருளுஞ் சாராமலேநினைவில்
பக்குவம்வந்துன்னலிளைப் பார்த்திருப்பதெக்காலம்
பருவத்தளவரோடும் புல்கியின் பங்கொள்வதற்குத்
தெரிவைப்பருவம்வந்து சிக்குவது மெக்காலம். 52
தெரிவையறும் பக்குவத்தின் சீராட்டெல்லாமறிந்து
குருவையறிந்தேதனினைத்துக் கும்பிடுவதெக்காலம்
வம்படிக்குமாதருடன் வாழ்ந்தாலுமன்னுபுளி
யம்பழமோடும்போ லாவதினியெக்காலம். 54
பற்றற்று நீரிற் படர்ந்தவண்ணம்பச்சிலைபோல்
சுற்றற்றுநீக்கிமணந்தூரநிற்பதெக்காலம். 55
சல்லாபலீலையிலே தன்மனைவிசெய்த சுகம்
சொல்லாரக்கண்டெனக்குச்சொல்வதினியெக்காலம்
மருவுமயற்புருடன் வருநேரங்காணாமல்
உருகுமனம்போலெனுளமுருகுவது மெக்காலம். 57

தன்கணவன்றன்சுகத்திற்றன்மனம்வேறானதுபோல்
என்கருத்திலுன்பதத்தை யேற்றுவதுமெக்காலம்.

கூடிப்பிரிந்துவிட்ட கொம்பனையைக்காணாமல்
தேடித்தவிப்பன்போல் சிந்தைவைப்பதெக்காலம்.()

எவ்வனத்தின்ஸ்திரீமோகம்எப்படியுண்டப்படிபோ
ல், கவ்வனத்திலுன்னைக் கலந்திருப்பதெக்காலம்.()

கண்ணாலருவி கசிந்து முத்துப் போலுதிரச்
சொன்னபரம்பொருளைத் தொகுத்தறிவதெக்காலம்

ஆகமிகவுருவ வன் புருகவென்புருகப்
போகவநுபூதி பொருந்துவது மெக்காலம் 62

நீரிற்குமிழிபோனிலைபற்றவாழ்வைவிட்டுன்
பேரிற்கருணைவெள்ளம் பெருக்கெடுப்பதெக்காலம்.

அன்பையுருக்கி யறிமைதன்மேற்புகட்டித்
துன்பவலைபாசத் தொடக்கறுப்பதெக்காலம் 64

கருவின் வழியறிந்து கருத்தைச்செலுத்தாமல்
அருவிவிழிசொரிய அன்புவைப்பதெக்காலம். 65

தெளியத்தெளியத் தெளிந்தசிவானந்தத்தேன்
பொழியப்பொழியமனம் பூண்டிருப்பதெக்காலம்.

ஆதாரமூலத் தடியிற்கணபதியைப்
பாதாரவிந்தம் பணிந்துநிற்பதெக்காலம். 67

மண்வலைந்தாற்சுறிக்கில் வளைந்திருந்தவேதாவைக்
கண்வளைந்துபார்த்துள்ளே கண்டிருப்பதெக்காலம்.

அப்புரநடுவே யமர்ந்திருந்தவிட்டுணவை
உப்புகுடுக்கையுள்ளே யுணர்ந்தறிவதெக்காலம். ()

மூன்றுவளையமிட்டு மூலத்தெழுந்தகோணத்தில்
தோன்றுமுருத்திரனை தொழுதுநிற்பதெக்காலம்.

வாயுமறுகோணமதில் வாழுமகேச்சுரனைத்
தோயும் வகைகேட்கத் தொடங்குவதுமெக்காலம் ()

வட்டவழிக்குள்ளே மருவுஞ்சதாசிவத்தைக்
கிட்டவழிதேடக் கிருபைசெய்வதெக்காலம். 72

உச்சிக்கிடைநடுவே யோங்குகுருபதத்தை
நிச்சயித்துக்கொண்டிருந்து நேர்வதினியெக்காலம்.
பாருகிபார்மீதிற் பஞ்சவர்னம்தாளுகி
வேறுகிநீமுளைத்த வித்தறிவதெக்காலம். 74
கட்டறுக்கவொண்ணுக் கருவிகாணுதியெல்லாஞ்
சுட்டறுத்துநிட்டையிலே தூங்குவதுமெக்காலம். ()
கள்ளக்கருத்தையெல்லாங் கட்டோடுவேறறுத்திங்
குள்ளக்கருத்தை யுணர்ந்திருப்பதெக்காலம். 79
அட்டகாசஞ்செலுத்து மவத்தைச்சடலத்துடனே
பட்டபாடத்தனையும் பகுத்தறிவதெக்காலம். 77
அறிவிக்கருவியுடனவதைதபடுபாட்டையெல்லாம்
பிறியவுடனிருத்திப் பெலப்படுவதெக்காலம். 78
பூதம்பொறிக்கரணம் போந்தவிந்துநாதமுமாய்
ப்பதம்பலவிதமும பிறித்தறிவதெக்காலம். 79
தோன்றுசைசூழ்ன்றுந் தொடர்ந்துவந்துசுற்றுமல்
ஊன்றுசைவரைபடி யூடறுப்பதெக்காலம். 80
புன்சனனம்போற்றுமுனனேபுரிவட்டம்போகியினி
யென்சனனமீடேறு வமன்றறிவதெக்காலம். 81
பட்டனடுவினின்று நற்றிரோதாயியருள்.
கிட்டவழிகாட்டிக் கிருபைசெய்வதெக்காலம். 82
நானேநானென்றிருந்தேன் நடுவினிற்கட்டழகி
தானேவெளிப்படுத்திக் தருவதெனப்பதெக்காலம்.
அடர்ந்தமனக்காட்டை யஞ்செழுத்தாம் வாளா
லே, தொடர்ந்துதொடர்ந்துவெட்டி சுடுவதினியெக்
காலம 84
ஐந்துபொறிவழியே யலைந்துமிக்தப்பாழ்மனதை
வெந்துவிழப்பார்த்து விழிப்பதினியெக்காலம். 85
இனமாண்டுசேர்ந்திருந்தோ ரெல்லாருந்தான்வரண்
டு, சின்மாண்டுபோகவருள்சேர்ந்திருப்பதெக்காலம்
அமையாமனதமையு மானந்தவீடுகண்டால்
இமையாமநோக்கி யிருப்பதினியெக்காலம். 87

கூண்டுவிடுஞ்சீவன்மெள்ளக் கொட்டாவி கொண்டாற்போல், மாண்டுவிடுமுன்னோன் மாண்டிருப்பதெக்காலம். 88

ஊனிறைந்தகாய முயிரிறந்துபோகுமுன்னம்
நானிறந்துபோகவினி நான்வருவதெக்காலம். 89

கெட்டுவிடுமாந்தர் கெர்விதங்கள்பேசிவந்து
சுட்டுவிடுமுன்னென்னைச் சுட்டிருப்பதெக்காலம். ()

தோளேணிவைத்தேறித் தூரநடந்தெக்காலம்
நூலேணிவைத்தேறி நோக்குவதுமெக்காலம். 91

வாயோடுகண்மூடி மயக்கமுற்றுநில்லாமல்
தாயோடுகண்மூடித் தழுவிநிற்பதெக்காலம். 92

காசினியெலாநடந்து காலோய்ந்துபோகாமல்
வாசிதனிலேறி வருவதினியெக்காலம். 93

ஒலிபடருங்குண்டலியை யுண்ணியுணர்வாலெழுப்பி
சுழிமுனையின்றூன்திறந்து தூண்டுவதுமெக்காலம்.

இடைபிங்கலைநடுவே யியங்குஞ்சுழிமுனையில்
தடையறவேநின்று சலிப்பறுப்பதெக்காலம் 95

மூலநெருப்பைவிட்டு மூட்டிநிலாமண்டபத்தில்
பாலையிறங்கியுண்டு பசியொழிவதெக்காலம். 96

ஆகவெளிக்குள்ளே யடங்காப்புரவிசெல்ல
ஏகவெளியி லிருப்பதினியெக்காலம். 97

பஞ்சரித்துப்பேசும் பலகலைக்கெட்டாப்பொருளில்
சஞ்சரித்துவாழ்ந்து தவம்பெறுவதெக்காலம். 98

மலமுஞ்சலமுமற்று மாயையற்றுமானமற்று
நலமுங்குலமுமற்று நானிருப்பதெக்காலம். 99

ஓடாமலோடி யுலகைவலம்வந்துசுற்றித்
தேடாமலென்னிடமாய்த் தெரிசிப்பதெக்காலம். ()

அஞ்ஞானம்விட்டே யருண்ஞானத்தொல்லைதொட்டு, மெய்ஞ்ஞானவீடுபெற்றுவெளிப்படுவதெக்காலம்

வெல்லுமட்டும்பார்த்துவெகுளியெலாம்விட்டகன்று
செல்லுமட்டும்சிந்தை செலுத்துவதுமெக்காலம். ()

மேலாம்பதந்தேடி மெய்ப்பொருளையுள்ளிருத்தி
நாலாம்பதந்தேடி நான்பெறுவதெக்காலம். 103

என்னாதூரமெல்லா மெண்ணியெண்ணிபாராமல்
கண்ணாடிக்குள்ளொளிபோற் கண்டறிவதெக்காலம்

என்னையறிந்துகொண்டே னெங்கோமானோடிருக்கு
ம், தன்மையறிந்து சமைந்திருப்பதெக்காலம். 105

ஆறாதாரங்கடந்த வானந்தப்பேரொளியை
பேறாகக்கண்டுநான் பெற்றிருப்பதெக்காலம் 106

ஆணவமாயத்தா லழிந்துடலம்போகாமுன்
காணாதலாவின்பமறறாக் கண்டறிவதெக்காலம். 107

மும்மலமுஞ்சேர்ந்து முளைத்தெழுந்தகாயமிதை
நிர்மலமாய்க்கண்டுமுனை நீங்கிருப்பதெக்காலம். 108

முன்னைவினைகெடவே மூன்றாவதைகாட்சியினால்
உன்னைவெளிப்படுத்தி யுருவதினியெக்காலம். 109

கண்ணினொளி பாய்ந்ததுவுங் கருத்தறிந்துகொ
ண்டதுவும், விண்ணிலொளிகண்டதுவும்வெளிப்படு
வதெக்காலம். 110

கனவுகண்டார்போலெனக்குகாட்டிமறைந்தேயிருந்
த, நினைவைப்பரவெளிமேல்நிறுத்துவதுமெக்காலம்.

ஆரென்றுகேட்டதுவு மறிவுவந்துகண்டதுவும்
பாரென்றுசொன்னதுவும் பகுத்தறிவதெக்காலம் ()

நினைக்குநினைவுகொளார் நிறைந்தபரிபூரணத்தை
முனைக்குமேற்கண்டுகண்ணில் முளைத்தெழுப்பதெக்
காலம். 113

முப்பாழும்பாழாய் முதற்பாழுஞ்சூனியமாய்
அப்பாழும்பாழா யன்புசெய்வதெக்காலம். 114

சீரென்றெழுந்து தெளிந்துநின்றவான்பொருளை
நீரென்றுகண்டு நிலைபெறுவதெக்காலம். 115

வவ்வெழுத்துமவ்வெழுத்தும் வாளாகுஞ் சிவ்வெ
ழுத்தும், அவ்வெழுத்தினுள்ளே யடங்கிநிற்பதெக்
காலம். 116

எழுத்தெல்லாமாண்டிறந்தே யேகமாய்நின்றதிலே
அழுத்தமாச்சிந்தைவைத் தன்புகொள்வதெக்காலம்
அருவாகியுருவாகி ஆதியந்தமாகிநின்று
குருவாகிவந்தெனையாட் கொண்டருள்வதெக்காலம்.
நானென்றறிந்தவனை நானறியாக்காலமெல்லாந்
தானென்றுநீயிருந்த தனுவறிவதெக்காலம். 119

என்மயமாய்க்கண்டதெல்லா மெண்ணிஎண்ணிப்
பார்த்தபின்பு, தன்மயமாய்க்கண்டதிலேசார்ந்துநிற்
பதெக்காலம். 120

ஒளியிலொளியா முருப்பிறந்தவாரதுபோல்
வெளியில்வெளியாவ விதமறிவதெக்காலம். 121

ஒளியிட்டமெய்ப்பொருளை யுள்வழியிலேயடைந்து
வெளியிட்டுசாத்திவைத்துவீடுறுவதெக்காலம். 122

காந்தம்வலித்திரும்பைக் கரத்திழுத்து கொண்ட
துபோல், பாய்ந்துபிடித்திழுத்துன் பதத்தில்வைப்
பதெக்காலம். 123

பித்தாயங்கொண்டு பிரணவத்தையூடறுத்துச்
செத்தாரைப்போலே திரிவதினியெக்காலம். 124

ஒழிந்தகருத்தினைவைத் துள்ளெலும்புவெள்ளெ
லும்பாய்க், கழிந்தபிணம்போலிருந்து காண்பதினி
யெக்காலம். 125

ஆதிகபிலர்சொன்ன வாகமத்தின்சொற்படியே
சாதிவகையில்லாமற் சஞ்சரிப்பதெக்காலம். 126

சூதுங்களவுந் தொடராவினையஞ்சட்டிடக்காற்
றாதுந்துருத்தியைப்போட்டுனையடைவதெக்காலம்

ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணிதீபத்தி லொன்றிநிற்பதெக்காலம். 128

கல்லாய்மரமாய் கயலாய்ப்பறவைகளாய்
புல்லாய்ப்பிறந்தஜென்மம்போதுமென்பதெக்காலம்

தக்கும்வகைக்கோர்பொருளும் சாராமலேநினைவில்
பக்குவமாயுன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்.()

தூரோடிசைந்து சுழன்றதத்துவத்தை
வேரோடிசைந்து விளங்குவதுமெக்காலம். 131

பாதநடுமாறிப் பயந்தெழுந்தசித்திரத்தை
காதநடுமூலத் திருந்துவதுமெக்காலம். 132

ஓரின்பங்காட்டு முயர்ஞானவீதிசென்று
பேரின்பவீடுகண்டு பெற்றிருப்பதெக்காலம். 133

காரணமாய்வந்தென் கருத்தினுரைத்ததெல்லாம்
பூரணமாகக்கண்டு புகழ்ந்திருப்பதெக்காலம். 134

ஆயுங்கலைகளெல்லா மாராய்ந்துபார்த்ததற்பின்
நீயன்றியில்லை நிசங்காண்பதெக்காலம். 135

குறியாகக்கொண்டு குலமளித்தநாயகனைப்
பிரியாமற்சேர்ந்து பிறப்பறுப்பதெக்காலம். 136

மத்தடுத்துநின்று மருளார்வேவார்போலே
பித்தடுத்துநின்னருளைப் பெற்றிருப்பதெக்காலம்.

சாவாமற்செத்திருந்து சற்குருவின்பொன்னடிக்கீழ்
வேவாமல்வெந்திருக்க வேண்டுவதுமெக்காலம். ()

என்னையறியாம லிருந்தாட்டுஞ்சூத்திரகின்
தன்னையறிந்து தவம்பெறுவதெக்காலம் 139

உள்ளமறியா தொளிந்திருந்தநாயகனை
கள்ளமனந்தெளிந்து காண்பதினியெக்காலம். 140

வாசித்துங்காணாமல் வாய்விட்டும்பேசாமல்
பூசித்துந்தோணாப் பொருள்காண்பதெக்காலம். ()

பன்னிரண்டுகாற்புரவி பாய்ந்தசில்லடந்தட்டாமல்
பன்னிரண்டுசங்கிலிக்குட் பிணிப்பதினியெக்காலம்.

நாட்டுக்காலிரண்டும்விட்டுநடுவுக்காலூடேபோய்[ம்
ஆட்டுக்காலிரண்டென்னுள் ளமர்ந்திருப்பதெக்கால

பாற்பசுவையோட்டி பதியில்வந்துசீராட்டிக்
காற்பசுவையோட்டியதிற் கட்டிவைப்பதெக்காலம்.

பலவிடத்தேமனதைப் பாயவிட்டும்பாராமல்
நிலவரையினூடேபோய் நேர்படுவதெக்காலம். 145

காமக்கடல்கடந்து கறையேறிப்போவதற்கே
ஓமக்கனல்வளர்த்தி யுள்ளிருப்பதெக்காலம். 146

உதயச்சுடர்மூன்று முள்வீட்டிலேகொளுத்தி
இதயத்திருநடன மினிகாண்பதெக்காலம் 147

வேதாந்தவேதமெல்லாம் விட்டேறியேகடந்து
நாதாந்தமூல நடுவிருப்பதெக்காலம். 148

பட்டமற்றுக்காற்றிற் பறந்தாடுஞ்சூத்திரம்போல்
விட்டுவெளியாக விசவறிவதெக்காலம். 149

அட்டாங்கயோகமதற் கப்பாலுக்கப்பாலாய்
கிட்டாப்பொருள்தன்னைக் கிட்டுவதுமெக்காலம் 150

ஒட்டாமலொட்டிநிற்கு முடலுமுயிரும்பிரித்தே
எட்டாம்பழம்பதிக்கிங் கேணிவைப்பதெக்காலம்.

பாசத்தைநீக்கிப் பசுவைப்பதியில்விட்டு
நேசத்தினுள்ளே நினைந்திருப்பதெக்காலம். 152

ஆசாரநேயவனுட்டான மும்மறந்து
பேசாமெஞ்ஞானநிலைப் பெற்றிருப்பதெக்காலம். ()

பல்லாயிரங்கோடிப் பகிரண்டமும்படைப்பே
அல்லாதுவேறிலையென் றறிவதினியெக்காலம். ()

ஆதிமுதலாகிநின்ற அரியென்றவட்சரத்தை
ஓதியறிந்துள்ளே யுணர்வதினியெக்காலம் 155

சாத்திரத்தைச்சுட்டிச்சதுர்மறையைப்பொய்யாக்கி
சூத்திரத்தைக்கண்டு துயரறுப்பதெக்காலம். 156

அல்லும்பகலுமென்ற னறிவையறிவாலறிந்து
கொல்லுமுறைமலர்ந்து தூங்குவதுமெக்காலம். ()

இறங்குஞ்சராசரத்தி லெள்ளுமெண்ணெயும்போல்
முயங்குமந்தவேத முடிவறிவதெக்காலம். 158

ஊனாகிவூனி லுருவாகியெவ்வுலகந்
தானாகிநின்ற தரிப்பறிவதெக்காலம். 159

என்னைவிட்டுநீங்காம லென்னிடத்திநீயிருக்க
உன்னைவிட்டுநீங்கா தொருப்படுவதெக்காலம். 160

இன்னதென்று சொல்லவொண்ணா வெல்லையற்ற வான்பொருளை, சொன்னதென்றுநானறிந்து சொல்வதினியெக்காலம். 161

மனதையொருவில்லாக்கி வான்பொறியை நாணாக்கி
எனதறிவையம்பாக்கி யெய்வதினியெக்காலம். 162
என்னையிறக்கவெய்தே யென்பதியையீடழித்த[லம்
உன்னைவெளியில்வைத்தே யொளித்துநிற்ப தெக்கா

கடத்துகின்றதோணிதனைக் கழைகள்குத்தி விட்டாற்போல், நடத்துகின்றசித்திரத்தை நானறிவதெக்காலம். 164

நின்றநிலைபேராம நினைவிலொன்றுசாராமல்
சென்றநிலைமுத்தியென்று சேர்ந்தறிவதெக்காலம்

பொன்னும்வெள்ளியும்பூண்டு பொற்பதத்தையுள்ளமைந்து, மின்னுமொளிவெளியேவிட்டடைப்ப தெக்காலம். 166

கூட்டிலடைப்பட்டபுழுகுளவியறுகொண்டதுபோல், வீட்டிலடைப்பட்டருளைவேண்டுவதுமெக்காலங்

கடலிலொளித்திருந்த கனலெழுந்துவந்தாற்போல்
உடலிலொளித்தசிவ மொளிசெய்வதெக்காலம். ()
அருணம்பிரகாச மண்டமெங்கும் போர்த்ததுபோல்
கருணைத்திருவடியிற் கலந்துநிற்பதெக்காலம். 169
பொன்னிற்பலவிதமாம் பூஷணமுண்டானதுபோல்
உன்னிற்பிறந்ததுன்னி லொடுங்குவதுமெக்காலம்.
நாயிற்கடைபிறப்பாம் நான்பிறந்து துன்பமற
வேயிற்கனலொளிபோல் விளங்குவதுமெக்காலம்.()
சூரியகாந்திவெளி சூழ்ந்துபஞ்சைசுட்டதுபோல்
ஆரியன்றேற்றத் தருள்பெருவதெக்காலம். 172
இரும்பிற்கனன்மூட்டி யிவ்வுருபோய்யவ்வுருவாய்க்
கரும்பிற்சுவைரசத்தைக் கண்டறிவதெக்காலம். ()
கருக்கொண்டமுட்டைதனைக்கடவாமைதானினைக்க
உருக்கொண்டவாறதுபோலுனையடைவதெக்காலம்

வீடுவிட்டுப்பாய்ந்து வெளியில்வருவார்போல்
கூடுவிட்டுப்பாயுங் குறிப்பறிவதெக்காலம். 175

கடைந்தவெண்ணெய்மோரிற் கலவாதவாரதுபோல்
உடைந்துதமியே னுனேக்காண்பதெக்காலம். 176

இருளைவெளிவிழுங்கி யேகவுருங்கொண்டாற்போல்
அருளைவிழுங்குமிரு ளகன்றுநிற்பதெக்காலம். 177

மின்னெழுத்துமின்னொடுங்கி விண்ணிலுரைத்தாற்போல், என்னுநின்றதென்னுள்ளே யானறிவதெக்காலம். 178

கண்டயுனற்குடத்திற் கதிரொளிகள்பாய்ந்தாற்போல், கொண்டசுரூபமதைக் கூறறிவதெக்காலம் 179

பூணுகின்றதொன்னணிந்தாற் பொன்சுமக்குமோவுடலைக், காணுகின்றவென்கரத்திற் கண்டறிவதெக்காலம். 180

செம்பிற்களிப்புபோற் சிவத்தைவிழுங்குமிக
வெம்பிநின்றமும்மலத்தை வேறுசெய்வதெக்காலம்.

ஆவியுங்காயமும்போ லாத்துமத்துநின்றதனைப்
பாவியறிந்துமனம் பற்றிநிற்பதெக்காலம். 182

ஊமைக்கணுக்கண் டுரைக்கறியா வின்பமதை
நாமறிந்துகொள்வதற்கு நாள்வருவதெக்காலம். ().

சாகாசிவனடியைத் தப்பாதாரெப்போதும்
போகாஉடலகன்று போவதெரன்பதெக்காலம். 184

நிட்டைதனைவிட்டு நினைவறிவுதப்பவிட்டு
வெட்டவெளியில் விரவிநிற்பதெக்காலம். 185

வெட்டவெளிதன்னில் விளைந்த வெப்பாகத்தை
திட்டமுடன்கண்டு தெளிவதினியெக்காலம். 186

எங்கும்பரவடிவா யென்வடிவுநின்வடிவாய்க்
கங்குல்பகலின்றியுனைக் கண்டிருப்பதெக்காலம். ()

உண்டதுவுமாத ருடன்கூடிச்சேர்ந்தின்பங்
தண்டதுவுநீயெனவே கண்டுகொள்வதெக்காலம் ()

ஈமென்றுகேட்டதுவு மென்னுள்ளேநின்றதுவும்
ஓமென்றுசொன்னதுவு முற்றறிவதெக்காலம். 289

சத்தம்பிறந்தவிடந் தன்மயமாய்நின்றவிடஞ்
சித்தம்பிறந்தவிடந் தேர்ந்தறிவதெக்காலம். 190

போக்கும்வரவும் புரம்புள்ளுமாகிநின்றும்
தாக்குமொன்றுபொருளைச் சந்திப்பதெக்காலம். 191

நானெனவு நீயெனவு நாமிரண்டுமற்றொன்றும்
நீயெனவேசிந்தைதனி னேர்படுவதெக்காலம். 192

அறிவையறிவாலறிந்தேயறிவுமறிவுதன்னில்
பிறிவுபடநில்லாமல் பிடிப்பதினியெக்காலம். 193

நீடும்பவனமெல்லாம் நிறைந்துசிந்தூரமதாய்
ஆடுந்திருக்கூத்தை யறிவதினியெக்காலம். 194

தித்தியென்றகூத்துத் திருச்சிலம்பினோசைகளும்
பத்தியுடனே கேட்டுப் பணிவதினியெக்காலம். 195

நயனத்திடைவெளிபோய் நண்ணும்பரவெளியில்
சயனத்திருந்து தலைபடுவதெக்காலம். 196

அருவிமலைநடுவே யாயிரக்கால்மண்டபத்தில்
திருவிளையாடக்கண்டு தெரிசிப்பதெக்காலம். 197

மீனைமிகவுண்டுநக்கி விக்கிநின்றகொக்கதுபோல்
தேனைமிகவுண்டுநக்கி தெவிட்டிநிற்பதெக்காலம். ()

பொல்லாதகாயமுனைப் போட்டுவிங்குமுன்னே
கல்லாலின்பாலகப்படக்கறப்பதினியெக்காலம். ()

வெட்டவெளிக்குள்ளே விளக்குஞ்சதாசிவத்தைக
கிட்டவரத்தேடக் கிருபைசெய்வதேக்காலம் 200

பேரறிவிலேமனதை பேராமலேயிருத்தி
ஓரறிவிலெந்நாளு மூன்றிநிற்பதெக்காலம். 201

அத்துவிதம்போனுமென்றனுத்துமத்தினுள்ளிருந்து
முத்திதரநின்ற முறையறிவதெக்காலம். 202

நாநின்றபாசபதி ஞனிருந்துமாளாமல்
நீநின்றகோலமதில் நிரவிநிற்பதெக்காலம். 203

எள்ளுங்கரும்பு மெழுமலரும்காயமும்போல்
உள்ளும்புறம்புநின்ற துற்றறிவதெக்காலம். 204
அன்னம்புலனை வகுத்தமிர்தையுண்டதும்போல்
என்னைவகுத்துன்னை யினிகாண்பதெக்காலம். ()
அந்தரத்தினீர்பூத் தலர்ந்தெழுந்த தாமரைபோல
சிந்தைவைத்துக்கண்டு தெரிசிப்பதெக்காலம். 206
பிறப்பிறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்புநினைப்புமற்று மாண்டிருப்பதெக்காலம். 207
மன்னும்பரவெளியை மனவெளியிலடைத்தறிவை
என்னும்பொருநினைவை யெழுப்பிநிற்பதெக்காலம் ()
ஆசைகொண்டமாத ரடைகனவு நீக்கியென்மேல்
ஓசைகொண்டுநானு மொடுங்குவதுமெக்காலம் 209
தன்னுயிரைக்கொண்டு தானறிந்தவாரதிபோல்
உன்னுயிரைக்கொண்டிங் கொடுங்குவதுமெக்காலம்
சேற்றிற்களைநாடுந் திடமாமுடலையினிக்
காற்றிலுழல்சூத்திரமாய்க் காண்பதினியெக்காலம்
என்வசமுங்கெட்டிங் கிருந்தவசமும்மழிந்து
தன்வசமுங்கெட்டருளைச் சார்ந்திருப்பதெக்காலம்
தன்னைமறந்து தலைத்துநிலைமறைந்து
கன்மறந்து கனிபெறுவதெக்காலம். 213
என்னையென்னிலேமறந்தே யிருந்தபதியுமறந்து
தன்னையுந்தானேமறந்து தனித்திருப்பதெக்காலம்.
தன்னையுந்தானேமறந்து தலைவாசற்றுள்போட்டே
உன்னைநினைந்துள்ளே யுறங்குவதுமெக்காலம் 215
இணைபிரிந்தபோ தலறியின்பமுறுமன்றிலைப்போல
துணைபிரிந்தபோதருளால் தொடர்ந்துகொள்வதெ
க்காலம். 216
ஆட்டமொன்றுமில்லாம லசைவுசற்றுங்காணாமல்
தோட்டமற்றவாள்பொருளைத் தேடுவதுமெக்காலம்
முன்னைவினை யாலறிவு முற்றுமற்புன்மறைந்தால்
அன்னதனைத்தேடி யமுதுன்பமெக்காலம். 218

கள்ளுண்டவர்போல் களிதருமானந்தமதாற்
றள்ளுண்டுநின்றுடித் தடைபடுவதெக்காலம். 219
தானென்ற வாணவமுந் தத்துவமுங்கெட்டொழிந்து
ஏனென்றபேச்சுமிலா திலங்குவதுமெக்காலம். 220
நானவனைக்காண்பதெல்லா ஞானவிழியாலறிந்து
தானவனைநின்று சரணடைவதெக்காலம். 221
தானந்தமில்லாத தற்பரத்தினோடுருவி
ஆனந்தங்கண்டே யமர்ந்திருப்பதெக்காலம் 222
உற்றவெளிதனிலே உல்லப்பாரந்தரத்தே
மற்றமறமாய்கை மாள்வதினியெக்காலம். 223
ஏடலர்ந்தபங்கயமு மிருகருணைநேந்திரமுந்
தோடணிந்தகுண்டலமுந் தோன்றுவதுமெக்காலம்
ஐயாறுமாறு மகன்றுவெறுவெளியில்
மையிருளில்நின்றமன மாள்வதினியெக்காலம். 225
காட்டுமருண்ஞானக் கடலிலன்பு கப்பல்விட்டு
மூட்டுங்கருணைக்கடலின் மூழ்குவதுமெக்காலம். ()
நானேரோநீயாரோ நற்றும்பரமானந்.
தானேரோ வென்றுணர்ந்து தவமுடிப்பதெக்காலம்.
எவரெவர்களெப்படிகண் டெந்தப்படிநினைத்தார்
அவரவருக்கப்படிநின் றுமென்பதெக்காலம். 228
உற்றுபார்க்க வொளிதருமானந்தமதை
நெத்திக்குநேர்கண்டு நிலைப்பதினியெக்காலம். 229
விளங்குகின்றதாரகையை வெய்யோன்மறைத்தாப்
போல், களங்கமறவுன்காட்சி கண்டறிவதெக்காலம்
என்னைமுனேறியேநிந்தவண்ணஞ்சொன்னதல்லா
முன்னைவினைபோர்கைக்கொள்ளமுன்பணிவதெக்காலம்
ஐந்துகரத்தானை யடியிணையைப்போற்றிசெய்து
நெஞ்சிற் பொருந்தி நிலைபெறுவதெக்காலம். 232

பத்திரகிரியார் புலம்பல் முற்றிற்று.

உ

சிவமயம்.

# பாம்பாட்டி சித்தர்பாடல்.

## கடவுள் வணக்கம்.

தெளிந்துதெளிந்து தெளிந் தாடுபாம்பே-சிவன்
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே
ஆடுபாம்பேதெளிந் தாடுபாம்பே-சிவன்
அடியிணைகண்டோமென் றாடுபாம்பே. 1

நீடுபரமக்கென்றுஞ் சொந்தமென்றே
நித்தியமென்றேபெரு முத்தியென்றே
பாடும்போதுமாதி பதநினைந்தே
பன்னிப்பன்னிப் பரவிநின் றாடுபாம்பே 2

பொன்னிலொளிபோலவெங்கும் பூரணமாய்ப்
பூவின்மணம்போலத்தங்கும் பொற்புடையதாய்
மன்னும்பலவுயிர்களின் மன்னிப்பொருந்தும்
வள்ளலடி வணங்கிநின் றாடுபாம்பே. 3

எள்ளிலெண்ணெய் போலவுயி ரெங்குநிறைந்த
ஈசன்பதவாசமல ரெண்ணியெண்ணியே
உள்ளபடியனுபூதத்தி லோங்கிநின்றுகொ
ஒடுங்கியடங்கித் தெளிந் தாடுபாம்பே. 4

அண்டபிண்டந்தந்தவெங்க ளாதிதேவனை
அகலாமலேநினைத் தன்புடன்பணிந்
தெண்டிசையும்புகழ்ந்திட வேத்தியேத்தியே
ஏகமனமாகநாடி யாடுபாம்பே. 5

சோதிமயமானபரி சுத்தவஸ்துவைத்
தொழுதழுதாவலறித் தொந்தோமெனவே
நீதிதவறுவழியி னின்றுநிலையாய்
நினைந்துநினைந்துருகி யாடுபாம்பே. 6

அருவாயுமுருவாயு பக்திபாயும்
அந்தமாயுமொளியாயு மாகமமாயும்
திருவாயுங்குருவாயுஞ் சிவனுயும
செறிந்தவஸ்துவைப்போற்றி யாடுபாம்பே. 7

சுட்டிக்காட்டவொண்ணாத பாழ்சூனியந்தனைச்
சூட்சமதியாலறிந்து தோஷமறவே
எட்டிபிடித்தோமென் றானந்தபாம்பை
யெடுத்துவிரித்துநின் றாடுபாம்பே. 8

எவ்வுயிருமெவ்வுலகு மின்றும்புறம்பாய்
இருந்துவிளையாட் டெய்தியும்பின்னர்
அவ்வியிருமவ்வுலகு மாகியுநின்ற
ஆனந்தவெள்ளங்கண் டாடுபாம்பே. 9

குருவணக்கம்.

சாற்றுமுடல்பொருளாவி தத்தமாகவே
தானம்வாங்கிநின்றவெங்கள் சர்க்குருவினைப்
போற்றிமனம்வாக்குக்காய மூன்றும்பொருந்தப்
புகழ்ந்துபுகழ்ந்துநின் றாடாய்பாம்பே. 10

பொய்மதங்கள்போதனைசெய் பொய்க்குருக்களைப்
புத்திசொல்லிநன்னெறியிற் போகவிடுக்கும்
மெய்மதந்தானின்னதென்று மேவவிடம்பும்
மெய்க்குருவின்பதம்போற்றி யாடாய்பாம்பே. 11

வேதம்பொருளின்னதென்றும் வேதங்கடந்த
மெய்ப்பொருளைக்கண்டுமன மேவிவிரும்பிப்
போதப்பொருளின்னதென்றும் போதனைசெய்யும்
பூரணசர்க்குருதாள்கண் டாடாய்பாம்பே. 12

உள்ளங்கையினிற்கனிபோல உள்ளபொருளை
உண்மையுடன்காட்டவல்ல வுண்மைக்குருவைக்
கள்ளமனந்தன்னைத்தள்ளி கண்டுகொண்டன்பாய்க்
களித்துக்களித்துநின் றாடாய்பாம்பே. 13

அங்கையிற்கண்ணாடி போல வாதிவஸ்துவை
அறிவிக்குமெங்களுயி ரானகுருவைச்
சங்கையறச்சந்ததமுந் தாழ்ந்துபணிந்தே
தமனியபபடமெடுத் தாடாய்பாம்பே. 14

காயநிலையழிகையைக் கண்டுகொண்டுபின்
கற்புநிலையுள்ளிற்கொண்டெக்காலமும்வாழும்
தூயநிலைகண்டபரி சுத்தகுருவின்
துணையடிதொழுதுநின் றாடாய்பாம்பே. 15

கூடுவிட்டுக்கூடுபாயுங் கொள்கையுடைய
குருவின்வல்லபமெவர் கூறவல்லவர்
வீடுபெறுமவகையை மேன்மேலுங்காட்டு
மெய்க்குருவைப்பணிந்துநின் றாடாய்பாம்பே. 16

அட்டதிக்குமண்டவெளி யானவிடமும்
அடக்கியகுளிகைபோ டாடிவிரைவாய்
வட்டமிட்டுவலம்வரும் வல்லகுருவின்
மலரடிதஞ்சமென் றாடாய்பாம்பே. 17

கற்பகாலக்கடந்தாதி கர்த்தாவோடுங
கடமழியாதுவாழுங் காரணக்குரு
பொற்பதமேதஞ்சமென்று போற்றுதல்செய்து
பூரணசிந்தையோ டாடாய்பாம்பே. 18

வச்சிரத்திற்கோர்பழுது வாய்க்குமாயினும்
வல்லுடம்புக்கோர்குறை வாய்த்திடாது
மெச்சகடமுள்ளவெங்கள் வேதகுருவின்
மெல்லடிதுதித்துநின றாடாய்பாம்பே. 19

### பாம்பினது சிறப்பு.

நாவர் முடிமேலிருக்கு நாகப்பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கு நல்லபாம்பே
பாதலத்திற்குடி புகும் பைகொள்பாம்பே.
பாடிப்பாடிநின்றுவிளை யாடுபாம்பே. 20

வளைபுகும்போதே தலை வாங்கும்பாம்பே
மண்டலமிட்டுடல்வளை வண்ணப்பாம்பே.
தளைக்கஞ்சிநின்றிடும் சத்தியப்பாம்பே
தலையெடுத்தேவிளை யாடுபாம்பே. 21

குற்றமற்றசிவனுக்கு குண்டலமானாய்
கூறுந்திருமாலினுக்கு குடையானாய்
கற்றைக்குழம்பார்வதிக்குக் கங்கணமானாய்
கரவாமலுளங்களித் தாடுபாம்பே. 22

மண்டலத்தைத்தாங்குமிகு வல்லமைகொண்டாய்
மாயனுக்குப்படுக்கைக்கு வண்ணப்பாயானாய்
கண்டபடைநடுங்கிடக் காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவியாகக்கொண்டா யாடுபாம்பே. 23

சந்திரனைச்சூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக்காபரணந் தானுமாகினாய்
மந்திரத்திற்கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்துவளைந்துநின் றாடுபாம்பே. 24

### சித்தர் வல்லபங்கூறல்.

எட்டுநாகந்தன்னைக்கையா லெடுத்தாட்டுவோம்
இந்திரனுலகத்தை யிங்கேகாட்டுவோம்
கட்டுக்கடங்காதபாம்பைக் கட்டிவிடுவோம்
கடுவிஷந்தனைக்கக்கி யாடுபாம்பே. 25

ஆதிசேடனாகினுமெம் மங்கையினாலே
ஆட்டிவிடுவோமெங்க ளாக்கினைக்குள்ளே
நீதியோடடங்கியே நின்றிடச்செய்வோம்
நின்றநிலைதவறாம லாடுபாம்பே 26

தூணைச்சிறு துரும்பாக தோன்றிடச்செய்வோம்
துரும்பைப் பெருந்தூணாக தோற்றச்செய்குவோம்
ஆணைப்பெண்ணும் பெண்ணை யாணுமாகச்செய்குவோ
ம், ஆரவாரத்தெதிராய் நின்றாடுபாம்பே. 27

எட்டுமலைகளைப்பந்தாடியெடுத்தெறிகுவோம்
ஏழுகடலையுங்குடித் தேப்பமிடுவோம்
மட்டுபடாமணலையு மதித்திடுவோம்
மகாராஜன் முன்புநின் றாடுபாம்பே. 28

மண்டலமுற்றுங்கையான் மறைத்திடுவோம்
வானத்தையும் வில்லாக வளைத்திடுவோம்
தொண்டருக்குசூனியஞ் சொல்லிகாட்டிடுவோம்
தோன்றலுக்குமுன்புநின் றாடாய்பாம்பே. 29

மூண்டெரியுமக்கினிக்குள் மூழ்கிவருவோ
முந்நீருள்ளிருப்பினு மூச்சடக்குவோம்
தாண்டிவரும்வன் புலியைத் தாக்கிவிடுவோம்
தார்வேந்தன்முன்புநின் றாடுபாம்பே. 30

செப்பரியமூன்றுலகுஞ் செம்பொன்னாக்குவோம்
செங்கதிரைத்தண்கதிராய்ச் செய்துவிடுவோம்
இப்பெரியவுலகத்தை இல்லாமற்செய்வோம்
எங்கள்வல்லபங்கண் டாடுபாம்பே. 31

வேதன்செய்ததிருஷ்டிகள்போல் வேறுசெய்வோம்
வேதனையுமெங்கள்கீழே மேவச்செய்வோம்
நாதனுடன்சமமாக நாங்களும் வாழ்வோம்
நாங்கள் செய்கையிதுவென்றாடாய்பாம்பே. 32

அறுபத்துநாலுகலை யாவுமறிந்தோம்
அதற்குமேலொருகலை யானதறிந்தோம்
மறுபறுசற்றுமில்லா மனமுடையோம்
மன்னனேயாசானென் றாடுபாம்பே. 33

சீறுபுலியானையாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குற்றேவல் செய்யச்சொல்லுவோம்
வீறுபெறுங்கடவுளை யெங்களுடனே
விளையாடச்செய்வோமென் றாடாய்பாம்பே. 34

## சித்தர் சம்வாதம்.

வாசுகியையொருபக்க மன்னநிறுத்தி
மகத்தானபதுமனை மறுபக்கம்வை
தேகவெதுக்களைத தன்றிக்கிற்சேரு
செய்பாதுமனைங்கொள் சித்தனே. 35

அனந்தனையொரு பக்கமாகநிறுத்தி
அதன் பக்கங்குளிகனை யண்டச்சேரு
கணங்கொண்டகார்க்கோடகன் காணக்காட்டுங்
கடுஞ்சங்கரபலனைத்தா சித்தனே. 36

அட்டதிக்குஞ் சக்கரங்களாசகீறி
அக்கோணநிலைகளி லக்கரஞ்சேரு
திட்டமுடன்மந்திரத்தைச் செபித்துநில்லு
சித்தந்தடுமாறுதே சித்தனே. 37

அட்டதிக்குஞ்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
அவ்வற்றிற்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
எட்டுநாகமிருக்கின்ற விடத்தில்விட்டோம்
இனியென்னசெய்வதுசொல் சித்தனே. 38

கடுவாகவாதிசேடன் றன்னைநாட்டு
நான்குதிக்குமந்திரித்த நீறுதூவு
கடுவிஷங்கக்கவே கட்செவிகளைக்
கையிலெடுத்தாடுங்கள் சித்தனே 39

## பொருளாசை விளக்கம்.

நாடுநகர்வீடுமாடு நற்பொருளெல்லாம்
நடுவன்வரும்பொழுது நாடிவருமோ
கூடுபோனபின்பவற்றாற் கொள்பயனென்னே
கூத்தன்பதங்குறித்துநின் றாடாய்பாம்பே. 40

யானைசேனைதேர்ப்பரி யாவுமணியாய்
யமன்வரும்போதுதுணை யாமோவறிவாய்
ஞானஞ்சற்றுமில்லாத நாய்கட்குப்புத்தி
நாடிவரும்படிநின் றாடுபாம்பே. 41

மாணிக்கமா மணிமுடி வாகுவலயம்
மார்பிற்றுலங்கும்பதக்கங்கள் மற்றும்பணிகள்
ஆணிப்பொன்முத்தாரமப்பொ னந்தக்கடகம்
அழியானப்பொருளென் றாடாய்பாம்பே. 42

மாடகூடமாளிகைகள் வண்ணமண்டபம்
மதில்சூழ்ந்தாவரணமனை மற்றுமுள்ளவை
கூடவராதென்றவந்த கொள்கையறிந்தோர்
குலவாமல் வெறுப்பாரென் றாடாய்பாம்பே. 43

மலைபோன்றசெம்பொற்கு வைத்திருப்பவர்
மறலிவருகையில் வாரிச்செல்வரோ
அலையாமலகத்தினை யத்தன்பால்வைத்தோர்
அழியாரென்றேதுணிந் தாடாய்பாம்பே. 44

பஞ்சணையும்பூவணையும் பாயலும்வெறும்
பாழ்சுடுகாடதனிலே பயன்பெறுமோ
மஞ்சள்மணம்போய்சுடு நாறுமணங்கள்
வருமென்றுதெளிந்துநின் றாடாய்பாம்பே. 45

முக்கனியுஞ்சக்கரையு மோதகங்களும்
முதிர்சுவைப்பண்டங்களு முந்தியுண்டவா
மிக்கவுயிர்போனபின்பு கண்ணைவிழுங்க
மெய்யாகக்கண்டோமென் றாடாய்பாம்பே. 46

வண்ணப்பட்டுவாசனையும் வாய்த்தகோலமும்
வண்கவிகையாலவட்ட மற்றுஞ்சின்னமும்
திண்ணமுடன்யமபுரஞ் செல்லுங்காலத்தில்
சேரவர்மாட்டாரென் றூடாய்பாம்பே 47

மக்கள்பெண்டிர்சுற்றமரு மக்கண்மற்றவர்
மாளும்போதுகூடவவர் மாள்வதில்லையே
தக்கவுலகனத்தையுந் தந்தகர்த்தனைத்
தாவித்தாவித்துதித்துநின் றூடாய்பாம்பே. 48

கானலைமானீரெனவே கண்டுசொல்லல்போல்
காசினிவாழ்வினை மூடர் கண்டுகளிப்பார்
மேனிலைகண்டார்கள்வீணுப் வீம்புபேசிடார்
மெய்யென்பதநாடுவாரென் றூடாய்பாம்பே. 49

பெண்ணாசை விளக்கம்.

வெயில்கண்டமஞ்சள்போன்ற மாதரழகை
விரும்பியேமேல்விழுந்து மேவுமாந்தர்
ஒயில்கண்டயிலவுகாத் தோடுங்கிளிபோல்
உடல்போனாலோடுவாரேன் றூடாய்பாம்பே. 50

செண்டுமுலைவண்டுவிழு கொண்டதோகையை
சித்தப்பாம்பால்விழுங்கியே சீயென்றுருத்தம்
குண்டுகட்டெருமைபேறுங் கூற்றுப்பருந்தைக்
கொன்றுதின்றுவிட்டோமென் றூடாய்பாம்பே. ()

வட்டமுலையென்றுமிக வற்றுந்தோலை
மகமேறுவென்றுவமை வைத்துக்கூறுவர்
கெட்டநாற்றமுள்ளயோனிக் கேணியில்வீழ்ந்தார்
கெடுவரென்றேதுணிந் தாடாய்பாம்பே. 52

மலஞ்சொரிகண்ணைவாடி வாளுக்கொப்பாக
வருணித்துச்சொல்வர்மதி வண்மையில்லாதார்
குலநலம்பேசுகின்ற கூகைமாந்தர்கள்
கும்பிக்கேயிரையென் றாடாய்பாம்பே. 53

சிக்குநாருநகூந்தலைச் செழுமேகமாய்ச்
செப்புவார்கள்கொங்கைதனைச் செப்புக்கொப்பதா
நெக்குநெக்குருகிப்பெண்ணை நெஞ்சினினைப்பார் [ய்
நிமலனைநினையாரென் றாடாய்பாம்பே. 54

நாறிவருமெச்சிறனை நலமுதென்றும்
நண்ணுஞ்சளிநாசிதனை நறகுமிழென்றும்
கூறுவார்கள் புத்தியில்லாக் கூகைமாந்தர்
கோணிலையையறியாரென் றாடாய்பாம்பே. 55

மயிலென்றுங்குயிலென்று மாணிக்கமென்றும்
மானேயென்றுந்தேனேயென்றும் வானமுதென்றும்
ஒயிலானவன்னமதிற் கொத்தவளென்றும்
ஓதாமற்கடிந்துவிட் டாடுபாம்பே. 56

மின்னற்கொடியென்றுஞ்சோதி விளக்கமென்றும்
மெல்லியெனறும்வல்லியென்று மேனகையென்றும்
கன்னற்கட்டியென்றுஞ்சீனி கற்கண்டென்றும்
கழறுமற்கடிந்தோமென் றாடாய்பாம்பே 57

பூவையென்றும்பாவையென்றும் பொன்னேயென்று
பூந்திருவேயென்றுமென்றன் பொக்கிஷமென்றும்
கோவையென்றுங்கோதையென்றுங் கோகிலமென்
றும், கூறுமற்றுறந்தோமென் றாடாய்பாம்மே. 58

மலக்குடமீதிலே மஞ்சள்பூச்சென்றும்
மல்கும்புழுகூட்டின்மேல் வண்ணத்தோலென்றும்
சலக்குழிக்குள்ளேநாற்றஞ் சார்ந்தசேரென்றும்
தானறிந்துதள்ளினேமென் றாடாய்பாம்பே. 59

## சரீரத்தின் குணம்.

ஊத்தைக்குழியிலே மண்ணையெடுத்தே
உதிரப்புனலிலே யுண்டைசேர்த்தே
வாய்த்தகுயவனார் பண்ணும்பாண்டம்
வரகோட்டுக்குமாகாதென் றாடாய்பாம்பே. 60

இருவர்மண்சேர்த்திட வொருவர்பண்ண
ஈரைந்துமாதமாய் வைத்தசூளை
அருமையாயிருப்பினு மந்தச்சூளை
அரைக்காசுக்காகாதென் றாடாய்பாம்பே. 61

பரியாசம்போலவே கடித்தபாம்பு
பலபேரறியவே மெத்தவீங்கிப்
பரியாரமொருமாது பார்த்தபோது
பையோடேகழன்றதென் றாடாய்பாம்பே. 62

சீயுமலமுஞ்செந் நீருநிணமுஞ்
சேர்ந்திடுநாற்றக் குடமுடைந்தால்
நாயுநரியும் சேயுங்கழுகும்
நமதென்றேதின்னுமென் றாடாய்பாம்பே. 63

நீரிலெழுநீர்க்குமிழி நிலைகடல்போல்
நில்லாதுடல்நீங்கிவிடும் நிச்சயமென்றே
பாரிற்பலவுயிர்களைப் படைத்தவன்றனைப்
பற்றவேபற்றித் தொடர்ந் தாடாய்பாம்பே 64

நாறுமீனைப்பலதர நல்லதண்ணீரால்
நாளுங்கழுவினுமத நாற்றம்போமோ
கூறுமுடல்பலநதி யாடிக்கொண்டதால்
கொண்டமலநீங்காதென் றாடாய்பாம்பே. 65

காய்த்தமரமதுமிகக் கல்லடிபடும்
கன்மவினைகொண்டகாயங் கண்டனைபெறும்
வாய்த்தவமுடையவர் வாழ்பவரென்றே
வஸ்துத்திருவடிதொழு தாடாய்பாம்பே. 66

பேசரியநவவாயிற் பீரற்றுருத்தி
பெருங்காற்றுள் புகுந்ததாற் பேச்சுண்டாச்சே
சனிலையறியாருக் கித்தத்துருத்தி
எரிமண்ணிற்கிறையென் றுடாய்பாம்பே. 67

மரப்பாவைபோல வொரு மண்ணுருச்செய்து
வளமானசீவனென்னுஞ் சூத்திரமாட்டித்
திரைக்குள்ளிருந்தசைப்பேன் றீர்ந்தபொழுதே
தேகம்விழுமென்றுதெளிந் தாடுபாம்பே. 68

தசநாடிதசவாயி சத்ததாது
சார்ந்தமரக்கப்பலது தத்திவிழுமே
இசைவானகப்பலினை யேகவெள்ளத்தில்
உன்னுளுமோட்டத் துணிந் தாடாய்பாம்பே. 69

அகப்பற்று நீக்கல்.

தாமரையினிலையிலே தண்ணீர்தங்காத்
தன்மைபோலச்சகத்தாசை தள்ளிவிட்டெங்கும்
தூமணியாவிளங்கிய சோதிபதத்தைத்
தொழுதுதொழுதுதொழு தாடாய்பாம்பே. 70

கள்ளங்கொலைகாமவாதி கண்டித்ததெல்லாம்
கட்டறுத்துவிட்டுஞான கண்ணைத்திறந்து
தெள்ளிதானவெட்டவெளி சிற்சொரூபத்தைத்
தேர்ந்துபார்த்துச்சிந்தைதெளிந் தாடாய்பாம்பே.

சொல்லும்புளியம்பழத்தி னோடுபோலவே
சுற்றத்திருந்தாலுமவர் தொந்தங்களற்று
நில்லுமனதேபர நின்மலத்திலே
நின்றுனை தான்வெறும்பாழென்றுடாய்பாம்பே. 72

சேற்றிற்றிரிபிள்ளைப்பூச்சி சேற்றைநீக்கல்போல
தேசத்தோடொத்துவாழ்பவரச் செய்கைகண்டபின்
சாற்றுபரவெளிதனைச் சாரும்வழியே
தானடக்கவேணுமென் றுடாய்பாம்பே. 73

எண்ணைக்குந் தண்ணீர்க்குந்தொக்கமில்லாவாறுபோ
எப்போதுமிப்புவியி லெய்தவேண்டும் [ல்
கண்ணுக்குக்கண்ணானவொளி கண்டுகொள்ளவே
கட்டறுத்துவீழ்ந்திடநின் றாடாய்பாம்பே. 74

கக்கிவிட்டசோறுகறி கந்தமூலங்கள்.
கண்களுக்கசுத்தமான காட்சிபோலவே
சிக்கிக்கொண்டசகத்தினைச் சீயென்றொறுத்துச்
சீர்பாதக்காணத்தெளிந் தாடாய்பாம்பே. 75

கோபமென்னுமதயானை கொண்டமதத்தை [காண்
கூர்சொள் புத்தியங்குசத்தாற் கொன்றுவிட்டோங்
தீபமென்னுஞ் சிற்சொரூப செய்யபொருளைச்
சேர்ந்துறவுகொண்டோமென் றாடாய்பாம்பே. 76

நித்தியமென்றுமலையி னின்றுகொண்டோம்யாம்
நினைத்தபடிமுடித்துநின்மலமானோம்
சத்தியமாயெங்கள்கடந் தானழியாதே
சந்ததமும்வாழ்வோமென் றாடாய்பாம்பே. 77

மனமென்னுங்குதிரையை வாகனமாக்கி
மதியென்னுங்கடிவாளம் வாயிற்பூட்டிச்
சினமென்னுஞ்சீனிமேற்சீராயேறித்
தெளிவிடஞ்சாரிவிட் டாடாய்பாம்பே. 78

ஆசையென்னுஞ் செருப்பின்மே லடிவைத்தே
ஆங்காரமுட்காட்டை யறமிதித்தே
காசையெனுந்துற்குணத்திற் கனல்கொளுத்திக்
காலாகாலங்கடந்தோமென் றாடாய்பாம்பே. 79

காலனெனுங்கொடிதான கடும்பகையைக்
கற்பமெனும்வாளினாற் கடிந்துவிட்டோம்
தாலப்பிறப்பினைத் தான்கடந்தோம்
தற்பரங்கண்டோமென் றாடாய்பாம்பே. 80

தேனில்வீழ்ந்தயீயைப்போலச் சிந்தைகுலைந்து
திகையாமற்சிற்சொரூப தெரிசனைகண்டு
வானிற்பரந்திடச்சூத வான்மணிதீர்ந்து
வாயிர்போட்டேகநின் றாடாய்பாம்பே. 81

தூக்கியபாதங்கண்டேன் சோதிகண்டேன்
சுத்தவெளிக்குள்ளேயொரு கூத்தன்கண்டேன்
தூக்கியசிரசின்மேல் தைத்தபாதம்
சர்க்குருவின்பாதமென் றாடாய்பாம்பே. 82

ஆலப்பொந்திலே வாழ்ந்தபாம்பே
அரசடிபொந்திலே புகுந்துகொண்டாய்
வாலடிதன்னிலே பார்த்துபார்த்து
வாங்கியேதூங்கிநின் றாடாய்பாம்பே. 83

நாலுதெருவிலே நாலுகம்பம்
நடுத்தெருவிலே பொன்கம்பம்
போலும்விளக்குபொன் கம்பத்தினுக்கே
பூமாலைசூட்டிநின் றாடாய்பாம்பே. 84

ஆழிபெயர்ந்தாலும்பெரு மட்டேபலையும்
அடிபோடபெயர்ந்தாலு மன்றிக்கால்
ஊழிபெயர்ந்தாலுமதி யுண்மைப்படிக்கே
உறுதிபெயராதுநின் றாடாய்பாம்பே. 85

வாயுவினையிரையாக வாங்கியுண்டே
வருடிக்குநீரினை வாயுன்மடுத்தே
தேயுபிரைகுளிர்காய்ந்து வெட்டவெளியில்
திகைப்பறச்சேர்ந்துநின் றாடாய்பாம்பே. 86

மாசில்கதிவளையிலே மண்டலமிட்டே
மதியானபெரும்படை மடல்விரித்தே
ஆசில்பராபரமான வாதிபாதத்தை
அடுத்தடுத்தேதுதித் தாடாய்ப்பாம்பே. 87

காடுமலைநதிநதி காசிமுதலாய்க்
கால்கடுக்கவோடிற்பலன் காணலாகுமோ
வீடுபெரும்வருநிலை மேவிக்கொள்ளவே
வேதாந்தத்துறையினின் றாடாய்பாம்பே. 88

எள்ளளவுமன்பகத்தி லில்லாதமூர்த்தி
எய்துவதுதொல்லுலகி லில்லையனே
கள்ளப்புலன்கட்டறுத்துக் காலகாலனைக்
கண்டுதொழுதேகளித் தாடாய்பாம்பே. 89

சூரியனைக்கண்டபனி தூரவோடல்போல்
சொந்தபந்தஞ்சிந்தபரி சுத்தலத்தில்
ஆரியனைக்கண்டுதரி சித்தேயன்புடன்
அகலாமற்பற்றிதொடர்ந் தாடாப்பாம்பே. 90

காந்தம்வலியிரும்புபோல் மாசின்மனதைக்
காட்சியானவஸ்துஉடன் கலக்கச்சேர்த்துச்
சாந்தமுடன்றோண்டியின் தாம்தம்போலச்
சலியாமற்றொடர்ந்துநின் றாடாய்பாம்பே. 91

உளியிட்டகற்சிலையி லுண்டோபலன்கள்
உலகத்தின் மூடர்களுக் குண்டோவுணர்ச்சி
புளியிட்டசெம்பிற்குற்றம் போமேவஞ்ஞானம்
போகாதுமூடர்க்கென் றாடாய்பாம்பே. 92

திரளானபோரிலூசி தேடல்போன்முத்தி
சிக்காதுதேசாசார தேசிகர்தம்மால்
அருளானமூலகுரு வையர்செயலால்
ஆனந்தங்கண்டோமென் றாடாய்ப்பாம்பே. 93

ஏட்டுச்சுரக்காய்கறிக் கெய்திடாதுபோல்
எண்டிசைதிரிந்துங்கதி யெய்தலில்லையே
நாட்டுக்கொருகோயிற்கட்டி நாளும்புசித்தே
நாதன்பாதங்காணார்களென் றாடாய்பாம்பே. 94

தன்னையறிந்தொழுகுவோர் தன்னைமறைப்பார்
தன்னையறியாதவரே தன்னைக்காட்டுவார்
பின்னையொருகடவுளைப் பேணிநினையார்
பேரொளியைப்பேணுவாரென் றாடாப்பாம்பே. 95

பாலிற்சுவைபோலுமெங்கும் பாய்ந்தவெளியைப்
பற்றுப்பொன்மற்றுவைத்த பான்மைபோல
காலிற்சுழிமுனைநின்று கண்டுகொண்டு
களித்துகளித்துநின் றாடாய்பாம்பே. 96

தேக்கெடுத்தேயோடும்வானத் தேனையுண்டபின்
தேகபந்தகொண்டனமித் தேசவாழ்வினை
ஓக்காளமென்றெண்ணி யோகையுடனே
உள்ளந்தெளிந்துநின் றாடாய்பாம்பே. 97

சதுர்வேதமாறுவகை சாஸ்திரம்பல
தந்திரமபுராணங்கலை சாற்றுமாகமம்
விதம்விதமானதான வேறுநூல்களும்
வீணான நூல்களென் றாடாய்பாம்பே. 98

சமயபேதம்பலவான சாதிபேதங்கள்
சகத்தோர்க்கேயல்லாது சற்சாதுக்களுக்கோ
சிவமயத்திலேறினபேர் சித்தமாறுமோ
சித்தர்சித்தாந்தந்தோந் தாடுபாம்பே. 99

பூசைசெய்ததால்சுத்த போதம்வருமோ
பூமிவலஞ்செய்ததனாற் புண்ணியமுண்டோ
ஆசையற்றகாலத்திலே ஆதிவஸ்துவை
அடையலாமென்றுதுணிந் தாடாய்பாம்பே. 100

மூலவேரறிந்துகொண்டால் மூன்றுலகமும்
முன்பாகவேகண்டுனித்திய முத்திசேரலாம்
சாலவேறறிந்ததாலே தான்பயனுண்டோ
சகத்தைப்பொய்யென்றுதெளிந் தாடாய்பாம்பே.()

சகத்தினுதியென்றிடாது தானனுதியாற்
சமைந்ததென்றுரைப்பார்கள் சத்தையறியார்
மகத்துவனிலைகற்ய வன்மையல்லாது
மற்றும்வண்மையில்லையென் றுடாய்பாம்பே. 102

ஆயிரத்தெட்டிதழ்வீட்டி லமர்ந்தசித்தன்
அண்டமெல்லாநிறைந்திடு மற்புதசித்தன்
காயமில்லாஜோதிவளர் காரணசித்தன்
கண்ணுளொளியானுனென் றுடாய்பாம்பே. 103

நாற்பத்துமுக்கோணநிலை நாப்பணதாக
நாடுமக்கரச்சொரூப நாயகன்தனை
மேற்படுத்திக்கொண்டாலந்த மேலுலகெலா
மெல்லடிக்குத்தொண்டேயென் றுடாய்பாம்பே. ()

கண்டவர்களொருக்காலும் விண்டிடார்கள்
விண்டவர்களொருக்காலுங் கண்டிடார்கள்
கொண்டகோலமுள்ளவர்கள் கோனிலைகாணுர்
கூத்தாடி கூத்தாடி யாடுபாம்பே 105

ஆருகலைக்குச்சுக்குள்ளே யாடுமொருவன்
அயல்வீடுபோகுமுன்னே யரண்கோலிக்கொள்
வேறுபட்டாலவன்றனை மீட்டலரிதே
மேவுமுனனே விடாதுகொண் டாடுபாம்பே. 106

எண்ணரியபுண்ணியங் லெல்லாஞ்செய்துமென்
ஏகனடிநெஞ்சமதி லெண்ணுவிடிலே
பண்ணரியதவப்பயன் பத்திஇல்லையேற்
பாழ்படுமென்றுதுணிந் தாடாய்பாம்பே. 107

எவ்வுலகுஞ்சொந்தமதா யெய்தும்பயனென்
எங்களாதிபதாம்புய மெண்ணுக்காலையில்
இவ்வுலகவாழ்வுதானு மின்றேயருமென்
றெண்ணிக்கர்த்தனடிநினைந் தாடாய்பாம்பே. 108

மனக்கோலங்கொண்டுமிக மனமகிழ்ந்து
மக்கண்மனைசுற்றத்தோடு மயங்கிநின்றாய்
பிணக்கோலங்கண்டுபின்னுந் துறவாவிட்டால்
பிறப்புக்கேதுணையென் றாடாய்பாமபே. 109

பிறப்பையுமிறப்பையு மறுத்துவிடயான்
பெருமருந்தொன்றுசொல்வேன் பெட்புடன்கேளா
திறப்புடன்மனப்பூட்டுஞ் சிந்தைக்கதவும்
திறந்திடும்வகையறிந் தாடாய்பாம்பே. 110

இறந்தவரைவரவ ரிஷ்டமானவர்
எய்துமவரிறந்தாரென் றெல்லவர்க்குஞ்சொல்
மறந்தவரொருவரென்றே மண்ணினுள்ளோர்
வகையறிந்திடவேநின் றாடாய்பாம்பே. 111

நான்கடிச் செய்யுள்.

ஆகாரமுதலிலே பாம்பதாக
ஆனந்தவயலிலே படம்விரித்தே
ஊகாரமுதலிலே யொத்தொடுங்கி
ஓடிவகாரத்தி னுக்கைநீட்டிச்
சீகாரங்கிடந்ததோர் மந்திரத்தைச்
சித்தப்பிடாரனார் போதஞ்செய்ய
மாகாரப்பிறப்பையும் வேரறுத்து
மாயபந்தங்கடந்தோமென் றாடாய்பாம்பே. ()

தந்திரஞ்சொல்லுவார் தம்மையறியார்
தனிமந்திரஞ்சொல்லுவார் பொருளறியார்
மந்திரஞ்செபிப்பார்கள் வட்டவீட்டினுள்
மதிலினைச்சுற்றுவார் வாயல்காணார்

அந்தரஞ்சென்றுமே வேர்பிடுங்கி
அருளென்னுஞானத்தா லுண்டைசேர்த்தே
இந்தமருந்தினைத் தின்பீராகில்
இனிப்பிறப்பில்லையென் றூடாய்பாம்பே. 113

களிமண்ணிலொரு கப்பல்சேர்த்தே
கனமானபாய்மரங் காணநாட்டி
அளிபுலந்தன்னையே சுக்கானாக்கி
அறிவென்னுமாதாரச் சீனிதூக்கி
வெளியென்னும்வட்டத்தே யுள்ளடக்கி
வேதாந்தக்கடலினை வெல்லவோட்டித்
தெளிவுறுஞானியா ரோட்டுங்கப்பல்
சீர்பாதஞ்சேர்ந்ததென் றூடாய்பாம்பே. 114

உள்ளத்துக்குள்ளே யுணரவேண்டும்
உள்ளும்புறம்பைய மறியவேண்டும்
மெள்ளக்கனலை யெழுப்பவேண்டும்
வீதிப்புனலிலே செலுத்தவேண்டும்
கள்ளப்புலனைக் கடிந்துவிட்டுக்
கண்ணுக்குமேற் காணநின்று
தெள்ளுருபஞ்சோதி தன்னைத்தேடிச்
சீர்பாதங்கண்டோமென்றூடாய்பாம்பே. 115

ஓங்காரக்கம்பத்தி னுச்சிமேலே
உள்ளும்புறம்பையு மறியவேண்டும்
ஆங்காரக்கோபத்தை யறாததுவிட்டே
ஆனந்தவெள்ளத்தைத் தாக்கிக்கொண்டே
சாங்காலமில்லாமற் றுணுவுடனே
சட்டதிட்டமாகச்சேர்ந்து சாந்தமாகவே
தூங்காமற்றூங்கியே சுகமடைந்து
தொந்தோம்தொந்தோமென் றூடாய்பாம்பே.

விரகசூடத்திலே பாம்படைப்போம்
வேதாந்தவெளியிலே விட்டாட்டுவோம்
கரணங்களைப்பிடிங்கி யிரைகொடுப்போம்
காலக்கடுவெளியின் றாட்டுவிப்போம்
துரகந்தனிமேலேறித் தொல்லுலகெங்கும்
சுற்றிவலம்வந்துணித்திய சூக்ஷங்கண்டும்
உறையற்றமந்திரஞ் சொல்லிவீட்டோம்
ஒருநாளுங்கும்பெற்றோமென் றாடாய்பாம்பே.

காயக்குடத்திலே நின்றபாம்பைக்
கருணைக்கடலிலே தியங்கவிட்டு
நேயச்சுழிமுனை நீடுபாயச்சி
நித்யமானவஸ்துவை நிலைக்கநாடி
மாயப்பெருவெளி தன்னிலேறி
மாசற்றபொருளினை வாய்க்கத்தேடி
ஆயத்துறைகடந் தப்பாற்பாழின்
ஆனந்தஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. ()

மூலத்தலத்திலே னின்றகருத்தை
முற்றுஞ்சுழிமுனை தனனிலூடே
மேலத்தலத்திலே விந்துவட்டம்
மேலைவழியிலே மேவிவாழும்
பாலத்திதாய்க் கருணையினால்
பரகதிஞான சொரூபமாறு
ஆலச்சயனத்து மாலுடனின்றே
ஆனந்தஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. ()

புலனைந்துவீதியில் வையாளியாயும்
புரவியெனுமனதையொருமைப்படுத்தி
மலபந்தவுலகங் கடந்ததாலே
மன்னுகுருபாதத்தினிலைநாடித்

தலைமைந்துபூலோகங் கடந்ததாலே
சந்திரமண்டலங் கடந்ததாகும்
அலம்வந்துபூலோகக் கடலைநீக்கி
ஆனந்தமாகிநின் றாடாய்பாம்பே. 120

குருவென்னுமாசா னுருவெடுத்துக்
குறியானஞானந் துப்பாக்கியாக்கி
அருளென்னுமருளே யுண்மையாக்கி
ஆனந்தமாகவே யதைக்கடந்தே
மருளென்னுமா தர்மந் நெறிதொட்டு
வாங்காமலெரிந்திட நெட்டையிட்டு
பருவலைக்குள்ளே பட்டதென்றே
பற்றானைபற்றிநின் றாடாய்பாம்பே. 121

கன்னான்குகையிலே காண்மறிப்போம்
கருமானுலையிலே தீமூட்டுவோம்
சொன்னார்தலையிலே பொன்னாக்குவோம்
சுறுதியருகல்வி யொப்பஞ்செய்வோம்
மின்னார்கள்பாசத்தை விட்டெறிப்போம்
மெய்ப்பொருட்குறிகண்டு விருப்படைவோம்
பன்னாதேபன்னாதே சும்மாவிரு
பராபரஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. ()

சாதிப்பிரிவிலே தீமூட்டுவோம்
சந்தவெளியினிற் கோல்னாட்டுவோம்
வீதிப்பிரிவினில் விலையாட்டுவோம்
வேண்டாமதனை னுறவுசெய்வோம்
சோதித்துலாவியே தூங்கிவிடுவோம்
சுகமானபெண்ணையே சுகித்திருப்போம்
ஆதிப்பிர்மாக்க ளைந்துபேரும்
அறியார்களிதையென் றாடாய்பாம்பே. 123

நெட்டெழுத்ததனிலே நிலைபிடித்து
நீங்காவெழுத்திலே வாலைமுறுக்கி
விட்டவ்வெழுத்திலே படம்விரித்து
விண்ணின்வழியிலே மேவியாடிப்
பட்டவெழுத்தையும் பதிந்திருப்போம்
பன்னிரண்டாமெழுத்தினிற பன்னிக்கூடிய
திட்டமுடனெமக்கரு டேசிகனார்தன்
சீர்பாதஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. ()

ஊசித்துளைக்குடத்தினிற் பாம்படைப்போ
மூலகெலாஞ்சுற்றி யுலாவிவருவோம்
மாசுள்ளபிறவியை மறந்திருப்போம்
மனமொத்தவெளியிலே விட்டாட்டுவோம்
மாசுப்புலன்களை யிரைகொடுப்போம்
மனதுற்றஉச்சியி லேறியாடுவோம
பேசுமெழுத்தையும் விழுங்கவிடுவோம்
பிறப்பிறப்பற்றோமென் றாடாய்பாம்பே. 125

ஆணிக்குடத்திலே பாம்படைப்போம்
அக்கினிக்கோட்டைமே லேறப்பார்ப்போம்
மாணிக்கத்தூணின்மேல் விட்ட ாட்டுவோம்
மனம்வாக்குகாயத்தை யிரைகொடுப்போம்
நாணிக்கயிற்றையு மறுத்திடுவோம்
நமனற்றநாதன்பத நாடியேநிற்போம்
ஏணிப்படிவழிகண் டேறிவிடுவோம்
யாருமிதையறியாரென் றாடாய்பாம்பே. 126

வடக்குகிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ்சுழலிலே பாவுபூட்டுவோம்
நடக்கும்வழியிலே யுண்டைசேர்ப்போம்
நடவாவழியிலே புடைவைநெய்வோம்

குடக்குக்கரையிலே கோல்போடுவோம்
  கொய்ததையெங்குமே விற்றுவிடுவோம்
அடக்கியேகத்துள்ளே வைக்கவும்வல்லோம்
  ஆதிபதங்கண்டோமென் றாடாய்பாம்பே. ()

சூத்திரக்குடத்திலே பாம்படைப்போம்
  சுழிமுனைக்குள்ளே சுகித்திருப்போம்
பாத்திரங்கொண்டுமே பலியிரப்போம்
  பத்தெட்டிமூன்று படிகடந்தோம்
ஊத்தைச்சடத்தினைப் புடமிடுவோம்
  உளவனெமக்குநல் லுறுதிசொல்லப்
பாத்துரையிதன்மெய் • பலிக்கவெண்ணிப்
  பதனம்பதனமென் றாடுபாம்பே. 128

மவ்வக்குடத்திலே பாம்படைப்போம்
  மணிவட்டவாசியை வாரியுண்போம்
பவ்வக்குடங்களைத் தள்ளிவிடுவோம்
  வக்கிரசொர்ப்பனந் தாண்டிவிடுவோம்
மவ்வவெளியிலே விட்டாட்டுவோம்
  பஞ்சகருவியைப் பலிகொடுப்போம்
சிவ்வுருவாகிய நின்றோமென்றே
  சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே. 129

பாம்பாட்டி சித்தர்பாடல்

முற்றிற்று.

சிவமயம்.

# இடைக்காட்டுச் சித்தர் பாடல்.

காப்பு.

கலிநிலைத்துறை.

ஆதியந்தமில் லாதவனாதியைத்
தீதுறும்பவன் தீப்படுபஞ்சுபோல்
மோதுறும்படி முப்பொறியொத்துறக்
காதலாகக் கருத்திற்கருதுவாம்.

தாண்டவராயக்கோன் கூறுதல்.

எல்லாவுலகமு மெல்லாருயிர்களு
மெல்லாப்பொருள்களு மெண்ணரிய
வள்ளாளனாதி பரமசிவனது
சொல்லலாகுமே கோனாரே. 1

வானியன்போல வயங்கும்பிரமமே
சூனியமென்றறிந் தேத்தாக்கால்
ஊனியலாவிக் கொருகதியில்லையென்
றோர்ந்துகொள்ளுவீர் கோனாரே. 2

முத்திக்குவித்தான மூர்த்தியைத்தொழுது
முத்திக்குறுதிகள் செய்யாக்கால்
சித்தியும்பத்தியுஞ் சுத்தியுமுத்தியுஞ்
சேராவாகுமே கோனாரே. 3

தொல்லைப்பிறவியின் றொந்தமுற்றவே
சோம்பலற்றுத்தவஞ் செய்யக்கால
எல்லையில்கடவு ளெய்துப்பதமுனக்
கில்லையென்றெண்ணுவீர் கோனாரே. 4

ஆரணமூலத்தை பன்புடனேபர
மானந்தக்கோலத்தை யன்புடனே
பூரணமாகவே சிந்தித்துமெய்ஞ்ஞானப்
போதத்தைச்சார்ந்துகொள் கோனாரே. 5

காலாகாலங் கடந்திடுசோதியைக்
கற்பனைக்கடந்த வற்புதநீதியைக்
நூலாற்பெரிய சொன்ன நுண்பொருளை
நோக்கத்திற்காண்பது கோனாரே. 6

சொல்லருஞ்சகள நிட்களமானதைச்
சொல்லாற்சொல்லாமல் கோனாரே
அல்லும்பகலு மகத்திலிருத்திடி
லந்தகன்கிட்டுமோ கோனாரே. 7

சூரியன்வாள்பட்ட தூய்யபனிகெடுந்
தோற்றம்போல்வெவ்வினை தூள்படவே
நாரியிடப்பாகன்று ணெஞ்சியிற்போற்றியே
நற்கதிசேர்ந்திடு கோனாரே. 8

மும்மலநீக்கிட முப்பொறிக்கெட்டாத
முப்பாழ்கிடந்த வப்பாழைச்
செம்மறியோட்டிய வேலையமையத்துஞ்
சிந்தையில்வைப்பீரே கோனாரே. 9

பஞ்சவிதமாய்ச் சஞ்சலம்பறக்கப்
பற்றறநின்றதைப் பற்றியன்பாய்
நெஞ்சத்திருத்தி யிரவுபகலுமே
நேசித்துக்கொள்ளுவீர் கோனாரே. 10

நாராயணக்கோன் கூறுதல்.

கொச்சகக்கலிப்பா.

சீரார்சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச்செந்தே
னைப், பாராதிவான்பொருளைப் பஞ்சவுருவானவொ
ன்றைப், பேரானவிண்ணொளியைப்பேரின்பவாரிதி
யை, நேராகவெந்நாளு நெஞ்சிருத்திவாழ்வேனே.

கண்ணுண்மணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப், பெண்ணுருவிப்பாதியினை பேசரியமுப்பொருளை, விண்ணினமுதைவிளக்கொளியை வெங்கதிரைத், தண்ணளியை யுள்ளில்வைத்துச் சாருபஞ்சாருவனே. 12

கண்ணி தரு

மனமென்னுமாடடங்கிற் றண்டவக்கோனே-முத்தி
வாய்ததென்றெண்ணேடா தாண்டவக்கோனே.

சினமென்னும்பாம்பிரந்தாற் றண்டவக்கோனே-யாவுஞ், சித்தியென்றேநினையேடா றண்டவக்கோனே.

ஆசையெனும்பசுமாளிற் றண்டவக்கோனே-இந்த
அண்டமெல்லாங்கண்டறிவாய் தாண்டவக்கோனே.

ஓசையுள்ளடங்குமுன்னர் தாண்டவக்கோனே-மூலத், தோங்காரங்கண்டறிநீ தாண்டவக்கோனே. 16

மூலப்பகுதியறத் தாண்டவக்கோனே-உள்ள
முளைத்தவேர்பிடுஙகேடா தாண்டவக்கோனே. 17

சாலக்கடத்தியல்பு தாண்டவக்கோனே-மலச்
சாலெனறேதேர்நதறி தாண்டவக்கோனே. 18

பற்றேபிறப்புண்டாக்குந் தாண்டவக்கோனே-அதை
பற்றுதருத்துவிடு தாண்டவக்கோனே. 19

சற்றேபிரமத்திச்சை தாண்டவக்கோனே-உன்னுள்
சலியாமல்வைக்கவேண்டுந் தாண்டவக்கோனே. 20

அவித்தவித்து முளையாதே தாண்டவக்கோனே-பத்தி, அற்றவர்கதியடையார் தாண்டவக்கோனே. 21

செவிதனிற்கேளாதமறை தாண்டவக்கோனே-குரு
செப்பில்வெளியாமல்லவோ தாண்டவக்கோனே. ()

கட்டளைக் கலித்துறை.

மாடுமனைகளு மக்களுஞ்சுற்றமும்வாண்பொருளு
ம், வீடும்பனைகளும் வெண்பொன்னுஞ் செம்பொ
ன்னும் வெண்கலமும், காடுநகரைகளுங் கல்லாம்ப
ணியுங்கரிபரியுந், தேடும்பலவண்டமு நில்லாசிவகதி
சேர்பின்களே. 23

நேரிசை வெண்பா.

போம்போம் போக்கியம்போம் போசனம்போம்
புண்மைபோம், மோகம்போம்மூர்க்கம்போம் மோ
சம்போம் தாகம்போம் வேதமுதலாகமங்கண்மேலா
ன தென்றுபலகால், ஓதுபிரமத்துற்றக்கால். 24

தாண்டவராயக்கோன்-தரு.

தாந்திமித்திமி தந்தக்கோனாரே
தீந்தமித்திமி திந்தக்கோனாரே
ஆநந்தக்கோனாரே அருள்
ஆநந்தக் கோனாரே.

ஆயிரத்தெட்டு வட்டமுங்கண்டே
அந்தவட்டத்துள்ளே நின்றதுங்கண்டேன்
மாயிருஞாலத்து நாற்றெட்டும்பார்த்தேன்
மாதமனத்துறுஞ் சந்தேகந்தீர்த்தேன. (தாந்) 25

அந்தக்கரணமெனச்சொன்னாலாட்டையும்
அஞ்ஞானமென்னு மடாந்தவன்காட்டையும்
சந்தத்தவமென்னும் வாளினால்வெட்டினேன்
சாவாதிருந்திடக் கோட்டையுங்கட்டினேன். (தாந்)

மெய்வாய்கண்மூக்குச் செவியெனுமைந்தாட்டை
வீறுஞ்சுவையொளி யூறோசையாங்காட்டை
எய்யாமலோட்டினேன் வாட்டினேனூட்டினேன்
ஏகவெளிக்குள்ளே யோகவெளிக்குள்ளே. (தாந்)

பற்றிரண்டுமறப் பண்புற்றேனண்புற்றேன் [ன்
பாலையுமுட்கொண்டேன் மேலையாங்கட்கொண்டே

சிற்றின்பநீங்கினேன் மற்றின்பநோக்கினேன்
சிற்பரஞ்சேர்ந்திட்டேன் தற்பரஞ்சார்ந்திட்டேன்.

அண்ணாக்கையூடே யடைத்தேயமுதுண்ணேன்
அந்தரந்தரத்தை யப்பொழுதேயெண்ணேன்
விண்ணாருமொழியை மேவிப்பூசைபண்ணேன்
மெஞ்ஞானமொன்றன்றி வேறேயொன்றைநண்ணே

மண்ணாதிபூதங்க ளைந்தையுங்கண்டேனே
மாயாவிகாரங்கள் யாவையும்விண்டேனே
விண்ணாளிமொளியை மெய்யினுட்கொண்டேனே
மேதினிவாழ்வினை மேலாகவேண்டேனே. (தாந்)

வாக்காதியைந்தையும் வாகளாய்த்தெரிந்தேனே
மாயைசம்பந்தங்க ளைந்தும்புரிந்தேனே
நோக்கரும்யோகங்க ளைந்தும்புரிந்தேனே
நுவலுமற்றைந்தியோக நோககமபரிந்தேனே (தாந்)

ஆறாதாரத் தெய்வங்களைநாடு
அவர்க்குமேலான வாதியைத்தேடு
கூறுனவட்டாவா நநதத்திற்கூடு
கோசமைந்துங்கண்டு குன்றேறிக்கூத்தாடு (தாந்)

நாராயண கோன்கூறுதல்.

ஆதிபகவனையே பசுவே
யன்பாய்நினைப்பாயேல்
சோதிபரகதிதான் பசுவே
சொந்தமதாகாதோ. 33

எங்கும்நிறைப்பொருளைப் பசுவே
யெண்ணிப்பணிவாயேல்
தங்கும்பரகதியில் பசுவே
சந்ததஞ்சாருவையே. 34

அல்லும்பகலுநிதம் பசுவே
யாதிபதந்தேடில்
புல்லுமோட்சநிலை பசுவே
பூர்ணங்காண்பாயே 35

ஒன்றைபிடித்தோர்க்கே பசுவே
உண்டைவசப்படுமே
நின்றநிலைதனிலே பசுவே
நேர்மையறிவாயே 36

எல்லாமிருந்தாலும் பசுவே
யீசரருளிலையே
இல்லரத்தன்மையென்றே பசுவே
யெண்ணிப்பணிவாயே. 37

தேவனுதவியன்றிப் பசுவே
தேர்ந்திடில்வேறொன்றில்லை
ஆவிக்குமாவியதாம் பசுவே
யத்தன்றிருவடியே. 38

தாயினுமன்பனன்றோ பசுவே
சத்திக்குள்ளானவன்றான்
நேயமுடையவர்பால் பசுவே
நீங்காதிருப்பானே. 39

முத்திக்குவித்தானோன் பசுவே
மூலப்பொருளானோன்
சத்திக்குறவானோன் பசுவே
தன்னைத்துதிப்பாயே. 40

ஐவன்றிருப்பாதம் பசுவே
யன்பற்றுநீபணிந்தால்
வெய்யவினைகளெல்லாம் பசுவே
விட்டோடுங்கண்டாயே. 41

சந்திரசேகரன்றாள் பசுவே
தாழ்ந்துபணிவாயேல்
இந்திரன்றன்முதலோர் பசுவே
யேவல்புரிவாரே. 42

கட்புலன்காணவொண்ணுப் பசுவே
கர்த்தனடியிணையை
உட்புலன்கொண்டேத்திப் பசுவே
யுன்னதமேய்வாயே. 43

சுட்டியங்காணவொண்ணுப் பசுவே
சூனியமானவஸ்தை
ஒட்டிப்பிடிப்பாயேன் பசுவே
யுன்னைநிகர்ப்பவர்யார். 44

தன்மனந்தன்னாலே பசுவே
தானுவைச்சாராதார்
வன்மரமொப்பாகப் பசுவே
வையத்துரைப்பாரே. 45

சொல்லென்றுநற்பொருளாம் பசுவே
சோதியைப்போற்றுக்கால்
இல்லென்றுமுத்திநிலை பசுவே
யெப்பொருளுஞ்சொல்லுமே 46

பலரொடு கிளத்தல்.

கண்ணுன்மணியைக் கருதியபேரொளிகை
விண்ணின்மணியை விளக்கொளியைப்போற்றீரே.

பனம்வாக்காயமெனும் வாய்த்தபொறிக்கெட்டாத
தினகரனைநெஞ்சமதிற் சேவித்துப்போற்றீரே. 48

காலமூன்றுங்கடந்த கதிரொளியையுள்ளத்தாற்
சாலமன்றிப்பற்றிச் சலிப்பவரேபோற்றீரே. 49

பாலிற்சுவைபோலும் பழத்தின்மதுப்போலும்
நாலிற்பொருள்போலு நுண்பொருளைப்போற்றீரே

மூவர்முதலை முக்கனியைசர்க்கரையைத்
தேவர்பொருளைத் தெள்ளமுதைப்போற்றீரே. 51

தாயம்மைப்பொருளைச் சுகவாரிதியமிர்தை
நேயமுடனே நிலைபெறவேபோற்றீரே. 52

சராசரத்தைத்தந்த தனிவானமூலமென்னும்
பராபரத்தைப்பற்றிப் பவமறவேபோற்றீரே. 53

மண்ணாதிபூதமுதல் வகுத்ததொருவான்பொருளைக்
கண்ணாரக்காணக் கருத்திசைந்துபோற்றீரே. 54

பொய்ப்பொருளைவிட்டுப புலமறியவொண்ணாத
மெய்ப்பொருளைநாளும விருப்புற்றுப்போற்றீரே.

எள்ளிற்றைலம்போ லெங்குநிறைபொருளை
உள்ளிற்றுதித்தே யுணர்வடைந்துபோற்றீரே. 56

நெஞ்சொடு கிளத்தல்.

பூமியெல்லாமோர்குடைக்கீழ் பொருந்தவரசாளுதற்கு, காமியம்வைத்தாலுனக்குக் கதியுளதோர்கன் மனமே. 57

பெண்ணாசைக்கொண்டு பேணித்திரிந்தாக்கால்
விண்ணாசைவைக்க விதியிலையேகன்மனமே. 58

மேயும்பொறிகடமை மேவிடவொட்டார்க்குவினை
தேயுமென்றேநல்வழியிற் செல்லுநீகன்மனமே. 59

பொன்னிச்சைகொண்டு பூமிமுற்றுந்திரிந்ததனாற்
மன்னிச்சைமோக்கம் வாய்க்குமோகன்மனமே. 60

பொய்யானகல்விகற்றுப்பொருண்மயக்கங்கொள்ளாமல், மெய்யானஞானகல்வி விரும்புவாய்கன்மனமே. 61

பேய்க்குரங்குபோலப் பேருலகிலிச்சைவைத்து, நாய்நரிகள்போலலைந்தாணவ்மையுண்டோகன் மனமே

இரும்பையிழுத்திடுங்காந்தத் தியற்கைபோற்பல பொருளை, விரும்பினதாலவைநில்லையோ விளம்புவாய்கன் மனமே. 63

கற்பநிலையாலலவோ கற்பகாலங்கடத்தல்
சொற்பநிலைமற்றநிலை சூட்சங்காண்கன் மனமே. 64

தேகமிழப்பதற்குச் செபஞ்செய்தேன் றபஞ்செய்தேன், யோகமட்டுஞ் செய்தாலென் யோசிப்பாய்கன் மனமே. 65

சாகாதிருப்பதற்குத் தான்கற்றருங்கல்வியன்றோ
காகானமெய்க்கல்வி வகுத்தறிநீகன் மனமே. 66

அறிவொடு கிளத்தல்.

எல்லாபொருள்களையு மெண்ணப்படிபடைத்த
வல்லாளன்றன்னை வகுத்தறிநீபுல்லறிவே. 67

கட்புலனுக்கெவ்வளவுங் காணுதிருந்தெங்கும்
உட்புலனால்நின்றவொன்றை யுய்த்தரிநீபுல்லறிவே.

விழித்திருக்கும்வேளையிலே விரைத்துறக்கமுண்டாகும், செருத்திலங்குமான்மாவைத் தேர்ந்தறிநீபுல்லறிவே. 69

மெய்யிலொருமெய்யாகி மேலாகிக்காலாக்கிப்
பொய்யிலொருபொய்யாகும் புலமறிநீபுல்லறிவே. ()

ஆத்துமத்தின்கூறான வவயவமேயுன்னுடனே
கூத்துபுரிகின்ற கோளறிவாய்புல்லறிவே. 71

இருட்டறைக்கு நல்விளக்கா யிருக்குமுன்றன்வல்லமையை, அருட்டுறையனிறுத்திவிளக் காகுநீபுல்லறிவே. 72

நல்வழியிற்சென்று நம்பதவியெய்தாமல்
கொற்றவழியிற்சென்று குறுகுவதேன் புல்லறிவே.()

கைவிளக்குக்கொண்டு கடலில்வீழ்வார்போல [வே
மெய்விளக்குன்னுள்ளிருக்க வீழ்குவதேன்புல்லறி

வாசிக்குமேலான வான்கதியுன்னுள்ளிருக்க
லோசிக்குமேற்கதிதா னுனக்கரிதோபுல்லறிவே. 75

அன்னையைப்போலெவ்வுயிரு மன்புடனே சாத்துவ
ரும், முன்னவனைக்கண்டு முத்தியடைபுல்லறிவே. ()

சித்தத்தொடு கிளத்தல.

அஞ்ஞானம்போயிற்றென்று தும்பீபற-பர
மாநந்தங்கண்டோமென்று தும்பீபற
மெஞ்ஞானம்வாய்த்ததென்று தும்பீபற-மலை
மேலேறிக்கொண்டோமென்று தும்பீபற. 77

அல்லல்வலையில்லையென்றே தும்பீபற-நிறை
ஆணவங்களற்றோமென்றே தும்பீபற
தொல்லைவினை நீங்கிற்றென்றே தும்பீபற
பரஞ்சோதியைக்கண்டோமெனத் தும்பீபற. ()

ஐம்பொறியடங்கினவே தும்பீபற-நிறை
அருவேபொருளெனத் தும்பீபற
செம்பொருள்கள்வாய்த்தனவே தும்பீபற-ஒரு
தெய்வீகக்கண்டோமென்றே தும்பீபற. 79

மூவாசைவிட்டோமென்றே தும்பீபற-பர
முத்திநிலைசித்தியென்றே தும்பீபற
தேவாசைவைத்தோமென்று தும்பீபற-இந்தச்
செகத்தையொழித்தோமென்று தும்பீபற. ()

பாழ்வெளிநோக்கியே தும்பீபற-மாயைப்
பற்றற்றோமென்றேநீ தும்பீபற
வாழ்விடமென்றெய்தோந் தும்பீபற-நிறை
வள்ளனிலைச்சார்ந்தோமோ தும்பீபற. 81

எப்பொருளுங்கனவென்றே தும்பீபற-உல
கெல்லாமழியுமென்றே தும்பீபற
அப்பிலெழுத்துடலென்றே தும்பீபற-என்று
மழிவில்லாதாதியென்று தும்பீபற

குயிலொடுகிளத்தல்.

சரணங்களொருநான்கு மடங்கினவே-கெட்டக்
காமமுதலோராறு மொடுங்கினவே
சரணங்களொருநான்குங் கண்டனமென்றே-நிறை
சந்தோஷமாகவே கூவுகுயிலே. 83

உலகமொக்காளமென்றே துகுயிலே-எங்க
ளுத்தமனைக்காண்பரிதென் றோதுகுயிலே
பலமதம்பொய்ம்மையென் றோதுகுயிலே-எழு
பவமகன்றிட்டோமென் றோதுகுயிலே. 84

சாதனங்கள் செய்தவர்கள் சாகார்குயிலே-எல்லாத்
தத்துவங்கடேர்ந்தவர்கள் வேகார்குயிலே
மாதவங்கள்போறு ...ன் வாயாக்குயிலே-மூல
மந்திரங்களான்மகிமை ...ய்க்குங்குயிலே. 85

எட்டிரண்டறிந்தோர்க்கிட ரில்லைகுயிலே-மன
மேகாமனிற்கிற்கதி யெய்துங்குயிலே
நட்டணையைசார்ந்தறிந்து கொள்ளுங்குயிலே-ஆதி
நாயகனைநினைவில்லைத் தோதுகுயிலே, 8(

மயிலொடுகிளத்தல்.

ஆதிமயிலே நடமாடுமயிலே-எங்கள்
ஆதயணிசேடனெங்க ளாடுமயிலே
கூடுபோகுமுன்னங்கதி கொள்ளுமயிலே-என்றும்
குறையாமனமோநெறி கொள்ளுமயிலே.

இல்லறமேயல்லவென்றுடுமயிலே-பத்தி
இல்லவர்க்குமுத்திசித்தி யில்லைமயிலே
நல்லறமேதுறவறங்காணுமயிலே-சுத்த
நாதாந்தவெட்டவெளி நாடுமயிலே. 88

காற்றாலைப்போன்மனதைக்காட்டுமயிலே-வரும்
காலனையுந்தூரத்தி லோட்டுமயிலே
பற்றாடுருவவேபாயுமயிலே-அங்கப்
பற்றுச்சற்றில்லாமற் பண்ணுமயிலே 89

அன்னத்தொடு கிளத்தல்.

சிறுதவளைதான்கலக்கிற்சித்துரத்தினீழன்மறையும்
மறுவாயைதான்கலக்கின் மதிமயங்குமடவனமே.

காற்றின்மரமுறியுங் காட்சியைப்போனல்லறிவு
தூற்றிவிடிலஞ்ஞானந் தூரப்போமடவனமே. 91

அக்கினியாற்பஞ்சுபொதி யழிந்திட்டவாறேபோல்
பக்குவநல்லறிவாலே பாழ்போமடவனமே. 92

சுளவிபுழு வைக்கொணர்ந்துகூட்டி விருப்படுத்தல்போல், வளமுடையவுன்மனதை வசப்படுத்துமடவனமே. 93

அப்புடனேயுப்புச்சேர்ந் தளவுசரியானதுபோல்
ஒப்புறவேபிரமமுட னொன்றிநில்லுமடவனமே. 94

காய்ந்தவிரும்புநிறங் காட்டுதல்போலாத்துமத்தை
வாய்ந்திலங்கச்செய்து வளம்பெறுநீமடவனமே. 95

புல்லாங்குழலூதல்.

தொல்லைப்பிறவிதொலைக்கார்க்குமுத்திதான்
இல்லையென்றூதுகுழல்-கோனே
இல்லையென்றூதுகுழல் 96

இந்திரபோகங்க ளெய்தினுந்தொல்லையென்
றந்தமாயூதுகுழல-கோனே
அந்தமாயூதுகுழல். 97

மோனநிலையினின் முத்தியுண்டாமென்றே
கானமாயூதுகுழல்- கோனே
கானமாயூதுகுழல். 98

நாய்போற்பொறிகளை நாணவிதம்விட்டோர்
பேயரென்றூதுகுழல்-கோனே
பேயரொன்றூதுகுழல். 99

ஓடித்திரிவோர்க் குணர்வுகிட்டும்படி
சாடியேயூதுகுழல்-கோனே
சாடியேயூதுகுழல் 100

ஆட்டுங்கூட்டங்களை யண்டும்புலிகளை
ஓட்டியேயூதுகுழல்-கோனே
ஓட்டியேயூதுகுழல் 101

மட்டிக்குணமுள்ள மாரீசநாய்களை
கட்டிவைத்தூதுகுழல்-கோனே
கட்டிவைத்தூதுகுழல். 102

கட்டாதநாயெல்லாங் காவலுக்கெப்போதும்
கிட்டாதென்றூதுகுழல-கோனே
கிட்டாதென்றூதுகுழல். 103

பெட்டியிற்பாம்பெனப் பேய்மனதடங்க
ஒட்டியேயூதுகுழல்-கோனே
ஒட்டியேயூதுகுழல் 104

ஏனதென்றும்யானென்று மில்லாதிருக்கவே
தனதாகவூதுகுழல்-கோனே
தனதாகவூதுகுழல் 105

அற்றவிடமொன்றே யற்றதோடுற்றதைக்
கற்றனென்றூதுகுழல்-கோனே
கற்றனென்றூதுகுழல் 106

### பால்கறத்தல்.

சாவாதிருந்திடப்பால்கற-சிறம்
தன்னிலிருந்திடும் பால்கற
வேவாதிருந்திடப்பால்கற-வெறும்
வெட்டவெளிக்குள்ளே பால்கற. 107

தோயாதிருந்திடும்பால்கற-முன்
தொல்லைவினையறப்பால்கற
வரியாலுமிந்திடும்பால்கற-வெறும்
வயிறாரவுண்டிடப் பால்கற. 108

நாறாதிருந்திடும்பால்கற-நெடு
நாளுமிருந்திடப்பால்கற
மாறாதொழுகிடும்பால்கற-தலை
மண்டையில்வளரும் பால்கற 109

உலகம்வெறுத்திடும்பால்கற-மிக
ஒக்காளமாகிய பாலகற
கலசத்தினுள்வினை பால்கற-நிறை
கண்டத்தினுள்விழப் பால்கற. 110

ஏப்பம்விடாமலே பால்கற-வரும்
எமன்விலகவேபால்கற
தீப்பொறியோய்ந்திடப் பால்கற-பற
சிவத்துடன்சாரவே பால்கற. 11

அண்ணாவின்மேல்வரும் பால்கற-பேர்
அண்டத்திலூறிடும் பால்கற
விண்ணாட்டிலில்லாத பால்கற-தொல்லை
வேதனைக்கெடவே பால்கற. 112

### கிடைக்கட்டுதல்.

இருவினையாமாடுகளை யேகவிடுகோனே-உன்
இடங்குடனமாடொன்றை யடக்கிவிடுகோனே. ()

சாற்றரியநைட்டிகரே தற்பரத்தைசார்வார்-நாளும்
தவமவமாக்கழிப்பவரே சனனமதில்வருவார். 114

அகங்காரமாடுகண்மூன் றகற்றிவிடுகோனே-நாளும்
அவத்தைவெனு மாடைந்தையடக்கிவிடுகோனே ()

ஒருமலத்த னென்னுமாட்டை யொதிக்கிக் கட்டு
கோனே-உடன், உறையுமிருமலந்தனையு மோட்டிக்
கட்டுகோனே. 116

மும்மலத்தி னெனுமாட்டை முறுக்கிக் கட்டு
கோனே-மிக, முக்கால நேர்மையெல்லா முன்பறி
வாய் கோனே. 117

இந்திரியத் திரையங்களை இறுக்கிவிடு கோனே
என்றும், இல்லையென்றேமறணங் குழலெடுத் தூது
கோனே. 118

உபாதியெனு மூன்றுடை யோட்டிவிடுகோனே
உனக், குள்ளிருக்குங் கள்ளமெல்லா மோடிப்போகு
ங்கோனே. 119

முக்காயமாடுகளை முன்னங்கட்டுகோனே- இனி
மோசமில்லை நாசமில்லை முத்தியுண்டாங்கோனே. ()

கன்மபலமாடுகளைக் கடக்கட்டுகோனே-மற்றக்
கன்மத்திரயப்பசுவைக் கடையிற்கட்டுகோனே. ()

காரணக்கோ மூன்றனையுங் கால பிணிப்பாய்
கோனே-நல்ல, கைவசமாஞ்சாதனங்கள் கடைப்பிடி
ப்பாய் கோனே. 122

வேறு-தரு.

பிரமாந்தரத்திற் பேரொளிகா ணெங்கள்கோ
னே-வாய், பேசாதிருந்துபெரு நிட்டைசாரெங்கள்
கோனே. 123

சிரமதிற்கமலச் சேவை தெரிந்தெங்கள்கோனே-முத்தி, சித்திக்குந் தந்திரஞ் சித்தத்தறி யெங்கள் கோனே. 124

விண்ணூடி வஸ்துவை மெய்யறிவிற்காணுங் கோனே-என்றும், மெய்யேமெய்யிற்கொண்டு மெய்யறிவிற்செல்லுங் கோனே. 125

கண்ணாடியுன்னுள்ளேகண்டுபார்த்துக் கொள்ளுங் கோனே-ஞானக், கண்ணான்றிக்கண்ணாடி காணவொண்ணு தெங்கள் கோனே. 126

சூனியமானதைச்சுட்டுவா ரெங்குண்டுகோனே-புத்தி, சூக்குமமேயதைச் சுட்டுமென் றெண்ணங்கள்கோனே. 127

நித்தியமானதுநேர்படிலே நிலைகோனே-என்றும். நிற்குமென்றேகண்டு நிச்சயங்காணெங்கள்கோனே,

சத்தியும்பரமுந்தன்னுட்கலந்ததே கோனே-சிட்டை சாதிக்கிலிரண்டுந் தன்னுள்ளேகாணலாங்கோனே.

மூகைபோலிருந்து மோனத்தைச்சாதியெங் கோனே-பர, மூலநிலைகண்டு முட்டுப்பிறப்பறு கோனே.

இடைக்காட்டுச் சித்தர்பாடல்

முற்றிற்று.

சிவமயம்.

# அகப்பைசித்தர்பாடல்

ஈஞ்சுண்ணவேண்டாம் அகப்பேய்
நாயகன்றாள்பெறவே
நெஞ்சுமலையாதே அகப்பேய்
நீயொன்றுஞ்சொல்லாதே. 1

பாராபரமானதடி அகப்பேய்
பரவையாகவந்ததடி
தராதலமேழ்புயும் அகப்பேய்
தானேபடைத்ததடி 2

நாதவேதமடி அகப்பேய்
நன்னடங்கண்டாயோ
பாதஞ்சத்தியடி அகப்பேய்
பரவிந்துநாதமடி. 3

விந்துநாதமடி அகப்பேய்
மெய்யாகவந்ததடி
ஐந்துபெரும்பூதம் அகப்பேய்
அதனிடமானதடி 4

நாலுபாதமடி அகப்பேய்
நன்னெறிகண்டாயே
மூலமானதல்லால் அகப்பேய்
முத்தியல்லவடி. 5

வாக்காதியைந்தடியோ அகப்பேய்
வந்தவகைகேளாய்

ஓங்காரமானதடி அகப்பேய்
உண்மையதல்லவடி 6

சாத்தாதியைந்தடியோ அகப்பேய்
சாத்திரமானதடி
மித்தையாகுமடி அகப்பேய்
மெய்யதுசொன்னேனே 7

வசஞ்தியைந்தடியோ அகப்பேய்
வண்மையாய்வந்ததடி
தேசநாடிபத்தேடி அகப்பேய்
திடனிதுகண்டாயே. 8

காரணமானதெல்லாம் அகப்பேய்
கண்டதுசொன்னேனே
மாரணங்கண்டாயே அகப்பேய்
வந்தவிதங்களெல்லாம் 9

ஆறுதத்துவமும் அகப்பேய்
ஆகமஞ்சொன்னதடி
மாருதன்மண்டலமும் அகப்பேய்
வந்ததுமூன்றடியே 10

பிருதிவிபொன்னிறமே. அகப்பேய்
பேதமையல்லவடி
உருவதுநீரடியோ அகப்பேய்
உள்ளதுவெள்ளையடி 11

தேயுசெம்மையடி அகப்பேய்
திடனதுகண்டாயே
வாயுநீலமடி அகப்பேய்
வான்பொருள்சொல்வேனே 21

வானமஞ்சடியோ அகப்பேய்
வந்துநீகேளாய்

ஊனமதாகாதே அகப்பேய்
உள்ளதுசொன்னேனே. 13

அகாரமித்தனையும் அகப்பேய்
அங்கென்றெழுந்ததடி
உகாரங்கூடியடி அகப்பேய்
உருவாகிவந்ததடி. 14

மகாரமாயையடி அகப்பேய்
மலமதுசொன்னேனே
சிகாரமூலமடி அகப்பேய்
சிந்தித்துக்கொள்வாயே 15

வன்னம்புவனமடி அகப்பேய்
மந்திரதந்திரமும்
இன்னமுஞ்சொல்வேனே அகப்பேய்
இம்மென்றுகேட்பாயே 16

அத்திவரைவாடி அகப்பேய்
ஐம்பத்தோரட்சரமும்
மித்தையாங்கண்டாயே அகப்பேய்
மெய்யென்றுநம்பாதே. 17

தத்துவமானதடி அகப்பேய்
சகலமாய்வந்ததடி
புத்தியுஞ்சொன்னேனே அகப்பேய்
பூதவடிவல்லவோ. 18

இந்தவிதங்களெல்லாம் அகப்பேய்
எம்மிறையல்லவடி
அந்தவிதம்வேறே அகப்பேய்
ஆராய்ந்துகாணாயோ 19

பாவந்தீரவென்றால் அகப்பேய்
பாவிக்கலாகாதே

சாவதுமில்லையடி அகப்பேய்
சற்குருபாதமடி. 20

எத்தனைசொன்னாலும் அகப்பேய்
என்மனந்தேறாதே
சித்தமசித்தும்விட்டு அகப்பேய்
சேர்த்துநீகாண்பாயே. 21

சமயமாறுமடி அகப்பேய்
தன்னாலேவந்ததடி
அமையாநின்றவிடம் அகப்பேய்
ஆராய்ந்துசொல்வாயே. 22

ஆராறுமாகுமடி அகப்பேய்
ஆகாதுசொன்னேனே
வேறேயுண்டானால் அகப்பேய்
மெய்யதுசொல்வாயே. 23

உன்னையறிந்தாக்கால் அகப்பேய்
ஒன்றையுஞ்சேராயே
உன்னையறியும்வகை அகப்பேய்
உள்ளதுசொல்வேனே. 24

சரியையாகாதே அகப்பேய்
சாலோகங்கண்டாயே
கிரியைசெய்தாலும் அகப்பேய்
கிட்டுவதொன்றுமில்லை. 25

யோகமாகாதே அகப்பேய்
உள்ளதுகண்டாக்கால்
தேகஞானமடி அகப்பேய்
தேடாதுசொன்னேனே. 26

ஐந்துதலைநாகமடி அகப்பேய்
ஆதாயங்கொஞ்சமடி

இந்தவிஷந்தீர்க்கும் அகப்பேய்
எம்பிறைகண்டாயே. 27

இறையவனென்றதெல்லாம் அகப்பேய்
எந்தவிதமாகும்
அறையவேநீகேளாய் அகப்பேய்
ஆனந்தமானதடி. 28

கண்டுகொண்டேனே அகப்பேய்
காதல்விண்டேனே
உண்டுகொண்டேனே அகப்பேய்
உள்ளதுசொன்னாயே 29

உள்ளதுசொன்னாலும் அகப்பேய்
உன்னாலேகாண்பாயே
கள்ளமுந்திராதே அகப்பேய்
கண்டார்க்குகாமமடி. 30

அறிந்துநின்றாலும் அகப்பேய்
அஞ்சார்கள்சொன்னேனே
புரிந்தவல்வினையும் அகப்பேய்
போகாதேயுன்னைவிட்டு 31

ஈசன்பாசமடி அகப்பேய்
இவ்வண்ணங்கண்டதெல்லாம்
பாசம்பயின்றதடி அகப்பேய்
பரமதுகண்டாயே. 32

சாத்திரசூத்திரமும் அகப்பேய்
சங்கற்பமானதெல்லாம்
பார்த்திடலாகாதே அகப்பேய்
பாழ்பலங்கண்டாயே. 33

ஆறுகண்டாயோ அகப்பேய்
அந்தவினைதீர

தேறித்தெளிவதற்கே அகப்பேய்
தீர்த்தமுமாடாயே. 34

எத்தனைகாலமுந்தான் அகப்பேய்
யோகமிருந்தாலென்
முத்தனும்ஆவாயோ அகப்பேய்
மோட்சமுமுண்டாமோ. 35

நாசமாவதற்கே அகப்பேய்
நாடாதேசொன்னேனே
பாசம்போனாலும் அகப்பேய்
பசுக்களும்போகாதே. 36

நாணமேதுக்கடி அகப்பேய்
நல்வினை தீர்ந்தாக்கால்
காணவேணுமென்றால் அகப்பேய்
காணக்கிடையாதே 37

சும்மாயிருந்துவிடாய் அகப்பேய்
சூத்திரஞ்சொன்னேனே
சும்மாயிருந்தவிடம் அகப்பேய்
சுட்டதுகண்டாயே. 38

உன்றனைக்காணாதே அகப்பேய்
ஊனுள் நுழைந்தாயே
என்னைக்காணாதே அகப்பேய்
இடத்திலேவந்தாயே. 39

வானமோடிவரில் அகப்பேய்
வந்தும்பிறப்பாயே
தேனையுண்ணாமல் அகப்பேய்
தெருவோடலைந்தாயே. 40

சைவமானதடி அகப்பேய்
தானாகநின்றதடி

சைவமில்லையாகில் அகப்பேய்
சலம்வருங்கண்டாயே. 41

ஆசையற்றவிடம் அகப்பேய்
ஆசாரங்கண்டாயே
ஈசன்பாசமடி அகப்பேய்
எங்ஙனஞ்சென்றாலும் 42

ஆணவமூலமடி அகப்பேய்
அகாரமாய்வந்ததடி
கோணுமுகாரமடி, அகப்பேய்
கூடப்பிறந்ததுவே. 43

ஒன்றுமில்லையடி அகப்பேய்
உள்ளபடியாச்சே
நன்றில்லைதீதில்லையே அகப்பேய்
நாணமுமில்லையடி 44

சும்மாயிருந்தவிடம் அகப்பேய்
சுட்டதுசொன்னேனே
எம்மாயமீதறியேன் அகப்பேய்
என்னையுங்காணேனே 45

கலைகளேதுக்கடி அகப்பேய்
கண்டார்நகையாரோ
நிலைகளேதுக்கடி அகப்பேய்
நீயார்சொல்வாயே. 46

இந்தவமிர்தமடி அகப்பேய்
இரவிவிஷமோடி
இந்துவெள்ளையடி அகப்பேய்
இரவிசிவப்பாமே. 47

ஆணல்லபெண்ணல்லவே அகப்பேய்
அக்கினிகண்டாயே

தானுவுமிப்படியே அகப்பேய்
சற்குருகண்டாயே. 48

என்னபடித்தாலும் அகப்பேய்
எம்முறையாகாதே
சொன்னதுகேட்டாயே அகப்பேய்
சும்மாயிருந்துவிடு 49

காடுமலையுமடி அகப்பேய்
கடுந்தவமானாலென்
வீடும்வெளியாமோ அகப்பேய்
மெய்யாகவேண்டாமோ 50

பரத்திலேசென்றாலும் அகப்பேய்
பாரிலேமீளுமடி
பரத்துக்கடுத்தவிடம் அகப்பேய்
பாழதுகண்டாயே. 51

பஞ்சமுகமேது அகப்பேய்
பஞ்சுபடுத்தாலே
குஞ்சிதபாதமடி அகப்பேய்
குருபாதங்கண்டாயே. 52

பங்கமில்லையடி அகப்பேய்
பாதமிருந்தவிடம்
கங்கையில்வந்ததெல்லாம் அகப்பேய்
கண்டுதெளிவாயே. 53

தானறநின்றவிடம் அகப்பேய்
சைவங்கண்டாயே
ஊன்றநின்றவர்க்கு அகப்பேய்
ஊனமொன்றில்லையடி. 54

சைவமாருக்கடி அகப்பேய்
தன்னையறிந்தவர்க்கே

சைவமானவிடம் அகப்பேய்
சற்குருபாதமடி. 55

பிறவிதீரவென்றால் அகப்பேய்
பேதகம்பண்ணாதே
துறவியானவர்கள் அகப்பேய்
சும்மாயிருப்பார்கள். 56

ஆறலைந்தாலும் அகப்பேய்
நீயலையாதேயடி
ஊறலைந்தாலும் அகப்பேய்
ஒன்றையுங்நாடாதே. 57

தேனாறுபாயுமடி அகப்பேய்
திருவடிகண்டவர்க்கே
ஊனாறுமில்லையடி அகப்பேய்
ஒன்றையும்நாடாதே. 58

வெள்ளைகறுப்பாமோ அகப்பேய்
வெள்ளியுஞ்செம்பாமோ
உள்ளதுவுண்டோடி அகப்பேய்
உன்னைகண்டாயே. 59

அறிவுண்மன்னுமடி அகப்பேய்
ஆதாரமில்லையடி
அறிவுபாசமடி அகப்பேய்
அருளதுகண்டாயே. 60

வாசியிலேறியடி அகப்பேய்
வானபொருள்தேடாயோ
வாசியிலேறினாலும் அகப்பேய்
வாராதுசொன்னேனே. 61

தூராதிதூரமடி அகப்பேய்
வாராதுசொன்னேனே

பாராமற்பாரடியோ அகப்பேய்
பாழ்வினை தீரவென்றால் 62

உண்டாக்கிக்கொண்டதல்ல அகப்பேய்
உள்ளதுசொன்னேனே
கண்டார்கள்சொல்வாரோ அகப்பேய்
கற்பனையற்றதடி. 63

நாலுமறைகாணா அகப்பேய்
நாதனையார்காண்பார்
நாலுமறைமுடிவில் அகப்பேய்
நற்குருபாதமடி 64

மூலமில்லையடி அகப்பேய்
முப்பொருளில்லையடி
மூலமுண்டானால் அகப்பேய்
முத்தியுமுண்டாமே 65

இந்திரசாலமது அகப்பேய்
எண்பத்தொருபதமும்
மந்திரமப்படியே அகப்பேய்
வாயைத்திறவாதே. 66

பாழாகவேணுமென்றால் அகப்பேய்
பார்த்ததைநம்பாதே
கேளாமற்சொன்னேனே அகப்பேய்
கேள்வியுமில்லையடி. 67

சாதிபேதமில்லை அகப்பேய்
தானாகநின்றவர்க்கு
ஓதியுணர்ந்தாலும் அகப்பேய்
ஒன்றுந்தானில்லையடி. 68

சூழவானமடி அகப்பேய்
சுற்றிமாக்காவில்

வேழமுண்டகனி அகப்பேய்
மெய்யதுகண்டாயே. 69

நானுமில்லையடி அகப்பேய்
நாதனுமில்லையடி
தானுமில்லையடி அகப்பேய்
சற்குருவில்லையடி. 70

மந்திரமில்லையடி அகப்பேய்
வாதனையல்லவடி
தந்திரமில்லையடி அகப்பேய்
சமயமழிந்தபடி. 71

பூசைபசாசமடி அகப்பேய்
போதமேகோஷ்டமடி
ஈசன்மாயையடி அகப்பேய்
எல்லாமுமிப்படியே 72

சொல்லலாகாதே அகப்பேய்
சொன்னாலுநதோஷமடி
இல்லையில்லையடி அகப்பேய்
ஏகாந்தங்கண்டாயே. 73

தத்துவதெய்வமடி அகப்பேய்
சதாசிவமானதடி
மற்றுள்ளதெய்வமெல்லாம் அகப்பேய்
மாயைவடிவாமே. 74

வார்த்தையல்லவடி அகப்பேய்
வாசாமகோசரத்து
ஏற்றதல்லவடி அகப்பேய்
என்னுடன்வந்ததல்ல. 75

சாத்திரமில்லையடி அகப்பேய்
சலனங்கடந்ததடி

பார்த்திடலாகாதே அகப்பேய்
பாவனைகெட்டாதே 76

என்னபடித்தாலென் அகப்பேய்
ஏதுதான்செய்தாலென்
சொன்னவிதங்களெல்லாம் அகப்பேய்
சுட்டதுகண்டாயே. 77

தன்னையறியவேணும் அகப்பேய்
சாராமற்சாரவேணும்
பின்னையறிவதெல்லாம் அகப்பேய்
பேயறிவாகுமடி. 78

பிச்சையெடுத்தாலும் அகப்பேய்
பிறவிதொலைபாதே
இச்சையற்றவிடம் அகப்பேய்
எம்மிறைகண்டாயே. 79

கோலமாகாதே அகப்பேய்
குதர்க்கமுமாகாதே
சாலமாகாதே அகப்பேய்
சஞ்சலமாகாதே. 80

ஒப்பனையல்லவடி அகப்பேய்
உன்னுணைசொன்னேனே
அப்புடனுப்பென்வே அகப்பேய்
ஆரர்ய்ந்திருப்பாயே. 81

மோட்சம்வேண்டார்கள் அகப்பேய்
முத்தியும்வேண்டார்கள்
தீட்சைவேண்டார்கள் அகப்பேய்
சின்மயமானவர்கள் 82

பாலன்பிசாசமடி அகப்பேய்
பார்த்தாக்கால்பித்தனடி
காலமூன்றுமல்ல அகப்பேய்
காரியமல்லவடி. 83

கண்டதுமில்லையடி அகப்பேய்
கண்டவருண்டானால்
உண்டதுவேண்டடிபோ அகப்பேய்
உன்னுணைசொன்னேனே. 84

அஞ்சையுமூணாதே அகப்பேய்
ஆசையும்வேண்டாதே
நெஞ்சையும்விட்டுவிடு அகப்பேய்
நிஷ்டையிற்சாராதே. 85

நாதாந்தவுண்மையிலே அகபபேய்
நாடாதேசொன்னேனே
மீதானசூதானம் அகப்பேய்
மெய்யென்றுநம்பாதே. 86

ஒன்றொடொன்றுகூடில் அகப்பேய்
ஒன்றுங்கெடுங்காணே
நின்றபரசிவமும அகப்பேய்
நில்லாதுகண்டாயே. 87

தோன்றும்வினைகளெல்லாம் அகப்பேய்
சூனியங்கண்டாயே
தோன்றாமற்றோன்றிவிடும் அகப்பேய்
சுத்தவெளிதனிலே. 88

பொய்யென்றுசொல்லாதே அகப்பேய்
போக்குவருத்துதானே
மெய்யென்றுசொன்னக்கா அகப்பேய்
வீடுபெறலாமே 89

வேதமோதாதே அகப்பேய்
மெய்கண்டோமென்னாதே
பாதநம்பாதே அகப்பேய்
பாவித்துப்பாராதே. 90

அகப்பைசித்தர்பாடல்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

# குதம்பை சித்தர்பாடல்.

---

வெட்டவெளிதன்னை மெய்யென் றிருப்பார்க்கு
பூட்டயமேதுக்கடி † குதம்பாய்
பட்டயமேதுக்கடி. 1

மெய்ப்பொருள்கண்டு விளங்குமெய்ஞ்ஞானிக்குக்
கற்பங்களேதுக்கடி குதம்பாய்
கற்பங்களேதுக்கடி 2

காணாமற்கண்டு கருத்தோடிருப்பார்க்கு
வீணாசையேதுக்கடி குதம்பாய்
வீணாசையேதுக்கடி. 3

வஞ்சகமற்று வழிதன்னைக்கண்டோர்க்கு
சஞ்சலமேதுக்கடி குதம்பாய்
சஞ்சலமேதுக்கடி. 4

ஆதாரமான வடிமுடிகண்டோர்க்கு
வாதாடடமேதுக்கடி குதம்பாய்
வாதாட்டமேதுக்கடி. 5

நித்திரைகெட்டு நினைவோடிருப்பார்க்கு
முத்திரையேதுக்கடி குதம்பாய்
முத்திரையேதுக்கடி. 6

---

* குதம்பை-ஆபரணம்.

† குதம்பாய்-ஆபரணத்தையுடையவள்.

தந்திரமான தலந்தனினிற்போர்க்கு
மந்திரமேதுக்கடி குதம்பாய்
மந்திரமேதுக்கடி. 7

சத்தியமான தவத்திலிருப்போர்க்கு
உத்தியமேதுக்கடி குதம்பாய்
உத்தியமேதுக்கடி. 8

நாட்டத்தைப்பற்றி நடுவணைசேர்வோர்க்கு
வாட்டங்களேதுக்கடி குதம்பாய்
வாட்டங்களேதுக்கடி. 9

முத்தமிழ்கற்று முயங்குமெய்ஞ்ஞானிக்குச்
சத்தங்களேதுக்கடி குதம்பாய்
சத்தங்களேதுக்கடி. 10

உச்சிற்குமேற்சென் றுயர்வெளிகண்டோர்க்கு
இச்சிப்பிங்கேதுக்கடி குதம்பாய்
இச்சிப்பிங்கேதுக்கடி. 11

வேகாமல்வெந்து வெளியொளிகண்டோர்க்கு
மோகாந்தமேதுக்கடி குதம்பாய்
மோகாந்தமேதுக்கடி. 12

சாகாமற்றாண்டி தனிவழிபோவோர்க்கு
ஏகாந்தமேதுக்கடி குதம்பாய்
ஏகாந்தமேதுக்கடி. 13

அந்தரந்தன்னி லசைந்தாடுமுத்தர்க்கு
தந்திரமேதுக்கடி குதம்பாய்
தந்திரமேதுக்கடி. 14

ஆனந்தம்பொங்கி யறிவோடிருப்பார்க்கு
ஞானந்தானேதுக்கடி குதம்பாய்
ஞானந்தானேதுக்கடி. 15

சித்திரக்கூத்தைத் தினந்தினங்காண்போர்க்கு
பத்திரமேதுக்கடி குதம்பாய்
பத்திரமேதுக்கடி 16

முக்கோணந்தன்னின் முளைத்தமெய்ஞ்ஞானிக்குச்
சட்கோணமேதுக்கடி குதம்பாய்
சட்கோணமேதுக்கடி 17

அட்டதிக்கெல்லா மசைந்தாடுநாதர்க்கு
நட்டணையேதுக்கடி குதம்பாய்
நட்டணையேதுக்கடி 18

முத்திபெற்றுள்ள முயன்றுமெய்ஞ்ஞானிக்குப்
பத்தியமேதுக்கடி குதம்பாய்
பத்தியமேதுக்கடி 19

அல்லலை நீக்கி யறிவோடிருப்பார்க்குப்
பல்லாக்கேதுக்கடி குதம்பாய்
பல்லாக்கேதுக்கடி 20

அட்டாங்கயோக மறிந்தமெய்ஞ்ஞானிக்கு
முட்டாங்கமேதுக்கடி குதம்பாய்
முட்டாங்கமேதுக்கடி 21

வேகமடக்கி விளங்குமெய்ஞ்ஞானிக்கு
யோகந்தானேதுக்கடி குதம்பாய்
யோகந்தானேதுக்கடி 22

மாத்தானைவென்று மலைமேலிருப்போர்க்கு
பூத்தானமேதுக்கடி குதம்பாய்
பூத்தானமேதுக்கடி 23

செத்தாரைப்போலத் திரியுமெய்ஞ்ஞானிக்கு
கைத்தாளமேதுக்கடி குதம்பாய்
கைத்தாளமேதுக்கடி 24

கண்டாரைநோக்கிக் கருத்தோடிருப்பார்க்குக்
கொண்டாட்டமேதுக்கடி குதம்பாய்
கொண்டாட்டமேதுக்கடி 25

காவலைவென்ற கருத்தறிவாளர்க்குக்
கோளங்களேதுக்கடி குதம்பாய்
கோளங்களேதுக்கடி 26

வெண்காயமுண்டு மிளகுண்டுசுக்குண்டு
உண்காயமேதுக்கடி குதம்பாய்
உண்காயமேதுக்கடி 27

மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்போர்க்குத்
தேங்காய்ப்பாலேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பாலேதுக்கடி 28

பட்டணஞ்சுற்றிப் பகலேதிரிவார்க்கு
முட்டாக்கேதுக்கடி குதம்பாய்
முட்டாக்கேதுக்கடி 29

தாவாரமில்லை தனக்கொருவீடில்லை
தேவாரமேதுக்கடி குதம்பாய்
தேவாரமேதுக்கடி 30

பின்னையறிந்து தலைவனைச்சேர்ந்தோர்க்குப்
பின்னாசையேதுக்கடி குதம்பாய்
பின்னாசையேதுக்கடி 31

பத்தாவுந்தானும் பதியோடிருப்பார்க்குக்
குத்தாரமேதுக்கடி குதம்பாய்
உத்தாரமேதுக்கடி 32

குதம்பைசித்தர்பாடல்.

முற்றிற்று.

சிவமயம்.

# கடுவெளி சித்தர் பாடல்.

## ஆனந்தக் களிப்பு.

பாபஞ்செய்யாதிரு மனமே-நாளைக்
கோபஞ்செய்தேயமன்
கொண்டோடிப்போவான்
பாபஞ்செய்யாதிரு மனமே.

சாபங்கொடுத்திடலாமோ-விதி
தன்னைநம்மாலே தடுத்திடலாமோ
கோபங்கொடுத்திடலாமோ-இச்சை
கொள்ளக்கருத்தைக் கொடுத்திடலாமோ. பாப

சொல்லருஞ்சூதுபொய் மோசம்-செய்தாற்
சுற்றத்தைமுற்றாய்த் துடைத்திடுநாசம்
நல்லபக்திவிசு வாசம்-எந்த
நாளுமனிதர்க்கு நன்மையாய்நேசம். பாப

நீர்மேற்குமிழியிக் காயம்-இது
நில்லாதுபோய்விடு நீயறிமாயம்
பார்மீதின்மெத்தவு நேயம்-சற்றும்
பற்றாதிருந்திடப் பண்ணுமுபாயம். பாப

நந்தவனத்திலோ ராண்டி-அவன்
நாலாறுமாதமாய்க் குயவனைவேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி-மெத்தக்
கூத்தாடிக்கூத்தாடி போட்டுடைத்தாண்டி. பாப

தூஷணமாகச் சொல்லாதே-தேடுஞ்
சொத்துக்களிலொரு தூசுநில்லாதே
ஏடணைமூன்றும் பொல்லாதே-சிவத்
திச்சைவைத்தாலெம லோகம்பொல்லாதே. பாப

நல்லவழிதனை நாடு-எந்த
நாளும்பரமனை நத்தியேதேடு
வல்லவர்கூட்டத்திற் கூடு-அந்த
வள்ளலைநெஞ்சினில் வாழ்த்திக்கொண்டாடு. பாப

நல்லவர்தம்மைத் தள்ளாதே-அறம்
நாலெட்டிலொன்றேனு நாடித்தள்ளாதே
பொல்லாங்கிலொன்றுங் கொள்ளாதே-கெட்ட
பொய்ம்மொழிக்கோள்கள் பொருந்தவிள்ளாதே

வேதவிதிப்படி நில்லு-நல்லோர்
மேவும்வழியினை வேண்டியேசெல்லு
சாதகநிலைமையே சொல்லு-பொல்லாச்
சண்டாளக்கோபத்தை சாதித்துக்கொல்லு. பாப

பிச்சையென்றொன்றுங் கொள்ளாதே-எழில்
பெண்ணாசைகொண்டு பெருக்கமாளாதே
இச்சையதன்னை யாளாதே-சிவன்
இச்சைகொண்டவ்வழி யேறிமீளாதே. பாப

மெய்ஞ்ஞானப்பாதையி லேறு-சுத்த
வேதாந்தவெட்ட வெளியினைத்தேறு
அஞ்ஞானமார்க்கத்தைத் தூறு-உன்னை
அண்டினோர்க்கானந்த மாம்வழிகூறு. பாப

மெய்க்குருசொற்கடக் காதே-நன்மை
மென்மேலுஞ்செய்கை மிகவடக்காதே
பொய்க்கலையானடக் காதே-நல்ல
புத்தியைபொய்வழி தனினடக்காதே. பாப

கூடவருவதொன் றில்லை-புழுக்
கூடெடுத்திங்ங னுலவுதேதொல்லை
தேடருமோட்சம் தொல்லை-அதைத்
தேடும்வழிமையைத் தெளிவோருமில்லை. பாப

ஐந்துபேர்சூழ்ந்திடுங் காடு-இந்த
ஐவர்க்குமைவ ரடைந்திடுநாடு
முந்திவுருந்திநீ தேடு-அந்த
மூலமறிந்திட லாமுத்திவீடு. பாப

உள்ளாகநால்வகைக் கோட்டை-பகை
ஓடப்பிடித்திட்டா லாளலாநாட்டை-வெட்டிக்
கள்ளப்புலனென்னுங் காட்டை-வெட்டிக்
கனலிட்டெரித்திட்டாற் காணலாம்வீட்டை பாப

கச்சிக்கோடில்வினை போமோ-அந்தக்
கங்கையாடில்கதி தானுமுண்டாமோ
பேசுமுன்கன்மங்கள் சாமோ-பல
பேதம்பிறப்பது போற்றினும்போமோ. பாப

பொய்யாகப்பாராட்டுங் கோலம்-எல்லாம்
போகவேவாய்த்திடுமி யார்க்குப்போங்காலம்
மெய்யாகவேசுத்த சாலம்-பாரில்
மேவப்புரிந்திடி லென்னனுகூலம். பாப

சந்தேகமில்லாத தங்கம்-அதைச்
சார்ந்துகொண்டாலுந் தாழ்விலாப்பொங்கம்
அந்தமில்லாதவோர் துங்கம்-எங்கும்
ஆனந்தமாக நிரம்பியபுங்கம். பாப

பாரிலுயர்ந்தது பக்தி-அதைப்
பற்றினபேர்க்குண்டு மேவருமுத்தி
சீரியவுயரட்ட சித்தி-யார்க்குஞ்
சித்திக்குமேசிவன் செயலினல்பத்தி பாப

அன்பெனுநன்மலர் தூவி-பர
மானந்தத்தேவ னடியிணைமேவி
இன்பொடுமுன்னுட லாவி-நாளும்
ஈடேற்றத்தேடாய்நீ இங்கேகுலாவி பாப

ஆற்றும்வீடேற்றங் கண்டு-அதுக்
கானவழியை யறிந்துநீகொண்டு
சீற்றமில்லாமலே தொண்டு-ஆதி
சிவனுக்குச்செய்திடிற் சேர்ந்திடுங்கொண்டு பாப

ஆண்மாவாலாடிடு மாட்டந்-தேகத்
தான்மாவற்றபோதே யாமுடல்வாட்டம்
வான்கதிமீதிலே நாட்டம்-நாளும்
வையிலுனக்கு வருமேகொண்டாட்டம். பாப

எட்டிரண்டையு மோர்ந்து-மறை
யெல்லாமுனக்குள்ளே யேகமாய்த்தேர்ந்து
வெட்டவெளியினைச்சார்ந்து-ஆனந்த
வெள்ளத்தின்மூழ்கி மிகுகளிகூர்ந்து. பாப

இந்தவுலகமு முள்ளுஞ்-சற்றும்
இச்சைவையாமலே யெந்நாளுந்தள்ளு
செந்தேன்வெள்ளமதை மொள்ளு-உன்றன்
சிந்தைதித்திக்கத் தெவிட்டவுட்கொள்ளு. பாப

பொய்வேதந்தன்னைப் பாராதே-அந்தப்
போதகர்சொற்புந்தி போதவேவாராதே
மைவிழி பாரைச் சாராதே-துன்
மார்க்கர்கள்கூட்டத்தின் மகிழ்ந்துசேராதே. பாப

வைதோரைக்கூட வையாதே-இந்த
வையகமும்பொய்த் தானும்பொய்யாதே
வெய்யவினைகள் செய்யாதே-கல்லை
வீணிற்பறவைகண் மீதிலெய்யாதே. பாப

சிவமன்றிவேறே வேண்டாதே-யார்க்குந்
தீங்கானசண்டையைச் சிறக்கத்தூண்டாதே
தவநிலைவிட்டுத் தாண்டாதே-நல்ல
சன்மார்க்கமில்லாத நூலைவேண்டாதே. பாப

பாம்பினைப்பற்றியாட் டாதே-உன்றன்
பத்தினிமார்களைப் பழித்துக்காட்டாதே
வேம்பினையுலகி லூட்டாதே-உன்றன்
வீறுப்புதன்னை விளங்கநாட்டாதே பாப

போற்றுஞ்சடங்கை நண்ணாதே-உன்னைப்
புகழ்ந்துபலரிற் புகலவொண்ணாதே
சாற்றுமுன்வாழ்வை யெண்ணாதே-பிறர்
தாழும்படிக்குநீ தாழ்வாக்ப்பண்ணாதே. பாப

கஞ்சாபுகைபிடி யாதே-வெறி
காட்டிமயங்கியே கட்குடிபாதே
அஞ்சவுயிர்மடி யாதே-பத்தி
யற்றவஞ்ஞானத்தி னூல்படியாதே. பாப

பத்தியெனுமேணி நாட்டித்-தொந்த
பந்தமற்றவிடம் பார்த்ததைநீட்டி
சத்தியமென்றதை யீட்டி-நாளுந்
தன்வசமாக்கிக்கொள் சமயங்களோட்டி. பாப

செப்பரும்பலவித மோகம்-எல்லாஞ்
சீயென்றொறுத்துத் திடங்கொள்விவேகம்
ஒப்பறுமட்டாங்க யோகம்-நன்றாய்
ஓர்ந்தறிவாயவற் றுண்மைசம்போகம் பாப

எவ்வகையாகநன் னீதி-அவை
யெல்லாமறிந்தே யெடுத்துநீபோதி
ஒவ்வாதென்றபல சாதி-யாவும்
ஒவ்றென்றறிந்தே யுணர்ந்துறவோதி. பாப

கள்ளவேடம்புனை யாதே-பல
கங்கையிலேயுன் கடநனையாதே
கொள்ளைகொள்ள நினை யாதே-நட்புக
கொண்டுபுரிந்துநீ கோண்முனை யாதே. பாப

எங்குஞ்சயபிர காசன்-அன்பர்
இன்பவிருதயத் திருந்திடும்வாசன்
துங்கவடியவர் தாசன்-தன்னைத்
துதிக்கிறபதவி யருளுவனீசன். பாப

கடுவெளிசித்தர்பாடல்.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ

ஓம்பரப்பிரம்மணேநம:

# சிவயோக சாரம்.

## சிறப்புப் பாயிரம்.

இஃது, ஸ்ரீமாந் சுலக்ஷணகவி

பராங்குச நாவலரவர்களாலியற்றிய

"நிலைமண்டில ஆசிரியப்பா.

தேசார்பல்வளஞ் செறிதருமருணைச்
சீசானியத்திய லிலங்கும்வெட்டமும்
புத்திரதனுட் புகழுடன்வாழ்வோன்
சத்துருஜயங்கொள் க்ஷத்திரியக்குலத்
தோங்குமிராம்சிங் குதவியபுதல்வன்
பாங்குடன்கிருஷ்ணபஜனை பன்னிரண்டான்
டற்பொடுபுரிந்தவ் வருசிருவருளாற்
பொற்பினைமிகுத்த பூவலம்வருகையில்
உத்தரதேசத் துற்றபஞ்சாபெனும்
அத்தினாபுரியி லருளரர்நானப்
பரபாகுருபரம் பரையினைச்சார்ந்திப்
பூபாரத்தைப் போக்குங்குருசரண்
தாஸ்பாபாஜி தண்டாமரைத்தாண்
பூசித்தவர்தம் நாரணதேசிகர்
ஞானநன்னியுற போதனையானும்

வானருளாலும் வாசியோகத்தை
முற்றுமுணர்ந்து மூதறிவாளர்
கற்றுணர்ந்துய்யக் கருதிமிக்கற்பொடு
சற்சிவயோக சாரமென்றிந்நூல்
பொற்புடனியற்றிப் புண்ணியருதவிகொண்
டச்சிடுவித்தே யளித்தனனகிலரும்
மெச்சும்பூரண விவேகானந்தனே.

பண்ணுருட்டிக்கடுத்த அங்குசெட்டிப்பாளையம்
ம-ா-ா-ஸ்ரீ, பொ-சின்னசாமிசெட்டியாராலியற்றிய

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஏர்கொண்ட மறைநான்கு மங்கமாறு
மினியபல நன்னூலும் யாவுந்தேர்ந்திப்
பார்கொண்ட பல்லோர்க்கு முபதேசித்துப்
பரிவுடனாரண பிரமத்திற் காட்டப்பட்டு
நார்கொண்ட வடியேனைக் கருணைகூர்ந்து
ஞானமருள் பூரணானந்தன் சொன்ன
நீர்கொண்ட சிவயோக சாரந்தன்னை
நேசிப்பார் சுனகவரை பூசிப்பாரே.

திருவண்ணாமலைக்கீசான்யதிசையில்
கானிலப்பாடி திருமடத்தில் சத்துசித்தானந்த
சொரூபமாய் எழுந்தருளி விளங்காநின்ற
நாராயணதேசிகர் மாணாக்கரி லொருவரான
தாண்டவராய சுவாமிகளா லியற்றிய

விருத்தம்.

கலையான ரேசகபூரகமுங் கும்ப
கண்ணொளியுங் கதிர்மதியும் விண்ணிற்பாய
நிலையான சிவயோகச் சாரம்பூண்டு
நிட்டானு பூதியனு போகத்துண்டு

தலையான கனகவரை மீதிருந்துத்
தானான பூரணனு ரியற்றுமிந்த
லலையான கடல்கடக்கப் படவிலேற்று
மூரியாரஞ் சீவமுத்தர்க் கமுதமாமே.

---

மேற்படி மடம் திருக்கூட்டத் தலைவரான
ஆறுமுகஞ்சி தமிழ்ப்புலமை நடாத்திய
சாமிநாதபிள்ளை யவர்களா லியற்றிய
ஆசிரிய விருத்தம்.

அருமறைக்கருத்த நிலகிலகியார்த்தமா
யத்துவித சித்தாந்தமா
யறிவொணுச்சின்மயச் சுபாவப்பிரதிட்டையா
யபரோட்ச காட்சிநிலையாய்த்
தருநிறைநிறைந்த நாரணபிரமதருமநிலை
தத்பதமளித்த ததனுற்
றரணியிலுளோர் தவித்திடு பேழைதிறவிலாத்
தருதிறவு கோலாமெனக்
குருமுறைகளினிதருஞ் சிவயோகசாரமாய்க்
கூறுமிந்நூ லுரைசெயக்
கொண்டபூரணதாசர் விண்டதத்துவஞான
கொள்கையை விரித்துணர்ந்தே
மருவுறைசிதாகாச மயமாகிதண்ணமுத
வானமுத முண்டசுமுக
வசமாகிமாறுத மாதவத்தானந்த
வாழுண்ட தாகுமிதுவே.

மேற்படிமடம் திருக்கூட்டத்தி லொருவராகிய
தத்வயோக நடாத்தும் ஐங்குணம்
ஆ-வெங்கடசுப்பா செட்டியாரா லியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மூலத்தின்வழியே நிலைமையைக்கண்டு
முக்குணப்புலன்களையடக்கி
ஞாலத்தின்யோகச் சாதனைமுடித்து
நற்பதமடைவதற் குணர்ந்தே
காலத்தினின்றே ரத்விதஞானக்
காட்சியை யியற்றிடுந்தானைக்
கோலத்தின்யோகப் பூரணதாசர்
கூறியசாரநூ லிதுவே.

மேற்படிமடம் திருக்கூட்டத்தி லொருவராகிய
வள்ளிவாகை ம-ள-ள-ஸ்ரீ,
ஆறுமுகம்பிள்ளை யவர்களா லியற்றிய
வண்ணம்.

அரிமருகனுறையுமொருசிறுகிரியினருவிபுன
லதுபெருகிவிளைவயற்கானிலம்வாழும்
அதிககனதுரவில்வலபாபிரமசொரூபமென
வருடருநாரணகடனன்னீராகும்
கருதரியசதுமறைகள்ரகசியமதொடுசொலமிக்
கவர்கள்வசமதிலுறுமிச்சிவயோகக்
கதிதருகுசருதியிதைதமுதியதவநிலையிலுள
கருணைவடிவுடையபரிபூரணமேகம்

தருமகுணபெரியவர்களருமைபடுமவராிய
தருபழையகலைகளெனமொழிவாயால்
சலசலெனபெருகிபலசமயபொதுமவுனபயிர்
தழையுவெகுகுமுரலொடுபுவிமீது
அரியசிரவணர்களாக விருளிரவிபனியமென்ன
வகலமினியுடலென்னுமஞ்ஞான [ந்தி
வதர்மகுளத்திடித்தமிர்தமழை பொழிந்ததிதையரு
அனந்தபவபிணியகற்றுமுலகோரே.

---

மேற்படியார் மாணாக்கரி லொருவராகிய
வள்ளிவாகை ம-ா-ா-ஸ்ரீ,
அரங்கசாமிபிள்ளை யவர்களாலியற்றிய

விருத்தம்.

கருவாகி யுருவாகி கருத்துமாகி
காரணநாரண பிரமர் கடிமையாகி
நிருவான நிருவிகற்ப சாரமாகி
நிர்மலநிஷ்கள நேம நிராமயத்தின்
தருவாகி தழைத்தல் விசாரணையுமாகி
சம்பூர்ண தாசனிந்நூல் சார்ந்தமார்க்க
மருவுவா ரன்பருள மகிழ்ந்துதேரி
வையகமு முய்யுமென வாழ்த்துமிக்கோர்.

---

மேற்படி மடத்தலைவர் ம-ா-ா-ஸ்ரீ,
இராமசாமிப்பிள்ளை அவர்களாலியற்றிய

நேரிசை வெண்பா.

நாரணதேசிகன்றனல் லருள்பெற்றேயிலகும்
பூரணதாசன் புகன்றனனூற் -ஆரணஞ்சொல்
யோகசிவசாரநிலை யுன்னியுணர்ந்தார்க்கென்றுந்
தேகசுகமெய்திடவே தேர்ந்து.

மேற்படி மடம் திருக்கூட்டத்தி லொருவராகிய
சின்னதம்பிபத்தர் அவர்களியற்றிய

விருத்தம்.

மின்னொளிக்கு நிசிமையிலே மிருகவருதெரிய வந்தவிளக்கமபோலத். தன்னொளிக்குளாத்தும் தத்துவமுணர்ந்துசிவபோகச் சாரமாக்கைப், பொன்னளிக்குந் தாட்டாந்தப் பூரணமுக்தர் குருவருளால் புகன்றநூலு, முன்னளிக்குந் தேவமிர்த முளைத்தெழுந்த தன்மையென மொழிதந்தாமே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

இந்நூலாசிரியர் மாணாக்கர்
அங்குசெட்டிப்பாளையம் ம-ா-ா-ஸ்ரீ,
ச. நாராயணசெட்டியாரா லியற்றிய
குருஸ்தவம் நேரிசைவெண்பா.

பூமேவுஞ்சான்றோர் புகழ்யோகநன்னிலையைத்
தாமேவிசிவயோகசாரமதாப்-பாமேவும்
பூரணானந்தனெனும் புண்ணியன்புகன்றனால்
காரணன்பொற்றாளை நயந்து.

## அவையடக்கம்.

கனகவரை என்னும் புருவத்திடைநடன ஒலி கேட்டாநந்திக்கும் எந்தைமார்களே தங்கள் பாதபங்கயங்கட் கநந்தவந்தனம் அறிவிற் சிறியேன் குருமுகமா ஹிந்துஸ்தானியா லுணர்ந்த இராஜயோக

மார்க்கத்தை பலநூல்களிலுள்ள அரும்பொருளொடு சிவயோக சாரமெனவரைதலுற்றேன், நீரைப்பிரித்து க்ஷீரத்தைக்கொள்ளு மன்னத்தைப்போல் குற்றந்தவிர்த்து குணத்தைக் கொள்ளக் கோருகிறேன்.

இதுவுமது.

சந்தவிருத்தம்.

ஏதமுற்றபேதையேனியம்புமிந்தயோகநூல்
பேதமற்றபோதமுற்றோர்பேசுவார்களாசையால்
வேதனைப்பட்டுழலுவாரிம் மெய்யுணராப்பொய்யரிட, பூதலத்திலுள்ளதீது, புதுமையன்றுபுலவீர்காள்

---

## முகவுரை,

நீர்வள முதலியவைகளால் சிறப்புற்றோங்கும் உத்தரதேசங்களில்(பஞ்சாப்) என்னும் பாஞ்சால தேசத்திலவதரித்தவராய், ஜீவேசுவர பேதா பேதமுணர்ந்து நித்யானுபவம்செய்யும் பரம யோகீந்திரராய் ஸ்ரீ ஜனகாம்ஸ பூதரான உதாசி பாபாநானக் குரு பரம்பரையினர் அனேக வருடகாலமாக அனுபவித்துவரும் இராஜயோக க்ரமத்தை அச்சங்கத்திலொருவரும் ஞானசிரேஷ்டரும் தயாகுணபரி பூரணருமான குருசரன்தாஸ்பாபாஜி அவர்களால் இந்துஸ்தானி பாஷையி லுபதேசிக்கப் பெற்று ஸ்ரீமத் நாராயணதேசிகர் நியமனத்தினல் இந்ததக்ஷணதேசத்திலுள்ள சகலவருணாச்சிரமிகளுமுய்யும் பொருட்டு தமிழில் மொழி பெயர்த்து உபநிஷத்துக் களிலும் யோகவாசிஷ்டம், பதஞ்சலம், அடயோகம்,

முதலியவைகளிலுள்ள அரும்பொருளைச் சேர்த்து சிவயோகசாரமென நற்பெய ரமைத்து வெளியிட லாயிற்று.

இந்நூலைச் சாங்கோபாங்கமாக வுணரும் புண்ணியோத் கிருஷ்டர்கள், அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், என்னும அஷ்டமா சித்திகளை அடைவ ரென்பது திண்ணம

குருவணக்கம்.

ஆரணசாத்திரமனைத்து முணர்ந்துசீட
ரவித்தையொமகற்றியருள் புரியுஞ்ஞான
பூரணராயெழுந்தெளியேற் குபதேசித்துப்
பூரணாநந்தனென்ன நாமந்தந்த
நாரணதேசிகராமென்குரு நாதன்றன்
நளினமலரடியிணையைச் சிரமேற்கொண்டு
தாரணியிற்சிவயோக சாரமென்னுந்
தகைபெறுமிந்நூலடியேன சாற்றலுற்றேன்.

ஸ்ரீ

ஓம்பரப்பிரம்மணேநம:

# சிவயோகசாரம்.

காப்பு.

நேரிசைவெண்பா

துவராண்ட யுள்ளோருந் தூயுடையா ருப்வான்
சிவயோக சாரமெனச் செப்ப-நவையில்புகழ்
கொண்டபர வைந்துகரக்கோ நின்னடிகட்குத்
தண்டனிட்டே னருளைத்தா.

நான்முகம்.

## ஆசிரியர் நிலை.

இந்த ராஜயோகத்தை அப்பியசிக்கும் ஆசிரியன் தெளிந்த ஆத்மஞானியாய் அடுத்தவர்களை ஆதரித்துபோதிக்கத் தக்கவராயிருக்க வேண்டியது. அதாவது சின்முத்திரையாகியமௌனநிலைஈதென்றும் அதை கைவல்லியப் படுத்துவதற்குரிய ஆசன முதலிய விதிகள் இவையென்றும்சாம்பவிமுதலிய மகாமுத்திரை, யின்னவை யென்றும் குண்டலி ; சக்தி ஈதென்றும் அதைவிழிப்பிக்குமார்க்கம் ஈதென்றும் இதுவே சிவராஜயோகமென்றும் இந்தயோகம் செய்யத்தக்கவர் பெறத்தக்க நாதாந்தம் இது வென்றும் அஃது வசமுற்றால் ஓர்மயக்கந் தோன்றுமென்றும், அதுநீங்கும்வரையில்நின்றால் அருள்தரிசனம் உதயமாமென்றும் அவ்வனுபவம் கிடைக்கில் காண்பரணுதிகள் இறக்குமென்றும் அங்ஙனம் மனம் அ

சையாதிருக்குமென்றும் அப்போது அந்தரதாந்தத்தில் பஞ்சாக்ஷர முதலியவைகள் தோன்று தொடுங்குமென்றும் இத்தன்மைப்பட்ட சுவானுப சாக்ஷாத்காரத்தை உணர்ந்த ஆத்ம ஞானசாரியராய் இருக்கவேண்டும்.

## மாணாக்கரினிலை.

உத்தம ஜென்மமாயும் வித்தைக் குடையவனையும் சாந்தம் சற்குண முடையவனையும் பற்றில்லாதவனையும் காமசங்கற்பம் இல்லாதவனையும் கோபத்தை வென்றவனையும் சத்தியதருமத்தைவிரும்பினவனையும் குருபணிவிடையில் பிரியமுள்ளவனையும் பிதாமாதக்களை உபசரிப்பவனையும் தனது கிருகத்திலிருப்பவனையும் நல்லொழுக்க முடையவனையும் சற்சீடனென்னும் பக்குவமுடையவனையுமுள்ள மாணாக்கனே இவ்விராஜயோகத்துக்கு அதிகாரியென்று சொல்லப்படும்.

இத்தன்மைப்பட்ட சற்சீடன் சாக்ஷாத்காரத்தையுணர்ந்த ஞானசாரியரைக் கண்டெடுத்து இவர் திருவடிகளில் பணிந்து அவர்மனங் களிகூறும்படி நடந்து உடனபொருளாவி மூன்றும் அச்சற்குருவின் திருவடிகளில் தத்தஞ்செய்து அவரால் அநுக்கிரகிக்கும் திருவடிதீக்ஷையும் பிராணயாமத்துக்குரிய மூலமந்திரத்தில் முதல் வாக்கியத்தையும் இந்த யோகத்தின் விதிகளையும் உபதேசிக்கப்பெற்று குருவின் சன்னிதியிலிருந்து சற்குருவால் சொல்லாமற் சொல்லும் முதல் வாக்கியத்தை உன்னுமல் உன்னி யோகசாதனை செய்து வருங்காலையில் சுவானு பவத்

தின் கண் அடையாநின்றசம்சயங்களனைத்தும் தீரு ம்படி அவ்வாசிரியரிடத்தில் விண்ணப்பம் அடிக்கடி செய்துக்கொண்டு அந்தசங்கற்பம் கசிக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டுவதாம்.

நூல்.

# பிராணவாயுவின் நிலை.

அதாவது மாணுக்கன் ஆரம்பத்தில் கவனிக்க வேண்டிய விதிகள் யாதெனில் சூரியன் சந்திரன் அக்கினியென்னும் மூன்று நாடிகளின் நடைகளெ ன்னப்படும்.

மூன்று கலையின் சுவாசத்திறைலுண்டாகும் சப் தத்தைக் கண்டறியவேண்டும்.

அச்சப்தத்துக்கு அஜபா வென்றுபெயராம்.

அந்த சப்தத்தைக்கண்டு பிடிக்கச் சிலவிதிகள் கூறப்பட்டிருக்கின்றன.

அவையாவன வாயுகளில் மூன்று இடைகலை பிங்கலை சுழிமுனை இடைகலை என்பது இடதுநாசி யிலும் பிங்கலை என்பது வலதுநாசியிலும் சுழிமுனை என்பது இரண்டுநாசியிலும் வரப்போகவு மிருக்கிற சுவாசம் இதற்கு அஜபா என்று பெயராம் இடை கலை என்பது சந்திரனும் பிஙகலை எனபது சூரிய னும் சுழிமுனை என்பது அக்கினியுமென்னப்படும்.

அன்றியும் இடைகலையாவது சுக்கில பட்சமா கிற அமாவாசையின் பிரதமை முதல் மூன்று நாளை க்கு காலையில் தொடர்ச்சியாய் வரவேண்டும்.

சதுர்த்திமுதல் மூன்றுநாளைக்கு பிங்கலை நடக்கவேண்டும்.

இதே மாதிரியாக சுக்கிலபட்சமுழுமையும் மூன்றுநாளைக்கு இடைகலையும் மூன்றுநாளைக்கு பிங்கலையுமாக நடக்கவேண்டும்.

இவ்வண்ணமாக சுக்கிலபட்சத்தில் சந்திரகலை வராவிடில் அவனுக்கு தேக சவுக்கியப்பட்டு கவலை மேலிடுமென்றறிக அதைச் சரிப்படுத்த வேண்டிய விஷயத்தைப்பற்றி பின்வரும் வாக்கியத்திற்காண்க.

கிருஷ்ணபட்சம் அதாவது பௌர்ணமி பிரதமைமுதல்மூன்றுநாட்களும்பிங்கலைநடக்கவேண்டும்.

பின் மூன்றுநாளைக்கு இடைகலை நடக்க வேண்டும்

இத்தன்மை இரண்டு கலைகளும் மும்மூன்று நாளைக்கொருமுறை மாறிமாறி நடக்கவேண்டும்.

இதை மாணாக்கன் குறிப்பாக தினம் தினம் கவனிக்கவேண்டும்.

சுழிமுனை கூடுவது கஷ்டமானதால் அதை சாக்கிரதையாய் அப்பியசித்து பழகல்வேண்டும்.

மாணாக்கனுக்கு முக்கியவேலை இடைகலையும் பிங்கலையும் திதிக்குத்தவறி நடந்தால் அதைமாற்ற வேண்டிய விஷயத்தைப்பற்றி குருமூலமாய்க் கேட்டுக் கொள்ளவேண்டியது.

## இடைகலையின் பலனாவது.

இடைகலை நடங்குங்காலத்தில் தாகம் ஜலவிருத்தி, தீர்மானம் செய்ய வேலைசெய்ய நகைசெய்ய

அஃதணிந்துகொள்ள, அன்னிய தேசத்தி லிருந்து யாத்திரைபோக, வீடு, சத்திரம், கோவில்கட்ட, தர்மஞ்செய்ய, சாமான்சேகரஞ்செய்ய, கிணறு, குளம் வெட்ட, கலியாணம் செய்ய வஸ்திரம் கட்ட, வைத்திய சாஸ்திர அப்பியாசம்; மருந்து, கற்பங்கள், முதலியவைசெய்ய, சிநேகிதரைக்காண, வியாபாரஞ்செய்ய, தானியம் இருப்புசெய்ய, வீட்டிற்குகுடிபோக, விதை விதைக்க சமாதானஞ் செய்ய, அன்னியபாஷைஅப்பியாசஞ்செய்ய, உபதேசஞ்செய்ய, பலனைப் பற்றி, யாத்திரை போக, யானை, குதிரை, ஏறு, வேட்டைக்குப்போக, உலகத்துக்கு அனுகூலமான வேலைசெய்ய, எஜமானாக ஆடல்பாடல் கற்க, ஒரு புதிய ஊருக்குப்போக, பந்துக்களைக் காணலுமாகிய நடவடிக்கைகள் செய்தால் பயன்படும்.

இடைகலையானது சரிவரநடந்தால் தேகசௌக்கியமாயிருக்கும் இதில் ஆகாசத்தின் அம்சமிருக்குமானால், முன்சொன்ன நடவடிக்கைகள் ஒன்றும் செய்யக்கூடாது. இரவாக இருந்தாலும், பகலாக இருந்தாலும், மேற்சொன்ன வேலைகள் இடைகலையில நடத்தவேண்டுமென்பதாம்.

பிங்கலையில் நடக்கும் பயனாவது, வலது நாசியில் உண்டாகிறபிங்கலை வாய்வு அதாவது சூரியநாடி காலத்தில் கஷ்டமான வேலை, எதுவும் அப்பியசிக்க, எவ்வித கொடூரமான செய்கை செய்ய, போஜனம் செய்ய, மலம்கழிக்க, போகம்செய்ய, கடல் யாத்திரைபோக, சண்டை செய்ய, படை எடுக்க, கஷ்டமான சாஸ்திரம்கற்க, குதிரை, முதலாகிய நாற்கால்

ஜீவன்களைவாங்கவிற்க, மட்டமானமலையேற, குதிரை மல்யுத்தம், முதலாகிய பழக்கம்செய்ய, ஆறு, குளம் கடல், முதலாகிய இடங்களில் நீய்ய, உலோகங்க ளைக்குறித்த சாஸ்திரங்களைப் படிக்க பாடம்எழுத, பணம் வாங்க கொடுக்க, எஜமானத்துவமானவேலை பார்க்க, அரசனைக்காண, வைத்தியத்திற்கு மரு ந்துசெய்ய, கடினமான ஆகாரம் ஜீர்ணிக்க இவைமு தலாகிய செய்கைகள் பிங்கலை வாய்வு காலததிற்செ ய்யவேண்டு மென்பதாம்.

## சுழிமுனைகலையின் பலனுவது.

சுழிமுனைநாடி இரண்டுநாசியினும்வரும் சுவா சம் அதனநடவடிக்கை காலத்தில்தான் அறியலாம்.

ஒருக்ஷணத்தில்இடது நாசியிலும் ஒருக்ஷணத் தில் வலதுநாசியிலும வரப்பட்ட வாயுவானது இர ண்டுநாசியிலும் வருமபாதுசுழிமுனையாம்.

இந்த சுழிமுனை நடக்கும் காலத்தில் உலகநட வடிகைகளை நிறுத்திவிடவேண்டியது. தவறிநடக் கும்பக்ஷத்தில் அபஜெயமாம்.

எண்ணத்துக்கு விரோதமாய் நடக்கும் இந்த வாயுவின் காலத்தில ஆத்மத்தியானம் பூசைசெய்ய வைத்துக் கொள்ளலாம்.

இநதவாய்வு நடககுங்காலத்தில் தான் சுவாச பந்தனம் செய்யக்கூடும்.

இந்த சுவாசம் கட்டுவதினல் மனதிற்கும் தே கத்திற்கும் இன்பத்தைக் கொடுக்கப்படுகின்றது.

## நாடிகளின்நிலை.

முதல் ஆதாரமாகிய மூன்றுநாடிகளைப் பற்றி விவரமாகச் சொல்லுவோம்.

அதாவதுமனிதர்களுக்குச்சராசரமாக எழு பத்திராயிரம் நாடி நரம்புகள் இருக்கின்றன

அவைகளில் முக்கியமானவை இருபத்திநாலு இந்த இருபத்திநாலும் எப்போதும் உறங்கிக்கொண்டிருக்கின்றன இவைகளை குண்டலிசத்தி என்று ஆதிநாதர் அருளிச்செய்திருக்கின்றனர்.

இது மத்தியஸ்தானத்தில் இருக்கிறது பத்து நாடிகள் மேலாகவும் பத்துநாடிகள் கீழாகவும் இரண்டுநாடி ஓர்பக்கத்திலும் இரண்டுநாடி மற்றோர்பக்கத்திலும் இருக்கின்றன.

இந்தக்குண்டலி சத்தியானது, பாம்பைப்போல்சுற்றிக்கொண்டுசுவாதிஷ்டானத்திற்குமேலாகவும் மணிபூரகத்திற்குக் கீழாகவுமிருக்கின்றது.

இந்த இருபத்துநான்கு நாடிகளில் பத்துநாடிகளை முக்கியமாக எடுத்திருக்கின்றனர்.

இந்தப பத்துநாடிகளில், முன்சொல்லிய மூன்றுநாடிகளை முக்கியமாயெடுத்திருக்கின்றபடியால், அதில்இடைகலையானதுதேகத்தின் இடதுபாகத்திலும், பிங்கலையானது தேகத்தின் வலதுபாகத்திலும் சுழிமுனையானது தேகத்தின் மத்தியிலு மிருக்கின்றன.

இக்குண்டலி சத்தியைப்பற்றி விபரமாக பின் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆசனவிதிகள்.

அதாவது, பத்திரம், வீமம், பதுமம், கோமுகம் குக்குடம் ஆகிய ஐந்தும் ஞான சாதனத்துக் குறிய ஆசனமாகும்.

இதில் பத்மாசனமாவது, இரண்டு தொடைகளில் இரண்டுபாதங்களையும் செவ்வையாக வைத்துட்காருதல்.

இது சகல பாபங்களையும் நாசம்செய்வதாகும்.

மான்தோல் புலித்தோல் வெண்துகில் சித்திராசனம் தர்ப்பை இவைகளின் பேரிலிருந்தனுபவிக்கலாம்.

இடைவயறு கண்டம் தலைசமனுப் ஸ்தம்பத்தைப்போல் நிமிர்ந்திருக்க வேண்டும்.

அன்றியும் வடமுகம் நோக்கி தக்ஷிணாமூர்த்தமாயெழுந்தருளி யிருக்கும்.

ஆத்மஞான குருவின் சன்னதிக்குநேராய் உட்காரவேண்டியது.

இதை சுவஸ்திக ஆசனமென்பர் கிருகஸ்தருக்கு பத்மாசனமென்றும் சன்னியாசிகளுக்கு சித்தாசனமென்றும் ஹடயோகதீபிகையிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இரேசகபூரக லக்ஷணம்.

பிராணவாயுவின் அசைவு எதுவோ அதுவே சித்தத்தின் அசைவென்றும் மேலானபுத்திமான்கள் பிராணனது சலனத்தை ஜெயித்தலில் முயற்சிக்கிறார்கள் ஆகையால் ராஜஸ தாமஸ குணங்களை நீங்கி

சாத்வீக குணத்தோடு பிராணாயாமம் செய்யவேண்டும் பிராணாயாமம் வெளி வாய்வை உட்கொள்வது பூரகமாம். அவ்வாய்வைநிறுத்தல்கும்பகமாம் கும்பித்த வாய்வை வெளிப்படுத்துதல இரேசகமெனப்படும். இதுவே பிராணாயாம அங்கமாகிய இரேசகபூரகலக்ஷணம்.

சூரியநாடியாகிய பிங்கலையால் பிராணனைஇழுத்து மெள்ள வயிற்றை நிறப்ப விதிப்படி பந்தபூரவமாகிய கும்பகம் செய்து மறுபடியும் சந்திரநாடியாகிய இடைகலையால் இரேசிக்கவேண்டும்.

சந்திரநாடியிலாவது சூரிய நாடியாலாவதுஎந்தநாடியால் பூரிக்கிறானோ அதினாலேயே ரேசித்து நிரோதித்தலால் வேர்வைநடுக்கம் முதலியவை உண்டாகும் அதுவரையில் கும்பித்து எதினால் பூரகஞ் செய்யப்பட்டதோ அதற் கன்னியமான நாடியால் மெள்ளமெள்ள இரேசிக்க வேண்டும், வேகமாய் இரேசித்தால்பலக்குறைவு உண்டாகும் எதினால் இரேசகம் செய்யப்பட்டதோ அதினாலேயே பூரகம்செய்யலாம், இடைகலையால் பிராணனைபூரித்து கும்பிக்கப்பட்ட பிராணனைமற்ற பிங்கலையால் இரேசிக்கவேண்டும் பிங்கலையால் வாய்வைப் பூரித்துக் கும்பித்த வாய்வை இடைகலையால் இரேசிக்கவேண்டும். இவ்வண்ணம் சந்திரனால் பூரித்து கும்பித்து சூரியனால் இரேசிக்கவேண்டும். சூரியனால் பூரித்துக் கும்பித்து சந்திரனால் இரேசிக்கவேண்டும் இவ்விதம் சூரிய சந்திரநாடிகளின் அப்பியாசத்தைத் தினமும் விஸ்தரிக்கப்படவேண்டும் இதனால் நாடிகள் மூன்றுமாசத்திற்குமேல் சுத்தமாகின்றன.

## அஜபாவிதிலே.

அதாவது, இந்த யோகத்துக்குரிய ஏகாந்த ஸ்தானத்தில் பத்மாசனமிட்டுட்கார்ந்து உடனே அஷ்டாங்க தாபம்போடவேண்டியது இந்தயோகத்திற்காக ஏற்படுத்திய அறையானது மிக்க நலமாக இருக்கவேண்டும், தான் தனிமையாக இருக்கவேண்டும். இதில் சொல்லிய நான்கு காலங்களில் எந்தகாலமாவது வைத்துக்கொண்டு அப்யாசப் படுத்தவேண்டும்.

இடைகலையானது எப்போதும் வலது நாசியிலும்ஹம்சம் எனவேயிருக்கும் ஹம்ச யென்பது ஆத்மாவின் பெயராகும் மூக்கில்வெளியேவருகிற சுவாசத்தின் சத்தமாகிய ஹம் எனபதையும் உள்ளே போகிறசுவாசத்தின் சத்தமாகிய ஸம் என்பதையும் கண்டறியவேண்டும் இந்த ஹம்ஸம் என்கிற சப்தத்தை கண்டறிந்தவன் இந்த அப்பியாசத்தில் முதல் படி தெரிந்தவன் இம்மாணாக்கன எப்போது மூலகை செயும் கும்பமாகிய கட்டையும் நிவர்த்திக்கவேண்டியது ஒரேகாலத்தில் நீக்கக்கூடாது.

ஏனெனில் ஓர் வருஷகாலம வரையில் மனக்கலக்கமும் பலவிதகவலையும் நேரிடுமாகையால் நாளுக்குநாள் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கவேண்டியது.

மாணாக்கன்கூடிய அளவு ஸ்திரப்படுத்தவேண்டும்.

இதே மாதிரியாக தன்னுடைய சுவாசத்தைக் குறித்து அதினால்உண்டாகும் ஹம்-ஸம்-என்ற சப்தத்தைக் கண்டறிய வேண்டும் இப்படி அப்பியசித்து மூன்றுநாடிகளின் குணத்தையும் ஹம்-ஸம்-என்ற சப்தத்தையும் கண்டறிந்தவுடன் தத்துவத்தை அறியவேண்டியது.

மூன்று நாடிகளை கண்டறியாமல் பஞ்சதத்துவத்தை ஆரம்பிக்கக்கூடாது இந்தயோக அப்யாசி

ஜீரணசக்தியையுணர்ந்து தேகத்தைபலப்படுத்தவேண்டும் அதாவது அரிசி கோதுமை பச்சைப்பயறு தொவரை உளுந்து கம்பு கேழ்வரகு நெய் பால், தயிர், மோர் முதலியவை உபயோகிக்கவேண்டும்இந்த யோகி அரைவயறு அன்னமும் கால்வயறு ஜலமும் சாப்பிடவேண்டும் அதேவேளையில் உள்வாய்வு மற்ற ஒருபாகத்தில் சஞ்சரிக்கவேண்டுமென்றுணர்க.

புளிப்பு இனிப்பு உவர்ப்புகார்ப்புமுதலியவைகள் அதிகமாக சேர்க்கக்கூடாது இத்தன்மைப்பட்டயோகி சன்னியாசியாக வேண்டியதில்லை எல்லா கிருகஸ்தரும் செல்வர்களும் ஏழைகளும் ஜாதிபேதம்நிறம் வித்தியாசம் பார்க்கவேண்டியதில்லை எவர்கள் திரிகரணசுத்தமாக இந்தயோகத்தைச்செய்வார்களோ அவர்களுக்குசித்திக்கும் என்பதுநிச்சயம்.

ஒருவன் பதினெட்டுவயதில் இந்தயோகம் அப்பியசித்தானால் ஐம்பதாவது வயதில் அந்த கேசரி முத்திரையை அடைவான். இத்தன்மையான யோகியது மாமிசங்களை கண்டிப்பாய் நீக்கியிருப்பதன்றி ராஜஸ தாமஸ குணங்களற்று தத்துவத்தை கொண்டு சிறுசுறுப்பாக அப்பியசித்து அதி தீவரபக்குவியாய் வாழ்வன்.

## இரண்டாவது வாக்கியம்.

### பஞ்சதத்துவநிலை.

இரண்டாம் வாக்கியமானசூக்ஷும பஞ்சாக்ஷரத்தியானத்தின் ஆதாரமாகிய பஞ்சதத்துவங்களை குருசாம்பிரதாயத்தால் அறியவேண்டியதும், அந்த பஞ்ச தத்துவங்களின் குறிப்புகளின் விவரணமுங்

கூறப்படும். அதாவது முன்சொன்ன மூன்றுநாடிகளின் குணங்களையும் சுத்தமாக அறிந்துக்கொண்டு ஒன்றையொன்றில் மாற்றி குண்டலினியை அடையாமல் தத்துவங்களை அப்பியசிக்க லாகாது.

முதலில்சொல்லியிருக்கிற நாடிகளை தன்கைவசப்படுத்திக் கொள்ளாமல் யோகிகள் தத்துவங்களைக்குறித்து ஆரம்பிக்கக்கூடாதுபோஜனம், மலங்கழித்தல், போகஞ்செய்தல், இவைமூன்றுஞ் சூரியநாடியில் செய்யவேண்டியவை தாகம்ஜலவிருத்தி இவைகளை இடைகலையில் செய்யவேண்டும்

பிரிதிவு-அப்பு-தேயு-வாயு-ஆகாயம் - என்னும் ஐந்து தத்துவங்களும் மூன்றுநாடிகளில் ஒவ்வொரு நிமிஷத்திற்கு ஒருமுறை மாறிக்கொண்டே வருகின்றன இந்த தத்துவங்களை கண்டறிவதற்கு அடியில் வருமாறு கூறுவாம்

அதாவது இந்த மூன்று வாய்வுகளை அப்யசித்து இருக்கிறார்களோ அவர்கள்தான் இந்த யோகத்திற்குரியவர்கள். இந்தஉலகம் பஞ்சபூதத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது இது கண்டுகொள்பவற்கு ஆயுள் விர்த்திக்கும் அப்போப் பட்டவர்கள் பூஜை முதலாகிய உபசாரங்கள் செய்யப் பெற்று மேலாவார்கள்.

இந்த ஐந்து தத்துவங்களும், சத்தியலோகம், பூலோகம், மிருத்தியுலோகம். முதலாகிய இடங்களில் வியாபித்திருக்கின்றன.

அவைகட் கன்னியமாக ஒருவஸ்துவும் ஏற்படாது.

இப்பஞ்ச தத்துவத்தை கண்டறிவதற்கு விபரம்சொல்லுவோம் (1) வது கலையில் தத்துவங்களின்நடை (2) வதுசுவாசத்தினுலு தத்துவங்களை அறிதல் (3) வது சுவாசத்தில் தத்துவத்தின் அடையாளம் (4) வது தத்துவங்களின்நிறம் (5) வது தத்து

வங்களின் சுவை (6) வது சுவாசத்தின் அளவு (7) வது தத்துவஙகளின் அசைவு (8) வது தத்துவங்களின் பலன்.

ஆகிய் எட்டு விதங்களினால் கண்டறியவேண்டும்

மனுக்கன் எந்தவாய்வில் எந்த தத்வம்நடக்கிறதோ அதனைக்கண்டறியவேண்டும்: மேலும் முக்கியமாகவே கவனிக்கவேண்டும் பஞ்சேந்திரங்களை சன்முகி முத்திரையால் மூடிக்கொண்டு தினந்தினம் கொஞ்சகொஞ்சமாக அப்யாசிக்கவேண்டும் அதிகமாக அப்பாசித்தால் அசௌக்கியம்நேரிடும்குரு எவ்வளவு பிரமாணஞ் சொல்லுவரோ அவ்வளவுதான் நடக்கவேண்டுமென்பதாம்.

இநத சன்கி முத்திரையை மூடிக்கொண்டு அப்பியாசிக்குங் காலத்தில் மஞ்சல் நிறம் தோன்றினால் பிருதிவு என்றும் வெண்ணிறம் தோன்றினால் அப்புவென்றும், சிவப்புநிறம்தோன்றினால் தேயுவென்றும் பச்சைநிறம் தோன்றினால் வாயுவென்றும் கருப்புநிறம் தோன்றினால் ஆகாயமென்றுஞ்சொல்லப்படும.

2-ம், கருந்து கண்ணாடியை தனக்கு முன்னால் வைததுக்கொண்டு அதின்பேரில் சுவாசத்தை விட்டால் அது நாற்சதுரமாக இருந்தால் பிருதிவு என்றும் அரையுருண்டை வடிவமாக இநந்தால் அப்புவென்றும், முக்கோணமாக இருந்தால் தேயுவென்றும், அறுக்கோண உருண்டை வடிவமாகவிருந்தால் வாயுவென்றும், சிறுபுள்ளிகள் மாதிரியிருந்தால் ஆகாயமென்று அறியவேண்டும்.

3-ம் கருத்து சுவாசம் வுடும்போது நேராகப் போனால் பிருதிவு, கீழாகப்போனால் அப்பு,மேலாக

ப்போனால் தேயு, ஒழுங்கீனமாகப் போனால் வாயு அஃது அடங்கிப்போனால் ஆகாசமென்றறியவேண்டும்.

4-ம், கருத்து, பிருதிவு, மஞ்சள், அப்புவெண்மை, அக்கினி, சிவப்பு, வாயு, பச்சை, ஆகாயம், கறுப்பு, இவைகளைக் கண்டறியவேண்டும்.

உணரும் விவரம்.

அதாவது ஒவ்வொருவருணமுள்ள குண்டுகள் ஐந்தை தனக்குபின்னால் வைத்துக்கொண்டு பத்மாசனத்தில் உட்கார்ந்து தனது எண்ணத்தைக்கூட்டி நிஷ்டையிலிருந்துக்கொண்டு பஞ்சதத்துவத்தில் எதையாகிலும் ஒன்றைநினைத்து பின்னால் இருக்கிறகுண்டுகளில் ஒன்றைஎடுப்பானாகில் தான் எண்ணியநிறம்போல் இருந்தால் இதை அறிந்தவன் ஆகிறான். இவ்வண்ணமே ஒவ்வொரு குண்டையும் எடுப்பானாகில் முற்று முணர்ந்தவனாகிறான்.

5-ம், கருத்து தித்திப்பு, பிருதிவி, துவர்ப்பு, அப்பு, புளிப்பு, தேயு, வாய்வுக்கும், ஆகாயத்திற்கும் காரப்பாகும்.

6-ம், கருத்து சுவாசம் 12-அங்குலம்நீண்டால் பிருதிவு 16-அஙகுலநீண்டால் அப்பு 4-அங்குலம்நீண்டால் தேயு 8-அங்குலம் நீண்டால் வாய்வு, மூக்கினுள்ளாகவே இருந்தால் ஆகாசம்.

7-ம், கருத்து அசையாதவேளைபிருதிவு. அசையும்வேளை அப்பு, கஷ்டமான வேளை தேயு, துஷ்டவேளை வாயு, பூஜைவேளை ஆகாசம்.

8-ம், கருத்து பிருதிவு தத்துவத்தில் ஆரம்பிக்கும்வேலை கண்டிப்பாக இலாபத்தில் முடியும், ஜல தத்துவத்தில் அசையும்படியான வேலைகள்செய்யத் தக்கது. ஏனென்றால் ஏதாவதுஒருமுடிவானவேலையை ஆரம்பித்தால் சீக்கிரத்தில் முடிந்துவிடும்.

அக்கினி, வாயு, ஆகாசம் இந்த மூன்று தத்துவத்தில் எந்தவேலை ஆரம்பித்தபோதிலும் அபஜெயமாகமுடியும். ஆகையால் மாணுக்கன் இதுகளைஎந்த காலத்தில் உபயோகப்படுத்த வேண்டுமோ அந்த காலத்தில்தத்துவத்தை அறிந்து உபயோகப்படுத்த வேண்டியது•இந்த தத்துவத்தில் புத்தியை சரியாக செலுத்தவேண்டும்.

ஏனெனில் வியாதி முதலாகிய ஹிம்சைகள் வரவொட்டாமலும் பலவிதகுணமில்லாமலும் நிரோதத்தை ஒரேகுணமாக இருந்து பார்க்கவேண்டும்.

## பிராணாயாம நிர்ணயம்

முன்சொன்ன பிராணாயாமத்தின் பிரமாணத்தை யுணர்த்துதல், அதாவது அருணோதயமுதல் மூன்றுநாழிகை வரையிலும் மத்தியானதிலும், அஸ்தமிக்கிறதற்கு முன்னும்பின்னுமாக 2-முகூர்த்தமும் அர்த்த ராத்திரியிலும் பிரதிதினம் நான்குமுறை செய்யவேண்டும் காலம் ஒன்றுக்கு (80) பிராணாயாமம் வரையிலும் நன்றாய் அப்பியசிக்க வேண்டும்.

முகூர்த்தமென்பது இரண்டுநாழிகை யளவுள்ளதாம். நான்குமுறைசெய்தால் தினந்தோறும் 320 பிராணாயாமம் மாகின்றது

ஒருபுருஷன் அப்பியசிக்க வேண்டுமானல் காலையில் 60-ம் மதியானத்தில 40-ம் சாயங்காலத்தில அர்த்தராத்திரியில் 20-ம ஆக மெள்ள மெள்ள பிராணாயாமம் செய்யவேண்டியது.

அது கைவல்லியம படிம்போது முதலில் வேர்வையும் இரண்டாவது நடுக்கமும் மூன்றாவது தவளோதத்தும் அப்யாசத்தால் பத்மாசனத்தி லிருக்கையில பூமியினின்றும் ஆகாயத்திழுப்புதலு முண்டாகுமென்று குருநாதரால் சொல்லப்பட் டிருக்கின்றது.

கிரகஸ் தாசிர்மிகளுக்கு உபயோகம் இப்பிராணாயாமம் கிரகஸ்தனுக்கு பாபசுத்தியின்பொருட்டும் யோகிகளுக்கு யோகசித்தியின் பொருட்டுமாம் கிரகஸ்தன் சங்கத்தைவிட்டு ஏகாந்தத்தி லிருநது அப்பியாசம் செய்யவேண்டும், அதன்பின்வகாரத்தின்பொருட்டுவெளியேசங்கத்தின்பிரியமுடையவன்

போல் விவகரிக்கவேண்டும், கருமத்தாலுண்டான யாவும் கருமத்தின்படி யிருக்கிறது. நிமித்த காரணமாக இவற்றைச்செய்வதில் ஒருக்காலும் தோஷமில்லை.

நல் விவேகி இந்த யோகத்தை அனுசரிப்பாராயின் அவன் அவசியம் சித்தியடைவான் இதற்கு சம்சயமில்லை இவனபுண்ணிய பாவங்களி னின்றும் விடுபட்டு தேகாபிமானத்தை நீக்கி கிரகத்திலிருந்தே முத்தியை அடைவான். இந்த யோகியானவன் லோக சங்கரகம் லோகபரிபாலன்மாகிய தனதுகாரியத்தில் புண்ணியபாவங்களைச் செய்யினும் அப்புண்ணிய பாவங்களில் பற்றப்படான் கிடைத்ததில் சந்தோஷமும், உள்ளே கொஞ்சம் பற்றில்லாதவனையும் காலவரம்ப, இடவரம்பு, நடைவரம்பு, என்னும் சகலவரம்புகளும் உள்ளவனைப் யோகசாதனத்தில் பொருந்தியிருப்பான் யோகக் கிரிகைகளோடுகூடிய கிரகஸ்தனுக்கு, ஈஸ்வர வாச்கியமாகிய பிரணவத்தின் சப்தத்தால் சித்தியுண்டாகும், ஆனல் செவ்வையாக அப்பியாசிக்க வேண்டும்.

உதாரணம் கிரகஸ்தன் புததிர தாராதிகளால் நிறம்பியவனைய் வீட்டில் இருந்துகொண்டு அகப்பற்றில்லாமல் யோகமார்க்கத்தில் தன்னிடத்து சித்தியின் அடையாளங்களைக் கண்டபிறகு எனது ஆஞ்ஞாயை சாதித்து கிரீடிப்பான், என்று சிவசங்கீதையின் வாக்கியத்திலும் கிரகஸ்தனுக்கு சித்தி உண்டாகுமென்று சாதிக்கின்றது.

### மாத்திரையாவது.

ஆரம்பத்தில் ஒரு மனிதன் ஜாகரத்தில் விடும் சுவாசம் வெளிப்பட்டு உள்ளே போகிற தெவ்வள

வோ அவ்வளவு பிராணயாமத்தின் மாத்திரைகளாகும். அனுபவத்தின்பின் ஒருபுருஷன் நித்திரைசெய்யும்போது சுவாசம் எவ்வளவு காலம்போய் திரும்புகிறதோ அவ்வளவுகாலம் பிராணயாமத்தின் மாத்திரைகளென்னப்படும்.

மாணாக்கன் அப்பியாச காலத்தில் உண்பது பால்நெய், முதலியவற்றோடு கூடியபோஜனம் சிலாக்கியம், அப்பியாசம் திடமானகாலத்தில் அப்படிப்பட்ட நியமம்வேண்டுவதில்லை என்றும் பிராணயாமம் ரேசக பூரக கும்பக மாத்திரைகளென்று பிராணனென்பது தன்தேகத்தில் ஜீவித்திருக்கும் வாய்வென்றும், ஆயமம். என்பது அந்தவாய்வை தடுப்பதென்றும்நாரதீபத்திலும் சௌரவபுராணத்திலும்சொல்லப்பட்டிருக்கின்றது.

இரேசக பூரக கும்பகபேதத்தால் மூன்று விதமாயும் மூன்றுவருணமாயும் இருப்பதால்பிரணவமே பிராணயாமமெனப்படும். பத்மாஷனத்திலிருக்கும் புருஷன் நாசிநுனியில் சந்திரபிம்பப் பிரகாசங்களால் விரிந்த அகார மூர்த்தியானது இரக்தாங்கமுடையது அன்னவாகினி தண்டங்கரத்திலும் உடைய மாலையுமாகி காயத்திரியாகின்றது உகார மூர்த்தியானது வெண்ணிற அங்கமுடையது கருடவாகினி எவ்வர்னமுடையது சக்கரத்தை கரத்திலுடையதுமானது சாவித்ரியாகின்றது. மகாரமூர்த்தியானது கருமையான அங்க முடையது. இடபவாகினி வயதுசென்றதும் சூலந்தரித்ததுமாகிய சரஸ்வதியாகின்றது அகாராதி மூன்றிற்கும் காரணம் பரஞ்சோதியாகிய ஏகாக்ஷரபிரணவமாகிறதென்று தியானிக்க வேண்டும்.

இடையினால் வெளிவாய்வை மாத்திரை யளவு பூரித்து அகாரத்தைசிந்தித்து பூரித்தவாய்வை 64-மாத்திரையளவு கும்பித்து உகாரத்தையே தியானித்து கும்பித்ததைபிங்கலையால் 32-மாத்திரையளவு ரேசித்து மகாமூர்த்தியை தியானிக்கவேண்டும்.

அன்றியும் பூரகம் பன்னிரண்டு ஓங்காரமாகவும் கும்பகம் பதினாறு ஓங்காரமாகவும், இரேசகம் பத்து ஓங்காரமாகவும், செய்யவேண்டும். இதுபிராணாயாம அப்பியாச மெனப்படும், பிரமா, விஷ்ணு, ருத்திரன் பூரக கும்பகரேசகங்களுக்கு அதி தேவதைகளென்று சொல்லப்படும்.

முன்சொல்லிய குண்டலி சத்தியைச் சொல்லுகிறோம். அதாவது நித்திரைசெய்யுங் குண்டலியானது குருப்பிரசாத மூன்றாம்வாக்கியத்தால் எப்போது விழிக்கின்றதோ அப்போது சகலபதுமங்களும் ஆறு சக்கரங்களும் பிரமகிரந்தி, விஷ்ணுகிரந்தி உருத்திரகிரந்தி என்னும் மூன்று கிரந்திகளும் பேதத்தை அடைகின்றன.

அப்போது சூரியப்பதவியென்னுஞ் சுழிமுனையிற் பிராணவாயு இராஜ மார்க்கமாக அனுசரிக்கப்படுகின்றது.

சுகமாக போக்குசம்பவித்தால் சித்தம் நிராலம்ப நிர்விஷயமாகின்றது சித்தம் நிராலம்பமாகுங் காலனை வஞ்சிக்கக்கூடும்.

சுழிமுனையென்றும், சூன்னியபதவியென்றும் பிர்மமாந்ரமென்றும் மகமேருவென்றும் பெருவழியென்றும் மயானமென்றும், சாம்பவி மத்தியபாகமென்றும், சொலவதால் இந்தகுண்டலி போததத்திலேயே ஷட்சக்கரபேத முதலியவை உண்டாகின்றமையால் முழுமுயற்சியோடு பிரஹ்மாங்மரத்தின் சச்சிதாநந்த லக்ஷணப்பிரம்மத்தை யடைதற் குபாயமாகிய சுழிமுனையின் வாயிலை முகத்தால் மூடிக்கொண்டு நித்திரைசெய்யும் ஈஸ்வரியாகிய குண்டலியை விழிப்பிக்க மகா முத்திரை முதலியவற்றை செவ்வையாய் அனுசரிக்க வேண்டும்.

இந்த குண்டலி சத்தியானது கந்தத்தின்மேல் பாகத்தில் யோகிகளுக்கு மோக்ஷத்தின் பொருட்டும், மூடர்களுக்கு பந்தத்தின்பொருட்டுமாகத் தூங்குகின்றது. சகலயோக தந்திரங்களுக்கும் குண்டலி சத்தி ஆச்சரியமாய் இருப்பதால் அக்குண்டலிசத்தியை எவன் அறிகிருனே அவன்யோகவித்துவான் என்றும் யோகிகள்தூங்கும் குண்டலியைவிழிக்கச் செய்கிறவர்க ளென்றும் அடயோக தீபிகையில் சொல்லியிருக்கின்றது.

## குண்டலி ஸ்தானநிலை.

மூலாதாரத்தில் பொருந்தும் உட்பாகமாகிய அக்குண்டலியை சூரியனால் பூரிக்கவேண்டும் குகத்திற்கு இரண்டங்குல மேலும், லிங்கத்திற்கு இரண்டங்குலங் கீழுமாகிய தேகத்தின் மத்தியானது சரீர நடுவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

கந்தஸ்தானம் மனிதர்களுக்கு தேகமத்திய மூலாதாரத்தினின்றும் ஒன்ப தங்குலத்தின் மேல்நான்கு அங்குல அகலமும் நீளமும் உள்ளதாய் முட்டைபோன்ற வடிவுள்ளதாய் துவக்கு தோல் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

குகத்திற்கு இரண்டங்குலமேல் தேகமத்திய பாகம் ஒரு அங்குலமிருந்து ஒன்ப தங்குலம் கந்தஸ்தானமாம்.

ஆகபன்னிரண்டு அங்குலப் பிரமாணம் அதாவது ஒரு ஜான் எழுபத்தீராயிரம் நாடிகளின் பலத்தைச்சோதிக்க வேண்டுமாயின் அதற்குசத்திசலனமாகிய குண்டலி அப்பியாசமின்றி வேறு சுத்திசெய்யும் உபாயமில்லை.

இந்த மத்திய நாடியாகிய சுழி முனையானது யோகிகளுக்கு திடப்பியாசம் சுவஸ்திகா பங்கயாசனங்களாலும் பிராணாயாமத்தாலும் மகா முத்திரை முதலிய முத்திரைகளால் சௌக்கிய முண்டாகின்றது. ஆகிலும் சமாதியினால் அன்னியவிர்த்தி நிரோதிக்கலாகாது. ஏகாக்கிர தன்மையால் மனதை தாரணைசெய்து அப்பியாசித்து மனதை நிலைக்கும்முயற்சி செய்யவேண்டும்.

ஏனென்றால், இராஜயோகமின்றி பரமபுருஷார்த்தபலம் சித்தியாமையால் வாயுவின் கும்பக முத்திரைவிதானமாகிய சகலவிதிகளையும் மனதோடு அப்பியாசிக்கவேண்டும். புத்திமான்கள் வாயுவின்விதிக்கு அன்னியமாகிய விஷயத்தில் மனோ விர்த்தியை செலுத்தலாகாது எவர்கள் யோகிகளின்குருபரம்ப

ரையாகிய சாம்பிரதாயத்தால் வந்த சாம்பிர தாக்கியமாகிய மகாமுத்திரை முதலியவற்றின் உபதேசத்தைதருகின்றாரோ அவரே ஸ்ரீகுரு சகல குருக்களுக்கும் சிரேஷ்டமானவர் அவரேபிரபு அவரேசாக்ஷாத் பிரத்தியக்ஷ ஈஸ்வரனென்றும் சொல்லப்படும்.

அன்றியும் அக்கினி மண்டலம் நாபியின் கீழ்யாகத்தி லிருக்கின்றது அதுதேகத்தின் மத்தியில் பொன்னிறமுள்ளதாய் மனிதர்களுக்கு முக்கோணமாயும் இருக்கின்றது அக்குண்டலியை எழுப்புவிதமாவது.

சூரிய உதையகாலத்திலும் அஸ்தமான காலத்திலும் தினந்தோறும் இரண்டுமுகூர்த்தம் பேதிக்க வேண்டும். சூரியனால் பூரித்து சந்திரனால் இரேசிக்கிறதால் அபானனும் அக்கினியை அடைந்து ஊஷ்ணசொரூபத்தால் பிராணனை அடைகின்றது.

அக்கினியின் ஊஷ்ணத்தால் செவ்வையாகதபிக்கப்படுகின்றதால் தூங்குகின்ற குண்டலிசத்தினன்றாய் விழிப்புடையதாகின்றது தண்டத்தால் அடிபட்ட சர்ப்பத்தைப் போல நிஸ்வாசத்தை செய்து நிமர்ச்சி அடைகின்றது.

அதன்பின் பிலத்திற் பிரவேசித்த பாம்பைப் போல் சுழிமுனையினுள் பிரவேசிக்கின்றது.

ஒருபுருஷன் சலனம்செய்து மூலர்தாமத்தி லிருந்து குண்டலியைமேலே கொண்டு வருவானாயின் அவன்மேல்சென்று அமிர்தத்தைஅடைவான் இந்த குண்டலிசத்தியை வாலைப்பிடித்து எழுப்பினால் நித்திரையை விட்டு மேலே எழும்புகிறது, இதை குருமுகமாக அறியவேண்டும்.

அமிர்தநிலையாவன.

சிகையின்மத்தியில் பரமாத்மா பொருந்தி இருப்பதால் மேருவைப்போல உயர்ந்திருக்கும் சுழிமுனையினது மேருவின் மேல் பாகத்தின் மத்தியில் சோமஜலம் ஒழுகிக்கொண்டிருக்கிறது அந்த துவாரமான சந்திரமண்டபத்தில்னின்று சரீரத்திற்கு சாரம் ஒழுகுகின்றது-

ஒழுகும் சந்திர அமிர்தத்தின்சுவை கார்ப்பு, உவர்ப்பு, இவற்றிற்கு சமானமாக வுள்ளதாயும் தேன்-நெய்-பால்-என்பதைபோலும் ரசமுடையதானல் அப்போது அவனுக்கு காமசித்தி ஆகின்றது அந்த சந்திராமிர்தமென்னும்ரசத்தை எவன்பானம் பண்ணுகிறனே அந்தயோகி வியாதியில்லாதவனய் தாமரைத் தண்டுபோல் மிருதுவான சரீரமுடையவனய் வெகுகாலம் ஜீவித்திருப்பான்.

இனி சுவாசாங்குலப் பிரமாணநிலை

இந்தமனுஷ்ய ஜென்மத்துக்கு சாதாரணமாய் சுவாசம் உள்ளேபோகிறது. பத்தங்குலம் வெளியில் பண்ணிரண்டங்குலம்போகும் இது இல்லாமல் நடக்கும்போது 24-அங்குலமும் ஒடும்போதும் 42-அங்குலமும் போகஞ்செய்யும்போதும் தூங்கும்போதும் 50-60-அங்குலமும் போகும் சாப்பிடும்போதும், வாந்தியாகும்போதும் 18-அங்குலம், ஓடுகிறது. சாதாரணமாய் 12-அங்குலம் ஒடுகிறது. ஆகையால் இந்தசுவாசத்தை யோக அப்பியாசிகள் கவனிக்கவேண்டியது இவ்வளவு நீளமாக போகிற சுவாசத்தை தன்னல்கூடிய அளவு கொஞ்சங் கொஞ்சமாய் குறைக்க வேண்டியது-

அது ஏனென்றால் இந்த மனுஷஜன்மத்திற்கு கலைகளாகியசுவாசம் 12-அங்குலம்ஓடி 4-அங்குலம் கழித்து 8-அங்குலந்தான் நின்ற இடத்தில் நோக்கும் இப்படிக்கு சாதாரணமாக 4-அங்குலம்கழிந்ததனால் 120-வயதாகின்றது இதை கொஞ்சங்கொஞ்சமாக சுவாசத்தை பந்தனம் பண்ணுவதினால் நீண்டஆயுளை உடையவர்களாக இருப்பார்கள்.

சாதாரணமாய் மனிதர்களுக்குஉண்டாகிய சுயபுத்திபோதாது. ஆகையால் அனுபோக முடைய யோகிகளின் புத்தியை கேட்டுக்கொண்டு நடத்தவேண்டும் இல்லாவிட்டால் துன்பம் நேரிடும் இந்த மூன்று வாய்வுக்களையும் பஞ்சதத்துவங்களையும் சுயாசத்தையும் குணிக்க அறிந்துகொண்டால் வரப்போகிறதைச் சொல்லலாம் தைரியத்தினால் சுருசுருப்பாய்மானுக்கன் இந்தராஜயோகத்தை அப்பியாசிப்பானாகில் இரண்டுமூன்று வருஷத்தில் அறியப்படுகிறான்.

மரணநிலை அறிதல்.

இடைகலை அல்லது பிங்கலையில் ஒருராத்திரி முழுவதும் இடைவிடாமல் நடந்தால் அப்பேர்ப்பட்டமனிதன் மூன்று வருஷத்தில் மரணமடைவான் இதேமாதிரியாக பிங்கலையில் மாறுதலில்லாமல் இரண்டு ராத்திரி இரண்டு பகல் இடைவிடாமல் நடக்கும் மனிதனுக்கு மரணம் இரண்டு வருஷத்தில் நேரிடும் இடைவிடாமல் ஒருநாசியில் சுவாசம்மூன்றுநாளைக்கு நடக்கிற மனிதனுக்கு ஒருவருஷத்தில் மரணம்நேரிடும் இராத்திரிமுழுதும் இடைகலையும் பகல்முழுதும் பிங்கலையும் இடைவிடாமல் நடக்

கும் மனிதனுக்கு மரணம் ஆறுமாதத்தில் நேரிடும். பிங்கலைதொடர்ச்சியாகஇடைவிடாமல்ஓர்பக்ஷம்நடக்கும் மனிதனுக்கு பதினைந்து தினத்தில் மரணம் நேரிடும் இடைகலையானது இதே மாதிரியாக ஒரு மாதம் நடந்தால் இந்த விதிப்பிரகாரம் முடியும்.

புருவத்தைப் பார்த்தால் தெரியாதவர்களுக்கு ஒன்பதுநாளிலும் காதுகேளாதவர்களுக்கு ஏழுநாளிலும் நக்ஷத்திரந்தெரியாதவர்களுக்கு ஐந்துநாளிலும் மூக்குநுனி தெரியாதவர்களுக்கு மூன்றுநாளிலும் இரண்டு கண்களையும் கையால் அமுக்கினால் தண்ணீர் வாராதவர்களுக்கு பத்து நாளில்மரணம்நேரிடும் என்று குருவாக்கியம்.

யோகிகளுக்குமேல்கூறிய அடையாளங்கள்நேரிட்டாள் உடனே வாய்வைசோதித்து அதைசரிப்படுத்திக்கொள்ளுந்தன்மை அவர்கட்குள்

யோகிகளுக்கு மரணம்நேரிடுவது கஷ்டம்யோகிகள் அப்பியாசத்தால் வாய்வுகளையும் தத்துவங்களையும் உணர்ந்து மூத்திரைக்குப்பின் தொடருவார்கள்.

பிறகு கேசரிமுத்திரை எவ்வளவுகாலம் ஜீவித்திருக்கவேண்டுமோ அவ்வளவு காலம் ஜீவித்திருப்பார்கள் இந்தயோகிகள் மூன்றுவாய்வுகளையும் தத்துவங்களையும் அதிகமாக கவனித்து ஸ்திரப்படுத்த வேண்டும்.

சாதாரணமாய் மனிதர்களுக்கு இருபத்தோராயிரத்து அறனூறு சுவாசம்நடக்கும் பக்ஷத்தில் 120-வருஷம் ஜீவித்திருக்கலாம்.

இப்போது மனிதர்கள் அருபத்தோராயிரத்து அறுனூரு சுவாசத்துக்குமேல் விடுகிறார்கள், எப்படியெனில்ஓடுவதினாலும் நடப்பதினாலும் தூங்குவதினாலும்போகம் செய்வதினாலும் சுவாசம் அதிகரிப்பதினால் இந்த நூற்றிருபது வயதுக்கு குறைவுநேரிடுகின்றது.

சாதாரணமாய் மனிதர்விடும்சுவாசம்எவ்வளவு குறையுமோ அவ்வளவுவயது ஏறிவரும் நீடிலெள்று சுவாசத்தைச் சட்டக்கூடாது.

அதிக விரைவாகவும் ஓடக்கூடாது, ஜாஸ்தி சாப்பிடக்கூடாது, வேகமாய் நடக்கக்கூடாது, அதிகபோகமும் செய்யக்கூடாது.

இந்த விதிகளில் ஒன்றும் தவறக்கூடாது தவறி நடப்பார்களேயனால் அதிக கஷ்டநஷ்ட மடைவார்கள்.

நான்காவது வாக்கியம்.

சாம்பவியின் முத்திரை.

உள்ளாதாரமுதல பிரமாந்திரம் வரையிலுள்ள சக்கரங்களுள் தன்னாற்கொள்ளப்பட்ட சக்கரத்தில் லக்ஷியமும் தேகத்திற்கு வெளிபிரதேசத்தில் மூடுதலும் திறதலும் இல்லாததிருஷ்டி பார்வையுமாக விருத்தல் எதுவோ அப்படிப்பட்டது சாம்பவி முத்திரையாம்.

இதை இருக்குமுதலிய வேதங்களிலும் சாங்கியபதஞ்சலி முதலிய சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

சாம்பவிக்கு வெளிதிருஷ்டியும் கேசரிக்கு உள் திருஷ்டியும் சாம்பவிக்கு இருதயப்பார்வையும் கேசரிக்குபுருவ நடுப்பார்வையுமாம் ஸ்ரீசாம்பவிக்கும் கேசரிக்கும் ஸ்தானபேதமுண்டு சித்தம் லயானந்தமானால் பேதமில்லையென்பது கருத்து.

ஸ்ரீசாம்பவி முத்திரையால் ஸ்திரமனதுடையவனும் நாசி நுனிபாகத்தில் வைக்கப்பட்ட திருஷ்டியையுடையவனும் நிஷபந்தந் தன்மையாலும் தேகேந்திரிய மனதுகளின் நிற்சலனத்தன்மையாலும், சந்திரசூரியர்களை லயமாக்குகிறவனும் பிராணசஞ்சாரத்தை ஸ்தம்பிக்கிறவன் எவனோ அவனே அதுவிதுவென்று சொல்லக்கூடாத பதமாகிய ஆத்துமசொரூபத்தில் நிலைத்தவனாகிறான்.

கேசரி முத்திரை.

இடதுவலது நாடிகளிலுள்ள வாய்வு எந்தமத்தியதேசத்தில செல்லுகிறதோ அந்தேசத்தில கேசரி முத்திரை ஸ்திரமுடையதாகின்றது இதிற்சம்சயமில்லை சூனியத்தில் பிராணன ஸ்திரமாகுதலே வாய்வை விழுங்குதலெனப்படும்.

சூரியசந்திரர்களென்னும் இடைகலை பிங்கலைகளின்மத்தியில் நிராலம்பமாகிய உள் ஆகாசத்திலிருக்கும் ஆகாயங்களின் சமுதாயத்தில் செவ்வையாய் பொருந்தி இருப்பது எதுவோ அம்முத்திரையேகேசரி என்னப்படும்.

இதின் அப்பியாசமாவன முன்னமே சுழிமுனையை பிராணனால் பூரிகக்வேண்டும்.

அப்போது நிச்சயிக்கப்பட்ட கேசரிமுத்திரை உண்டாகிறது.

புருவமத்தியில் சிவமென்னும் சுகவடிவமாகிய பரமாத்மாவின் ஸ்தானமாம்.

சிவத்தில் ஒடுங்கவேண்டியது. எவன்மனதைநிராலம்பமாக்கி ஒன்றையும் சிந்தியாதிருக்கின்றானோ அவனே கேசரிமுத்திரை யுணருகிறான் பிரம்கார விர்த்தியை பரவைராக்கியத்தால் விடுகிறானோ அவன் உள்ளும் வெளியும் இருக்கும் ஆகாயத்தில் கடத்தைபோல நிற்கிறான் இதுநிச்சம்.

தேகத்தினுள்ளும் வெளியிலுமுள்ள வாய்வை தனக்குள்கேசரியில் எப்படிலயமாக்குகின்றானோ அப்படியே தேகத்திலிருக்கும் வாய்வை லயமாக்குகிறான்.

இதில்சம்சயமில்லை அன்றியும் பிராணனது ஸ்தானத்தில் சித்தத்தோடு ஸ்திரத்தன்மை அடைகிறான்.

வேறுஒன்றையும் சித்தியான், அப்போதுசொரூபத்தில் நிலைத்தலாகிய ஜீவன் முத்தியைவது திண்ணம்.

அஜபகாயத்திரியு ளிலை,

பூரகரேசகம் செய்யுங்கால் (ஹம்ஸம்) லோஹம்) என்று நேராகவும் தலைகீழாகவும் பிரகாசிக்கின்றன.

அஜயமந்திரத்தினால் (தத்துவமசி) என்னும்மகாவாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற, ஜீவப்பிரம அயிக்கியம் அடிக்கடி சிந்திக்கப்படுகிறது.

இந்தஸோ-என்னும் அஜபகாயத்திரியை ஈஸ்வர நாமத்தைப்போல் ஜெபித்தால் சித்தசுத்திக்கு ஹேதுவாம் வெகுகாலம்வரையில ஜெபம்செய்யின் விருத்தி அந்தர் முகப்படும்.

அப்போதுசுவாசம் வெளிப்படுங்கால் சகாரமாகிறதைஸோ வென்னும் சுவாசத்தை உட்கொள்ளுங்கால்அகாரத்தை ஹம் என்றே தியானிக்கவேண்டும் இந்த அகாரம்மறுபடியும் உள்செல்லுகின்றபடியால்ஹம்ஸம் ஹம்ஸம் என்றே மஹாமந்திரத்தை ஜீவன் எப்போதும் ஜெபிக்கிறான் குரு வாக்கியத்தினால் இந்த மந்திரத்தின் ஜெபம் சுழிமுனையில் விபரீதமாயுண்டாகிறது.

அது ஸோஹம் ஸோஹம் என்றழைக்கப்படுகின்றது, சகாரம் கேசரி எனப்படுகின்றது.

த்வம்பதமென்று நிச்சயிக்கப்படுகின்றது அகாரம்பரமேசுவரனாகிறான்.

தற்பதமென்று நிச்சயிக்கப் பட்டிருக்கின்றது.

சகாரத்தைதியானிக்கும், ஆன்மா நிச்சயமாய் அகாரமேஆகின்றான் என்று யோகபீஜம் யோகசூடாமணிஉபநிஷத்து யோகதத்துவஉபநிஷத்து முதலியவற்றால் காண்க,

இது அஜபைகாயத்திரியாம், இதை முக்கியமாக பிரவர்த்தியுடையவன் எவனோ அவனதிகாரியாவன் அதுசோபாதிக தியானமாம்.

இவற்றினின்று சகாரம், அகாரமென்னும் மெய்யெழுத்துகளை அடக்கிஎஞ்சிநிற்கும் ஓம்என்னும்அ

க்ஷரத்தைதியாகித்தால், நிருபாதிகமாம் ஓம்ஸோஹம்என்னும் இவ்விரண்டுசப்தங்களும்பிரத்தியேகாத்மாவோடு பின்னமாகியபிரம்மமென்னும் ஒரேஅர்த்தமுடையன சுத்தமாய் இருத்தலால் நிருபாதிகமாயினும் ஓம் என்னும் அக்ஷரத்தில் சகார அகாரமென்னும் உபாதிகளைசேர்த்தலால் ஸோஹம் என்னும் சப்தமுண்டாகிறது.

ஆகையால் சோபாதிக மெனப்படுகின்றது, விசாரசாகரம் பதார்த்த மஞ்ஜுக்ஷரமுதலிய நூலகளும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

நாதானு சந்தானம.

இந்தநாதானுசந்தானம் முதல்முதல் அப்பியாசிக்கும் மாணுக்கன் சுரராஜ குமாரவைரி ரந்தரத்தில் தனது கைவிரல்களிரண்டிஞல் நிரோதித்து உள்ளே பரவும் சமுத்திரம்போன்ற திரபானநாதத்தைசீக்கிரமாக மனிதனோருகிருன் அதனுல் அவனுக்குசெவ்வையா எழும்பிய நாதமும்வாய்வும் சுத்தமாப்ஜெயிக்கப்பட்டவைகளாகின்றனவோ அநதமகாகுணேதயமுள்ளவனுக்கு அணிமாதி குணங்களும் அளவிறந்த புண்ணியமும் உண்டாகின்றதென்ற சொல்லப்பட்டிருக்கின்றது.

சுரராஜன் இந்திரன் அவன் குமாரன், அர்ச்சுனன் அவன்வைரிகர்ணன் அந்தகரணரந்தரத்தில் என்பதுபொருளாம். அனுகதமென்னும் நாதவெளியிலுண்டாகும் சுரோத்திரதுவக்காதி இந்திரியங்களுக்குவிஷயமாகிய தொனிசூழ்கின்றது. இந்தநாதஅப்

பியாசி ஒருபடசத்தில் சகலசித்த சஞ்சலங்களையும் ஜெயித்துநிஜாநந்த முடையவனாகிறான்.

முதலில்அப்பியாசிக்குங்கால் நானாவிதமாகியசமுத்திரம்போலும் பேரிமுதலிய, வாத்தியம் போலும் நாதம் கேழ்க்கப்படுகின்றது. பின்நாதானுசந்தான ம்நிர்வித்தியாகுங்கால் சூட்சமசூட்சமாக கேழ்க்கப்படும் ஆதியில் வாய்வுபிர்மாந்திரத்திற் செல்லுங்காலத்து, சமுத்திரம், சச்சரம், மேகம், பேரிகை கனக தப்பட்டை, என்பவற்றால், உண்டாகுசப்தத்தைப் போன்றநாதமும் அப்படியே பிர்மாந்திரத்தில்வாய்வுஸ்திரப்பட்டபின், மத்தளம், சங்கு, கண்டாமணி காகளம், என்பவற்றால் உண்டாகும் சப்தத்தைப் போன்றநாதமும் அந்தத்தில் பிராணன் பிமாநந்தத்தில்மிகவும்ஸ்திரமானபின் கிண்கிணிவேணு, வீணை தந்தரி, வண்டு, என்பவற்றின்சப்தங்களைப்போன்ற நாதங்களும் இன்னும் நானாவிதமான நாதங்கள்தேகத்தின்மத்தியில் உள்ளனவாக கேழ்க்கப்படும் மேகம், பேரி முதலியவற்றா லுண்டாகிய பெரும் சப்தங்கள் கேழ்க்கப்படினும் அவற்றாள்சூட்சமத்திலும் சூட்சமமாகிய நாதத்தையே சிந்திக்கவேண்டும சூட்சமமாகிய நாதம் நெடுநேரமிருப்பதால், சித்தம் நெடுநேரம் ஸ்திரமுடையதாய் நிலைக்கும்.

கனமாகிய நாதத்தைவிட்டு சூட்சமத்திலும் அல்லதுசூட்சமத்தைவிட்டு கனநாதத்திலுமாக இரம்பிப்பதாயிருக்கினும் கனசூட்சமமென்னும் இரண்டிலொருநாதத்தை கொள்ளுதல், தள்ளுதல் கூடாது ஏனெனில் அப்படிக்கொள்ளுதலும், இராஜதகுண

இயல்பதால் அவ்விராஜதகுணத்தை வரவொட்டாமல் சுத்தசாத்வீககுண செய்கையான சூட்சமநாதத்தில் மனதைச் செலுத்தவேண்டும்.

அஃதேனெனில் நாதங்களில்ரம்மிக்கும் மனமோ சமாதியையடையும் என்பது கருத்து அதாவதும் கந்தபுஷ்பரசத்தை குடிக்கும்வண்டு சந்தத்தை விரும்பாததுபோல சூட்சுமநாதத்தில் சித்தம் நிலைக்க வேண்டியது சப்தாதிவிஷயமாகிய உததியானத்தில் சஞ்சரிக்கும் மனமென்னும் மதயானை யடக்குதலில்இந்த அநுகத்தொனி யாகியது கூரிய அங்குசம் போன்ற வலியுடையதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

வாசியை யடக்கி யடையும் பலன்.

இந்த யோகஅப்பியாசிகள் சூரிய சந்திரகலையில் பிராணவாயு, செல்லுங்கால பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, என்னும் நானகு தத்துவங்கள்வந்து விலகும். அப்போது அப்பிராணவாயுவு ஆகாயதத்துவத்தில் அடையும் அச்சமயம் சுவாசம் குறைந்துவரும் அக்காலத்து சுவாசபந்தனம் செய்யக்கூடும்.

அப்போது ஓர் அங்குலம் குறைந்தால்இவ்வுலகத்திச்சையில் நின்று சுவாதீனப்படுவான் இரண்டங்குலம் குறைந்தால் மனம் ஆனந்திக்கப்பட்டு ஞானசெல்வமுண்டாகும் மூன்றங்குலம் குறைந்தால்விதேகியாவான் நாலங்குலம் குறைந்தால் தூரதேசத்தில் நடக்கும் நடவடிக்கைசொல்லப்படுவான் ஆறங்குலம் குறைந்தாலாகாசத்திலுள்ளசகலமும்கண்டுணர்வான் ஏழங்குலங் குறைந்தால் சரீரம்காபிசித்திபெறுவான்

எட்டங்குலம் குறைந்தால் அணிமதி சித்திகளைய
டைவன ஒன்பதங்குலம் குறைந்தால் நவகண்டங்
களில் சஞ்சரிப்பான் பத்தங்குலம் குறைந்தால் ஒரு
தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிப்பா
ன் பதினொரு அஙகுலம் குறைந்தால் தனது ஆத்
மாவைக் கண்டு வசனிப்பான் பன்னிரண்டஙகுலம்
அடங்கும் சுவாசமானது உதித்தயிடத்திலேயே சு
ழுன்றுகொண் டிருக்கிறபடியால் அந்த பரமயோகி
நெடுங்காலம் அன்னபானாதிகளைநீக்கி அவா அற்றி
ருப்பான் சமாதியிலுட்கார்ந்து மாணைக்கன் இடை
கலையை பிஙகலையிலும் பிங்கலே இடைகலையிலும்மா
ற்றகற்றக் கொண்டபின் பகற்முழுவதும் இடைக
லையும் இரவில் அதை அடைத்துவிட்டு பிங்கலையில்
நடத்தப்படுவான்.

இதற்காக பழம்பருத்தி கொஞ்சம் சுத்தம்பண்
ணிவைத்துக்கொண்டு இடைகலே நடத்தவேண்டியி
ருந்தால் வலது நாசியிலும் அடைத்துவிடவேண்
டும் இப்படி சரிவரநடந்தால் மனிதர்கள் நூற்றிரு
பது வயது ஜீவித்திருக்கலாம்.

மற்றசங்கதிகள் சித்திக்கும் பக்ஷத்தில்யோகிகளு
க்கு வயதேகிடையாது.

ஏந்தவிதிகள் எப்படியிருந்தாலும் இந்தவிதிகள்
யாவற்றும் கிரஸ்தர்களுக்காகவே ஏற்பட்டிருக்கி
றது.

இதை அப்பியாசிகள் எப்போதும் இவ்விதிப்பிர
காரம் நடத்துவார்கள் அப்போது தேகசௌக்கிய

மும் நீண்ட ஆயுளும் மனஒழுக்கமும் சித்தசாந்தியும் உடையவர்களாய் இருப்பார்கள்,

மனோலய நிலை.

பிராணவாயு சுழிமுனையாகிய மத்திய நாடியிற்செல்லுமகால் அந்தக்கரணம் சூன்னியமேகசகால வஸ்துபரிச்சேதமில்லா பிரமத்தில் பிரவேசிக்கின்றது. அப்போது சித்தநிரோதமுள்ள யோகவித்தானவன் பிராரத்தத்தோடு சகல கருமங்களையும் நிர்மூலமாக்குகிறான் எதுவரையில் பிராணனும் இந்தியர்களும் ஜீவித்திருக்கின்றனவோ அதுவரையில் மனதில் ஞானம் எப்படி உண்டாகும் பிராணன் மனம் என்னும் இவ்விரண்டையும் எவன் லயமாக்குகிறனோ அப்புருஷன் மோக்ஷத்தை அடைகிறான்.

பிராணமனோலயங்களில்லாதவன் எவ்விதத்திலும் மோக்ஷமடையான் நல்ல ஸ்தானத்திலிருந்துகொண்டு சுழிமுனையென்னும் மத்திய நாடியை நன்றாய்ப் பேதிக்கும் தன்மையை குருமுகமாய் அறிந்துபிராணவாய்வை மத்தியிற்செலுத்துவதாகி பிர்மாந்திரத்தில் நிரோதித்தல் வேண்டும் இப்படி அப்பியாசித்தால் பிராணனது அசைவிற்கு க்ஷயம்வரும் அப்போது மனம் மிகவும் சாந்தியையடைகின்றது அக்காலம் நிர்வாணமிஞ்சுகின்றது.

சூரியனும் சந்திரனும் இராப்பகல் வடிவமாகிய காலத்தைப் புசிப்பதாயிருக்கிறார்கள் இதை ரகசியமாய் சொல்லப்பட்டது.

இரண்டரை கடிகை சூரியனேடுங்கால் பகலென்றும் சந்திரனேடுங்கால் இரவென்றும்சொல்லப்பட்டிருக்கின்றது எப்போது சுழிமுனை மார்க்கத்தால் வாய்வு பிரமாந்தரத்தில் ஒடுங்குகின்றதோ அப்போது இராப்பகல் வடிவமாகிய காலமில்லாமையால் அச்சுழிமுனைகாலத்தை புசிப்பதாய் இருக்கிறது.

எந்தயோகியால் பிராணவாய்வை கட்டப்படுகின்றதோ அந்தயோகியால் மனம் கட்டப்படுகின்றது எவனால் மனம் கட்டப்படுகின்றதோ அவனால் பிராணனும் கட்டப்படும்

மனம் பிராணன் என்னும் இரண்டில் ஒன்றைகட்டினால் மற்றென்றுங் கட்டப்படும் ஆதலால் மனம் ஒடுங்காதவரையில் வாசனைநசியாது வாசனை நசியாதவரையில் சித்தம் நசியாது சித்தம் உசியாதவரையில் தத்துவஞானம் அண்டாகாது.

இவற்றில் மனம்பிராணனென்னும் இரண்டினுள் ஒன்று நசித்தால் மற்றொன்றும் நாசமாம் ஒன்றின் பிரவிர்த்தியால் மற்றொன்றும் பிரவிர்த்தி யாகின்றது. இவ்விரண்டும் லயமானல் மோட்சத்தின் சித்தி உண்டாகும்

மனம் ஸ்திரப்பட்டால் பிராணன் ஸ்திரமாகும். சுரோத்திர முதலிய இந்திரியங்களுக்கு மனம் நாதனாகிறன் மனதிற்கு பிராணன் நாதனாகிறன் பிராணனுக்கு மனோலயன் நாதனாகிறன் அம்மனோலயம் நாதத்தை ஆதரித்திருக்கின்றது.

அதாவது மனம்நாதத்தில் ஒடுங்குகின்றது சுவாச நிசுவாசங்கள் நஷ்டமாகிறதும் சத்தாதி விஷயக்கிர கணம் நஷ்டமாகிறதும் சத்தாதி விஷயக்கிரகணம் நஷ்டமாகிறது சேஷ்டைகள் நீங்குகிறதும், விகாரங் களில்லாததும் மனோலயமேயாம் மனோலயம் எதுவரையில் ஆகவில்லையோ அதுவரையில் இந்திரிய விஷயங்கள் ஜெயமாகாது இந்திரிய விஷயங்கள் ஜெயமாகாவரையில் எனதென்பது எப்படி நீங்கும் எனதென்பது நீங்காதவரையில் யானென்னும் அகந்தை எப்படி நீங்கும் யானென்னும் அகந்தை நீங்காதவரையில் மனம் சுத்தம் எப்படி ஆகும் மனம் சுத்தமாகாத வரையில் அபரோட்ச ஞானம் எப்படி உதையமாகும் அபரோட்சஞானம் உதைய மாகாத வரையில் பிரம்ம சைதன்னியம் சமாதியின்கண் எப்படி புலப்படும் பிரம்ம சைதன்னியம் சமாதியின்கண் புலப்படாதவரையில் திடஞ்ஞானம் எப்படி உதையமாகும் திடஞ்ஞானம்பெற்ற மகான்களுக்கு துவிதமேது பேதமேது மாய்கையேது பந்தசமேது ஜென்மமேது அப்போது அந்தயோகி ஜென்மாகிதனாகின்றான்.

ஆகையால் இந்தயோகத்தை அனுஷ்டிக்கும் பக்குவமுடைய முமுக்ஷுக்கள் முக்கியமாய் கவனிக்க வேண்டியது யாதெனில் வாசியோகத்தையன்றி மற்ற ஹடயோகம் கௌடயோகம் அம்பிகாயோகம் முதலிய யோகங்களால் சாட்சாத்காரத்தை அடையானென்றுணரவேண்டும் அஃதெப்படியெனின் ஒருவன் கௌசனையால் விசாலமான விண்ணை மூடுவது போலாகும் இந்தவாசியோகமோ வெனில் அப்படி

யன்று கண்மூட மிண்மறையு மென்பதாம் ஆகையி ஞல் இந்தயோகத்தை அனுடித்தவர்கள் இந்நூலை வாசித்தவர்கள், வாசிக்கக்கேட்டவர்கள் மனம் இவ் வாசியை நாடுவதால் சித்தம் நிலைத்து ஞானஉதய மாய் அணிமாதி சகல அயிஸ்வரியங்களும் அடைந் து ஜீவன் முக்தர்களாய் நிரதிசயானந்தத்தில் சதா காலமும்நிலைத்து வாழ்வார்களென்று குருவாக்கியம்

## வாழி விருத்தம்.

வாழ்க நாரண தேசிகர்வானருள்
வாழ்க வன்னவர் மாணுக்கர் யாவரும்
வாழ்க விந்நூல்படிப்பவர் கேட்பவர்
வாழ்க விந்தச்சிவயோக சாரமே.

சிவயோகசாரம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

# அகஸ்தியர் ஞானம்-9.

சத்தியேபராபரமே யொன்றேதெய்வம்
சகலவுயிர்ஜீவனுக்கு மதுதானுச்சு
புத்தியினாலறிந்தவர்கள் புண்ணியோர்கள்
பூதலத்திற்கோடியிலே யொருவனுண்டு
பத்தியினான் மனமடங்கி நிலையினிற்பார்
பாழிலேமனதைவிடார் பரமஞானி
கத்தியேயலைவதில்லைச் சூக்ஷஞ்சூக்ஷம்
சுழியிலேநிலையறிந்தால் மோக்ஷந்தானே 1

மோக்ஷமதுபெறுவதற்குச் சூக்ஷஞ்சொன்னேன்
மோகமுடன்பொய்களவு கொலைசெய்யாதே
காச்சலுடன்கோபத்தைத் தள்ளிப்போடு
காசினியிற்புண்ணியதனைக் கருதிக்கொள்ளு
பாச்சவதுபாயாதே பாழ்போகாதே
பலவேதசாஸ்திரமும் பாருபாரு
ஏச்சல்லயவர்பிழைக்கச் செய்தமார்க்கம்
என்மக்காளெண்ணியெண்ணி நன்றாய்ப்பாரே.

பாரப்பாநால்வேத நூலும்பாரு
பற்றாசைவைப்பதற்கோ பிணைபோகோடி
வீரப்பாஒன்றொன்றுக் கொன்றைமாறி
வீணிலேயவர்பிழைக்கச் செய்தமார்க்கம்
தேரப்பாதெருத்தெருவே புலம்புவார்கள்
தெய்வநிலைஒருவருமே காணார்காணார்

ஆரப்பாநிலையில்நிற்கப் போராரையோ
ஆச்சரியங்கோடியிலே யொருவன்தானே 3

ஒருவனென்றேதெய்வத்தை வணங்கவேணும்
உத்தமஞாப்பூமிதனி லிருக்கவேணும்
பருவமதற்கேறுபயிர் செய்யவேணும்
பார்மீதிலமனதைவிடார் பரமஞானி
திரிவார்கடிருடரப்பா ஞானிகோடி
தேசத்திற்கள்ளரப்பர கோடாகோடி
வருவார்களப்பனே யனேகங்கோடி
வார்த்தையினால்பசப்புவார் திருடர்தானே. 4

தானென்றேதானேதா னென்றேதெய்வம்
தகப்பனுந்தாயுமங்கே புணரும்போது
நானென்றுகருப்பிடித்துக் கொண்டுவந்த
நாதனைநீயென்றுஞ் வணங்கிநில்லு
கோனென்றதிருடனுக்குந் தெரியுமப்பா
கோடானகோடியிலே யொருவனுண்டு
ஏனென்றமனத்தாலே யறியவேணும்
என்மக்காநிலைநிற்க மோக்ஷந்தானே. 5

மோக்ஷமதுபெருவதற்குச் சூக்ஷங்கேளு
முன்செய்தபேர்களுடன் குறியைகேளு
ஏசலதுகுருக்களது குலங்களகேளு
எல்லாருமகூடபுரிந்த தெங்கேகேளு
பேச்சலதுமாய்கையப்பா வொன்றுமில்லை
பிதற்றுவாரவரவரு நிலையுங்காணார்
கூச்சலதுபாளையந்தான் போகும்போது
கூட்டோடேபோச்சுதப்பா மூச்சுத்தானே. 6

மூச்சொடுங்கிப்போனவிடம் ஆருங்காணார்
மோக்ஷத்தின்நரகாதி யிருப்புங்காணார்

வாச்சென்றேவந்தவழி யேற்றங்காணூர்
வளிமாறிநிற்குமணி வழியுங்காணூர்
வீச்சப்பாவெட்டவெளி நன்றாய்ப்பாரு
வேதங்கள்சாஸ்திரங்கள் வெளியாய்ப்போச்சு
ஆச்சப்பாகருவுதனி லமைத்தாற்போலாம்
அவனுக்கேதெரியுமல்லா லறிவாய்ப்பாரே. 7

பாரப்பாவுலகுதனிற் பிறவிகோடி
படைப்புகளோபலவிதமாய்க் கோடாகோடி
வீசப்பாவண்டத்திற் பிறவிகோடி
வெளியிலேயாடுதப்பா வுற்றுப்பாரு
ஆரப்பாவணுவெளியி னுள்ளேநீதான்
ஆச்சரியம்புழுக்கூடு வலைமோதப்பா
கூரப்பாவண்டத்திற் பிண்டமாகும்
குணவியவானுக்காற் சத்தியமாமே. 8

சத்தியமேவேணுமடா மனிதனால்
சண்டாளஞ்செய்யாதே தவறிடாதே
நித்தியகர்மம்மறவாதே நேமம்விட்டு
நிஷ்டையுடன்சமாதிவிட்டு நிலைபேராதே
புத்திகெட்டுத்திரியாதே பொய்சொல்லாதே
புண்ணியத்தைமறவாதே பூசல்கொண்டு
சத்தியதோர்தள்ளிட்டுத் தர்க்கியாதே
கர்மியென்றுநடவாதேகதிரொளிதான்முற்றே

அகஸ்தியர் ஞானம்-கூ

முற்றிற்று.